

பாரதீயம்

பேராசிரியர் முனைவர் **ந சுப்பு ரெட்டியார்**





1916 2016

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

எளிமை, இனிமை, தெளிவு இவர்தம் நூல்களின் தனிச்சிறப்புகளாகும்.

பாரதீயம்

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார்



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

பாரதியார் கவிதைகளனைத்தையும்
திறனாய்வு மூலமாக அவற்றின் சாரத்தை பிழிந்து
தமிழ் கூறும் நல்லுலகிற்கு
வழங்கும் பெருநூலே பாரதீயம்

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-938927-2-5

eBOOK ~ மின் நூல்

ந சுப்பு ரெட்டியார்
1916 2016
100
நூற்றாண்டு விழா நிகழ்வுகள்

பாரதீயம்


அருங்கலைக்கோன், சடகோபன் பொன்னடி, சேவா ரத்னா,
தமிழ்ப்பேரவைச் செம்மல், கலைமாமணி, ஆய்வுத்தமிழரசு,
பொதுமறைச் செம்மல், வைணவ இலக்கிய மாமணி

பேராசிரியர் முனைவர்

ந சுப்பு ரெட்டியார்

முன்னாள் வாழ்நாள் மதிப்பியல் பேராசிரியர்

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்





1916 2016

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

பாரதீயம்

முதற்பதிப்பு – 1983
இரண்டாம் பதிப்பு - 2018

PRICE: Rs.275.oo

Published by:

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

AD-13, 5th Street, Anna Nagar West, Chennai – 600 040

ISBN: 978-81-938927-2-5

9 788193 892725 >

Wrapper design: **Centenary Committee**
Printed at: DJ Prints, Chennai – 600 095

அமரர்

ஜஸ்டிஸ் டாக்டர் எஸ். மகராஜன் அவர்கட்கு

அன்புப் படையல்

ஆங்கில அணங்கும் செந்தமிழ்த் தாயும்
ஆடல்செய் கின்றநா வுடையார் ;
ஓங்கிய கம்பன் மாண்பினை மேற்கும்
உணர்ந்திடப் புரிஎழுத் தாளர் ;
பாங்குறு புகழ்சால் ஷேக்ஸ்பியர் பொதியில்
படர்தரச் செய்தவர் ; கலைச்சொல்
ஈங்களித் துயர்ந்தோர் எஸ்.மக ராசர்
இசையுடம் பணிகஇந் நூலே.

அணிந்துரை

டாக்டர் ஔவை நடராசன்,
(இயக்குநர், மொழியாக்கத்துறை, தமிழ்நாடு அரசு)

புவியனைத்தும் போற்றிடவான் புகழ்படைத்துத்
தமிழ்மொழியைப் புகழில் ஏற்றும்
கவியரசர் தமிழ்நாட்டுக் கில்லையெனும்
வசையென்னாற் கழிந்த தன்றே !

என்று பெருமிதத்துடன் - ஏன் எக்களிப்புடன் - கூறிக்கொண்ட பெருங்கவிஞர் பாரதியின் நூற்றாண்டு விழா மாநிலமெங்கும் கொண்டாடப்பெற்றது. தமிழக அரசே இதனைத் தன் பொறுப்பில் மேற்கொண்டது. கவியரசர் பெயரில் ஒரு பல்கலைக் கழகத்தையே நிறுவித் தன் புகழை நிலை நிறுத்திக்கொண்டது. பாரதியாருக்கு அறிவுலகம் சூட்டிய புகழ்மாலைகளின் நறுமணம் காற்றில் கலந்த கர்ப்பூரம் போலாகாமல், ஆற்றில் கரைத்த புளி போலாகாமல், அச்சு வடிவம் கொண்டு வெளி வந்துள்ளன. அவற்றுள் பாரதியாரை மிகுந்த ஆர்வத்தோடு பாராட்டி மகிழும் நூல்கள் பல ; ஆற்றலோடு ஆராய்ந்து போற்றும் நூல்கள் சில !....இரண்டாவது வகையைச் சார்ந்தது **பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார்** அவர்களின் **பாரதீயம்.** பாரதியாரின் நூற்றாண்டில் அவர் தம் முப்பெரும் பாடல் களைப்பற்றித் தனித்தனியே மூன்று திறனாய்வு நூல்களைத் திறம் பட எழுதி வெளியிட்டுத் தம் போக்கில் கவிஞரின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடியவர் இப்பேராசிரியர். இவற்றிற்கும் மேலாக, பாரதியார் கவிதைகள் முழுவதையும் சாரமாகப் பிழிந்து வழங்கும் பெருநூலே **பாரதீயம்** என்னும் இந்நூல்.

'கலைபயில் தெளிவும் கட்டுரை வன்மையும்' கொண்ட **பேராசிரியர் ரெட்டியார்** தமிழுலகம் நன்கறிந்த பேறிஞர். துறையூரில் ஓர் உயர்நிலைப்பள்ளியை நிறுவிஅதன் தலைமையாசிரிய ராகத் தம் கல்விப் பணியைத் தொடங்கிப் பத்தாண்டுகள் அதனைப் 'பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து' வளர்த்துவிட்ட பிறகு, காரைக்குடி வள்ளல் அழகப்பர் நிறுவிய ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி யில் தொடக்கம் முதல் பத்தாண்டுகள் தமிழ்த்துறைத் தலைவ ராகவும் பேராசிரியராகவும் பணியாற்றி, அதன் பிறகு, திருப்பதி

சென்று, தம் விடாமுயற்சியால் பத்தாண்டுகள் தனி நின்று முயன்று, திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் (தமிழக அரசு மானியத்தைக் கொண்டு) தமிழ்த்துறையைப் புதிதாக நிறுவி, அதன் தலைவராகவும் பேராசிரியராகவும் பணியாற்றி, அதனைப் பேரும் புகழும் பரவ அதனை நன்கு வளர்த்து, ஆய்வுப் பணிகள், கருத்தரங்குகள் முதலிய பல நற்பணிகள் புரிந்து, பதினேழு ஆண்டுகள் தமிழை அப்பல்கலைக் கழகத்தில் ஆல்போல் விரிந்து அருகுபோல் வேரூன்றச் செய்துவிட்டு ஓய்வு பெற்றவர். ஓய்வு பெற்ற பிறகும் ஒன்றரை யாண்டுகள் கலைக்களஞ்சியத்தின் தலைமைப் பதிப்பாசிரியராகப் பணியாற்றியவர். உழைப்பின் உருவமாகத் திகழும் பேராசிரியர் ரெட்டியார் அறிவியலையும் அருளியலையும் இணைக்கும் பைந்தமிழ்ப் பாலமாக நிலவி இவர் படைத்துள்ள நூல்களின் எண்ணிக்கை இவர் வயதோடு ஐம்பத்தெட்டை எட்டிப் பிடித்துவிட்டது (இவர் வயது 66). தம் வாழ்வின் அநுபவங்களையும் தாம் பயின்ற நூல்களின் நுண்பொருள்களையும் இணைத்து ஆற்றொழுக்காக, படிப்போர் நெஞ்சைப் பிணிக்கும் வண்ணம், நேருக்கு நேர் நின்று பேசுவதைப் போல் எளிய இனிய தமிழில் விரிவாகவும் சுவையாகவும் எழுதுவது இவருக்குக் கைவந்த கலையாகும்.

'பாரதீயம்' என்ற இந்த நூலின் பெயர்க் காரணத்தை, எடுத்த எடுப்பிலேயே பொருத்தமுற எடுத்துரைக்கின்றார் இப்பெரும் பேராசிரியர்.

> "கொள்கை அல்லது கொள்கைகளைத் தமக்கே உரிய முறையில், பிறர் கூறாத வகையில் ஒருவர் கூறுவது அவர்தம் தனிச் சிறப்பாகும். மொழி, இலக்கியம்பற்றிய கொள்கைகளைத் தொகுத்தும் வகுத்தும் கூறினார் தொல்காப்பியர். அவர் கூறிய நூல் 'தொல்காப்பியம்' எனப் பெயர் பெற்றது. அந்நூலுக்குத் தமக்கே உரிய முறையில் உரை கண்டார் நச்சினார்க்கினியர்; அது 'நச்சினார்க்கினியம்' என்ற திருநாமம் பெற்றது. இங்ஙனமே சேனாவரையரின் அந்நூலுக்குரிய உரை 'சேனாவரையம்' என்ற பெயரால் வழங்குகின்றது. இத்தகைய மரபினைப் பின்பற்றிச் சில கொள்கைகளைப் பாரதியார் தமக்கே உரிய முறையில் கூறுவதைப் 'பாரதீயம்' என்று வழங்கலாமல்லவா?" (பக். 1).

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் நம்மாழ்வாரின் **'திருவாய்மொழி'** குறித்து ஆய்ந்து ஆங்கிலத்தில் எழுதி டாக்டர் பட்டம் பெற்ற

பேராசிரியர் ரெட்டியார் ஒரு சிறந்த வைணவத் தமிழறிஞராக விளங்குகின்றார்; வைணவத்தில் பல்வேறு ஆன்மிக நூல்களை எழுதியுள்ளார். இவருடைய வைணவ ஈடுபாடு இவர் எழுதியுள்ள எல்லா நூல்களிலும் வெள்ளிடை மலையாகத் தோன்றும். இந்நூலிலும் பாரதியாரின் விடுதலை வேட்கைக்கு உவமை கூறும்போது "நாயன்மார்கட்கும் ஆழ்வார்கட்கும் பக்தி அவர்தம் மூச்சாக இருந்தது போலவே, இவருக்கு விடுதலையே மூச்சாக இருந்தது" (பக். 7) என்று நயம்பட உரைக்கின்றார்.

'சித்தினை அசித்துடன் இணைத்தாய்—அங்கு
சேரும்ஐம் பூதத்து வியனுலகு அமைத்தாய்
அத்தனை யுலகமும் வண்ணக் களஞ்சிய
மாகப் பலப்பலநல் அழகுகள் சமைத்தாய்'

என்ற பாரதியாரின் பாடற்பகுதி விசிட்டாத்வைத தத்துவத்தை உள்ளடக்கி இருப்பதைப் பேராசிரியர் சுவைபட விளக்குகின்றார் (பக். 67).

இறைவனை அடைதற்கு 'வைணவ' தத்துவத்தில் முடிந்த முடிபாக, எளிய வழியாக, மேற்கொள்ளப்பெறுவது **பிரபத்தி நெறி** (சரணாகதி மார்க்கம்). எனினும், சற்றுக் கடினமாகவுள்ள பக்தி நெறியும் அங்கு மேற்கொள்ளப்பெறுகின்றது' 'என்று கூறி அவற்றைப் பாரதியார் கைக்கொண்டதாக எடுத்துக்காட்டுகின்றார் (பக். 57). பேராசிரியர் ரெட்டியாரின் ஆழ்ந்த தமிழ்ப்புலமையும் பன்னூல் ஆராய்ச்சியும், பழுத்த அநுபவமும் பாரதியார் பாடல்களைப் பாங்குடன் விளக்கப் பல இடங்களில் பயன்படுகின்றன :

> "தன்னைக் கட்டுதல்' என்பது மனத்தைக் கட்டுதல். ஐம்பொறிகளை அடக்கி மனத்தைக் கட்டுதல் என்று ஞானியர் கூறும் பொருளில் அல்ல ஈண்டுக் குறிப்பிடப்பெறுவது. 'பாதரசமாய்ச் சஞ்சலப்பட்டுக்கொண்டே' (தாயுமானவர்) இருக்கும் மனத்தை, பல பொருள்களின்மீது சஞ்சலப்படுகின்ற மனத்தை அடக்கினால் போதும் என்பது பாரதியாரின் கருத்து" (பக். 83).

பாரதியாரின் கவிதைகளை விளக்கும்போது காலத்திற்கேற்ற கருத்துகளையும், குறிப்பாக அறிவியற்கருத்துகளையும் ஆங்காங்குப் (பக். 52—55; 191—92) பேராசிரியர் ரெட்டியார் விளக்கிச் செல்வது படிப்போரின் சுவையை மிகுவிக்கும் என்பதற்கு ஐயமில்லை.

"கலைச்சொற்களை உண்டாக்கிக்கொண்டு தாய்மொழியில் கற்பித்தலைத் தொடங்கவேண்டும் என்று நினைப்பது, நீந்தக் கற்றுக்கொண்ட பிறகு நீரில் இறங்கவேண்டும் என்று எண்ணுவது போலாகும். செயலில் இறங்கினால்தான் அனைத்தும் சீர்படும். தார் சாலை அமைப்பதற்கு முன்னர் மண்சாலை, மண்ணும் பெரிய சல்லிகளும் கலந்த சாலை, மண்ணும் சிறிய சல்லிகளும் கலந்த சாலை என்றிப்படிப் பல படிகளைத் தாண்ட வேண்டியுள்ளதல்லவா? இந்நிலையைத் தாய்மொழி பயிற்றுமொழியாக அமைவதிலும் சந்திக்க நேரிடும்" (பக்.160).

பாரதியாரின் 'வசன கவிதைகளை' ஆராயும் போக்கில் பேராசிரியர் ரெட்டியார் கூறுவார் :

"நாம் வாழ்வது அறிவியல் தொழில் நுட்பக் காலம். தட்டச்சுப்பொறி, அச்சுப்பொறி, அச்சுப்பொறிகளிலும் பல்வேறு நுட்ப வகைகள்—இவை எழுதுவதற்குத் துணையாக அமைந்துவிட்டன... .... செவிப்புலன் ஆட்சியைவிடக் கட்புலன் ஆட்சி மிகுந்துவிட்டது. எவற்றையும் நினைவில் நிறுத்தித் 'தலைக்கனம்' செய்யவேண்டிய இன்றியமையாமை இல்லாது போய்விட்டது. கல்வி முறையிலும் நெட்டுருச்செய்து நினைவிலிருத்த வேண்டிய முறை தளர்ந்துவிட்டது; தகர்ந்தே போய்விட்டது என்றுகூடச் சொல்லலாம். வாய்விட்டுப் படித்தல் குறைந்து வாய்க்குட் படித்தல் செல்வாக்கு அடைந்துவிட்டது. ஒரே அறையில் - பெரிய மண்டபத்தில் - பலர் இருக்கைகளில் அமர்ந்து 'கல்லாலின் புடை அமர்ந்துள்ள தென்முகக் கடவுள் போல்' நூல்களிலும் வார; பிறை, திங்கள் இதழ்களிலும் ஆழங்கால் பட்ட நிலையில் அமர்ந்திருக்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருப்பதை நூலகங்களில் காணலாம். (பக். 116).

இந்நூலில் எடுத்துக்காட்டப்பெற்றுள்ள 'இலக்கிய ஆராய்ச்சிக்கு ஓர் அறிமுகம்' என்ற ஆங்கில நூலில் அட்சன் என்ற திறனாய்வுப் பேராசிரியர் கூறும் இலக்கியக் கொள்கைகள்பற்றிய மேற்கோள் 'பாரதீயம்' என்ற இந்நூலுக்கும் பொருந்தும் :

"கவிதையை ஆராயுங்கால், நம்முடைய முதற்கவனம் கவிஞன்பால் செல்லவேண்டும்; அவன் ஆளுமையிலும் அவன் உலகைப்பற்றிக் கொண்டுள்ள மனப்பான்மையிலும் செல்ல வேண்டும்; வாழ்க்கையை எவ்வாறு நோக்கி விளக்கந் தருகின்

றான் என்பதைக் கவனித்தல் வேண்டும். இது வெளிப்படையாகவும் இருக்கலாம்; குறிப்பாகவும் இதனைப் பெற வைக்கலாம். கலை, வடிவம், வரலாறு போன்ற செய்திகளில் நாம் எவ்வளவு ஆழ்ந்திருந்த போதிலும், மேற்கூறிய கவிதையின் முதனிலைக் கூறுகள் எவ்விதத்திலும் நம் பார்வையினின்று நழுவாமல் காக்கவேண்டும்'' (பக். 150 - 151).

இந்த ஒளியின் அடிப்படையில் இந்த நூலை நோக்கவேண்டும். 'சமுதாயப் பார்வை' (கட்டுரை - 5) என்பதையாவது குறிப்பாக நோக்கவேண்டும். இலக்கியச் சுவைஞர்களும் இலக்கிய ஆய்வாளர்களும் **கட்டுரை - 9, கட்டுரை - 10** ஆகியவற்றைப் படித்துத் தம் சுவையையும் தம் ஆராய்ச்சி நோக்கையும் எடை போட்டுப் பார்த்துக் கொள்ளலாம்; இவற்றில் ஒருவிதப் புத்தொளி வீசுவதையும் காணலாம்.

'உலகை இன்பமயமாகக் கண்டு, உள்ளத்தில் பூரிப்பு அடைபவர்கள் கவிஞர்கள்' என்றால் அக்கவிதை தரும் இன்ப அநுபவங்களை எடுத்துரைக்கும் திறனாய்வாளருக்கும் அக்கவிஞர்களுக்கு இருக்கவேண்டிய உள்ளக்கனிவு கட்டாயம் இருக்கவேண்டும். அவ்வகையில் பாட்டரசர் பாரதியாரின் 'நவநீதம்' போன்ற கவிதைகளை நெய்யாக்கி உண்ணத் தந்துள்ளார் பேராசிரியர் டாக்டர் ரெட்டியார் என்பதை இந்நூலைப் படித்து முடிக்கும் எவரும் ஒப்பி மகிழ்வர்.

'கவிதையின் உயிராற்றல் பகுதிகளை உரைநடையில்தான் வளமாகத் தருதல் இயலும்' என்ற வொர்ட்ஸ்வொர்த்தின் கருத்திற்கேற்ப, பல்வேறு உரைநடைச் செல்வங்களைப் படித்துத் தமிழுக்கு வளம் சேர்க்கும் தெய்வப் பணிபுரிபவர் பேராசிரியர் ரெட்டியார். இத்தனைக்கும் மேலாகப் 'புத்தம்புதிய நுட்பங்கள் கூறும்' அறிவியல் துறைகளில் பாடல் நூல்களின் பாணியில் 'அழுது வடியும் முறையில்' எழுதாது அழகான தமிழில் புதிய அறிவியல் பிடிப்புகளை ஆற்றலுடன் எழுத முடியும் என்று தமிழின் மொழியாண்மையைப் புலப்படுத்தும் பாங்கில் பதினான்கு நூல்களை எழுதித் தமிழன்னைக்கு அணிகளாகப் பூட்டி மகிழ்ந்த பேராசான். அறிவியலில் கல்லூரியில் பட்டப் படிப்புக்குப் படித்த மூன்று துறைகளைத் தவிர வேறு நான்கு துறைகளை அரிதின் முயன்று கற்று அவற்றில் ஆழ்ந்த புலமையை அடைந்தவர் என்பதற்கு இவர் தம் அறிவியல் படைப்புகளே சான்றுகளாக நின்று பேசும். உடல்

நலத்துடனும் மன வளத்துடனும் திகழும் இந்த **'நடமாடும் கலைக் களஞ்சியத்தை'** - உழைப்பின் உருவத்தை - தமிழ்ப் பல்கலைக் கழகமோ, தமிழக அரசோ தக்க முறையில் பொறுப்பினை நல்கிப் பயன்படுத்திக்கொள்வது அவர்தம் தலையாய கடமை. இந்தப் பேராசிரியர் தம் பணியால் அளவிடுபவரேயன்றி, பெறும் பொருளால்-ஊதியத்தால் - அல்ல. இத்தகைய பெரும் பேராசிரியர் பல்லாண்டுகள் வாழ்ந்து தமிழ்மொழிக்கும் தமிழகத்திற்கும் நற்றொண்டாற்றிச் சிறக்க வாழ்த்துகின்றேன். வாழ்க நம் பேராசிரியர்! வளர்க இவர்தம் தமிழ்ப்பணி!!

நவம்பர் 2, 1983 **ஔவை நடராசன்**

நூல் முகம்

அறிவிலே தெளிவு நெஞ்சிலே உறுதி
அகத்திலே அன்பினோர் வெள்ளம்
பொறிகளின் மீது தனியர சாணை,
பொழுதெலாம் நினதுபே ரருளின்
நெறியிலே நாட்டம் கருமயோ கத்தில்
நிலைத்திடல் என்றிவை யருளாய்
குறிகுண மேதும் இல்லதாய் அனைத்தாய்க்
குலவிடு தனிப்பரம் பொருளே ![1]

—பாரதியார்

நடைபெற்றுக்கொண்டிருப்பது இலக்கிய மறுமலர்ச்சி யுகம். அதில் நாம் பாரதி நூற்றாண்டில் வாழ்கின்றோம். தமிழ்கூறு நல்லுலகமெங்கும் பாரதி நூற்றாண்டு விழாச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. பாரதியாரின் படைப்புகளில் மக்கள் ஆழங்கால் படுகின்றனர். பாரதியாரை ஆழ்ந்து கற்குங்கால் நாம் ஆய்ந்து கண்ட முடிவுகள் யாவை ? தமிழ் மொழியில் கவிதையாயினும் உரைநடையாயினும் முதன் முதலாக எளிய நடையை அழகுற அமைத்த பெருமை பாரதியாரையே சாரும். பாரதியாரின் கவிதை வேர் பண்டைத் தமிழ் இலக்கியப் புலத்தில் ஆழமாய் ஓடியுள்ளதையும் அதில் பூத்த மலர்கள் புதியதொரு சோலையைக் கண்டிலங்குவதையும் காண முடிகின்றது. அவர் உள்ளம் கம்பனின் கங்கை வெள்ளக் கவிதையில் மூழ்கிக் களித்ததையும், வான்புகழ் கொண்ட வள்ளுவரின் நூலில் ஈடுபட்டிருந்ததையும் நோக்க முடிகின்றது; அவர்தம் நெஞ்சம், நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தில் கரைந்ததையும், பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டத் திகழும் ஆழ்வார்களின் பாசுர ஊற்றுகளிலும் இராமலிங்கர், தாயுமான அடிகள் இவர்களின் தீஞ்சுவைக் கவிதை ஓடைகளிலும் நீராடி மகிழ்ந்ததையும் உணர முடிகின்றது.

இவற்றையெல்லாம் நன்கு அறிந்து தெளிந்த கவிமணியவர்கள் "பாட்டுக்கொரு புலவன் பாரதியடா !" என்று பட்டிக்காட்டான் ஒருவன் வாயில் வைத்துப் பேசுகின்றார். பட்டிக்காட்டான் தான் பெற்ற பாரதியின் பாட்டநுபவத்தை,

---

1. கவிதைகள் : சுயசரிதை - 49.

நாட்டு மொழியுமவன் பாட்டினிசையில்—மிக்க
நல்ல கற்கண்டினிமை சொட்டுமேயடா
ஏட்டிலிம் மந்திரந்தான் கண்டவருண்டோ—ஈதவ்
ஈசன் திருவருளென் றெண்ணுவாயடா.

உள்ளந் தெளியுமொரு பாட்டிலேயடா—மிக்க
ஊக்கம் பிறக்குமொரு பாட்டிலேயடா
கள்ளின் வெறிகொளுமோர் பாட்டிலேயடா—ஊற்றாய்க்
கண்ணீர் சொரிந்திடுமோர் பாட்டிலேயடா.[2]

என்று வடித்துக் காட்டுவர். மற்றும் கவிதைகளில் சொல்லுக்குச் சொல்லழகு ஏறுவதையும்; கவி துள்ளும் மறியைப்போல் துள்ளு வதையும், கல்லும் கனிந்து கனியாவதையும், பசுங்கன்றும் பால் உண்டிடாது கேட்பதையும்; கவிதைகளில் குயிலும் கிளியும் கூவு வதையும், மயில் குதித்துக் குதித்து நடமாடுவதையும், வெயிலும் மழையும் அதில் தோன்றுவதையும், மலர் விரிந்து விரிந்து மணம் வீசுவதையும்; பாடல்களில் விண்ணில் ஒளிரும் மீன்கள் மின்னுவதை யும், விண்ணில் திகழும் மதி நிலவு வீசுவதையும், கண்ணுக்கினிய சோலை தென்படுவதையும், அச்சோலையில் இளமான்கள் களித்து விளையாடுவதையும்; தேனும் தினை மாவும் பாவில் உண்ண முடி வதையும், மிகத் தித்திக்கும் முக்கனியை நுகர முடிவதையும், கானக் குழலினிசையையும் அதன் ஊடே களி வண்டு மிழற்றுவதையும் கேட்க முடிவதைப் பிரித்துப் பிரித்துக் காட்டுவர்.

பாரதீயம் என்ற இந்நூல் 'பாரதீயம்' என்ற கட்டுரையைத் தொடக்கமாகக் கொண்ட பத்துக் கட்டுரைகளின் தொகுப்பாகும். இந்தக் கட்டுரைகளில் யான் பாரதியாரின் கவிதைகளில் ஆழங்கால் பட்டதைக் காட்டியுள்ளேன். இவை பாரதியாரின் பாடல்களின் நயத்தைப் பரிச்சிட்டுக் காட்டுவதுடன் பாரதியாரின் பல்வேறு கொள்கைகளைப் பாங்குற எடுத்துக்காட்டும் விருந்துமாகும். இவற்றில் பாரதியாரின் ஆளுமைக் கோலங்களை ஒரு பல்லுருவம் காட்டியில் (Kaledoscope) காணும் காட்சிகளைப்போல் கண்டு மகிழ லாம். என்றாலும்,

பாவின் நயமெல்லாம்— யானும்
பகர வல்லேனோ
ஆவின் பாற்சுவையை—நாழி
அளந்து காட்டிடுமோ ?[3]

என்ற கவிமணியின் அளவுகோலின் வரையறையை எண்ணிப் பார்த்தே யாகவேண்டும். அப்போதுதான் அந்த அளவுகோலின்

---

2. **கவிமணி: மலரும் மாலையும்**-பாரதியும் பட்டிக்காட்டானும்-7. 8.
3. ஷை - ஷை - 22.

எல்லையை உண்மையிலேயே உணர முடியும். கவிதைகளைச் சுவைத்துக் கூறுகின்றவர்களின் கருத்துகளெல்லாம் அவர்களுடைய உணர்ச்சியையே சார்ந்திருக்கும் என்று கொண்டால் இங்குக் காணப் பெறும் கூற்றுகள் வாதத்திற்கு இடம் தரா. பல்லாண்டுகளாக யான் பாரதியாரின் பாடல்களைச் சுவைக்கும்போது குமிழியிட்டெழுந்த என் கருத்துகள் 'பாரதியாரின் நூற்றாண்டில்' பாகுபடுத்தப்பெற்று நூல் வடிவம் கொண்டு தமிழ்கூறு நல்லுலகில் நடையாடுகின்றன. பாரதியாரின் படைப்புகளில் ஈடுபாடு கொண்ட அன்பர்கள், அறிஞர்கள் என்னுடைய இந்த நூலிலும் கவனத்தைச் செலுத்து வார்கள் என்பது என் உறுதியான நம்பிக்கை. அத்தகைய பேற்றினை இந்நூல் பெறுமானால் அதனை என் பெறற்கரிய பேறாகக் கருதுவேன்.

இந்த நூலின் கைப்படியை அன்புடன் ஏற்று வெளியிட்ட **பழநியப்பா சகோதரர்கட்கு** என் நன்றி கலந்த அன்பினைப் புலப்படுத்திக்கொள்ளுகின்றேன்.

இந்த நூலுக்கு அழகிய அணிந்துரை நல்கிய டாக்டர் ஔவை நடராசன் என் உடன்பிறவாச் சகோதரர் போன்றவர். டாக்டர் **மு. வரதராசனின்** பல நன்மாணாக்கர்களுள் ஒருவர். தமிழ் இலக்கியங் களையும் இலக்கணங்களையும் பழுதற ஓதிப் பயன் பெற்றவர். அடக்கமான பண்புடையவர். எல்லோரிடமும் எளிமையாகப் பழகுபவர். தமது 'கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழியும்' பேச்சால் பல்லாயிரக்கணக்கான மக்களின் மனத்தைக் கவர்ந்து வருபவர். இத்தகைய கெழுதகை நண்பர் இந்நூலுக்கு அணிந்துரை வழங்கினமைக்கு என் அன்பு கலந்த நன்றியை உரித்தாக்குகின்றேன்.

ஜஸ்டிஸ் டாக்டர் **எஸ். மகராசன்** அவர்களை அறியாத தமிழர்களே இரார். சட்ட நுணுக்கங்களை அறியும் திறன் ஒருபுறமிருக்க, ஆங்கிலம், ஃபிரெஞ்சு என்ற இரண்டு அயல் மொழிகளிலும் வல்லுநர். தமிழ் இலக்கியங்களில் மிகவும் ஆழங்கால் பட்டுச் சுவைக்கும் பேரன்பர். **ரசிகமணி டி. கே. சி.**-யின் முதல் சீடர். ரசிகமணி டி. கே. சி. யின் வாழ்நாள் காலம் முதல் தம் மறைந்த காலம் வரை ரசிகமணியின் புகழ் பரப்பி வந்த பெருமகனார். ரசிகமணி கண்ட வட்டத்தொட்டியின் தலைவராக இருந்து பல இலக்கியக் கூட்டங்களை நடத்திப் பல்லாயிரக்கணக்கான தமிழன்பர்கட்கு இலக்கிய ரசனை யினைத் தொற்று போல் பரப்பினவர். கம்பனையும் வள்ளுவனையும் கரைத்துக் குடித்தவர். இவர்தம் அருந்தமிழ் நூல்கள் அனைத்தும் ரசனையின் வடிவங்கள். இவர்தம் இலக்கியங்களை மேனாட்டாரும் அறியும்படி அரிய ஆங்கில நூல்களை வெளியிட்டு உதவியவர்.

செகப்பிரியரின் ஆங்கில நாடகங்களை ரசனைப் பண்புடன் தமிழ் மக்கட்குத் தமிழில் வழங்கினவர். திருமூலரின் இதயத்தை நன்கு அறிந்த பெரியார். இத்தனைக்கும் மேலாகப் 'பண் புடையார் பட்டுண்டு உலகு' என்ற வள்ளுவர் வாக்குக்கு இலக்கிய மாகத் திகழ்பவர். இவர் தூத்துக்குடி மாவட்ட நீதிபதியாக இருந்த நாள் முதல் (1949) மறைந்த நாள் வரை (1982) இவரை நன்கு அறிவேன். காரைக்குடிக் கம்பன் அடிப்பொடியால் எனக்கு அறிமுகம் ஆனவர். நான் காரைக்குடியில் பணியாற்றியபோது ஆண்டுதோறும் இவரைச் சந்தித்து அன்புரையாடும் வாய்ப்பு இருந்து வந்தது. திருப்பதியில் பணியாற்றியபொழுது அப்பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற கம்பராமாயணக் கருத்தரங்கை இவரைக்கொண்டு தொடங்கி வைத்தேன். இவருடைய ஆங்கிலப் பேருரையைக் கேட்ட பல நூற்றுக்கணக்கான தெலுங்கு அன்பர்கள் தம் மூக்கின்மேல் விரல்வைத்து மகிழ்ந்தனர். இத்தகைய பேரன்பர்க்கு இந்த நூலை அன்புப்படையலாக்கி மகிழ்கின்றேன். அமரத்துவம் பெற்ற இவர்தம் ஆசியால் இலக்கியங்களைச் சுவைக்கும் பழக்கம் என்னிடம் மேன்மேலும் வளரும் என்பது என் திடமான நம்பிக்கை.

இச்சமயத்தில் பாரதியாரின்,

செய்யும் கவிதை பராசக்தி
யாலே செயப்படுங்காண்.[4]

பாட்டினிலே சொல்லுவதும்
அவள்சொல் லாகும்.[5]

என்ற வாக்குகளைச் சிந்திக்கின்றேன். பாரதியார் கருதுவதுபோல் இந்நூலை, யான் எழுதி வெளியிட்டதற்கு என்னுளே அந்தர் யாமியாக இருக்கும் திருவேங்கடமுடையானே காரணன் ஆவான். அவனே எனக்கு நோயற்ற நிலையையும் எல்லா நலன்களையும் ஈந்து என்னை இயக்கி நன்னெறிப்படுத்தி வருபவன். அவனே பாரதியார் வழிபடும் கண்ணனாகவும், கோவிந்தனாகவும், இராமனாகவும் இருந்து வருகின்றான்; அவனை மனம், மொழி, மெய்களால் வழுத்தி இறைஞ்சி வணங்குகின்றேன்.

எளியனேன் யானெனலை எப்போது
போக்கிடுவாய், இறைவ னே !இவ்

---

4. வி. நா. மா—26

5. தோ. பா : பேதை நெஞ்சே-5.

வளியிலே பறவையிலே மரத்தினிலே
முகிலினிலே வரம்பில் வான
வெளியிலே, கடலிடையே மண்ணகத்தே
வீதியிலே வீட்டி லெல்லாம்
களியிலே, கோவிந்தா ! நினைக்கண்டு
நின்னொடுநான் கலப்ப தென்றோ ?[6]

சென்னை - 600 040
டிசம்பர் 20, 1983,

ந. சுப்பு ரெட்டியார்

6. தோ. பா : கோவிந்தன்பாட்டு - 2

உள்ளுறை

1. பாரதீயம்

கொள்கை அல்லது கொள்கைகளைத் தமக்கே உரிய முறையில், பிறர்கூறாத வகையில் ஒருவர் கூறுவது அவர்தம் தனிச் சிறப்பாகும். மொழி, இலக்கியம்பற்றிய கொள்கைகளைத் தொகுத்தும் வகுத்தும் கூறினார் தொல்காப்பியர். அவர் கூறிய நூல் 'தொல்காப்பியம்' எனப் பெயர் பெற்றது. அந்நூலுக்குத் தமக்கே உரிய முறையில் உரை கண்டார் நச்சினார்க்கினியர்; அது 'நச்சினார்க்கினியம்' என்ற திருநாமம் பெற்றது. இங்ஙனமே, சேனாவரையரின் அந்நூலுக்குரிய உரை சேனாவரையம் என்ற பெயரால் வழங்குகின்றது. இத்தகைய மரபினைப் பின்பற்றிச் சில கொள்கைகளைப் பாரதியார் தமக்கே உரிய முறையில் கூறுவதைப் பாரதீயம் என்று வழங்கலாமல்லவா?

எந்த ஒரு நாட்டிலும் அந்த நாட்டில் வழங்கும் மொழி அல்லது மொழிகளில் தோன்றும் இலக்கியங்களில் அவை தோன்றும் காலத்தில் நிலவும் சமுதாய வாழ்வு பிரதிபலிக்கும் என்பது அறிஞர்கள் கண்ட உண்மை.[1] இலக்கியத்தைப் படைக்கும் ஆசிரியன் தான் வாழும் சமுதாயத்தில் நடைமுறையிலுள்ள கருத்துகளை இலக்கியத்தில் காட்டுவான். அவன், நிலவும் கருத்துகளை ஒன்றுசேர்த்து விளக்கம் செய்வானே யன்றிப் புதிய கருத்துகளைக் கண்டறிவது அவன் நோக்கம் அன்று. புதிய கருத்துகளைக் கண்டறிவதும் அவற்றை வெளிப்படுத்துவதும் மெய் விளக்க நூலறிஞனின் வேலையாகும். இலக்கிய ஆசிரியன் அக்கருத்துகளைக் கலைத்திறனுடன் காட்டுவதற்கு ஏற்ற வாய்ப்பு ஒன்றனை உண்டாக்கிக்கொள்ளுவான். தான் காட்ட நினைக்கும் கருத்துகளைக் கவர்ச்சிகரமானவையாய் ஓர் ஒழுங்கில் கோவையாக அமைத்துக்கொள்ளுவான். அவற்றைத் தான் ஏற்படுத்திக்கொண்ட வாய்ப்பில் மிகத்திறனுடன் கவர்ச்சிகரமாக அமையும்படி செய்வான். இங்ஙனம் தோன்றும் இலக்கியமும் தக்க சூழ்நிலை இருந்தால்தான் 'சூடு' பிடிக்கும். நாட்டில் வேகமாகவும் பரவும்.[2] எனவேதான், எல்லாக் காலங்களிலும் சிறந்த இலக்கியங்கள் தோன்றுவதில்லை; பேராற்றல் வாய்ந்த ஒருசில

---

1. Literature is (thus) fundamentally an expression of life through the medium of language.—W. H. Hudson.

2. For a creation of master - work of literature two powers must concur, the power of the man and the power of the moment, and the man is not enough of the moment.—Mathew Arnold.

ஆசிரியர்கள் தோன்றியிருந்தாலும் அவர்கள் சிறப்புடன் திகழ முடியாதுபோய்விட்டது என்றுதான் கொள்ளவேண்டும். ஆசிரியனிடம் திறனிருந்தும் ஏற்ற சூழ்நிலை அமையாமையால் அவன் படைப்பு சிறப்புடன் மிளிர்வதில்லை. படைப்புக்கேற்ற சூழ்நிலை அமைவது அவன் கட்டுப்பாட்டில் இல்லை. இவ்வுண்மையை அடிப்படையாகக் கொண்டு நோக்குமிடத்து, பாரதியார் வாழ்ந்த காலம் அவர்தம் படைப்பாற்றலுக்குக் கைகொடுத்து உதவிற்று; அவர் வாழ்ந்த சூழ்நிலையும் தக்க முறையில் துணை செய்தது. தனிச் சிறப்புடன் செயற்பட்ட அவர்தம் தனித்திறமையும் நிகழ்ச்சிகளுக்குத் தம் கற்பனைத் திறனால் புது மெருகூட்டும் பாங்கும் கலந்து அவர் மாபெரும் கவிஞராக மலர வழி ஏற்பட்டது.

பாரதியார் வாழ்ந்த காலம், நாட்டில் பெரும் குறைகள் மலிந்து நிலவிய காலம். நம் நாடும் அன்னியர் ஆட்சியில் அடிமை நாடாக அடங்கிக் கிடந்தது. நாட்டு மொழிகளின் வளர்ச்சிக்கும் அவற்றின் ஆக்க வழிகட்கும் வாய்ப்பு இல்லை. சமுதாயத்திலும் ஆணின் கையே மேலோங்கி இருந்தது; பல வகைகளில் பெண்ணுக்கு உரிமை இல்லாதிருந்தது. சமயப் பிணக்கும் ஆங்காங்குத் தலைதூக்கிய வண்ணம் இருந்தது. தற்சாதிப்பற்று என்ற கொடுமை சமூகத்தை ஆட்டிவைத்தது. இச்சூழ்நிலைதான் பாரதியார் வாழ்ந்த சூழ்நிலை. இச்சூழ்நிலையில்தான் பாரதியாரின் பாடல்கள் முகிழ்த்தன. எனவே, நாட்டுப்பற்று, விடுதலை வேட்கை, தாய்மொழிப்பற்று, சமுதாய முன்னேற்றம், பழமையில் புதுமை, பெண் விடுதலை, அறிவுத் தெளிவு—இவை யாவும் பாரதீயங்களாயின.

பழமையின் அடிப்படையில் புதுமை : பண்டிருந்து இன்றுவரை எழுந்த இலக்கிய இலக்கணங்களை நோக்கின், தமிழ் நூல்கள் பழமைப் பற்றுடையனவாகவே அமைந்து வருவதைக் காணலாம். இலக்கிய இலக்கணங்கள் தோன்றிய காலத்தில் சமூகம் பழமை எய்திவிட்டது; மக்கள் நினைவோட்டத்தில் அடிச்சுவடுகள் தோன்றி விட்டன. மக்கள் அச்சுவடுகளிலேயே செல்லத் தொடங்கினர். மனிதன் கண்ட மொழி என்ற ஓர் அற்புதக் கருவியின்றிச் சிந்திக்கும் ஆற்றல் செயற்பட முடியாது போய்விட்டது. சொற்களும் சொற்றொடர்களும் மரபாகிவிட்டன ; குறியீடுகளாக நின்று பொருள்களை உணர்த்தத் தொடங்கிவிட்டன. ஆகவே, எதிலும் 'புதுமை' என்ற ஒரு தனித்துவத்தைக் காண்டல் அரிது. 'தனிப்புதுமை' என்பது குதிரைக் கொம்பு. பழயவற்றைப் புதுக்கின பிறகு அவற்றைப் 'புதுமை' என்று புகழாரம் சூட்டுகின்றோம். பாரதியாரையே நாடு 'புதுமைக் கவிஞர்' என்று போற்றுகின்றது; அவரும் 'சுவை புதிது, பொருள் புதிது' என்றும் பெருமைப்பட்டுக்கொள்கின்றார். மக்கள் யாவரும் ஒருமனத்துடன் இப்பெருமைக்கு அவர் உரியவர்,

கின்றார் என்று ஒப்புக்கொள்கின்றனர். ஆழ்ந்து நோக்கினால் பாரதியாரிடம் நாம் காணும் புதுமைகள் யாவும் பழமையின் அடிப்படையிலேயே அமைந்தவை என்பதை அறிகின்றோம்; தெளிகின்றோம். இதன் விளக்கத்தை அடியில் காண்போம்.

நாட்டுப்பற்று : தாம் பிறந்த நாடு தமிழகமாயினும் பாரதியார் கண்ட நாடு, பாரத நாடு. அவர்தம் தேசியப் பார்வை மிக விரிந்தது. தமிழகத்தையும் பிற பகுதிகளையும் பாரதப் பெருநாட்டின் அகப் பகுதிகளாகவே நோக்கினார். "யாதும் ஊரே யாவரும் கேளிர்"[3] என்ற மரபுவழிவந்த தமிழ் மகனிடம் குறுகிய நோக்கு எங்ஙனம் முகிழ்க்கும்? பாரத நாடு முழுவதும் அடிமைப்பட்டிருந்த நிலையில் தமிழக விடுதலையை மட்டிலும் பிரித்துப் பாடும் குறிப்பு அவர் பாடல்களில் இருக்கமுடியுமா? எனவே, விரிந்த மன நிலையைக்கொண்ட அவர் பாரதத்தைப் பாரத மாதாவாகவே—இந்தியத் தாயாகவே — காண்கின்றார்.

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே—அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே — அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே.[4]

என்று நாட்டை வணங்கிப் போற்றுகின்றார்.

தாயின் மணிக்கொடி பாரீர் — அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்.[5]

என்ற கொடிவணக்கப் பாட்டில், பல்வேறு காரணங்களால் சிதறுண்டு கிடக்கும் மக்களை 'அறைகூவி அழைக்கின்றார்; ஒரு கொடிக்கீழ் வந்து திரளுமாறு பணிக்கின்றார். இதனை அக நாட்டார் அனைவருக்கும் விடுக்கும் அழைப்பாகக் கொள்ளலாம். தமிழ் மொழியைக் கன்னித் தமிழாகவே — ஆற்றல் மிக்க மொழியாகவே — காணும் தமிழ் மரபில் வந்த கவிஞர், பாரத மாதாவையும் 'கன்னிகை'யாகவே காண்கின்றார். பாரத மாதாவை,

முப்பது கோடி முகமுடையாள்உயிர்
மொய்ம்புற வொன்றுடை யாள் — இவள்
செப்பு மொழிபதி னெட்டுடை யாள் எனிற்
சிந்தனை ஒன்றுடை யாள்.[6]

3. புறம் - 192
4. நாட்டு வணக்கம் - 1
5. தாயின் மணிக்கொடி - பல்லவி
6. எங்கள் தாய் - 3

என்று படைத்துக் காட்டும்போது வேற்றுமையில் ஒற்றுமை (Unity in diversity) காணும் கவிஞரின் பாரதப் பண்பைக் காண முடிகின்றது. மேலும், 'அறுபது கோடி தடக்கைகள்' உடையவள் என்றும், இக்கைகளால் அறங்கள் நடத்துவாள் என்றும் மொழி கின்றார்.

நீலத் திரைக்கட லோரத்திலே — நின்று
நித்தம் தவஞ்செய் குமரிஎல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே—புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு.[7]

என்று தமிழ்நாட்டிற்கு எல்லை வகுத்தது; 'வடவேங்கடம் தென் குமரி' என்ற பண்டைய தொல்காப்பிய மரபையொட்டியேயாகும். ஆனால், அடிமைத்தளையை அகற்ற வேண்டும் என்று அவாவி நிற்கும் கவிஞர் இந்திய ஒருமைப்பாட்டையே நாடுகின்றார். இதனால் குழந்தைப் பாடலிலேயே பிஞ்சு மனங்களுக்கு,

வடக்கில் இமயமலை பாப்பா — தெற்கில்
வாழும் குமரிமுனை பாப்பா !
கிடக்கும் பெரியகடல் கண்டாய்—இதன்
கிழக்கிலும் மேற்கிலும் பாப்பா ![8]

என்று நாட்டின் வழக்கு எல்லையை வரைந்து காட்டுகின்றார். பிறிதோர் இடத்தில்,

பேரிமய வெற்புமுதல் பெண்குமரி ஈறாகும்
ஆரியநா டென்றே யறி.[9]

என்று இந்த எல்லையைக் குறிப்பிடுகின்றார். எனவே, பாரதியின் பாரதப் பாடல்கள்[10] தமிழ்மொழிக்குப் புதியவை ; தமிழர்களிடம் அகன்ற நோக்கை - விரிந்த பார்வையை - உண்டாக்கக்கூடியவை. எந்த மொழியிலிருப்பினும் உயர்ந்த சிந்தனையையுடைய பாடல்கள் மற்றைய மொழிகளில் பெயர்க்கப்பெற்று நாட்டின் பொதுச் சொத் தாக ஆக்கப்பெறுதல் வேண்டும். தமிழ்மொழியில் திருக்குறள் இருப் பினும் அது உலக மொழிகளிலெல்லாம் பெயர்க்கப்பெற்று உலகப் பொதுச் சொத்தாகிவிடவில்லையா ? அது போலவே, பாரதியாரின் பாடல்கள் மொழிபெயர்ப்புகளின்மூலம் நாட்டின் பொதுச் சொத்தாக ஆக்கப்பெறுதல்வேண்டும். குறிப்பாகத் 'தாயின் மணிக்

7. செந்தமிழ் நாடு — 5
8. பாப்பாப் பாட்டு — 13
9. பாரத தேவியின் திருத்தசாங்கம்—2
10. 'தேசிய கீதங்கள்' என்ற தலைப்பிலுள்ள பல பாடல்கள்.

கொடி' என்ற பாடல் இந்திய மொழிகளனைத்திலும் பெயர்க்கப் பெற்று, எங்கும் இசை ஏற்றம் பெறுதல் வேண்டும்; மைய அரசு இதில் முயற்சி எடுத்துச் செயற்பட வேண்டும்.

நாட்டுப்பற்றை மக்கட்கு ஊட்டும் முறையில் பல பாடல்கள் அமைந்துள்ளன மக்களிடையே விடுதலையுணர்ச்சியை எழுப்புவதில் இவை பெரும் பங்கு கொள்கின்றன. முதலில் நாட்டின் பழம் பெருமையைப் பேசி இந்த உணர்ச்சியை எழுப்ப முனைகின்றார் கவிஞர்.

பாருக்குள்ளே நல்ல நாடு—எங்கள்
பாரத நாடு.[11]

என்று பல்லவியாகத் தொடங்கித் தோடிப் பண்ணில் இசையை எழுப்புகின்றார். ஞானத்திலும், பரமோனத்திலும், கானத்திலும், வீரத்திலும், நெஞ்சில் ஈரத்திலும், நன்மையிலும், உடல் வன்மையிலும், ஆக்கத்திலும், தொழில் ஊக்கத்திலும், உயர் நோக்கத்திலும், வண்மையிலும், உளத் திண்மையிலும் நுண்மையிலும், உண்மையிலும் உயர்ந்த நாடல்லவா? வரலாற்றறிஞர்களும் பிறந்த நாள் அறியமாட்டாத பழந்தாய் என்று கூறுபவர்,

தொன்று நிகழ்ந்த தனைத்தும் உணர்ந்திடு
சூழ்கலை வாணர்களும்—இவள்
என்று பிறந்தவள் என்றுண ராத
இயல்பின ளாம்எங்கள் தாய்.[12]

என்று பெருமையுடன் பேசிக் களிக்கின்றார். இன்னும்,

மாரத வீரர் மலிந்தநன் னாடு
மாமுனி வோர்பலர் வாழ்ந்தபொன் னாடு
நாரத கான நலந்திகழ் நாடு
நல்லன யாவையும் நாடுறு நாடு
பூரண ஞானம் பொலிந்தநன் னாடு
புத்தர் பிரானருள் பொங்கிய நாடு
பாரத நாடு பழம்பெரு நாடே
பாடுவம் இஃதை எமக்கில்லை ஈடே.[13]

என்று பாடிப் பரவி நம்மிடம் நாட்டுப்பற்றை ஊட்டுகின்றார். இத்தகைய நாட்டுக்கு,

11. தே.கீ: 4. பாரத நாடு—1.
12. ஷை எங்கள் தாய்—1
13. ஷை எங்கள் நாடு—2

வந்தனை கூறி மனத்தில் இருத்தி
வாயுற வாழ்த்தேனோ—இதை
'வந்தே மாதரம், வந்தே மாதரம்'
என்று வணங்கேனோ?[14]

என்கின்றார்.

முன்னர் நாடு திகழ்ந்த பெருமையும்
மூண்டிருக்குமிந் நாளின் இகழ்ச்சியும்[15]

அவர் சிந்தனையில் எழுகின்றது. விடுதலைப் பயிரும் அவர் மனத்தில் முகிழ்க்கின்றது. ஆங்கில ஆட்சியால் அடிமைதான் நம்மவர்க்குப் புதிதேயன்றி விடுதலை புதிதன்று என்று அவர் தூய மனம் எண்ணுகின்றது. இந்தியத் தாயை — பாரத மாதாவை — நோக்கிப் பேசுகின்றார் :

நின்பொருட்டு நின்னருளால்
நின்னுரிமை யாம் கேட்டால்,
என்பொருட்டு நீதான்
இரங்கா திருப்பதுவோ ?
இன்று புதிதாய்
இரக்கின்றோ மோ?முன்னோர்
அன்றுகொடு வாழ்ந்த
அருமையெலாம் ஓராயோ?[16]

ஓராயிரம் வருடம் ஓய்ந்து கிடந்துவிட்ட தம் நாட்டினரிடம் இடைக்காலத்து வந்த இழிநிலையை எடுத்துக் காட்டிக் கழிவிரக்கம் கொள்கின்றார்.

அன்னையே, அந்நாளில் அவனிக் கெல்லாம்
ஆணிமுத்துப் போன்றமணி மொழிக ளாலே
பன்னிநீ வேதங்கள் உபநிட தங்கள்
பரவுபுகழ்ப் புராணங்கள் இதிகா சங்கள் ;
இன்னும்பல் நூல்களிலே இசைத்த ஞானம்
என்னென்று புகழ்ந்துரைப்போம் அதனை இந்நாள்?[17]

என்ற அன்னை படைத்த ஞானச் செல்வங்களையெல்லாம் எண்ணி எண்ணிக் களிக்கின்றார்.

விடுதலை வேட்கை : விடுதலையே பாரதியின் தாரக மந்திரம். நாட்டுப்பற்றைப் போலவே இதுவும் ஒரு பாரதீயம் ; நாட்டுப்

14. தே. கீ. நாட்டு வணக்கம்—1
15. சுய சரிதை - 26.
16. தே.கீ. சுதந்திரப் பயிர்—13, 14.
17. ஜெ பாரத மாதா நவரத்தின மாலை —3

பற்றிலிருந்து கிளைத்தெழுந்த ஒரு கொள்கை. 'வந்தே மாதரம் ஒன்றே தாரகம்' என்பது இதன் உயிராய பண்பு. எனவே,

வீர சுதந்திரம் வேண்டிநின் றார்பின்னர்
வேறொன்று கொள்வா ரோ ? — என்றும்
ஆரமு துண்ணுதற் காசைகொண் டார்கள்ளில்
அறிவைச் செலுத்துவா ரோ?[18]

என்று கேட்கின்றார். நாயன்மார்களுக்கும் ஆழ்வார்கட்கும்பக்தி அவர் தம் மூச்சாக இருந்தது போலவே, இவருக்கு விடுதலையே மூச்சாக இருந்தது. சிட்டுக்குருவியைப் போலவே எப்போதும் விடுதலையை வேண்டி நிற்பவர்.

விட்டு விடுதலை யாகிநிற் பாயிந்தச்
சிட்டுக் குருவியைப் போலே.[19]

என்று தம் மனத்திற்குக் கட்டளையிடுகின்றார்; பல்லவி பாடு கின்றார். தெய்வத்தை நோக்கி,

"தெய்வமே, எனக்கு இரண்டு சிறகுகள் கொடுக்க மாட்டாயா ? பாழ்பட்ட மனிதர் கூட்டத்தையும், அதன் கட்டு களையும், நோய்களையும், துன்பங்களையும், பொய்களையும் உதறி எறிந்துவிட்டு நான் இச்சைப்படி வானத்திலே பறந்து செல்ல மாட்டேனா ?"[20]

என்று வேண்டுவதில் இவர்தம் விடுதலை நாடி துடிப்பதைக் காண் கின்றோம். சமயப்பற்று இந்நாட்டு மக்களிடையே குருதியுடன் ஊறிக் கிடப்பதை நன்கு அறிந்தவர் பாரதியார். சிவன், கண்ணன், இராமன், முருகன், இயேசுநாதர், அல்லா என்ற பெயர்களைக் கூறிய அளவில் பிறவித்துயர் அனைத்தும் அறுந்தொழியும் எனச் சுட்டியுரைத்தலும், சமயத் தொண்டர்களை வழிபடுதலும் சமயப் பற்றாளர்களின் நடைமுறையொழுக்கங்கள் என்பதைத் தெளிவாக அறிந்தவர் நம் கவிஞர் பெருமான்; கல்லையும் மண்ணையும் கடவுளர்களாகப் பாவித்து வழிபடுவதை நேரில் கண்டவர். எனவே, இந்திய நாட்டையே பாரதமாதாவாகவும், சுதந்திரத்தையே சுதந்திர தேவியாகவும் பாடிப் பரவி இம்மரபினைத் தழுவிக்கொள்ளுகின் றார். சமயத்துறைப் பாங்கில் ஒரு கொள்கையைப் பரப்பினாற் றான் இந்நாட்டு மக்களுக்கு ஏற்கும் என்பதை நன்கு அறிந்து தெளிந்தவர். எனவே, 'பாரததேவியின் திருத்தசாங்கம்' பாடு கின்றார் ; 'பாரதமாதா நவரத்தினமாலை'யைப் பாடி மகிழ்கின்றார்.

18. தே.கீ. சுதந்திரப் பெருமை—1
19. வே.பா. விடுதலை — சிட்டுக்குருவி.
20. பாரதியார் கட்டுரைகள் — சிட்டுக்குருவி — பக். 139.

திண்ணங் காணீர்! பச்சை
வண்ணன் பாதத் தாணை ;
எண்ணம் கெடுதல் வேண்டா !
திண்ணம், விடுதலை திண்ணம். [21]

என்ற பாடல்,

கண்ணன் கழல்இணை
நண்ணும் மனம்உடையீர்
எண்ணும் திருநாமம்
திண்ணம் நாரணமே. [22]

என்ற திருவாய்மொழிப் பாசுரத்தை அடியொற்றி அமைந்ததாகும். மணிவாசகப்பெருமானும், தொண்டரடிப்பொடியாழ்வாரும் தத்தம் கடவுளருக்குத் 'திருப்பள்ளி எழுச்சி' பாடியதைப்போலவே, பாரத மாதாவுக்குத் திருப்பள்ளி எழுச்சியும் பாடுகின்றார், பாரதியார்.

மதலையர் எழுப்பவும், தாய்துயில் வாயோ ?
மாநிலம் பெற்றவள் இஃதுண ராயோ?
குதலை மொழிக்கிரங் காதொரு தாயோ ?
கோமக ளே!பெரும் பாரதர்க் கரசே !
விதமுறு நின்மொழி பதினெட்டும் கூறி
வேண்டிய வாறுஉனைப் பாடுதும் காணாய் ;
இதமுற வந்தெமை ஆண்டருள் செய்வாய்
ஈன்றவ ளே! பள்ளி எழுந்தரு ளாயே [23]

இதில் மொழி ஒருமைப்பாடும் தேசிய ஒருமைப்பாடும் மிளிர்வதைக் கண்டு மகிழலாம்.

இதந்தரு மனையின் நீங்கி
இடர்மிகு சிறைப்பட் டாலும்,
பதந்திரு இரண்டும் மாறிப்
பழிமிகுந் திழிவுற் றாலும்
விதந்தரு கோடி இன்னல்
விளைந்தெனை அழித்திட் டாலும்
சுதந்திர தேவி ! நின்னைத்
தொழுதிடல் மறக்கி லேனே. [24]

என்று சுதந்திர தேவிக்குத் துதி பாடுகின்றார். திருத்தொண்டத் தொகையைப் பாடி அடியார் வழிபாட்டைத் தொடங்கி வைத்தவர், சுந்தரமூர்த்தி அடிகள்; இதுவே பின்னர்த் திருத்தொண்டர் அந்தாதி

21. தே.கீ. 12—பாரதமாதா நவரத்தின மாலை—6.
22. திருவாய். 10.5 : 1
23. தே.கீ. பாரத மாதா திருப்பள்ளி எழுச்சி—5.
24. ஷை சுதந்திர தேவியின் துதி—1

யாகவும், திருத்தொண்டர் புராணமாகவும் விரிந்தது. சுந்தரரின் சுவட்டைப் பின்பற்றிக் காந்தியடிகள், தாதாபாய் நவுரோஜி, திலகர், லாலா லஜபதிராய், வ. உ. சிதம்பரம் பிள்ளை போன்ற விடுதலைத் தொண்டர்களைப் பாடிப் போற்றினார் நம் கவிஞர்.

வாழ்க நீ ! எம்மான், இந்த
வையத்து நாட்டி லெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மகாத்மா நீ ! வாழ்க ! வாழ்க ![25]

என்பது காந்தியடிகளைப் போற்றியுரைக்கும் பாடல்.

நெஞ்ச கத்தோர் கணத்திலும் நீங்கிலான்
நீத மேயோர் உருவெனத் தோன்றினோன் ;
வஞ்ச கத்தைப் பகையெனக் கொண்டதை
மாய்க்கு மாறு மனத்திற் கொதிக்கின்றோன் ;
துஞ்சு மட்டுமிப் பாரத நாட்டிற்கே
தொண்டி ழைக்கத் துணிந்தவர் யாவரும்
அஞ்செ ழுத்தினைச் சைவர் மொழிதல்போல்
அன்பொ டோதும் பெயருடை ஆரியன்.[26]

என்பது திலகரைப் புகழ்ந்துரைக்கும் பாட்டு.

இனப்பற்றும் மொழிப்பற்றும் : பாரதியார் ஒரு பச்சைத் தமிழ் மகன் ; தமிழகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். மொழியையும், இனத்தையும், நாட்டையும் இணைத்துப் பாடிய பாரதீயம் இவர்தம் இணையற்ற கொள்கை.

வாழிய செந்தமிழ் ! வாழ்கநற் றமிழர்
வாழிய பாரத மணித்திரு நாடு.[27]

என்ற கொள்கை நம்மையெல்லாம் ஈர்க்கின்றது. தம் இனமக்கட்கு விடுதலை வேட்கையையும் மொழிப்பற்றையும் குழைத்து ஊட்டிய கவிஞர் பெருமான் தமிழகத்தின் பண்டைய பெருமைகளையும் தமிழர்களின் வெற்றிகளையும் கூறுகின்றார்.

---

25. தே.கீ. வாழ்க நீ எம்மான்—1
26. ஷை திலக முனிவர் கோன்—2
27. ஷை வாழிய செந்தமிழ்

சிங்களம் புட்பகம் சாவக—மாதிய
தீவு பலவினும் சென்றேறி—அங்கு
தங்கள் புலிக்கொடி மீன்கொடியும்—நின்று
சால்புறக் கண்டவர் தாய்நாடு.[28]

என்று கீழ்த்திசை வெற்றிகளையும்,

விண்ணை யிடிக்கும் தலையிமயம்—எனும்
வெற்பை யடிக்குந்திறனுடையார்—சமர்
பண்ணிக் கலிங்கத் திருள்கெடுத்தார்—தமிழ்ப்
பார்த்திவர் நின்ற தமிழ்நாடு.[29]

என்று வடதிசை வெற்றிகளையும் சுட்டிக் காட்டுவார். பாரத நாட்டுணர்வையுடைய கவிஞர் இமய வெற்றியையும் கலிங்க வெற்றியையும் ஒதுக்கிவிடாது கூறுதல் குறிப்பிடத்தக்கது. இந்திய நாட்டுணர்விலும் தமிழகத்தின் சிறப்பு கலந்தே மிளிர்கின்றது. மேலும்,

சீன மிசிரம் யவனரகம்—இன்னும்
தேசம் பலவும் புகழ்வீசிக்—கலை
ஞானம் படைத்தொழில் வாணிபமும்—மிக
நன்று வளர்த்த தமிழ்நாடு[30]

என்று சீனம், மிசிரம், யவனம் முதலிய மேற்றிசை நாடுகளில் புகழ் பரப்பிய தமிழ்நாடு என்று பெருமிதத்துடன் பேசுகின்றார். இங்ஙனம் பழம் பெருமைகளையெல்லாம் பேசி "எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே" ஒரு விடுதலை ஆற்றல் பிறக்க வேண்டும் என்று விழைகின்றார் ; பேரவாக் கொள்ளுகின்றார்.

வள்ளுவன்பற்றி இவர்தம் புகழ் மாலை ஒப்புயர்வற்றது, திருவள்ளுவமாலையில் உள்ள ஐம்பத்து மூன்று பாராட்டுரைகளும் இவருடைய,

வள்ளுவன் தன்னை உலகினுக்கேதந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு.[31]

என்ற பாராட்டுரைக்கு ஈடு சொல்ல முடியாது. வள்ளுவன் தமிழ் நாட்டின் கொடைப்பொருள் என்று மொழியோடும் நாட்டோடும் வைத்துப் புகழ்ந்த கவிஞர் இவர் ஒருவரேயாவர். இந்த மாபெரும் புலவனை உலகிற்கு ஈந்து தமிழ்நாடு பெற்றது வான் புகழாகும். இங்ஙனம் புகழ் வாணிகம் நடத்திய பாரதீயம் தனிப்பெரும் சிறப்புடையது ; ஒப்பற்ற புதுமைப் போக்கைக் கொண்டது.

28. தே.கீ. செந்தமிழ் நாடு—8
29. ஷை - ஷை—9
30. ஷை - ஷை 10
31. ஷை - செந்தமிழ் நாடு—7

நாட்டுப்பற்றைப்போல் தமிழ்மொழிப்பற்றும் பாரதியாரிடம் மிக்கிருந்தது. ‘பாருக்குள்ளே நல்ல நாடு பாரத நாடு’ என்று பறை சாற்றியதைப் போலவே, தாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிய மொழியை எங்கும் கண்டதில்லை என்று வீறு பேசுகின்றார்.[32] தமிழைப்பற்றி இவர் இயற்றிய நான்கு பாடல்களும் தமிழர்களால் பொன்னேபோல் போற்றப்பட வேண்டியவை. அவற்றில் உணர்த்தப்பெறும் செய்திகளை உணர்ந்து உணர்ந்து தமிழர்கள் வீறு கொண்டெழுதல் வேண்டும்; மொழியை வளப்படுத்த வேண்டும். இலக்கியச் செல்வத்தை, கலைச்செல்வத்தைப் பெருக்குதல் வேண்டும்.

சொல்லில் உயர்வுதமிழ்ச் சொல்லே ;—அதைத்
தொழுது படித்திடடி பாப்பா.[33]

என்று தமிழின் உயர்வைச் சின்னஞ்சிறு குழந்தைகளின் பிஞ்சு மனங்களில் படியச்செய்ததிலிருந்து இவர்தம் மொழிப் பற்றை நன்கு அறிய முடிகின்றது,

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்,
வள்ளுவர்போல், இளங்கோ வைப்போல்,
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததிலை ;
உண்மை,வெறும் புகழ்ச்சி இல்லை.[34]

என்று மொழியின் பெருமையை, இலக்கிய வளத்தின் சிறப்பை முரசு கொட்டி முழக்குவர்.

ஆதிசிவன் பெற்று விட்டான்—என்னை
ஆரிய மைந்தன் அகத்தியன் என்றோர்
வேதியன் கண்டு மகிழ்ந்தே—நிறை
மேவும் இலக்கணம் செய்து கொடுத்தான்.[35]

என்று தமிழ்த்தாயின் வாயில் வைத்தே தமிழின் தெய்வப் பிறப்பை எடுத்துரைப்பார்; இலக்கணத்தின் பழமையையும் பகர்வார். தெள்ளு தமிழ்ப் புலவோர்கள் தீஞ்சுவைக் காவியங்களைச் செய்து தந்ததையும் நம் திருச்செவி சாற்றுவார்.

கன்னிப் பருவத்தில் அந்நாள்—என்றன்
காதில் விழுந்த திசைமொழி எல்லாம்
என்னென்ன வோபெய ருண்டு—பின்னர்
யாவும் அழிவுற் றிறந்தன கண்டீர்![36]

32. தே. கீ. தமிழ்—1
33. ப. பா. பாப்பாப் பாட்டு—12
34. தே.கீ. தமிழ்—2
35. ஷை தமிழ்த் தாய்—1
36. ஷை ஷை—6

என்று காதில் விழுந்த திசைமொழிகளெல்லாம் பெயர்கூடத் தெரியாமல் அழிவுற்றிறந்தன என்று தமிழின் இறவாத் தன்மையை — மார்க்கண்டேயத்தை — எடுத்துக்காட்டி மகிழ்வார். இந்த உலகத்தில் அமரவாழ்வு பெறவேண்டுமாயின் "தெள்ளுற்ற தமிழமுதின் சுவை காணுங்கள்;" இன்பத்தேன் வேண்டுமென்றால் "செந்தமிழ் நாடென்று செப்புங்கள்" என்று மொழி மேலும் நாட்டின்மேலும் வைத்து நல்லுரை பகர்வார். "சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்ய வேண்டும்" என்பதே, இங்ஙனம் பகர்வதற்குக் காரணம் என்று கருதலாம். தமிழ்மொழியின் வளர்ச்சியைப்பற்றிய பாரதீயம் இது :

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
　　தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும் ;
இறவாத புகழுடைய புது நூல்கள்
　　தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்.[37]

பெண்ணுரிமை : பெண்ணுரிமை என்பது பாரதீயத்தின் உயிர் நிலையானது. இவ்வுரிமையைப் பாரதியார் பல்வேறு கோணங்களில் பேசுகின்றார். மக்கள் சமுதாயத்தில் ஆணும் பெண்ணும் இருகண்களையொத்தவர் என்பது கவிஞரின் கருத்து.

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் — புவி
　　பேணி வளர்த்திடும் ஈசன்;
மண்ணுக் குள்ளே சிலமூடர் — நல்ல
　　மாத ரறிவைக் கெடுத்தார்.

கண்கள் இரண்டினில் ஒன்றைக் — குத்திக்
　　காட்சி கெடுத்திட லாமோ ?
பெண்க ளறிவை வளர்த்தால் — வையம்
　　பேதைமை யற்றிடுங் காணீர்.[38]

சமுதாயத்தில் பாதிப் பேரை அறிவுக் கேடராக்கினால் ஏனைய பாதியும் இருளில் மூழ்கிவிடும் என்பது இவர்தம் அதிராத நம்பிக்கை. பிறிதோரிடத்தில்,

ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
　　அறிவி லோங்கிஇவ் வையம் தழைக்குமாம்[39]

என்று இக்கருத்திற்கு அரண் அமைத்துக் காட்டுவர். மேலும்,

37. தே.கீ. தமிழ்—3
38. ப. பா. முரசு —8, 9.
39. ஷை புதுமைப் பெண் — 4.

வலிமை சேர்ப்பது தாய்முலைப் பாலடா !
மானம் சேர்க்கும் மனைவியின் வார்த்தைகள் ;
கலிய ழிப்பது பெண்க ளறமடா !
கைகள் கோத்துக் களித்துநின் றாடுவோம்.[40]

என்று இந்த அரணுக்கும் வலியூட்டுவார். காலத்திற்கேற்ப, நடைமுறைக்கேற்பப் பெண்ணினத்திற்கு வேண்டும் ஆண்மைக் கூறுகளைப் புதிய பார்வையுடன் எடுத்துக் காட்டுவார் நம் புதுமைக் கவிஞர்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்;
அமிழ்ந்து பேரிரு ளாமறி யாமையில்
அவல மெய்திக் கலையின்றி வாழ்வதை
உமிழ்ந்து தள்ளுதல் பெண்ணற மாகுமாம்[41]

என்ற கவிதையில் இவற்றைக் காணலாம். புதுமைப் பெண்ணுக்கு 'உதய கன்னி' என்று திருநாமமும் சூட்டுகின்றார் ! 'உதய சூரியன்' போல் ஒளிவிட்டு எழவேண்டும் என்று விழைகின்றார்.

இக்காலக் கவிஞர்களுள் 'பெண்மை வாழ்க !' என்று கூத்திடும் முதற்கவிஞர் இவரே ; 'பெண்மை வெல்க !' என்று முழுமனத்துடன் விழைபவரும் இவரே.

உயிரைக் காக்கும், உயிரினைச் சேர்த்திடும் ;
உயிரினுக் குயிராய் இன்ப மாகிடும் ;
உயிரி னும்இந்தப் பெண்மை இனிதடா !
ஊது கொம்புகள் ; ஆடுகளி கொண்டே.[42]

என்று பெண்ணுரிமைக்குப் பாடுபடும் தொண்டர்கட்கு உயிர்ப்பு ஊட்டுகின்றார். 'போற்றி தாய்' என்று தாளங்கள் கொட்டவும், பொற்குழல் ஊதவும் அவர்களைப் பணிக்கின்றார்.

ஆணினம் பெண்ணினத்திற்கு விதித்துள்ள வேலிகளைத் தகர்த்தெறிந்துவிட்டு அவ்வினம் பூட்டிய தளைகளை அவிழ்த்தெறிந்துவிட்டுப் பெண்ணினத்தை 'விடுதலைக் கும்மி'யடிக்குமாறு கட்டளையிடுகின்றார் கவிஞர்.

கற்பு நிலையென்று சொல்லவந் தார்இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம் ;
வற்புறுத் திப்பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்.

40. ப.பா. பெண்மை — 3.
41. ஷை புதுமைப் பெண் — 7
42. ஷை பெண்மை — 6

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்தவந்தோம் ;
எட்டு மறிவினில் ஆணுக்கிங் கேபெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி.[43]

புதுமைப் பெண் இக்காலத்திற்குப் பயன்படும் சாத்திரங்கள் (அறிவியல் கலைகள்) கற்க வேண்டும் என்று விழைகின்றார்.[44] ஒரு மேடம் குயூரி போன்றும், ஒரு சரோஜினி தேவியார் போன்றும், ஒரு இந்திரா காந்தி போன்றும் திகழ வேண்டும், பொலிவுற வேண்டும் என்று விரும்புகின்றார்.

போற்றி, போற்றி! ஜயஜய போற்றி ! இப்
புதுமைப் பெண்ணொளி வாழிபல் லாண்டிங்கே !
மாற்றி வையம் புதுமை யுறச்செய்து
மனிதர் தம்மை அமரர்க ளாக்கவே.[45]

என்று வாழ்த்துகின்றார். பராசக்தியே தன்னுள் ஒரு கன்னிகையாக இருந்து 'புதுமைப் பெண்ணை' வாழ்த்துவதாகக் கருதுகின்றார்.

அறிவுத் தெளிவு : இதுகாறும் கூறியவற்றால் பாரதியாரின் பழமைப்பற்றில் ஒருவிதத் தனிப்புதுமை பொலிவதைக் கண்டோம். எதனைக் கூறினாலும் ஒருவித புதுப்போக்கில், புதிய சந்தம் அமைந்த எளிய பாடல்களில், கேட்போர் படிப்போர் சிந்தை கவரும் படி, சிந்தனையைக் கிளறும்படி மொழிவதைத் தெளிந்தோம். திறனாய்வு நோக்கில் இவை மட்டிலும் முழுப் புலமைக்கூறு என்று சொல்லிவிட முடியாது. வருவதை முன்னுணர்ந்து ஆற்றலோடு கவிலும் அறிவுத் தெளிவு தனிப்பெரும் புலமைக் கூறாகும்.

மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியின் ஆற்றிய அறிவன்[46]

என்று தொல்காப்பியர் கணியனை உணர்த்தினதாலும் இக்கூறு கவிஞனுக்கும் உரியது என்று கொள்ளலாம். சென்ற கால வரலாற்றைச் சிந்தித்து நிகழ்காலப் போக்கைக் கூர்ந்து நோக்கும் கவிஞன் எதிர்காலத்தில் நிகழப்போவதை மயங்காது அறுதியிட்டுக் கூறுவான். தொல்காப்பியர் கணியனுக்குக் கூறிய இலக்கணத் திற்குப் பேரிலக்கியமாக விளங்குபவர் நம் கவிஞர் பெருமான். ஒன்றிரண்டு எடுத்துக்காட்டுகளால் இதனைத் தெளியலாம்.

43. ப.பா. பெண்கள் விடுதலைக் கும்மி — 5, 6.
44. ஷை புதுமைப் பெண் — 8, 9.
45. ஷை ஷை 10.
46. தொல் - பொருள். புறத்திணை — 74 (இளம்)

ஆடுவோமே — பள்ளுப் பாடுவோமே;
ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட் டோமென்று.[47]

என்று நாடு விடுதலையடைவதற்குப் பல்லாண்டுகட்கு 'முன்னரே பாடினார்.

கம்பத்தின் கீழ்நிற்றல் காணீர் — எங்கும்
காணரும் வீரர் பெருந்திருக் கூட்டம்
நம்பற் குரியர்அவ் வீரர் ; — தங்கள்
நல்லுயிர் ஈந்தும் கொடியினைக் காப்பர். [48].

என்று மூவண்ணக் கொடியின் பெருமையையும், அதனைக் காத்து நிற்கும் வீரரின் சிறப்பையும் நாடு விடுதலையடைவதற்கு முன்னரே பாடிச் சென்றார்.

இழிவு கொண்ட மனித ரென்பது
இந்தி யாவில் இல்லையே.[49]

என்றும்,

ஊதுமினோ வெற்றி !
ஒலிமினோ வாழ்த்தொலிகள்
....
வேதனைகள் இனிவேண்டா
விடுதலையோ திண்ணமே. [50]

என்றும்,

எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு—நாம்
எல்லோரும் சமமென்பது உறுதியாச்சு;[51]

என்றும் முன்னரே கூறிச் சென்ற கவிஞரின் வருவதுரைக்கும் திறன் நம்மை இறும்பூது எய்தச் செய்கின்றது. பெண் கல்வி பற்றி,

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்துவிட்டார்;
வீட்டுக் குள்ளே பெண்ணைப் பூட்டிவைப் போமென்ற
விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்.[52].

என்று பின்னர் அமையும் நிலையை முன்னரே கூறிய கவிஞனின் புலமை வீறு போற்றற்குரியதன்றோ?; இவண் காட்டிய கூற்றுகளில்

47. தே.கீ. — சுதந்திரப் பள்ளு-பல்லவி
48. ஷை தாயின் மணிக்கொடி — 4.
49. ஷை விடுதலை — 2
50. ஷை பாரத மாதா நவரத்தின மாலை — 5
51. ஷை சுதந்திரப் பள்ளு — 2
52. ப. பா. பெண்கள் விடுதலைக் கும்மி — 2

உள்ள இறந்த கால வினைமுற்றுகள் எதிர்கால நல்வாழ்வைச் சுட்டுவதைக் கண்டு, புலவனின் எண்ணக் கூர்மையை வியக்கின்றோ மன்றோ ? இவை விரைவில் வரும் என்ற கவிஞரின் தெளிவு-எண்ண உறுதி — இறந்த கால நடையில் பாடலை ஆக்கும்படி செய்து விட்டது. இத்தகைய தெளிவெண்ணங்களை இவர்தம் பாடல் களில் இன்னும் பலவிடங்களில் கண்டு மகிழலாம். காந்தியடிகளின் புகழை,

முடிவிலாக் கீர்த்தி பெற்றாய் !
புவிக்குளே முதன்மை யுற்றாய்.[53]

என்று முன்னரே உணர்ந்து பாராட்டிய பெருமை இவரையே சாரும். இங்ஙனம் 'கவிஞரின் கனவுகள் யாவும் இன்று நனவென முடிந்த நிலையைக் கண்டு வியக்கின்றோம். இக்கனவுகள்தாம் பாரதீயங் களாயின. இந்த நினைவுகளின் அடிப்படையில்தான் 'பாரதியார் பல்கலைக் கழகமும்' எழுந்தது என்று கருதுவதில் தவறில்லை.

53. தே.கீ. வாழ்க நீ எம்மான் — 2.

2. இலக்கியக் கொள்கைகள்

தோற்றுவாய் : பாரதியார் இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய ஒரு மாபெருங் கவிஞர். பாமர மக்களும் குறைவான கல்வி பெற்றவர்களும் இலக்கியத்தைச் சுவைக்க முடியும் என்ற கொள்கைக்கு வழியமைத்துத் தந்தவர்.

"சுவைபுதிது, பொருள்புதிது, வளம்புதிது
சொற்புதிது சோதி மிக்க
நவகவிதை, எந்நாளும் அழியாத
மாகவிதை" என்று நன்கு[1]

எண்ணற்ற புதுமையான கவிதைகளைத் தமிழுலகுக்கு அளித்தவர். இதனைத் தெளிவாக அறிவிக்கும் முறையில் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை யவர்கள் "பாட்டுக்கொரு புலவன் பாரதியடா"[2] என்று பட்டிக்காட்டான் ஒருவன் வாயில்வைத்துப் பேசிப் போந்தார்.

ஒரு காலத்தில், கல்விச் செருக்குடைய கற்றறிந்த புலவர்கள் மட்டிலுமே கவிதைச் சுவையை அநுபவிக்க முடியும் என்ற கொள்கை நிலவி வந்தது. அதனைச் சமயச் சான்றோர்கள் பக்தியைச் சாதனமாகக்கொண்டு ஓரளவு தகர்த்தெறிந்தனர். மணிவாசகப் பெருமான், தேவார மணிகள், ஆழ்வார்கள், அருணகிரியார், தாயுமானவர், இராமலிங்க அடிகள் ஆகியோரின் பாடல்களின்மூலம் பக்தி கலந்த கவிதைச் சுவையை அநுபவிக்கின்றோம். அவரவர் மன நிலைக்கேற்பப் பக்தியோ கவிதைச் சுவையோ மீதூர்ந்து நிற்கும். பாரதியார் தமிழ் உலகிற்கு ஒரு புதிய பேரொளியையும், ஆற்றலையும், தற்காலச் சுவையையும் தேடி அளித்தார். தற்கால இளமை ததும்பும் நாகரிகத்தின் கலைப்போக்கையும் கருத்துப்போக்கையும் சுவையுறக் கலந்து பாமாலைகள் சூட்டித் தமிழன்னையைக் களிப்புறச் செய்தார். தமிழ்க்கவிதையின் நறுமணம் வாடிப்போய் செய்யுள்களை இயற்றுவதைச் செப்பிடுவித்தையைச் செய்வது போல் பயின்று, ஏட்டுக் கற்பனையை வைத்துக்கொண்டு, சத்தும் தற்காலப் பண்புமற்ற கவிதையை அளவுகோல்களால் ஆக்கும் மெய்ப் புலமையற்ற தமிழ்ப்புலவர்கள் திண்டாடிக்கொண்டிருந்த காலத்தில் பாரதியார் உண்மைக் கவிதையின் ஒளியைத் தமிழகம் காணச் செய்தார்.

---

1. த. பா; வேங்கடேச ரெட்டப்ப பூபதி—(2) 3.
2. மலரும் மாலையும்: பாரதியும் பட்டிக்காட்டானும்.

தானாகப் பிறக்கும் கவிதையின் குணங்கள் காலத்தால் மாறுபாடு எய்துவதில்லை. கவிதையின் உறுப்புகளும், அவற்றின் குறிக்கோள்களும், பாடப்பெறும் பொருள்களும் காலத்திற்கேற்ற வாறும், கவிஞர்களின் படைப்பாற்றலுக்கேற்றவாறும், மக்களின் கலைச்சுவைக்குத் தக்கவாறும் மாறுகின்றன. இவை கவிதைக்குக் கால-தேச-நாகரிக-வர்த்தமானங்களை அநுசரித்த கூறுகளாக அமை கின்றன. நிரந்தரமான கூறில் கவிதை இசையுடன் ஒளிரும் கற்பனையின் சொற்கோவை; கருத்தாலும் சொல்லாலும் இயற் கையின் எழிலைப் பிழிந்தெடுக்கும் சக்தியின் கீதம்; இந்த அகிலத்தின் எல்லையற்ற எழிலிலும் சோதியிலும் கவிஞர்களின் உள்ளத்தை மூழ்கிக் குளிப்பாட்டும் ஆவியின் மலர்ச்சி; இந்தப் பண்புகளை எல்லாக் காலத்தில் தோன்றிய மாபெருங் கவிஞர் களிடையேயும் காணலாம். ஆனால், புதிய கற்பனை முறைகளையும் சந்தங்களையும், காலத்திற்கேற்ற குறிக்கோள் கருத்துகளையும், கைக்கொள்ளும் ஆற்றல் கவிஞர்கட்கு இன்றியமையாதது. தன் காலத்து ஆற்றல்களால் கவிஞன் ஒருவன் படைக்கப்பட்டபோதிலும், அவன் தன் காலத்திற்கு அப்பாற்பட்ட குறிக்கோள்களையும் படைக்கவல்லவன். இவற்றின் அடிப்படையில் பாரதியாரின் கவிதை களை ஆராய்ந்தால் அவர் பெருங்கவிஞர் என்பது தட்டுப்படும்.

இயற்கை எழில்: இயற்கைப் பொருள்கள் இன்பமயமான சமாதியில் அடங்கிக் கிடக்கின்றன. அந்தச் சமாதியில் கலந்து கொள்ளும் இயல்புடையவனே கவிஞன். அவன் இயற்கையோடு பழகும் திறன் வாய்ந்தவன். இயற்கையை அவன் தழுவும் விதமே தனித்தன்மை வாய்ந்தது. உறங்குகின்ற குழந்தையைத் தாய் அதன் உறக்கம் கெடாமல் தழுவிக்கொண்டு தன்னை மறந்திருப்பதுபோலக் கவிஞனும் இயற்கையை அதன் இன்ப சமாதி கலையாமல் தழுவு வான்; தன்னையும் உடனே மறந்துவிடுவான். இன்பப் பெருக்கில் மிதப்பான். அதிலிருந்து வெளிவந்தவுடன் பாடுவான். சில சமயம் ஆடவும் செய்வான். இந்த இன்ப நிலையிலிருந்துகொண்டு பாரதியார் பாடியுள்ள பாடல்கள் இயற்கை எழில்களைக் காட்டு கின்றன. பாடல்கள், தம்முடைய மந்திர ஆற்றலால் படிப்போரை ஈர்த்து அவற்றில் ஈடுபடச் செய்கின்றன. நாமும் கவிஞரைப் போலவே இயற்கையுடன் கலந்து, அதன் இன்பச்சமாதியில் மிதக்கத் தொடங்குகின்றோம்.

கானப் பறவை கலகலெனும் ஓசையிலும்
காட்டு மரங்களிடைக் காட்டும் இசைகளிலும்
ஆற்றுநீ ரோசை அருவி யொலியினிலும்
நீலப் பெருங்கடலெந் நேரமுமே தானிசைக்கும்

ஓலத் திடையே உதிக்கும் இசையினிலும்
மானுடப் பெண்கள் வளருமொரு காதலினால்
ஊனுருகப் பாடுவதில் ஊறிடுந்தேன் வாரியிலும்,
ஏற்றநீர்ப் பாட்டின் இசையினிலும், நெல்லிடிக்கும்
கோற்றொடியார் குக்குவெனக் கொஞ்சும் ஒலியினிலும்
சுண்ண மிடிப்பார்தஞ் சுவைமிகுந்த பண்களிலும்
பண்ணை மடவார் பழகுபல பாட்டினிலும்
வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்கக்
கொட்டி யிசைத்திடுமோர் கூட்டமுதப் பாட்டினிலும்
வேயின் குழலோடு வீணைமுத லாமனிதர்
வாயினிலும் கையாலும் வாசிக்கும் பல்கருவி
நாட்டினிலும் காட்டினிலும் நாளெல்லாம் நன்றொலிக்கும்
பாட்டினிலும் நெஞ்சைப் பறிகொடுத்தேன்.[3]

இங்குக் கவிஞர் இயற்கையில் தோய்ந்து பாடுங்கால் நம்மையும் அதில் தோயவைத்துவிடுகின்றார்.

இயற்கையை அநுபவிக்குமாறு மனத்தைத் தூண்டுவதை,

நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்
 நேர்பட வைத்தாங்கே
குலாவும் அமுதக் குழம்பைக் குடித்தொரு
 கோலவெறி படைத்தோம்;
உலாவும் மனச்சிறு புள்ளினை எங்கணும்
 ஓட்டி மகிழ்ந்திடுவோம்.[4]

என்ற பாடலில் காணலாம். காற்றினை நோக்கிப் பேசுகின்றார் கவிஞர்:

தென்னையின் கீற்றுச் சலசல வென்றிடச்
 செய்துவருங் காற்றே!
உன்னைக் குதிரைகொண் டேறித் திரியுமோர்
 உள்ளம் படைத்துவிட்டோம்.
சின்னப் பறவையின் மெல்லொலி கொண்டிங்கு
 சேர்ந்திடு நற்காற்றே!
மின்னல் விளக்கிற்கு வானகங் கொட்டுமிவ்
 வெட்டொலி யேன்கொணர்ந்தாய்?[5]

3. குயில் பாட்டு - 29 - 44.
4. த. பா. நிலாவும் வான்மீனும் காற்றும்—1
5. ஷை ஷை. 4.

பெய்யும் பேய் மழையினை,

திக்குகள் எட்டும் சிதறி — தக்கத்
தீம்தரிகிட தீம்தரிகிட தீம்தரிகிட 'தீம்தரிகிட
பக்க மலைகள் உடைந்து — வெள்ளம்
பாயுது பாயுது பாயுது — தாம்தரிகிட
தக்கத் ததிங்கிட தித்தோம் — அண்டம்
சாயுது சாயுது சாயுது — பேய்கொண்டு
தக்கை யடிக்குது காற்று — தக்கத்
தாம்தரிகிட தாம்தரிகிட தாம்தரிகிட தாம்தரிகிட[6]

என்று காட்டுவார். பாட்டைப் படிக்கும்போதே நம் மனம் காற்றும் மழையும் கலந்தடிப்பதைக் காண்கின்றது.

பார்த்தன் பாஞ்சாலிக்குப் பரிதியின் எழிலைக் காட்டுவதைப் 'பாரடியோ!' என்று தொடங்கும் பகுதியின் முதல் ஐந்து கவிதை களில் கண்டு மகிழலாம். அவற்றுள்,

அடிவானத் தேஅங்கு பரிதிக் கோளம்
அளப்பரிய விரைவினொடு சுழலக் காண்பாய் ;
இடிவானத் தொளிமின்னல் பத்துக் கோடி
எடுத்தவற்றை ஒன்றுபட உருக்கி வார்த்து
முடிவான வட்டத்தைக் காளி ஆங்கே
மொய்குழலாய், சுற்றுவதன் மொய்ம்பு காணாய்!
வடிவான தொன்றாகத் தகடி ரண்டு
வட்டமுறச் சுழலுவதை வளைந்து காண்பாய்.[7]

என்ற பாடல் அற்புதமானது. பராசக்தி காளிதேவி பத்துக்கோடி மின்னல்களைச் சேர்த்து உருக்கி, ஒருவட்டத் தகடுபோல் வார்த்து, அதனைக் கையில் ஏந்திச் சுழற்றும் காட்சியில் நம் மனம் ஆழப் பதி கின்றது. பாஞ்சாலியை அமைதியுடன் இக்காட்சியைக் காணுமாறு பணிக்கின்றான் பார்த்தன்.

அமைதியொடு பார்த்திடுவாய் மின்னே! பின்னே !
அசைவுறுமோர் மின்செய்த வட்டு; முன்னே
சமையுமொரு பச்சைநிற வட்டங் காண்பாய்;
தரணியிலிங் கிதுபோலோர் பசுமை உண்டோ ?
இமைகுவிய மின்வட்டின் வயிரக் கால்கள்
எண்ணிலா திடையிடையே எழுதல் காண்பாய்.

பாட்டைப் படிக்கும்போதே நம் மனத்திரையில் இக்காட்சி தென்படு கின்றது. இதன் விளக்கத்தை,

6. த. பா: மழை—1
7. பா. ச. 1.27 : 149—152.

கணந்தோறும் வியப்புக்கள் புதிய தோன்றும்;
கணந்தோறும் வெவ்வேறு கனவு தோன்றும்;
கணந்தோறும் நவநவமாம் களிப்புத் தோன்றும்;
கருதிடவும் சொல்லிடவும் எளிதோ? ஆங்கே
கணந்தோறும் ஒருபுதிய வண்ணம் காட்டிக்
காளிபரா சக்திஅவள் அளிக்கும் கோலம்
கணந்தோறும் அவள்பிறப்பாள் என்று மேலோர்
கருதுவதன் விளக்கத்தை இங்குக் காண்பாய்.

என்று காட்டுவார். இயற்கை எழில் கவிஞர் உள்ளத்தில் மெய்ப் பொருள் விளக்கத்தை எழுப்புவதைக் கண்டு மகிழ்கின்றோம். கண்ணன் பாட்டில்[8] தாய் குழந்தைக்குக் கதை சொல்லுவது போல் "சந்திரன் என்றொரு பொம்மை" என்று தொடங்கி இந்த அகிலக் காட்சியை—ஒரு விசுவரூப தரிசனம்போல்—காட்டி நம்மை மகிழ்விப் பதைக் கண்டு களிக்கலாம். இன்னொரு கவிதையில்[9] இந்த அகிலத்தின் அகண்ட காட்சி அருமையாகக் காட்டப்பெறுகின்றது; 'பாரதமாதாவின் திருப்பள்ளி எழுச்சி'யில் வைகறைச் சூழ்நிலை அற்புதமாகக் காட்டப்பெறுகின்றது. இங்ஙனம் பல இடங்கள்.

கடவுட் கொள்கை : பாரதியாரின் கவிதைகளை மேலோட்ட மாகப் பயின்றாலும் அவர் 'சக்தி வழிபாட்டாளர்' என்பது தெற் றெனப் புலனாகும். பண்டையோர் வழிபடும் எல்லாக் கடவுளர் களைப்பற்றிப் பாடல்கள் காணப்பெறினும், 'சர்வம் விஷ்ணு மயம் ஜகத்' என்ற பண்டைய மரபு இவரிடம் 'சர்வம் சக்திமயம் ஜகத்' என்ற புது மரபாகின்றது. சக்தியைப்பற்றி அதிகமான எண்ணிக் கையில் பாடல்கள் காணப்படுவதே இதனைத் தெளிவாக்குகின்றது; இதற்கு அரணாகவும் அமைகின்றது.

எண்ணிற் கடங்காமல் எங்கும் பரந்தனவாய்
விண்ணிற் சுடர்கின்ற மீனையெல்லாம் — பண்ணியதோர்
சக்தியே நம்மைச் சமைத்ததுகாண்.[10]

என்ற பாடற்பகுதி இதனை நன்கு மெய்ப்பிக்கின்றது. 'சக்தி'[11] என்ற பாடலில் அனைத்தும் சக்தி வடிவாம் என்ற தத்துவத்தை அலசிக் காட்டுகின்றார். பிறிதோர் இடத்தில்,

கனியிலே சுவையும், காற்றிலே இயக்கமும்
கலந்தாற் போலநீ அனைத்திலும், கலந்தாய்.

---

8. கண்ணன் — என் தாய்.
9. தோ. பா. — கோமதி மகிமை — 5, 6, 7.
10. தோ. பா. மகாசக்தி வெண்பா — 4.
11. ஷை. சக்தி.

உலகெலாந் தானாய் ஒளிர்வாய் போற்றி !
அன்னை, போற்றி! அமுதமே போற்றி!
புதியதிற் புதுமையாய் முதியதில் முதுமையாய்
உயிரிலே உயிராய் இறப்பிலும் உயிராய்
உண்டெனும் பொருளில் உண்மையாய் என்னுளே
நானெனும் பொருளாய், நானையே பெருக்கித்
தானென மாற்றும் சாகாச் சுடராய்
கவலைநோய் தீர்க்கும் மருந்தின் கடலாய்
பிணியிருள் கெடுக்கும் பேரொளி ஞாயிறாய்,
யானென தின்றி யிருக்குநல் யோகியர்
ஞானமா மகுட நடுத்திகழ் மணியாய்,
செய்கையாய், ஊக்கமாய், சித்தமாய், அறிவாய்
நின்றிடுந் தாயே, நித்தமும் போற்றி![12]
....

என்று இத்தத்துவத்தைக் குறிப்பிடுதலைக் கண்டு மகிழலாம்.

நம்மாழ்வாரிடம் ஒரு மரபு உண்டு. எல்லாவற்றையும் திருமாலாகவே கொள்வது அது.

நும்இன் கவிகொண்டு நும்நும்
இட்டாத் தெய்வம் ஏத்தினால்,
செம்மின் சுடர்முடிஎன்திரு
மாலுக்குச் சேருமே.[13]

என்ற திருவாய்மொழிப் பாசுரத்தால் இதனை அறியலாம். அரசு கிளைக்கருவூலத்தில் செலுத்தும் பணம் அரசு தலைமைக் கருவூலத்தைச் சென்று அடைவதுபோல், தம் இட்டாத் தெய்வங்களை வாழ்த்திப் பாடும் பாடல்கள் யாவும் திருமாலைச் சென்று அடையும் என்பது ஆழ்வாரின் கொள்கை. இங்ஙனமே, எல்லாத் தெய்வங்களையும் சக்தியாகவே காண்கின்றார் பாரதியார். இதனை,

சக்தியென்று புகழ்ந்திடுவோம் முருகன் என்போம்;
சங்கரனென் றுரைத்திடுவோம், கண்ணன் என்போம்;
நித்தியமிங் கவள்சரணே நிலையென் றெண்ணி,
நினக்குள்ள குறைகளெல்லாம் தீர்க்கச் சொல்லி
பக்தியினாற் பெருமையெல்லாம் கொடுக்கச் சொல்லி
பசிப்பிணிக ளில்லாமற் காக்கச் சொல்லி
உத்தமநன் னெறிகளிலே சேர்க்கச் சொல்லி
உலகளந்த நாயகிதாள் உரைப்பாய் நெஞ்சே.[14]

12. தோ. பா. போற்றி அகவல்.
13. திருவாய் 3. 9:6.
14. தோ. பா. பேதை நெஞ்சே - 3.

என்ற பாடலால் தெளிவுறலாம். 'கண்ணம்மா-என் குழந்தை' என்ற பாடலில் 'பராசக்தியைக் குழந்தையாகக் கண்டு சொல்லிய பாட்டு' என்று கவிஞரே தரும் குறிப்பு இதனை மேலும் தெளிவாக்குகின்றது. 'கண்ணன்-என்தாய்' என்ற பாடலிலும் 'தாய்' என்பது பராசக்தியையே குறிப்பதாகக் கொள்ளலாம்.

கல்விபற்றிய சிந்தனைகள் : கல்விபற்றிய சிந்தனைகளை இவர் பாடல்களில் காணலாம். கோயில்களை எழுப்புவதில் பெரும் பங்கு கொண்டது நம் நாடு. தற்கால வாழ்விற்குக் கல்வி மிகவும் இன்றியமையாதது என்பதை நன்கு உணர்ந்தவர் இக்கவிஞர் பெருமான். எல்லா நிலைகளிலும் பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் இன்றியமையாதவை என்பதை,

> வீடு தோறும் கலையின் விளக்கம்
> வீதி தோறும் இரண்டொரு பள்ளி;
> நாடு முற்றிலும் உள்ளன ஊர்கள்
> நகர்களெங்கும் பலபல பள்ளி.[15]

என்ற கவிதையில் புலப்படுத்துவர். வழிவழியாக முன்னோர் தேடி வைத்த அறிவுச் செல்வத்தைப் பின்னால் வரும் இளைஞர்கள் பெற்றுப் பயன்பெற வேண்டும், தம்மையும் உயர்த்தித் தாம் பிறந்த நாட்டையும் உயர்த்த வேண்டும் என்பது கவிஞர் கண்ட கனவு. வறுமையின் காரணமாக இளைஞன் ஒருவன் கல்வி பெறுவதற்குத் தடை ஏற்படக்கூடாது என்பதையும் சிந்தித்துள்ளார் கவிஞர். செல்வர்களும் அரசும் இதற்கு வழிவகை செய்தல் வேண்டும் என்பதை வற்புறுத்துவது போல்,

> இன்ன றுங்கனிச் சோலைகள் செய்தல்
> இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
> அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
> ஆல யம்பதி னாயிரம் நாட்டல்;
> பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
> பெயர்வி ளங்கி யொளிர நிறுத்தல்
> அன்ன யாவினும் புண்ணியம் கோடி
> ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல்[16]

என்று பேசுவர். அப்பொழுதுதான் தமிழகம் 'கல்வி சிறந்த தமிழ் நாடு' என்று பழம்பெரும் புகழைநிலை நிறுத்தும் என்பது கவிஞரின் நீள்நோக்கு.

---

15. தோ. பா. வெள்ளைத் தாமரை—6.
16. ஷை. ஷை—9

ஆங்கிலக் கல்விபற்றி இவர் கூறும் கண்டனக் கருத்துகள் மிகை படக் கூறுவதாகவே தோன்றுகின்றன. காந்தியடிகள், நேரு, இராஜாஜி போன்ற பெருந்தலைவர்கள் இம்முறைக் கல்வி பெற்றவர்களே. இவர்கள் யாவரும் கெட்டா போனார்கள்? இம்முறைக் கல்வியின் விளைவுபற்றி,

செலவு தந்தைக்கோ ராயிரம் சென்றது;
 தீதெனக்குப்பல் லாயிரம் சேர்ந்தன;
நலமோ ரெட்டுணை யும்கண்டி லேனிதை
 நாற்ப தாயிரம் கோவிலிற் சொல்லுவேன்.[17]

என்று இவர் கூறும் கருத்து ஒப்புக்கொள்ளத்தக்கதாக இல்லை. இந்தக் கல்வி முறையை 'வார்தாக் கல்வி முறை'யாலும், இராஜாஜி கொண்டுவந்த 'குலமுறைக் கல்வி'யாலும் தகர்த்தெறிய முடியவில்லை. அவைதாம் நம் நாட்டில் செல்லாக் காசாயின.

அறிவியற்கல்விக்கு ஆக்கமும் ஊக்கமும் தருதல் வேண்டும் என்பது கவிஞரின் பேரவா.

பயிற்றிப் பலகல்வி தந்து—இந்தப்
 பாரை உயர்த்திடல் வேண்டும்.[18]

என்று அறிவியல் கல்விக்கு ஆற்றுப்படுத்துகின்றார். தாய்மொழி மூலம் அக்கல்வி பெற வாய்ப்பு அமைக்கப்பெறுமானால் பருத்தி புடைவையாய்க் காய்த்தது போன்ற பலனை எதிர்பார்க்கலாம். விலைப்பாலைவிட முலைப்பால் சிறந்ததன்றோ?

சென்றிடு வீர்எட்டுத் திக்கும்—கலை
 செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்.[19]

என்றும்,

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
 தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்,
இறவாத புகழுடைய புதுநூல்கள்
 தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்.[20]

என்றும் யோசனை கூறுகின்றார்.

தொழிற்கல்விபற்றியும் சில கருத்துகள் இவர்தம் பாடல்களில் காணப்படுகின்றன. பல்வேறு தொழில்கள்மூலம் பல்வேறு

---

17. சுயசரிதை—29.
18. ப. பா. முரசு—30.
19. தே. கீ. தமிழ்த்தாய்—11.
20. ஷை தமிழ்—3.

பண்டங்களின் உற்பத்தி பெருக வேண்டுமானால் எல்லா மட்டங்களிலும் தொழிற்கல்வி பெருகவேண்டும். சிறியனவும் பெரியனவுமான தொழிற்சாலைகள் பெருகவேண்டும். பண்டங்களை வேற்று நாடுகட்கு ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணியைப் பெருக்க வேண்டும். இவ்வாறெல்லாம் நாட்டின் தொழில்வளம்பற்றிக் கனவு காண்கின்றார் கவிஞர்.

காசி நகர்ப்புலவர் பேசும் உரைதான்
காஞ்சியில் கேட்பதற்கோர் கருவிசெய்வோம்.[21]

என்று வானொலிப் பெட்டிகள் உண்டாக்குவதையும் வானொலி அஞ்சல் செய்தலையும் முத்தாய்ப்பாகக் காட்டுவதைக் கண்டு மகிழலாம்.[22]

மக்கள் முன்னேற்றம் : 'வாழ்க்கையின் திறனாய்வுதான் இலக்கியம்', 'வாழ்க்கையின் பிரதிபலிப்புதான் இலக்கியம்' என்றெல்லாம் மேனாட்டு இலக்கியத் திறனாய்வாளர்கள் கூறுவர். 'கலை கலைக்காகவே', 'கவிதை கவிதைக்காகவே' என்றுகூடச் சிலர் சொல்வர். அவர்களுள் சிலர் 'கவிதை வாழ்க்கைக்காகவே' என்றும் மொழிவர். பாரதியாரின் கவிதைகளை நோக்கினால் இறுதியில் குறிப்பிட்ட கொள்கைதான் அவருக்கு உடன்பாடென்பதும், ஏனையவை உடன்பாடன்று என்பதும் தெளிவாகப் புலனாகும். மக்கள் முன்னேற்றத்தை நாடுபவர் என்பதை,

பேசாப் பொருளைப் பேசநான் துணிந்தேன்;
கேட்கா வரத்தை கேட்கநான் துணிந்தேன்;
மண்மீ துள்ள மக்கள் பறவைகள்
விலங்குகள் பூச்சிகள் புற்பூண்டு மரங்கள்
யாவுமென் வினையால் இடும்பை தீர்ந்தே
இன்புற் றன்புடன் இணங்கிவாழ்ந் திடவே
செய்தல் வேண்டும், தேவ தேவா !
ஞானா காசத்து நடுவே நின்றுநான்
'பூமண் டலத்தில் அன்பும் பொறையும்
விளங்குக; துன்பமும் மிடிமையும் நோவும்
சாவும் நீங்கிச் சார்ந்தபல் லுயிரெலாம்
இன்புற்று வாழ்க' என்பேன்; இதனைநீ
திருச்செவி கொண்டு திருவுளம் இரங்கி
'அங்ஙனே ஆகுக' என்பாய், ஐயனே !
இந்நாள் இப்பொழு தெனக்கிவ் வரத்தினை
அருள்வாய்;[23]

21. தே. கீ. பாரததேசம்—7.
22. இதன் விரிவை கட்டுரை 6இல் காண்க.
23. தோ. பா ; விநா. நா. மா—32.

என்று விநாயகரை வேண்டுதலால் அறியலாம். நமது நாட்டின் தற்கால வாழ்க்கையைச் சார்ந்தவற்றை 'நெஞ்சு பொறுக்கு திலையே', 'நெஞ்சிலுரமுமின்றி நேர்மைத் திறமுமின்றி' என்ற பாடல்களில் பட்டவர்த்தனமாகக் காட்டுவார். சமுதாய வாழ்வின் குறைகளை இங்குத் தெளிவாகக் காணலாம். தேசிய கீதங்கள் கூடத் தற்காலச் சமுதாய வாழ்வினையே எடுத்துக்காட்டுவனவாக அமைந்துள்ளன. சமுதாய வாழ்வின் குறைகளை நீக்கும் முறைகளைப் 'புதுமைப் பெண்', 'பெண்மை' என்ற பாடல்களில் கண்டு மகிழலாம். தற்கால வாழ்வின்மீதுள்ள மோகத்தாலும், விடுதலை வேட்கையாலும் பாரதி நம் நாட்டின் பழமையை வெறுக்கவில்லை; அதன் கலைகளைத் தட்டிக் கழிக்கவில்லை; தத்துவங்களை உதறித் தள்ளவில்லை. இவர் இறையுணர்வு மிக்கவர்; கீதை உணர்த்தும் அறத்தைக் கைக் கொண்டவர். சக்தி வணக்கத்தில் — வழிபாட்டில் — மனத்தைப் பறி கொடுத்தவர். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு கவிதை பொழியும்போது தமிழ்ப் பண்பை நினைவில் நிறுத்திக் கவிதையில் பாய்ச்சியவர்.

நம் நாடு வேளாண்மையை நம்பியிருக்கும் நாடு. இந்த நாடு செல்வங்கொழித்து முன்னேற வேண்டுமானால் நாட்டில் மக்கள் தொழில்வளத்தைப் பெருக்க வேண்டும்; உற்பத்திப் பெருக வேண்டும். பிற நாட்டு வாணிகத்தை மேற்கொள்ள வேண்டும். நாடு சுதந்தரம் பெற்ற பிறகு இவை ஓரளவு நிறைவேறிக்கொண்டு வருவதை நாம் காணலாம். 'பாரத தேசம்' என்ற தலைப்பில் காணப் பெறும் பாடலில் இக்கருத்துகள் நன்கு பொதிந்திருப்பதைக் கண்டு களிக்கலாம்.

காசி நகர்ப்புலவர் பேசும்உரை தான்
 காஞ்சியில் கேட்பதற்கோர் கருவிசெய் வோம்
ராசபுத் தானத்து வீரர் தமக்கு
 நல்லியற் கன்னடத்துத் தங்கம்அளிப் போம்
ஆயுதம்செய் வோம்நல்ல காகிதம்செய் வோம்.
 ஆலைகள்வைப் போம்கல்விச் சாலைகள்வைப் போம்.

* * *

குடைகள்செய் வோம்உழு படைகள்செய் வோம்
 கோணிகள்செய் வோம்இரும் பாணிகள்செய் வோம்
நடையும் பறப்புமுணர் வண்டிகள்செய் வோம்
 ஞாலம் நடுங்கவரும் கப்பல்கள்செய் வோம்

போன்ற பாடற்பகுதிகளில் கைத்தொழில் வளத்தைப்பற்றிக் குறிப்பிடுவதைக் காணலாம்.

முத்துக் குளிப்பதொரு தென்கடலி லே
மொய்த்து வணிகர்பல நாட்டினர்வந் தே
நத்தி நமக்கினிய பொருள்கொணர்ந் து
நம்மருள் வேண்டுவது மேற்கரையி லே
பட்டினில் ஆடையும் பஞ்சில் உடை யும்
பண்ணி மலைகளென வீதிகுவிப் போம்
கட்டித் திரவியங்கள் கொண்டுவரு வார்
காசினி வணிகருக்கு அவைகொடுப் போம்

என்ற பாடற்பகுதிகளில் உற்பத்திப் பெருக்கத்தையும் வாணிகம் செய்ய வேண்டுமென்பதையும் வற்புறுத்துவதைக் காணலாம்.

கவிதைச் சுவை : கவிதையைக் கனிவித்துப் படிப்போருக்கு இன்பத்தை அளிப்பது அதில் பொதிந்துள்ள உணர்ச்சி. அவ்வுணர்ச்சியால் உள்ளம் பூரிக்கும்பொழுது பொங்கிவரும் இன்பமே 'சுவை' எனப்படும்; வடமொழியாளர் இதனை 'ரஸம்' என்பர்; மனம் உணர்ச்சியால் பூரித்திருக்கும்பொழுது அதில் ஓர் ஒளி வீசும். அதுவே இன்பம்; அதுவே ஆன்மஒளி. ஆன்மா அங்குத்தான் பிரதிபலிக்கின்றது. அந்நிலையை அடைவதற்கு மனம் சலனமற்றிருத்தல் வேண்டும். அந்த அசைவற்ற நிலை மனத்திற்குப் பலவிதங்களில் உண்டாகலாம். யோகியர் தம் மனத்தை வசப்படுத்தி நிலைநிறுத்திச் சமாதி நிலையை அடைகின்றனர். நம்போலியர் காவியங்களைப் படித்து உணர்ச்சிப் பெருக்கால் உள்ளம் பூரிக்கும்பொழுது இந்த இன்பநிலையை எய்துகிறோம். இதுவே ரஸமாகும்.

நம்முடைய பேச்சும் எழுத்தும் உணர்ச்சியுடன் நின்றுவிடுகின்றன. ஆகவே, ரசத்தைப் பாகுபாடு செய்வது இயலாததாகின்றது. சுவை நிறைந்த மாம்பழத்தைத் தின்ற ஒருவன் அதன் சுவையைப்பற்றிப் பலவாறு வருணிக்கலாம். ஆனால், அதன் சுவையைப் . பிறர் உணரச்செய்வது இயலாது. பிறரும் அம்மாம்பழத்தைத் தின்று சுவைத்தாலன்றி அதன் சுவையை உணர முடியாது. ரஸமும் அந்த வகையைச் சார்ந்தது. ரஸம் ஒருவருடைய அநுபவம். அதைப் பிறருக்கு எடுத்துக்கூற எவராலும் இயலாது. எனவே, சுவை இலக்கண நூலார் ரஸ நிலையை வைத்துக்கொண்டு அதனை வகுத்துக்காட்ட முற்படாமல் ரஸத்திற்கு முன்னிலையாகின்ற உணர்ச்சிகளை வைத்து ரஸங்களையும் பிரித்தனர். அவர்கள் உணர்ச்சிகளை ஒன்பதாக வகுத்துள்ளனர். அவை சிருங்காரம் (உவகை), கருணம் (அழுகை), வீரம் (பெருமிதம்), ரௌத்திரம் (வெகுளி), ஹாஸ்யம் (நகை), பயானகம் (அச்சம்), பீபத்ஸம் (இளிவரல்), அற்புதம் (மருட்கை), சாந்தம் (நடுவுநிலை) என்பனவாகும். நமது மனத்தில் தோன்றக்கூடிய எண்ணற்ற உணர்ச்சிகள் இந்த

ஒன்பது பிரிவுகளுக்குள் அடங்கும் என்பது அவர்கள் கருத்து; அவற்றிற்குப் புறம்பான மன நிலையே இல்லை என்பது அவர்களுடைய துணிபு.

பாரதியார் இந்தச் சுவைகளைப் பாமரரும் கல்விக் குறைவுள்ளவர்களும் நுகருமாறு தம் பாடல்களை யாத்தார்; பொது மக்கள் விருப்பார்வத்தையொட்டிப் பல்வேறு பொருள்களைப் பற்றியும் பாடினார். பாஞ்சாலி சபதத்தின் முகவுரையில் அவரே கூறுவார்: "எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், இவற்றினையுடைய காவியம் ஒன்று தற்காலத்திலே செய்து தருவோன், நமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான். ஓரிரண்டு வருஷ நூற்பழக்கமுள்ள தமிழ் மக்கள் எல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன், காவியத்துக்குள்ள நயங்கள் குறைவுபடாமலும் நடத்துதல் வேண்டும்." இந்தக் குறிக்கோளில் அவர் தமது படைப்புகள் அனைத்திலுமே வெற்றியடைந்துள்ளார் என்று கருதலாம்.

பாரதியார் தம் 'கண்ணன் பாட்டில்'[24] இந்தச் சுவைகள் தோன்றுமாறு செய்துள்ளார்.

வயது முதிர்ந்து விடினும் — எந்தை
வாலிபக் களையென்றும் மாறுவதில்லை,
துயரில்லை; மூப்பு மில்லை — என்றும்
சோர்வில்லை; நோயொன்றும் தொடுவதில்லை.

என்ற பாடற்பகுதியில் அற்புத ரஸம் துளிர்ப்பதைக் காணலாம்.

சாத்திரம் பேசு கிறாய் — கண்ணம்மா!
சாத்திர மேதுக்கடீ!
ஆத்திரம் கொண்டவர்க்கே—கண்ணம்மா!
சாத்திர முண்டோடீ!
மூத்தவர் சம்மதியில் — வதுவை
முறைகள் பின்பு செய்வோம்;
காத்திருப் பேனோடீ?—இதுபார்
கன்னத்து முத்த மொன்று![25]

என்ற பாடலில் சிருங்கார ரஸம் கொப்புளிப்பதைக் காணலாம். இங்ஙனமே வேறு பல ரஸங்களையும் அநுபவிக்கலாம்.

இங்ஙனம் பாடல்களை எல்லோரும் எளிதில் அநுபவிக்கும்படியாக இருப்பதால்தான் கவிமணியவர்கள் பட்டிக்காட்டான் ஒருவன் வாய்மொழியாக,

24. கண்ணன் — என் தந்தை - 9
25. கண்ணம்மா — என் காதலி-(1)—3

சொல்லுக்குச் சொல்லழகும் ஏறுமேயடா—கவி
துள்ளும் மறியைப்போலே துள்ளுமேயடா
கல்லும் கனிந்துகனி யாகுமேயடா—பசுங்
கன்றும்பால் உண்டிடாது கேட்குமேயடா!

உள்ளந் தெளியுமொரு பாட்டிலேயடா—மிக்க
ஊக்கம் பிறக்குமொரு பாட்டிலேயடா
கள்ளின் வெறிகொளுமோர் பாட்டிலேயடா—ஊற்றாய்க்
கண்ணீர் சொரிந்திடுமோர் பாட்டிலேயடா[26]

என்று கூறித் திறனாய்வு செய்தார் என்று அறிகின்றோம்.

நடை : பாநடையாயினும் உரைநடையாயினும் பாரதியார் இனிமை, எளிமை, தெளிவு என்பவற்றை விரும்புபவர். இவை தம் எழுத்தில் அமையவேண்டும் என்றும் எண்ணுபவர்.

தெளிவுறவே அறிந்திடுதல்; தெளிவுதர
மொழிந்திடுதல்; சிந்திப் பார்க்கே
களிவளர உள்ளத்தில் ஆனந்தக்
கனவுபல காட்டல்; கண்ணீர்த்
துளிவரஉள் ளுருக்குதல்இங் கிவையெல்லாம்
நீயருளும் தொழில்க ளன்றோ?
ஒளிவளரும் தமிழ்வாணீ! அடியனேற்
கிவையனைத்தும் உதவு வாயே.[27]

என்று தமிழ் வாணியை வேண்டுவதனின்றும் இதனை அறியலாம். எந்தப் பாடல்களை எடுத்துக்கொண்டாலும் அவற்றில் இந்த முக்கூறுகளும் இன்றியமையாத கூறுகளாக அமைந்திருப்பதைக் காணலாம்.

கடந்த ஆயிரத்து இருநூறு ஆண்டுகளாகச் சில சிற்றிலக்கியங் களைத் தவிர முக்கியமான நூல்கள் யாவும் விருத்த யாப்பிலேயே செய்யப்பட்டுப் புலவர்கள் அதன் பரப்பிற்கும் ஆற்றலுக்கும் ஓர் எல்லை கண்டுவிட்டனர். இதனை நன்கு அறிந்த பாரதியார் புது யாப்பு முறைகளைத் தேடிக்கொண்டார். விருத்த வண்ணங்களையே கையாண்டால் அளவைக் கருதி அவசியமற்ற சொற்களையும் சொற்றொடர்களையும் பாவங்களையும் அதிகமாகச் சேர்க்க நேரிடும். தற்காலத்திற்கேற்ற புதிய கருத்துகளையும் கற்பனை களையும் அழகுறப் பொதிய வேண்டுமென்றால் புதிய யாப்பு முறைகள் வேண்டும் என்பதை நன்குணர்ந்தவர் பாரதியார். மிகஎளிய

26. மலரும் மாலையும்—பாரதியும் பட்டிக்காட்டானும்—2, 8.
27. பா.ச : சூதாட்டச் சருக்கம் — 154

சொற்களைக் கையாண்டு எல்லோரும் எளிய முறையில் சுவையுடன் படித்து அறியக்கூடிய பாங்கில் கற்பனை நிறைந்ததாயும் ஓசையின்பம் மலிந்ததாயுமுள்ள கவிதைகளைப் படைப்பதில் பாரதியாருக்கு நிகரானவர் தமிழ் இலக்கியத்திலேயே இலர் என்று திட்டமாகச்சொல்லலாம்.

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே.

என்பது 'நாட்டு வணக்கம்' என்ற பாடலிலுள்ள ஒருவகைச் சந்தம்.

ஞானத்தி லேபர மோனத்திலே—உயர்
மானத்தி லேஅன்ன தானத்திலே
கானத்தி லேஅமுதாக நிறைந்த
கவிதையி லேஉயர் நாடு.

என்பது 'பாரத நாடு' என்ற பாடலிலுள்ள மற்றொரு வகைச் சந்தம். பாரத மாதாவைப்பற்றிய பாடல்களில் சந்த நயங்கள் கொழிப்பதைக் கண்டு மகிழலாம்.

முன்னை இலங்கை அரக்கர் அழிய
முடித்தவில் யாருடை வில்?—எங்கள்
அன்னை பயங்கரி பாரத தேவிநல்
ஆரிய ராணியின் வில்.

என்றும்,

தொன்று நிகழ்ந்த தனைத்தும் உணர்ந்திடு
சூழ்கலை வாணர்களும்—இவள்
என்று பிறந்தவள் என்றுண ராத
இயல்பின ளாம்எங்கள் தாய்.

என்றும்,

பேயவள் காண்எங்கள் அன்னை—பெரும்
பித்துடை யாள்எங்கள் அன்னை
காயழல் ஏந்திய பித்தன்—தனைக்
காதலிப் பாள்எங்கள் அன்னை

என்றும் பல்வகைச் சந்த நயங்கள் பயின்று வருவதைக் காண்க. 'பாரத சமுதாயம்' என்ற பாடலில்

"எல்லா உயிர்களிலும் நானே இருக்கின்றேன்"
என்றுரைத் தான்கண்ண பெருமான்;
எல்லாரும் அமரநிலை எய்தும்நன் முறையை

இந்தியா உலகிற் களிக்கும்—ஆம்
இந்தியா உலகிற் களிக்கும்—ஆம் ஆம்
இந்தியா உலகிற் களிக்கும்—வாழ்க ! (பாரத)

என்ற பாடற்பகுதியின் நடை பெருமிதம், எக்களிப்பு போன்ற உணர்ச்சிகள் பீறிட்டு வரச் செய்கின்றது. 'செந்தமிழ் நாடு' என்ற பாடலிலுள்ள,

செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே.

என்ற அடி எழுப்பும் உணர்ச்சி சொல்லுந்தரமன்று. இங்ஙனமே 'தமிழ் மொழி' பற்றி வரும் பாடல்களின் நடை ஒப்புயர்வற்றது; தமிழைப்போலவே இனிப்பது. 'கண்ணன் பாட்டு', 'பாஞ்சாலி சபதம்' இவற்றிலுள்ள பல்வேறு நடை விகற்பங்கள் ஈடும் எடுப்புமற்றவை. இங்ஙனமே 'தோத்திரப் பாக்கள்' பகுதியிலுள்ள பாடல்களின் நடை உள்ளத்தை உருக்கச்செய்யும் பான்மையுடையவை. "எத்தனை கோடி இன்பம் வைத்தாய்!" என்று வியப்புடன் கவிஞர் இறைவனை நோக்கிப் பேசும்போது படிப்போர்—பாடுவோர்—பாடுவோரைக் கேட்போர்-வியப்புணர்ச்சி கலந்த பாட்டின்பத்தின் கொடுமுடிக்குத் தள்ளப் படுவதை உணரலாம். நடை இதில் பெரும்பங்கு கொள்ளுகின்றது. எளிய நடையே சிறந்த கவிதைக்கு அழகும் பொலிவும் ஊட்டும் என்ற உண்மையை மெய்ப்பித்தவர் பாரதியார். தற்காலக் கவிஞர் கள் தம் காலத்து வாழ்க்கையையும் கவிதைப் பொருளாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று காட்டினவர் இக்கவிஞர் பெருமான். பழமையிலிருந்து புதுமைக்கு மாறிக்கொண்டிருக்கும் தமிழரின் அறிவின் ஒளிக்கு ஓர் உருவமும் இதயத்தின் ஒலிக்கு ஓர் இசைப் பண்பையும் அளித்துக் கவிதை புனைந்தவர். இதனைத் தெளிவாக விளக்கும் முறையில்,

ஆ!
பாரதி—
புதிய தமிழுக்குப்
போடப்பட்ட
பிள்ளையார் சுழி ....

பண்டிதர்கள்
கடத்திச் சென்ற
பைந்தமிழ்க் குழந்தையைக்
கண்டு பிடித்துக்
கொண்டு வந்த
காவல் நிலையம்[28]

28. கவிஞர் வாலி : பாரதி ஒரு பிள்ளையார் சுழி (கல்கி—விடுமுறை சிறப்பு மலர்—1981)

என்று ஒரு புதுக் கவிதையின் ஒரு பகுதி அமைகின்றது. உண்மை நிலையைக் கிண்டல் செய்யும் கவிதை இது; எள்ளல் குறிப்பு நம்மைச் சிந்திக்க வைக்கின்றது.

பாரதியாரின் கல்வி பற்றிய சிந்தனைகள், வசன கவிதைகள், பழமையில் புதுமை காணும் பண்புகள், வாழ்க்கையில் தம்மை மறந்த நிலை என்பன போன்றவற்றிலும் இவர்தம் இலக்கியக் கொள்கையைக் காணலாம். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு இவர் பெருமையை மதிப்பிட்டால்,

> புவியனைத்தும் போற்றிடவான் புகழ்படைத்துத்
>   தமிழ்மொழியைப் புகழி லேற்றும்
> கவியரசர் தமிழ்நாட்டுக் கில்லையெனும்
>   வசையென்னாற் கழிந்த தன்றே.[29]

என்று அவரே பெருமிதத்துடன் கூறிக்கொள்வது முக்காலும் உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை என்பது தெளிவாகும். 'தன்னைப் புகழ்தலும் தகும்புல வோர்க்கே'[30] என்று பவணந்தியாரும் இதற்கு விதி வகுத்துத் தந்துள்ளாரன்றோ?

29. தனிப்பாடல்கள்—வேங்கடேச ரெட்டப்ப பூபதி (2)—3
30. நன். நூற்.

3. கடவுள் சமயக் கொள்கைகள்

இவ்வுலகையும் பல்லுயிர்களையும் படைத்து அளித்து அழிக்கும் ஆண்டவனை — இச்செயல்களை அலகிலா விளையாட்டாகக் கொண்டு மகிழ்பவனைப்—பற்றிப் பாரதியார் சிந்தித்துள்ளார். நாட்டில் நடைமுறையிலுள்ள பல தெய்வ வழிபாட்டை இவர் வெறுக்கவில்லை. இந்த வேற்றுமையில் ஒற்றுமையைக் காண விழைகின்றார். இவர் கருத்துப்படி கடவுள் அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் இருப்பவர். அவரைப்பற்றி,

வல்லபெருங் கடவுளிலா அணுவொன் றில்லை
மகாசக்தி இல்லாத வஸ்து இல்லை,
அல்லலில்லை அல்லலில்லை அல்லல் இல்லை,
அனைத்துமே தெய்வமென்றால் அல்ல லுண்டோ?[1]

என்று கூறுவர். மேலும் அவர்,

உயிர்களெல்லாம் தெய்வமன்றிப் பிறவொன் றில்லை;
ஊர்வனவும் பறப்பனவும் நேரே தெய்வம்;
பயிலுமுயிர் வகைமட்டு மன்றி இங்குப்
பார்க்கின்ற பொருளெல்லாம் தெய்வம் கண்டீர்;
வெயிலளிக்கும் இரவிமதி விண்மீன் மேகம்
மேலுமிங்குப் பலபலவாம் தோற்றங் கொண்டே
இயலுகின்ற சடப்பொருள்கள் அனைத்தும் தெய்வம்;
எழுதுகோல் தெய்வமிந்த எழுத்தும் தெய்வம்.[2]

என்று உரைப்பர். நதிகள் யாவும் பலதிசைகளில் சென்றாலும் இறுதியில் ஒரே கடலில் கலப்பதைப் போலவே,பல வேறு சமயங்கள் கூறும் நெறிகள் பலவாக இருப்பிலும் இறுதியில் ஆண்டவன் ஒருவனையே சேரும் வழிகளாக அமைகின்றன என்று பண்டைப் பெரியோர்கள் கூறும் உண்மை பாரதியாருக்கு உடன்பாடேயாகும்.

ஒன்று பிரம முளதுண்மை யஃதுன்
உணர்வெனும் வேதமெலாம் — என்றும்
ஒன்று பிரம முளதுண்மை யஃதுன்
உணர்வெனக் கொள்வாயோ?[3]

என்பது பாரதியாரின் சுருக்கமான கடவுட் கொள்கையாகும். அந்தக் கடவுளை யடைவதற்கு,

---

1. பாரதி அறுபத்தாறு — 15
2. ஷை — 18
3. வே. பா : அறிவே தெய்வம் — 10

காவித் துணிவேண்டா, கற்றைச் சடை வேண்டா;
பாவித்தல் போதும் பரமநிலை எய்துதற்கே.

சாத்திரங்கள் வேண்டா சதுமறைக ளேதுமில்லை;
தோத்திரங்க ளில்லையுளந் தொட்டுநின் றாற் போதுமடா!

தவமொன்று மில்லையொரு சாதனையு மில்லையடா;
சிவமொன்றே யுள்ளமெனச் சிந்தை செய்தாற் போதுமடா.[4]

என்பவையே அவர் கூறும் வழிகளாகும். இந்நிலையை எய்துதல் அருமையிலும் அருமை; ஞானியரே இந்நிலையை அடைதல் இயலும். ஆகவே, எல்லோரும் எளிதில் பின்பற்றக்கூடிய அவர் கூறும் இறைமைக் கொள்கையினையும், அந்த இறைவனை அடைவதற்கு அவர் காட்டும் நெறிகளையும் ஈண்டுச் சிந்திப்போம்.

கடவுட் கொள்கை: பாரதியாரின் பாடல்களை மேலோட்டமாகப் பயின்றாலும் இவர் சக்தி வழிபாட்டாளர் என்பதைத் தெளிவாக உணரலாம். எனினும் விநாயகர், முருகன், நாமகள், பூமகள், கண்ணன், இராமன், கோவிந்தன் என்று நாட்டு மக்கள் வழிபடும் கடவுளர்களையும் அவர் போற்றத் தவறவில்லை. நாட்டையும் பாரத மாதாவாக்கி அதனையும் வழிபடுகின்றார்; விடுதலையே அவர் சமயமாகின்றது. ஆகவே, தெய்வப் பாடல்களின் நடை பாரதியின் நாடுபற்றிய பாடல்களிலும் விடுதலைபற்றிய பாடல்களிலும் நிழலிடுவதைக் காணலாம். சமயத்துறையில் பயிலும் நடையை மேற்கொண்டு ஒரு கொள்கையைப் பரப்பினால்தான் சமயப் பற்றில் ஆழ்ந்து கிடக்கும் மக்களுக்கு ஏற்கும் என்பதை 'நாடி பிடித்து' அறிந்துகொண்டார். இனி, இவர்தம் கடவுட் கொள்கையை ஆராயலாம்.

1. பண்டையோர் வணங்கும் தெய்வங்கள்

முதலாவதாகப் பண்டையோர் வழிபடும் தெய்வங்களைக் குறிப்பிடுகின்றார். அத்தெய்வங்களையெல்லாம் மங்களாசாசனம் செய்து மகிழ்கின்றார். இந்நிலையைக் காண்போம்.

விநாயகர்: வெண்பா, கலித்துறை, விருத்தம், அகவல் என்ற நான்குவகைப் பாக்கள் கலந்து வரும் நாற்பது பாடல்களடங்கிய 'விநாயகர் நான்மணி மாலை' என்ற ஒரு சிறு பிரபந்தமே பாடி இவரைப் போற்றுகின்றார். வைணவர்கள், சரணாகதி தத்துவத்தை (பிரபத்தி நெறி) முக்திக்கு ஒரு தனி நெறியாகக் கொண்டிருந்தாலும் பொதுவாக இந்துக்களும் பிற சமயத்தினரும் சரணாகதி என்ற தத்துவத்தை மேற்கொள்ளுகின்றனர். இம்முறையையொட்டிப் பாரதியாரும் ஆனை முகத்தோனைப் பல முறை சரணமடைகின்றார் இச் சிறுபிரபந்தத்தில்.

4. ஷ: பரசிவ வெள்ளம் — 20, 21, 22

காலைப் பிடித்தேன் கணபதி !
நின்பதம் கண்ணிலொற்றி
நூலைப் பலபல வாகச்
சமைத்து நொடிப்பொழுதும்
வேலைத் தவறு நிகழாது
நல்ல வினைகள் செய்துன்
கோலை மனமெனும் நாட்டின்
நிறுத்தல் குறியெனக்கே.[5]

என்று விநாயகப் பெருமானின் திருவடிகளில் சரணமடைவதைக் காண்கின்றோம். ஆனைமுகத்தோனின் செங்கோல் தம் மனம் என்னும் நாட்டில் நிறுத்தவேண்டும் என்று விழைகின்றார். இன்னொரு பாடலில்,

நீயே சரணம் நினதரு
ளேசர ணஞ்சரணம்[6]

என்றும், பிறிதொரு பாடலில்,

நித்தியப் பொருளே சரணம்
சரணம் சரணம் சரணமிங் குனக்கே.[7]

என்றும் சரணம் அடைவதைக் காணலாம். இந்தப் பெருமானை இவர் வேண்டுவனவற்றை இவர் வாக்கிலேயே காண்போம்.

எனக்கு வேண்டும் வரங்களை
இசைப்பேன் கேளாய் கணபதி !
மனத்திற் சலன மில்லாமல்
மதியில் இருளே தோன்றாமல்
நினைக்கும் பொழுது நின்மவுன
நிலைவந் திடநீ செயல்வேண்டும்
கனக்கும் செல்வம் நூறுவயது ;
இவையும் தரநீ கடவாயே.[8]

இதில் தமக்கு மவுனநிலை, கனக்கும் செல்வம் நூறு வயது (நீண்ட ஆயுள்) வேண்டுவதைக் காணலாம். இந்த நிலைகள் தமக்கு வாய்த்தால்தான்,

---

5. வி.நா.மா — 6
6. ஷை — 2
7. ஷை — 32
8. ஷை — 7

நமக்குத் தொழில்கவிதை
நாட்டிற் குழைத்தல்
இமைப்பொழுதும் சோராது
இருத்தல்.[9]

என்ற தமது குறிக்கோள்களை நிலைநிறுத்த முடியும் என்கின்றார். இந்தப் பெருமானை,

விண்டுரை செய்குவன் கேளாய்
புதுவை விநாயகனே
தொண்டுன தன்னை பராசக்திக்
கென்றும் தொடர்ந்திடுவேன்
பண்டைச் சிறுமைகள் போக்கி
என்னாவிற் பழுத்தசுவைத்
தெண்டமிழ்ப் பாடல் ஒருகோடி
மேவிடச் செய்குவையே.[10]

என்று, பெருமானின் அன்னை பராசக்திக்குத் தொண்டு புரிவதும் ஒருகோடி தெண்டமிழ்ப் பாடல்கள் பாடுவதுமான நற்பணிகளை ஆற்ற வேண்டும் என்று வேண்டினவரல்லவா ?

முருகன் : 'தோத்திரப் பாடல்கள்' என்ற தொகுதியில் முருகன்மீது ஐந்து பாடல்களும் வள்ளிமீது இரண்டு பாடல்களும் காணப்படுகின்றன.

முருகா !—முருகா !—முருகா !

என்று தொடங்கும் இசைப்பாடல்[11] அருணகிரி நாதரின் 'கந்தரனுபூதி'யின் நடையில் அமைந்திருப்பதுபோல் தோன்றுகின்றது.

வருவாய் மயில்மீ தினிலே
வடிவே லுடனே வருவாய் !
தருவாய் நலமும் தகவும் புகழும்
தவமும் திறமும் தனமும் கனமும் (முருகா)

என்ற பாடற்பகுதி (சரணங்களிலுள்ளது) கந்தரனுபூதியிலுள்ள பாடல்களின் நடையையும் கருத்தையும் ஒட்டி அமைந்துள்ளதாகத் தெரிகின்றது. எடுத்துக்காட்டாக,

இரவும் பகலும் துதிசெய் திருதாள்
பரவும் பரிசே பரிசா யருள்வாய்
கரவுண் டெழுசூர் களையக் கதிர்போன்
விரிவுஞ் சுடர்வேல் விடுசே வகனே[12]

---

9. வி. கா. ம. — 25
10. ஷை — 30
11. தோத்திரப் பாடல்கள் — 2. முருகன் பாட்டு
12. கந்தரனுபூதி — 57.

என்ற பாடலையும் இவண் காட்டிய பாரதியார் பாடலையும் மாறி மாறிப் படித்து அநுபவித்தால் இவ்வுண்மையைத் தெளியலாம். முருகனது வேலை 'ஞானசக்தி'க்குக் குறியீடாகக் கொள்வது மரபு. இந்த ஞானசக்தியை விழையும் பாரதியார்,

> தோகைமேல் உலவும் கந்தன்
>   சுடர்க்கரத் திருக்கும் வெற்றி
> வாகையே சுமக்கும் வேலை
>   வணங்குவது எமக்கு வேலை[13].

என்று தம் உயிராய பணியைத் தெரிவிக்கின்றார். இன்னொரு பாடலில்,[14]

> வீரத் திருவிழிப் பார்வையும்—வெற்றி
>   வேலும் மயிலும்என் முன்னின்றே—எந்த
> நேரத் திலும்என்னைக் காக்குமே;—அன்னை
>   நீலி பராசக்தி தண்ணருட்—கரை
> ஓரத்தி லேபுணை கூடுதே

என்று முருகன்மீது தமக்கிருக்கும் பக்திப் பெருக்கைக் காட்டுகின்றார். 'கிளிவிடுதூது'[15] என்ற பாடலில் தாம் நாயகி நிலையை அடைந்து முருகனுக்குத் தூது விடுகின்றார்.

> அல்லிக் குளத்தருகே—ஒருநாள்
>   அந்திப் பொழுதினிலே—அங்கோர்
> முல்லைச் செடியதன்பால்—செய்தவினை
>   முற்றும் மறந்திடக் கற்றதென் னேஎன்று
> சொல்ல வல்லாயோ—கிளியே !

என்று 'முல்லைச் செடியதன்பால் நடந்த வினை'யை (புணர்ச்சி அல்லது முத்தம் ?) நினைவுகூரச் செய்யுமாறு கிளிக்குப் பணிக்கின்றார். மேலும்,

> பாலை வனத்திடையே—தனைக்கைப்
>   பற்றி நடக்கையிலே—தன்கை
> வேலின் மிசையாணை—வைத்துச்சொன்ன
>   விந்தை மொழிகளைச் சிந்தைசெய் வாயென்று
> சொல்ல வல்லாயோ—கிளியே !

என்று புணர்ச்சிக்குப்பின் 'நின்னைப் பிரியேன்; பிரியில் தரியேன்' என்று தன் வேலின்மீது ஆணையிட்டுச் சொன்ன 'விந்தைமொழி

13. தோ.பா : 6. எமக்கு வேலை.
14 ஷை : 5. முருகன் பாட்டு.
15. ஷை : 4. கிளிவிடு தூது

களை'ச் சிந்திக்கச் செய்யும்படி முருகனிடம் சொல்லுமாறு கிளிக்குப் பணிக்கின்றார். இந்தப் பாடலில் சங்க இலக்கிய மரபு நிழலிடுவதைக் காணலாம். இதனைத் தவிர வேறு இரண்டு பாடல்கள்[16] முருகன் வள்ளிக்குத் தூது விடுக்கும் பாணியில் அமைந்துள்ளன. முருகன் நமக்கு அருள்வதை,

வேலைப் பணிந்தால் விடுதலையாம்; வேல்முருகன்
காலைப் பணிந்தால் கவலைபோம்[17]

என்று தெளிவுறுத்துகின்றார். 'ஆறுதுணை[18] என்ற பாடலில் வெற்றி வடிவேலன் இவருக்கு மூன்றாவது துணையாக அமைகின்றான். இன்னொரு பாடலில்,

தூய பெருங்கனலைச் சுப்பிர மண்ணியனை
நேயத்துடன் பணிந்தால்—கிளியே
நெருங்கித் துயர்வருமோ ?[19]

என்று முருக வழிபாடு நம் துயர்களை வெருட்டியோட்டிவிடும் என்கின்றார்.

நாமகள் : 'மூன்று காதல்'[20] என்ற பாடலில் தம்முடைய முதல் காதல் கலைமகள்மீதுதான் என்று குறிப்பிடுகின்றார். இளமைக் காலத்தில் 'பள்ளிப் படிப்பில் மதி பற்றிடவில்லை' யென்றாலும், கலைமகளின்பால் தம் 'வெள்ளை மனது' பறி கொடுத்ததைக் குறிப்பிடுகின்றார். ஆற்றங்கரையில் தனித்ததொரு மண்டபத்தில் தென்றற்காற்றை நுகர்ந்திருந்தபொழுது நாமகள் 'கன்னிக் கவிதை' கொணர்ந்து தந்ததைக் குறிப்பிடுகின்றார். சிறு வயதிலேயே நாமகள் அருள் இருந்ததால்தான் தமக்குக் கவிபாடும் ஆற்றல் கிட்டியது என்பது கவிஞர் பெற வைக்கும் குறிப்பு. 'ஆறு துணை'[21] என்ற பாடலில் கலைமகள் நான்காவது துணையாக அமைகின்றாள்.

'பாஞ்சாலி சபதத்தில்' கலைமகள் வணக்கமாக இரண்டு காப்புச் செய்யுள்கள் வருகின்றன. முதல் பாடலில் கலைமகளைப் பற்றிய சொல்லோவியம் மிகமிக அற்புதமானது. அவளது இருப்பிடம் வெள்ளைத் தாமரை ; அங்குப் புகழுடன் திகழ்வாள். அவள்

16. தோ.பா : 7,8. வள்ளிப் பாட்டு—1,2
17. ஷை : 66. விடுதலை வெண்பா—4
18. ஷை : 65. ஆறு துணை—3.
19. ஷை : 76. கிளிப்பாட்டு—3
20. தோ.பா : 64. மூன்று காதல்
21. ஷை 65. ஆறுதுணை—4

தன் கையில் தரித்திருப்பது 'கொள்ளைக் கனி இசை கொட்டும்' நல் யாழ். இவள் பிள்ளைப் பிராயத்திலேயே கவிஞருக்கு அருள் பாலித்தவள். இவளுடைய திருமேனி சொல்லுந்தரமன்று. வேதமே இவளது திருவிழி ; அதன் உரையே அதில் பூசிய கரிய மை. இவள் முகம் சீதக் கதிர்மதியை ஒத்தது. சிந்தனையே இவள் குழலாகும். வாதமும் தருக்கமும் இவளது இரண்டு செவிகளாகும் ; இவற்றில் அணிந்திருப்பது துணிவு என்ற தோடு (காதணி) ஆகும். மூக்கினை அறிவுக் கூர்மைக்குக் குறியீடாகக் கொள்வது மரபு. ஆதலால், 'போதமே' இவளது நாசியாக அமைந்திருந்தது. இவளது இதழ்கள் கற்பனையே வடிவங் கொண்டவை. காவியமே இவளது கொங்கை களாகும் ; சிற்பம் முதல் எல்லாக் கலைகளும் இவளது கரத்தில் குடிகொண்டிருந்தன. இத்தகைய திருமேனியையுடைய பெருமாட்டி விற்பனத் தமிழ்ப் புலவோரின் நாவையே தன்னுடைய மலர்ப்பத மாகக் கொண்டவள். இவள் தாண்டவமாடுவது அங்குத்தானே ?[22] இந்த நாமகளைத்தான் கவிஞர் சரண் புகுந்து 'ஐவர் பூவை'யின் புகழ்க் கதையைத் தமிழ்ப்பாட்டால் காவியம் சமைப்பதற்குத் துணைபுரியுமாறு வேண்டுகின்றார் ; வாழ்த்துமாறு முறையிடு கின்றார்.

இவர் பாடும் கவிதை எப்படி இருக்க வேண்டும் ? இவர் வாக்கிலேயே அதனைக் கேட்போம் :

> தெளிவுறவே அறிந்திடுதல் ; தெளிவுதர
> மொழிந்திடுதல்; சிந்திப் பார்க்கே
> களிவளர உள்ளத்தில் ஆனந்தக்
> கனவுபல காட்டல், கண்ணீர்த்
> துளிவரஉள் ளுருக்குதல், இங் கிவையெல்லாம்
> நீஅருளும் தொழில்க ளன்றோ?
> ஒளிவளரும் தமிழ்வாணீ! அடியனேற்
> கிவையனைத்தும் உதவு வாயே.[23]

பாஞ்சாலி சபதத்தை நாம் படித்தநுபவிக்கும்போது கவிஞர் கலை மகளை வேண்டிப் பெற்ற கூறுகளனைத்தும் நாம் காவியத்தில் தட்டுப்படுவதைக் காண்கின்றோமன்றோ? கலைமகள் தன்னை விட்டுப் பிரிவதைத் தன்னால் ஆற்ற முடியாது என்கின்றார்.

> கண்மணி போன்றவரே!— இங்குக்
> காலையும் மாலையும் திருமகளாம்
> பெண்மணி யின்பத்தையும்—சக்திப்
> பெருமகள் திருவடிப் பெருமையையும்

---

22. பா.ச : 1.2 : 3,4,5,6.
23. ஷை. 2·28 ; 154

வண்மையில் ஓதிடுவீர்!—என்றன்
வாயிலும் மதியிலும் வளர்ந்திடுவீர்!
அண்மையில் இருந்திடுவீர்!—இனி
அடியனைப் பிரிந்திடல் ஆற்றுவனோ ![24]

இந்தக் கலைமகள்தான் கவிஞருக்கு,

தெய்வம் யாவும் உணர்ந்திடும் தெய்வம்,
தீமை காட்டி விலக்கிடுந் தெய்வம் ;
உய்வ மென்ற கருத்துடை யோர்கள்
உயிரி னுக்குயி ராகிய தெய்வம்;
செய்வ மென்றொரு செய்கை யெடுப்போர்
செம்மை நாடிப் பணிந்திடு தெய்வம்;
கைவ ருந்தி உழைப்பவர் தெய்வம்
கவிஞர் தெய்வம்; கடவுளர் தெய்வம்.[25]

என்று பலவிதமாகக் காட்சி அளிக்கும் தெய்வமாகத் திகழ்கின்றாள்.

பூமகள் : கவிஞர் கொண்ட மூன்று காதலில் பூமகள்—திருமகள்—இரண்டாவது காதலாக அமைகின்றாள். பொருளிலார்க்கிவ்வுலகம் இல்லையன்றோ? செல்வத்தின் தலைவிதானே திருமகள்? திருமகளைப்பற்றித் 'திருக்காதல்', 'திருவேட்கை', 'திருமகள் துதி', 'திருமகளைச் சரண் புகுதல்' என்ற நான்கு பாடல்கள் உள்ளன. வறுமையையே குலதனமாகக் கொண்ட கவிஞர் திருவை வேண்டுதல் இயல்பன்றோ? ஒரு பாடலில் 'திருவே ! நினைக்காதல் கொண்டேனே'[26] என்கின்றார். அடுத்த பாடலிலும்,

மலரின் மேவு திருவே !—உன்மேல்
மையல் பொங்கி நின்றேன் ;
நிலவு செய்யும் முகமும்—காண்பார்
நினைவ ழிக்கும் விழியும்.
கலக லென்ற மொழியும்—தெய்வக்
களிது லங்கு நகையும்
இலகு செல்வ வடிவும்—கண்டுன்
இன்பம் வேண்டு கின்றேன்.[27]

என்று திருவின்மீது காதல் கொண்டு இன்பம் வேண்டுவதைக் காணலாம்.

ஒரு பாடலில் திருமகளின் பிறப்பிடத்தையும், அவள் வாழும் இடங்களையும் தெளிவுறுத்துகின்றார். திருமகளின் பிறப்பிடம்

24. தோ.பா. 61. கலைமகளை வேண்டுதல்—3.
25. தோ.பா : 62. வெள்ளைத் தாமரை—4
26. தோ. பா : 56. திருக்காதல்—அடி 1.
27. ஷை 57. திருவேட்கை—1

பாற்கடல்; அவள் தன்மை அமுதம் போன்றது. அவள் தாமரைப் பூவில் திருவடியை வைத்து வாழ்பவள். பொன்னிற மேனியை யுடையவள். கருவிழிகளையுடையவள்; பசுமையில் விருப்புடை யவள். அவளது நான்கு திருக்கைகளிலும் பலவகைச் செல்வங்கள் கொழித்து நிற்கும். அவள்,

நாரணன் மார்பினிலே—அன்பு
நலமுற நித்தமும் இணைந்திருப்பாள்.[28]

'அகலகில்லேன் இறையும்' என்று அவன் மார்பில் நிலைத்து வாழ்பவள். இவள் தோரணப் பந்தரிலும், பசுத் தொழுவத்திலும், சுடர்மணி மாடத்திலும், வீரர்களின் தடந்தோளிலும், வேர்வை வெளிப்பட உழைப்பவர் தொழில்களிலும், பாரதி சிரத்தினிலும் வீற்றிருந்து அருள் புரிபவள். இன்னும் பொன், மணி, நறுமலர், சாந்து, விளக்கு, கன்னியர் நகைப்பு, செழுங்காடு, பொழில், கழனி, துணிவு, மன்னர் முகம் போன்ற இடங்களிலும் இவள் வீற்றிருப் பவள். மேலும், மண்ணுள் இருக்கும் கனிகள், மலை, ஆழ்கடல், புண்ணிய வேள்வி, உயர்புகழ், மதி, புதுமை, பண்ணும் பாவை, நல்ல பாட்டு, கூத்து, ஓவியம் ஆகியவற்றிலும் காணப்படுவாள். வெற்றிகொள் படை, விநயங்கள் அறிந்தவர் அங்காடி, நற்றவ நடை, நாவலர் தேமொழித் தொடர் ஆகியவற்றிலும் தென்படுபவள். இத்தகைய பெருமாட்டியை வாழ்த்த விழைகின்றார் கவிஞர். இப்படியிருந்தும், அவள் தம்மை நாடாதது கண்டு,

என்ன பிழைகள் கண்டோ—அவள்
என்னைப் புறக்கணித் தேகிடுவாள்.

என்று நைந்து பேசுகின்றார். கலைமகளின் கடைக்கண் நோக்கை நன்கு பெற்ற கவிஞரின்மீது திருமகளின் கடைக்கண் நோக்கு பட வில்லை.

இருவேறு உலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு.[29]

என்ற வள்ளுவர் வாய்மொழியைச் சிந்தித்து அமைதி கொள்ளுவோம்.

கண்ணன் : "பாரத நாட்டின் குலதெய்வமாகிவிட்ட கண்ணனுக்குப் பாமாலை சூட்டாத கவிஞர்கள் அருமை. தன்னை நெடுநாள்களாக மறந்திருந்த பாரத நாடு திடீரென விழித்துக் கொண்டதும், அதன் எதிரே முதலில் தோன்றிய ஒளி, கீதா சாஸ்திரத்தைக் கூறிப் பார்த்தனுடைய ரதத்தை வெற்றி பெற ஓட்டிய கண்ணபிரானுடைய உருவமே. அந்த உருவமானது நமது

28. தோ. பா. 59. திருமகளைச் சரண்புகுதல்—4
29. குறள்—374

கவியின் இருதயத்திலும் எழுந்து அவருடைய கவிதைக்கு ஒரு சோபையைக் கொடுத்தது''.[30]

'ஆரிய தரிசனம்'[31] என்ற பாடலில்,

> கண்ணனைக் கண்டேன்—எங்கள்
> கண்ணனைக் கண்டேன்—மணி
> வண்ணனை ஞான மலையினைக் கண்டேன்
>
> * * *
>
> கண்ணன்நற் றேரில்—நீலக்
> கண்ணன்நற் றேரில்—மிக
> எண்ணயர்ந் தானோர் இளைஞனைக் கண்டேன்.

என்று 'கிருஷ்ணார்ஜுன தரிசனம்'பற்றிக் கூறுவதைக் காண்கின்றோம். இந்தக் கண்ணனைப்பற்றி 23 தொடர்ச்சியான பாடல்களும் 14 தனித்தனியான உதிரிப் பாடல்களும் படைத்துள்ளார். இந்தப் பாடல்களில் கண்ணனைப் பல கோணங்களில் கண்டு மகிழ்வதிலிருந்து கண்ணன்மீது இவர் கொண்டிருந்த ஆழ்ந்த பக்தியையும் ஈடுபாட்டையும் கண்டு மகிழலாம். இதனை நன்கு உணர்ந்த புதுக் கவிஞர் ஒருவர் (கவிஞர் வாலி),

> பல
> கோணங்களில்
> கண்ணனைப்
> படம் பிடித்த
> கேமரா—[32]

என்று பாரதியாரை ஒரு கேமராவாக்கி (இஃது ஒரு குறியீடு) மகிழ்கின்றார். மேலும், கண்ணன்மீது கவிஞர் கொண்ட ஈடுபாடு இவ்வாசிரியரின் ''கண்ணன் பாட்டுத் திறன்''[33] என்ற நூலில் விரிவாக விளக்கம் பெற்றிருப்பதைக் காண்க.

இராமன் : 'சாகா வரம்'[34] என்ற ஓர் இசைப் பாடலில் இராமனைப்பற்றிய குறிப்பு வருகின்றது.

> சாகா வரமருள்வாய், ராமா !
> சதுர்மறை நாதா ! சரோஜா பாதா !

30. கண்ணன் பாட்டு—இரண்டாம் பதிப்புக்கு வ. வே. சு. அய்யரின் முன்னுரை (1919).
31. தோ. பா. 68. ஆரிய தரிசனம்—13
32. கல்கி—விடுமுறைச் சிறப்பு மலர்—1981
33. **'கண்ணன் பாட்டுத்திறன்'** (சர்வோதய இலக்கியப் பண்ணை—மதுரை - 625 001)
34. தோ. பா : 43. சாகா வரம்.

என்று 'பல்லவி' தொடங்குகின்றது. காந்தியடிகளின் நாவில் தாண்டவமாடிய இராமநாமம் இவரை இப்பாடலை அமைக்கத் தூண்டியிருத்தல் வேண்டும்.

ஆகாசந் தீகால் நீர்மண்
அத்தனை பூதமும் ஒத்து நிறைந்தாய் ;
ஏகாமிர்த மாகிய நின்தாள்
இணைசர ணென்றால் இதுமுடியாதா ?

என்று இராமனை ஒரு விசுவரூப தரிசனமாகக் காண்கின்றார். வைணவ தத்துவமான 'அசித்து' இவர் மனத்தில் இவ்வாறு காட்சி அளிப்பதாகக் கருதலாம். இதே பாடலில் 'பாகார் மொழி சீதையின் மென்றோள், பழகிய மார்பா !' என்ற அடி 'புருஷகாரமாக இருக்கும் பிராட்டி' என்ற வைணவ தத்துவத்தை நினைந்து பாடியுள்ளார் என்று கருத இடந்தருகின்றது. 'நின்தாள் சரணம்' என்று இராமன் தாளைச் சரண் அடையும் கவிஞருக்குப் புருஷகாரமாக[35] விளங்கும் பிராட்டியின் நினைப்பு வருவதில் வியப்பொன்றும் இல்லை. பாடலின் இறுதியிலும்,

சத்யா சநாதநா ராமா
சரணம் சரணம் சரண முதாரா !

என்று சராணகதி நெறியை மீண்டும் வற்புறுத்துவதைக் காணலாம்.

பிறிதோரிடத்திலும் இராமனைப்பற்றிய நினைவு கவிஞருக்கு வருகின்றது. கவிஞர், கோவிந்தசாமியிடம் மரணத்தைத் தேய்க்கும் வழியைக் கேட்கும்போது அவர் வாக்காக வருகின்றது. அவர் கயிலை வேந்தன் திருவடிகளை மூடிமேற்கொண்டால் 'பந்தமும் பயமும்' இல்லையென்பதாகக் கூறி "அது" என்ற மெய்ப் பொருளைச் சுட்டுகின்றார்;

அதுவேநீ யென்பதுமுன் வேத வாக்காம் ;
அதுவென்றால் எதுவெனநான் அறையக் கேளாய்
அதுவென்றால் முன்னிற்கும் பொருளின் நாமம்
அவனியிலே பொருளெல்லாம் அதுவாம் ; நீயும்
அதுவன்றிப் பிறிதில்லை ; ஆத லாலே,
அவனியின்மீ தெதுவரினும் அசைவு றாமல்
மதுவுண்ட மலர்மாலை இராமன் தாளை
மனத்திலே நிறுத்தியிங்கு வாழ்வாய் சீடா ![36]

---

35. புருஷகாரம்-தகவுரை. வைணவ தத்துவத்தில் பிராட்டியார் 'புருஷகார பூதை' என்று வழங்கப்பெறுபவர். விவரம் இவ்வாசிரியரின் 'முத்திநெறி' (பாரி நிலையம், சென்னை - 600 001) என்ற நூலில் காண்க.

36. பாரதி அறுபத்தாறு—60

என்று வருவதைக் காண்க. 'எவ்வுயிரும் கடவுள்' என்ற கொள்கையை—அத்வைத நிலையை—மேற்கொண்டால் மரண மில்லை என்று குறிப்பிடுவதையும் சிந்திக்க.[37] கழுதை, பன்றி, கூலம், மலம் முதலிய காண்பனவெல்லாம் தெய்வமாகப் பாவிப்பவர் கவிஞர்[38].

கோவிந்தன் : இத்திருநாமம் கண்ணனுக்கு இந்திரனால் சூட்டப் பெற்றது. கோவர்த்தனத்தைக் குடையாகக் கொண்டு ஆநிரைகளைக் காத்தபோது இந்திரன் 'கோவிந்தா' என்று கண்ணனை அழைத்ததை ஈண்டு நினைவுகூர்க. இந்தக் 'கோவிந்தனை'க் கவிஞர் 'கோவிந்தன் பாட்டு'[39] என்ற ஒரே பாட்டில் 'மங்களாசாசனம்' செய்து மகிழ் கின்றனர்.

எளியனேன் யானெனலை எப்போது
போக்கிடுவாய், இறைவனே! இவ்
வளியிலே பறவையிலே மரத்தினிலே
முகிலினிலே வரம்பில் வான
வெளியிலே கடலிடையே மண்ணகத்தே
வீதியிலே வீட்டி லெல்லாம்
களியிலே, கோவிந்தா ! நினைக்கண்டு
நின்னொடுநான் கலப்ப தென்றோ ?

என்கண்ணை மறந்துனிரு கண்களையே
என்னகத்தில் இசைத்துக் கொண்டு
நின்கண்ணாற் புவியெல்லாம் நீயெனவே
நான்கண்டு நிறைவு கொண்டு
வன்கண்மை மறதியுடன் சோம்பர்முதற்
பாவமெலாம் மடிந்து நெஞ்சிற்
புன்கண்போய் வாழ்ந்திடவே கோவிந்தா !
எனக்கமுதம் புகட்டு வாயே.

இப்பாடலில் 'யான்' என்ற அகந்தையைப் போக்க வேண்டும் என்ற எண்ணம் குறிப்பிடத்தக்கது. 'இவ், வளியிலே, பறவையிலே.... வீட்டிலெல்லாம்' என்ற அடிகளில் விசுவரூப தரிசனக் காட்சியைக் கவிஞர் மனத்தில் எண்ணியதைக் காண்கின்றோம். இக்கருத்து,

பூவையும் காயாவும் நீலமும் பூக்கின்ற
காவிமலர் என்றும், காண்தோறும், பாவியேன்

37. பாரதி அறுபத்தாறு—4
38. ஷை—16
39. தோ. பா : 44. கோவிந்தன் பாட்டு

மெய்ஆவி மெய்மிகவே பூரிக்கும் - அவ்வவை
எல்லாம் பிரான்உருவே என்று.[40]

என்ற நம்மாழ்வாரின் திருவாக்கை நினைவுகூரச் செய்கின்றது. அன்றியும்,

பவ்வநீர் உடைஆடை ஆகச் சுற்றி
பார்அகலம் திருவடியாபவனம் மெய்யா
செவ்விமா திரம்எட்டும் தோளா அண்டம்
திருமுடியா நின்றான்.[41]

என்று திருமங்கை மன்னன் காணும் விசுவரூப தரிசனத்தையும் நினைவுகூரச் செய்கின்றது இப்பகுதி. இங்கு **'சரீர - சரீரி பாவனை'** என்ற வைணவ தத்துவமும் குழைந்து நிற்பதைக் கண்டு மகிழ்கின்றோம்.

'இறைவா ! இறைவா!....என்ற[42] பாடலிலும் விசிட்டாத்வைத தத்துவத்தைக் காண்கின்றோம்.

சித்தினை அசித்துடன் இணைத்தாய்—அங்கு
சேரும்ஐம் பூதத்து வியனுலகு அமைத்தாய்
அத்தனை யுலகமும் வண்ணக் களஞ்சிய
மாகப் பலப்பலநல் லழகுகள் சமைத்தாய்

என்று அகிலத்தின் காட்சியில் மனத்தைப் பறிகொடுத்து நிற்பதைக் கண்டு மகிழ்கின்றோம். இன்னும்,

முக்தியென் றொருநிலை சமைத்தாய்—அங்கு
முழுதினையும் உணரும் உணர்வ மைத்தாய்
பக்தியென் றொருநிலை வகுத்தாய்—எங்கள்
பரமா ! பரமா ! பரமா !

என்றுமுக்தி நிலையை வகுத்தமைத்த அற்புதத்தையும் அதனையடையும் வழியாக அமைத்த பக்தி நெறியையும் நினைந்து போற்றுவதையும் கண்டு வியக்கின்றோம். எட்டையபுரத்தில் பிறந்து, நெல்லையில் வாழ்ந்த கவிஞர் திருக்குருகூரில் (ஆழ்வார் திருநகரி) அவதரித்த நம்மாழ்வாரின் தத்துவத்தில் ஆழங்கால்படுதல் இயல்பேயன்றோ ?

சக்தி : வாரணாசி வாழ்வும், கல்கத்தா வாழ்வும் புதுச்சேரியில் வாழ்ந்தபோது கொண்ட அரவிந்தரின் தொடர்பும் கவிஞரைச் சக்தி வழிபாட்டில் ஈடுபடுத்தியதாகக் கருதலாம். 'சர்வம் விஷ்ணுமயம் ஜகத்' என்ற மரபு ஒன்று உண்டு. பாரதியாருக்குச் 'சர்வம் சக்தி மயம் ஜகத்' என்ற தத்துவந்தான் அவரது பேச்சாகவும் அமைந்

40. பெரி. திருவந்·73.
41. பெரி. திரு 6. 6 : 3
42. தோ. பா : 9. இறைவா ! இறைவா !

துள்ளது. சக்தியைப்பற்றி அதிகமான எண்ணிக்கையில் பாடல்கள் காணப்படுவதே இக்கருத்திற்கு அரணாக அமைந்துவிடுகின்றது.

'மூன்று காதல்'[43] என்ற பாடலில் மூன்றாவதாக அன்னை பராசக்தியின்மீது இவர் காதல் கொண்டதாகக் கூறுவர். இவள் ஒரு நாள் இரவில் வருகின்றாள்; கன்னி வடிவமாக வருகின்றாள். இவளைக் கண்ட களிப்பில்,

அன்னை வடிவமடா! — இவள்
ஆதி பராசக்தி தேவியடா! —இவள்
இன்னருள் வேண்டுமடா! —பின்னர்
யாவும் உலகில் வசப்பட்டுப் போமடா!

என்று எக்களிப்புடன் தன் மகிழ்ச்சிப் பெருக்கை வெளியிடுகின்றார். வாணி, சீதேவி, பார்வதி—இம்மூன்று தேவியரும் ஒன்றாக இலங்கு பவளே மாதா பராசக்தி என்பது கவிஞரின் அதிராக் கொள்கை யாகும். எனவே,

மாதா பராசக்தி வையமெலாம் நீநிறைந்தாய்!
ஆதாரம் உன்னையல்லால் ஆரெமக்குப் பாரினிலே[44]

என்று கூறுவர்.

யாது மாகி நின்றாய் — காளி!
எங்கும் நீநிறைந்தாய்!
தீது நன்மை யெல்லாம் — காளி
தெய்வ லீலை யன்றோ?[45]

யாது மாகி நின்றாய் — காளி!
எங்கும் நீநி றைந்தாய்
தீது நன்மை யெல்லாம் — நின்றன்
செயல்க ளன்றி யில்லை[46]

எண்ணிலாப் பொருளும், எல்லையில் வெளியும்
யாவுமாய் நின்றனைப் போற்றி[47]

எண்ணிற் கடங்காமல் எங்கும் பரந்தனயாய்
விண்ணிற் சுடர்கின்ற மீனையெலாம் — பண்ணியதோர்
சக்தி[48]

---

43. தோ. பா. 64. மூன்று காதல்—4
44. ஷை: 63. நவராத்திரிப் பாட்டு—1
45. ஷை: 30. காளிப் பாட்டு
46. ஷை: 31. காளி ஸ்தோத்திரம்
47. ஷை: 33. மகாசக்தி பஞ்சகம்—2
48. ஷை: 17. மகாசக்தி வெண்பா—4

என்ற பாடற் பகுதிகளில் 'எல்லாம் சக்தி மயம்' என்ற கருத்து தெளிவாவதைக் காணலாம். மேலும்,

விண்டு ரைக்கஅறிய அரிதாய்
விரிந்த வான வெளியென நின்றனை;
அண்ட கோடிகள் வானில் அமைத்தனை,
அவற்றில் எண்ணற்ற வேகஞ் சமைத்தனை;
மண்ட லத்தை அணுவணு வாக்கினால்
வருவ தெத்தனை அத்தனை யோசனை
கொண்ட தூரம் அவற்றிடை வைத்தனை
கோலமே! நினைக் காளியென் றேத்துவேன்.[49]

என்று இந்த அகிலத்தின் காட்சியைத் தொகுத்துக் காட்டுவர். இக் காட்சி அடுத்து வரும் ஐந்து பாடல்களில் அற்புதமாக வகுத்துக் காட்டப்பெறுகின்றது. இந்த 'வியன்பெரு வையத்தின் காட்சி' பிறிதோரிடத்திலும் நன்கு காட்டப் பெறுகின்றது.[50]

'எல்லாம் சக்திமயம்' என்ற கருத்து வேறொரு கோணத்திலும் காட்டப் பெறுகின்றது.

துன்ப மிலாத நிலையே சக்தி
தூக்க மிலாக்கண் விழிப்பே சக்தி
அன்பு கனிந்த கனிவே சக்தி
ஆண்மை நிறைந்த நிறைவே சக்தி;
இன்ப முதிர்ந்த முதிர்வே சக்தி,
எண்ணத் திருக்கும் எரியே சக்தி;
முன்புநிற் கின்ற தொழிலே சக்தி,
முக்தி நிலையின் முடிவே சக்தி.[51]

இதனைத் தொடர்ந்து வரும் பாடல்களிலும் சக்தியின் பரிணாமம் பல்வேறு விதமாகக் காட்டப்பெறுகின்றது. முத்தாய்ப்பாக,

வீழ்வு தடுக்கும் விறலே சக்தி,
விண்ணை யளக்கும் விரிவே சக்தி;
ஊழ்வினை நீக்கும் உயர்வே சக்தி,
உள்ளத் தொளிரும் விளக்கே சக்தி.

என்று கூறிக் களிக்கின்றார் கவிஞர். மேலும்,

பூதம் ஐந்தும் ஆனாய் — காளி!
பொறிகள் ஐந்தும் ஆனாய்;

49. தோ. பா. 34. மஹா சக்தி வாழ்த்து — 1
50. ஷை: 42. கோமதியின் மகிமை — 5, 6
51. ஷை: 21. சக்தி—1

போத மாகி நின்றாய் — காளி !
பொறியை விஞ்சி நின்றாய் [52]

என்று அன்னை இந்திரியங்களாகவும் நிற்கின்றாள், அவற்றைக் கடந்தும் நிற்கின்றாள் என்று காட்டுவர்.

எல்லாத் தொழில்களும் செயல்களும் சக்தி தேவியின் அருளால் தான் நடைபெறுகின்றன என்று நம்புபவர் பாரதியார்.

செய்யுங் கவிதை பராசக்தி
யாலே செயப்படுங்காண் [53]

என்று தாம் படைக்கும் கவிதைகளும் அன்னை பராசக்தியின் அருளால்தான் வெளிவருகின்றன என்று கூறுவதைக் காண்க. பிறிதோர் இடத்திலும்,

பாட்டினிலே சொல்லுவதும் அவள்சொல் லாகும்!
பயனின்றி உரைப்பாளோ? பாராய்! நெஞ்சே! [54]

என்று இக்கருத்தினையே மீண்டும் உரைப்பதைக் காணலாம். எனவே, பாடுவதும் அவள் அருளே என்று உணர்ந்த கவிஞர்,

பாட்டுத் திறத்தாலே — இவ்வையத்தைப்
பாலித் திடவேணும். [55]

என்று தம் ‘பேராசையை’ வெளியிடுகின்றார். பராசக்தியைத் தமிழ்வாணியாகப் பாவித்து,

வெள்ளை மலர்மிசை வேதக் கருப்பொரு
ளாக விளங்கிடுவாய்!
தெள்ளு கலைத்தமிழ் வாணி நினக்கொரு
விண்ணப்பஞ் செய்திடுவேன்;
எள்ளத் தனைப்பொழு தும்பய னின்றி
இராதென் றன் நாவினிலே
வெள்ள மெனப்பொழி வாய்சக்தி வேல்,சக்தி
வேல், சக்திவேல், சக்தி வேல் [56]

என்று வேண்டுகின்றார். இன்னும், — சுவை

நண்ணும் பாட்டினொடு தாளம் — மிக
நன்றா வுளத்தழுந்தல் வேண்டும் — பல

52. தோ. பா. : 30 காளிப்பாட்டு—1
53. வி. நா. மா— 26
54. ஷை : 27. பேதை நெஞ்சே.
55. ஷை : 10. காணிநிலம் — 3.
56. ஷை : 18. ஓம் சக்தி,

பண்ணிற் கோடிவகை இன்பம் — நான்
பாடத் திறனடைதல் வேண்டும்.[57]

என்று தான் பாடும் பாடல் செவ்வனே அமைதல் வேண்டும் என்று விழைகின்றார். அப்படி அமைய அன்னையின் அருளை வேண்டி நிற்கின்றார்.

எந்த நாளும் நின்மேல் — தாயே!
இசைகள் பாடி வாழ்வேன்.[58]

என்று தன் நினைவை வெளியிடுகின்றார். இன்னுமோரிடத்தில்,

நாட்டு மக்கள் நலமுற்று வாழவும்
நானி லத்தவர் மேனிலை எய்தவும்
பாட்டி லேதனி யின்பத்தை நாட்டவும்
பண்ணி லேகளி கூட்டவும் வேண்டி, நான்
மூட்டும் அன்புக் கனலொடு வாணியை
முன்னு கின்ற பொழுதி லெலாங்குரல்
காட்டி அன்னை பராசக்தி ஏழையேன்
கவிதை யாவுந் தனக்கெனக் கேட்கின்றாள்[59]

என்று தன் பாடல்களை யெல்லாம் பராசக்தி கேட்பதாகக் கூறுகின்றார்.

சக்தி வழிபாடு இவர் மூச்சாக அமைகின்றது; அதுவே பேச்சாகக் கவிதையில் வழிந்தோடுகின்றது.

உயிரெனத் தோன்றி
உணர்வுகொண் டேவளர்ந்
தோங்கிடும் சக்தியை
ஓது கின்றோம்

பயிரினைக் காக்கும்
மழையென எங்களைப்
பாலித்து நித்தம்
வளர்க்க வென்றே.[60]

என்று 'வையமுழுதும் படைத்தளிக்கின்ற' அன்னை பராசக்தியை வாழ்த்துகின்றார். பிறிதோரிடத்தில்,

57. ஷை : 32—யோகசித்தி—7
58. ஷை : 31 காளி ஸ்தோத்திரம் — 2
59. ஷை : 19 பராசக்தி — 3.
60. ஷை : 22 வையமுழுதும் — 4

அம்புக்கும் தீக்கும் விடத்துக்கும் நோவுக்கும்
அச்சமில் லாதபடி
உம்பர்க்கும் இம்பர்க்கும் வாழ்வு தரும்பதம்
ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்.[61]

என்று பராசக்தியின்மீது தாம் கொண்டுள்ள நம்பிக்கையைத் — மன உறுதியைத் தெளிவாக்குகின்றார்.

தன் உடல் பொருள் ஆவியனைத்தையும் சக்தி தேவிக்கே சமர்ப்பணமாக்கிவிடுகின்றார்.[62] இன்னொரு பாடலில்,[63]

சக்திசக்தி வாழி என்றால்
சம்பத் தெல்லாம் நேராகும்;
சக்தி சக்தி என்றால் சக்தி
தாசன் என்றே பேராகும்.

என்று சக்தி தேவியை வாழ்த்தி, தன்னைச் 'சக்திதாசன்' என்று கூறிக்கொள்ளுகின்றார். பிறிதொரு பாடலில்[64] சக்தியையும் தன்னையும் ஐக்கியப்படுத்திக்கொள்ளுகின்றார்.

இன்ப மாகி விட்டாய் — காளி !
என்னுளே புகுந்தாய்!
பின்பு நின்னை யல்லால் — காளி!
பிறிது நானும் உண்டோ ?

என்ற பாடலில் இக்கருத்தினைக் காணலாம். இது,

உன்னைக் கொண்டு என்னுள் வைத்தேன்;
என்னையும் உன்னில் இட்டேன்.[65]

என்ற பெரியாழ்வார் வாக்கையும்,

புவியும் இருவிசும்பும் நின்அகத்த ; நீஎன்
செவியின் வழிபுகுந்து என்உள்ளாய் அவிவு இன்றி
யான்பெரியன் நீபெரியை என்பதனை யார் அறிவார்?[66]"

என்ற நம்மாழ்வார் வாக்கையும்,

தந்ததுன் றன்னைக் கொண்ட தென்றன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்?

61. ஷை : 18 ஓம் சக்தி — 3
62. ஷை : 24 சக்திக்கு ஆத்ம சமர்ப்பணம்
63. ஷை : 25 சக்தி திருப்புகழ் — 9
64. ஷை. 30. காளிப்பாட்டு
65. பெரியாழ். திரு. 5. 4 : 5
66. பெரி திருவந். 75

அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்?[67]

என்ற மணிவாசகப் பெருமானின் திருவாக்கையும் நினைவுகூரச் செய்துவிடுகின்றது.

இங்ஙனம் பல தெய்வங்களைப் பாடினாலும் எல்லாக் கடவுளர்களும் ஒரே பரம்பொருள் என்ற உணர்ச்சியை அடிநாதமாகக் கொண்டவர் என்பதற்கு அகச்சான்றுகள் உள்ளன. பாஞ்சாலி சபதத்தினுள் காப்பு பரப்பிரும்மத்தின் துதியாக அமைந்துவிடுகின்றது.

ஓமெனப் பெரியோர்கள் — என்றும்
ஓதுவ தாய்வினை மோதுவ தாய்
தீமைகள் மாய்ப்பது வாய் — துயர்
தேய்ப்பதுவாய் நலம்வாய்ப் பதுவாய்
நாமமும் உருவமும் அற்றே — மனம்
நாடரி தாய்ப்புத்தி தேடரிதாய்
ஆமெனும் பொருளனைத்தாய் — வெறும்
அறிவுடன் ஆனந்த இயல்புடைத்தாய்;
நின்றிடும் பிரும்மம் என்பார்; அந்த[68]
நிர்மலப் பொ...ை நினைந்திடுவேன்.

என்பது பிரும்மத்தைப்பற்றிய பாடல். "வடமொழியில் 'ஓம்' என்னும் சொல்லுக்கு 'ஆம்' என்றே பொருள். எவ்விடத்தும் 'இல்லை' யாதலின்றி 'ஆம்' என இருத்தல் பற்றியே, வேதம் பிரும்மத்திற்கு 'ஓம்' எனும் பெயர் கொடுக்கப்பட்டிருப்பதறிக" என்ற பாரதியாரின் குறிப்பு பிரும்மத்தை நன்கு விளக்குகின்றது. இன்னும் 'புதிய ஆத்திசூடி' என்ற பகுதியின் 'காப்பும்' பரம்பொருள் வாழ்த்தாகவே அமைகின்றது.

ஆத்திச் சூடி இளம்பிறை யணிந்து
மோனத் திருக்கு முழுவெண் மேனியான்
கருநிறங் கொண்டுபாற் கடல்மிசைக் கிடப்போன்
மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்
ஏசுவின் தந்தை யெனப்பல மதத்தினர்
உருவகத் தாலே உணர்ந்துண ராது
பலவகை யாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே; அதனியல் ஒளியுறு மறிவாம்;
அதனிலை கண்டார் அல்லலை அகற்றினார்.
அதனருள் வாழ்த்த அமரவாழ் வெய்துவோம்.[69]

67. திருவாசகம் — கோயிற்றிருப்பதிகம் — 10
68. பாச. 1. 1 : 1 (பிரும்மதுதி)
69. புதிய ஆத்திசூடி — காப்பு.

இதில் சிவன், திருமால், இஸ்லாமியரின் கடவுள், கிறித்தவரின் கடவுள் இவர்கள் யாவரும் ஒரே பரம்பொருள் என்று குறிப்பிடு வதைக் காணலாம். 'அறிவே தெய்வம்', 'பரசிவ வெள்ளம்', 'நான்'— என்றே பாடல்களிலும் பரம்பொருள் ஒன்றே என்ற கருத்தினைக் கண்டு மகிழலாம்.

பல்லாயிரம் பல்லாயிரம் கோடி
 கோடி யண்டங்கள்
எல்லாத் திசையிலு மோரெல்லை
 யில்லா வெளிவானிலே!
நில்லாது சுழன்றோட நியமம்
 செய்தருள் நாயகன்
சொல்லாலும் மனத்தாலுந் தொடரொ
 ணாத பெருஞ்சோதி.[70]

என்ற 'அல்லாவை'ப் பற்றிய இந்தப் பாடல் பரம்பொருளுக்கும் பரஞ்சோதிக்கும் — பொருந்துமாறு அமைந்துள்ளதைக் காணலாம்.

வேறு வழிபடு பொருள்கள்

மேற்குறிப்பிட்ட கடவுளர்களைத் தவிர பண்டையோர் மேற் கொண்ட நெறியையொட்டிப் பகலவன், திங்கள், தீ—முதலியவற்றை யும் வழிபடு பொருளாகக் கொள்கின்றார் கவிஞர். இவற்றையும் காண்போம்.

பகலவன் : கதிரவனைப் பற்றி மூன்று பாடல்கள் காணப்படு கின்றன. திருமறைகளும், முனிவர்களும் இவர்களைத் தொடர்ந்து தூமொழிப் புலவர்களும் கதிரவனைப் பெருமையுடன் போற்று வதைச் சிந்திக்கின்றார்.

பரிதி யே!பொருள் யாவிற்கும் முதலே!
 பானுவே! பொன்செய் பேரொளித் திரளே!

என்கின்றார். 'ஆதவனே ஆற்றலனைத்திற்கும் மூலம்' (The sun is the ultimate source of energy) என்ற இக்கால அறிவியல் உண்மையையும் சிந்தித்துப் 'பொருள் யாவிற்கும் முதலே' என் கின்றார்.[71] நம் முன்னோர்கள் காலையில் எழுந்தவுடன் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு கதிரவனை வணங்குவதைக் காண் கின்றோம். கற்றோரும் கல்லாதோரும். இவ்வணக்கத்தை மேற் கொண்டு வருவதை இன்றும் காண்கின்றோம். "சூரிய நமஸ்காரம்" என்ற ஒரு உடற்பயிற்சி முறையும் நடைமுறையில் இருந்து வரு வதையும் பார்க்கின்றோம். இவற்றையெல்லாம் நினைந்து,

70. தோ. பா : 78. அல்லா — 1.
71. இதன் விளக்கத்தை 'பொங்கலும் ஆணுவும்' என்ற கட்டுரையில் (அறிவியல் விருந்து, பாரி நிலையம், சென்னை—1) காண்க.

வேதம் பாடிய சோதியைக் கண்டு
வேள்விப் பாடல்கள் பாடுதற் குற்றேன்;
நாத வார்கட லின்னொலி யோடு
நற்ற மிழ்ச்சொல் இசையையும் சேர்ப்பேன்;
காத மாயிரம் ஓர்கணத் துள்ளே
கடுகி யோடும் கதிரினம் பாடி
ஆத வா!நினை வாழ்த்திட வந்தேன் ;
அணிகொள் வாண்முகம் காட்டுதி சற்றே [72]

என்று பாடி மகிழ்வதைக் காண்க. கதிரவனையன்றி,'கதிரினம்' என்று கதிரவ மண்டலத்திலுள்ள அனைத்தையும் நினைந்து பாடுவதால் நம்மனோர் மேற்கொண்டு வரும் 'நவக்கிரக வழிபாடு' இவர் சிந்தையிலிருந்து கொண்டு இங்ஙனம் பாடச் செய்ததோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

கதிரவன் எழுந்ததும் உறங்கிக் கிடந்த இயற்கையன்னையும் விழிக்கின்றாள். வானமெங்கும் படர்ந்து வரும் ஒளியினைக் கண்டு புட்கள் மகிழ்வுடன் பாடிக் களிக்கின்றன. கடலின்கண் உள்ள ஒவ்வொரு நுண்துளியிலும் கதிரவன் வடிவு காணப்படுவதால் கடல் கதிரவனைச சுருதி பாடி,எற்றும் திரைகளால் தாளம்போட்டுக் களிக்கின்றது. இதனைச் சிந்தித்த கவிஞர்,

என்ற னுள்ளங் கடலினைப் போல
எந்த நேரமும் நின்னடிக் கீழே
நின்று தன்னகத் தொவ்வோர் அணுவும்
நின்றன் சோதி நிறைந்தது வாகி
நன்று வாழ்ந்திடச் செய்குவை ஐயா!
ஞாயிற் றின்கண் ஒளிதருந் தேவா!
மன்று வானிடைக் கொண்டுல கெல்லாம்
வாழ நோக்கிடும் வள்ளிய தேவா! [73]

என்று தானும் கடலின் நிலையை அடைந்து மகிழ வேண்டும் என்று ஆதவனை வேண்டுகின்றார்; அந்நிலையைத் தனக்கு நல்குமாறு வேண்டி அவனை வணங்குகின்றார்.

காதல் கொண்டனை போலும் மண்மீதே
கண்பிறழ் வின்றி நோக்குகின் றாயே!
மாதர்ப் பூமியும் நின்மிசைக் காதல்
மண்டி னாள்,இதில் ஐயமொன் றில்லை.

---

72. தோ.பா : 69. சூரிய தரிசனம்—2
73. ௸. 70. ஞாயிறு வணக்கம்—2

சோதி கண்டு முகத்தில் இவட்கே
தோன்று கின்ற புதுநகை என்னே!
ஆதித் தாய்தந்தை நீவிர் உமக்கே
ஆயி ரந்தரம் அஞ்சலி செய்வேன்[73]

என்ற பாடலில் கதிரவனைக் காதலனாகவும், நிலமகளைக் காதலியாகவும் காண்கின்றார். இவர்களிருவரும் 'காதலன்—காதலி' தரிசனம் தந்து நிற்கின்றனர். இவர்களிருவரும் இணங்கி இணைந்து இயங்குவதனால்தான் இவ்வுலகிலுள்ள நிலைத்திணையும் இயங்குதிணையும் தோன்றி நிலை பெற்றுள்ளன. "செம்பொன்னை உருக்கி வார்த்தாலெனக் காட்சியளிக்கும் அந்திவான் செக்கரழகும், கொண்டல் கொண்டலாக ஓடும் புயலின் அழகும், அது பொழியும் மழையின் அழகும், அத்தண் புனல் மணற் கற்களை அரித்தோடும் அருவியின் அழகும், பச்சைப் பசேலெனப் பெருங்காட்சியளிக்கும் பொருள்களின் அழகும், அவைகளில் பச்சைப் பாம்பெனப் பின்னிக் கிடக்கும் பசுங்கொடிகளின் அழகும், அவைகளினின்றும் அரும்பியுள்ள நகை மலரின் அழகும்"[74] நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றன. கதிரவன் — நிலமகள் என்ற இவர்களிருவரும் கலந்து வாழும் வாழ்க்கையில் நாம் காணும் காட்சிகள் இவை.

மேற்குறிப்பிட்ட காட்சிகளில் பொதிந்து கிடக்கும் அறிவியல் உண்மைகளைக் காண்போம். 'ஆதவன்தான் அனைத்தாற்றல்களின் மூலம்' என்பதை மேலே குறிப்பிட்டோமல்லவா? அவற்றை ஈண்டு விளக்குவோம். ஒளிச்சேர்க்கை (Photo-synthesis) இயற்கையில் நடைபெறும் ஓர் அற்புத நிகழ்ச்சி. தாவரங்கள் காற்றிலுள்ள கரியமிலவாயு, வேர்களின்மூலம் பெறும் நீர் இவற்றை உட்கொண்டும், கதிரவன் ஒளிக் கதிர்களாகவும், வெப்பக் கதிர்களாகவும், உமிழும் ஆற்றலைத் துணைகொண்டும் (இதுதான் அணுவாற்றல் ; நீரிய உட்கருக்கள் பரிதிய உட்கருக்களாக மாறுங்கால் உண்டாவது) கார்போஹைட்ரேட்டுகள் போன்ற பொருள்களைச் சேமித்துவைக்கும் நிகழ்ச்சிதான் ஒளிச்சேர்க்கை என்பது. தாவரங்கள் கதிரவனின் ஒளியைக்கொண்டே வாழ்கின்றன என்பதை நாம் அறிவோம். அவை கதிரவனிடமிருந்து ஒளியையும் வெப்பத்தையும் நேரே விழுங்குகின்றன. இந்த உலகில் தாவரங்களைத் தவிர வேறு எந்தப் பொருள்களும் கதிரவனிடமிருந்து நேரடியாக ஆற்றலைப் பெறும் திறன் அடையவில்லை. மனிதன் உட்பட விலங்கு, பறவை முதலிய

73. ஷை. ஷை—3.
74. திரு.வி.க: முருகன் அல்லது அழகு

பிராணிகள் யாவும் கதிரவன் காலும் வெப்பத்தையும் ஒளியையும் விழுங்காமல் அவற்றை விழுங்கிய தாவரங்களை விழுங்கிக் கதிரவனின் ஆற்றலைப் பெறுகின்றன. புலி, சிங்கம் போன்ற புலாலுண்ணும் விலங்குகளோ கதிரவனின் ஆற்றலை நேரே விழுங்குவதுமில்லை; தாவரங்கள் உண்டாக்கும் பொருள்களையும் விழுங்குவதில்லை. அவை பயிருண்ணும் விலங்குகளைக் கொன்று தின்று கதிரவனின் ஆற்றலைப் பெறுகின்றன. எனவே, இப்புவியிலுள்ள பிராணிகள் அனைத்தும் பகலோனிடமிருந்தே ஆற்றலைப் பெறுகின்றன என்பது வெள்ளிடை மலை. இக்கருத்துகள்யாவும் மேற்குறிப்பிட்ட பாடலில் அமைந்து கிடப்பதைக் கண்டு மகிழ்கின்றோம். இந்த அறிவியல் உண்மையை அநுபவமாகக் கண்ட இளங்கோவடிகள் தாம் இயற்றிய காவியத்தில் ஞாயிற்றினை மங்கல வாழ்த்துப் பாடலாகப் போற்றுகின்றார்; 'கைபுனைந்தியற்றாக் கவின்பெறு வனப்பில்' திளைத்த நக்கீரர் பெருமானும், கதிரவனை நினைந்து தம் திருமுருகாற்றுப்படையைத் தொடங்குகின்றார். இந்த அறிவியல் உண்மையை நிதர்சனமாகக் கண்ட பாரதியாரும் கதிரவனையும், நிலமகளையும் காதலன்—காதலியாகக் காண்கின்றார்.

மேலும், பாரதியார் கதிரவனை ஞானத்தின் உருவாகவும் காண்கின்றார். ஆதவனிடமிருந்துதான் அநுமான் எல்லாக் கலைகளையும் கற்றான் என்ற புராண வரலாறும் இதனைத்தான் கூறுகின்றது என்று கருதலாம். இதனால்தான் பாரதியார் கதிரவனை **ஞானபாநு** என்று போற்றுகின்றார். ஆதலால்தான்,

> பண்ணிய முயற்சி யெல்லாம்
> பயனுற வோங்கும், ஆங்கே
> எண்ணிய எண்ண மெல்லாம்
> எளிதிலே வெற்றி யெய்தும்;
> திண்ணிய கருத்தி னோடும்
> சிரித்திடு முகத்தி னோடும்
> நண்ணிடும் ஞான பாநு
> அதனைநாம் நன்கு போற்றின்.[75]

என்று ஆதவனை 'ஞானபாநு'வாகக் காண்கின்றார்.

தீ : ஐம்பெரும் பூதங்களில் நிலத்தைப் பூமி தேவி என்ற பெண்ணாகவும், காற்றை வாயு தேவனாகவும், தீயை அக்கினித் தேவனாகவும், நீரை வருணதேவனாகவும் உருவகித்துப் போற்றியுள்ளனர். தீ வழிபாட்டைப்பற்றித் திருமறைகள் பேசுகின்றன. பாரதியார் தீயை அறிவுக் கொப்பிட்டு அதனைப் போற்றுகின்றார். 'ஞானச் சுடர்'

75. தோ.பா : 71. ஞான பாநு—4

என்ற வழக்கினை எண்ணுக. பாரதியார் தீயைச் 'செங்கதிர் வானவன்' என்று உருவகிக்கின்றார். இவன் தீமையை அழிப்பவன் என்றும், நன்மைகள் பல நல்குபவன் என்றும், உருத்திரனின் அன்புத் திருமகன் என்றும் பேசுகின்றார். இந்த அறிவுத் தெய்வம் நெஞ்சின் கவலைகள், நோய்கள் இவற்றைப் போக்கி நீண்ட ஆயுளை அளிக்கும் என்றும் குறிப்பிடுகின்றார். இந்தத் தெய்வத்தைக் கூட்டாக வழிபடுவதற்கு மக்கட் கூட்டத்தை அழைக்கின்றார். வேள்வித் தீ பாரதியாரின் வழிபாட்டுக்குரியதாகின்றது. இராம லிங்க அடிகளின் "ஜோதி வழிபாடு" ஈண்டுச் சிந்தித்தற்குரியது.

அனைத்தையும் தேவர்க் காக்கி
  அறத்தொழில் செய்யும் மேலோர்
மனத்திலே சக்தி யாக
  வளர்வது நெருப்புத் தெய்வம்
தினத்தொளி ஞானம் கண்டீர்
  இரண்டுமே சேர்ந்தால் வானோர்
இனத்திலே கூடி வாழ்வர்
  மனிதரென் றிசைக்கும் வேதம்[76]

என்று கவிஞர் 'நெருப்புத் தெய்வம்' மனிதர்களைத் தேவர்களாக்கு வதைக் காட்டுவர். ஆண்டவனைப் 'பரஞ்சோதி' என்று சமயச் சான்றோர்கள் குறிப்பிடுவதையும் ஈண்டுச் சிந்தித்தல் தகும்.

iii. இறைவனை அடையும் நெறிகள்

இனி இறைவனை அடைவதற்குப் பாரதியார் காட்டும் நெறி களைச் சிந்திப்போம்.

சரணாகதி நெறி : சமயச் சான்றோர்கள் காட்டிய சரணாகதி தத்துவம் பாரதியாரையும் ஆட்கொண்டு விடுகின்றது. கவிஞர் பரா சக்தியைச் சரணம் அடைகின்றார். ஒரு பாடலில்,

தேசுறு நீல நிறத்தினாள், அறிவாய்ச்
  சிந்தையிற் குலவிடு திறத்தாள்;
வீசுறுங் காற்றில் நெருப்பினில் வெளியில்
  விளங்குவாள் தனைச்சரண் புகுந்தேன்.[77]

என்று அன்னையிடம் சரண் புகுவதைக் காண்க. முத்துமாரியும், தேச முத்துமாரியும் பராசக்தியின் வேறு வடிவங்கள். இதனை நன் குணர்ந்த கவிஞர்,

உலகத்து நாயகியே!—எங்கள் முத்து
  மாரியம்மா! எங்கள் முத்துமாரி!

---

76. ஷை : 71. ஞானபாநு—3
77. ஷை : 33. மகாசக்தி பஞ்சகம்—3

உன்பாதம் சரண்புகுந்தோம்,—எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி![78]

என்று முத்துமாரிக்கும்,

தேடியுனைச் சரணடைந்தேன் தேச முத்துமாரி!
கேடதனை நீக்கிடுவாய், கேட்டவரந் தருவாய்
பாடியுனைச் சரணடைந்தேன், பாசமெல்லாம் களைவாய்;
கோடிநலஞ் செய்திடுவாய், குறைகளெல்லாம் தீர்ப்பாய்[79]

என்று தேசமுத்து மாரிக்கும் சரண் புகுவதைக் கண்டு மகிழலாம். இதே பாடலில் இச்சரணாகதி தத்துவத்தை,

நம்பினோர் கெடுவதில்லை; நான்குமறைத் தீர்ப்பு;
அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிகவரம் பெறலாம்.

என்று மீண்டும் வலியுறுத்துவதைக் கண்டு மகிழ்க.

பக்தி நெறி : வைணவ தத்துவத்தில் முடிந்த முடிபாக, எளிய வழியாக, மேற்கொள்ளப்பெறுவது பிரபத்தி நெறி (சரணாகதி மார்க்கம்) என்பதை நாம் அறிவோம். எனினும், சற்றுக் கடினமாக வுள்ள பக்தி நெறியும் அங்கு மேற்கொள்ளப்பெறுகின்றது. இது போலவே பாரதியாரும் சரணாகதி தத்துவமேயன்றி பக்தி என்ற ஒரு வழியினையும் குறிப்பிடுகின்றார். "பக்தி"[80]யென்ற பாடலொன்றில் பக்தியினால் பாரினில் எய்திடும் மேன்மைகளைப் பட்டியலிட்டுக் காட்டுகின்றார். பக்தியினால் சித்தம் தெளியும்; செய்கையனைத் திலும் செம்மை பிறந்திடும்; வித்தைகள் சேரும்; மனத்திடைத் தத்துவம் உண்டாகும்; நெஞ்சில் சஞ்சலம் நீங்கி உறுதி விளங் கிடும். பக்தியினால் காமப் பிசாசு, தாமதப் பேய், தேம்பல் பிசாசு ஆகியவற்றை யெல்லாம் வெருட்டி அனுப்பிவிடலாம்; பக்தி வளர்வதால் ஆசைகள் அழியும்; அச்சம் அகலும்; பாசம் அறுக்கப்பெறும்; சோர்வுகள் போகும்; பொய்ச் சுகம் அகன்று மெய்ச் சுகம் பெற வழி அமையும்; பல செல்வங்கள் வளர்ந்து மகிழ்ச்சி விளைந்திடும்; பிணிகள் தீர்ந்து இன்பங்கள் சேர்ந்திடும். ஒருவரிடம் பக்தி இடம் பெற்றால் அவரிடம் கல்வி வளரும்; பல காரியங்கள் கைகூடும்; வீரியம் ஓங்கிடும்; அல்லல் போம்; வல்வினை போம்; நல்ல ஆண்மை உண்டாகும்; அறிவில் பளிங்கு போன்ற ஒரு வகைத் தெளிவு பிறக்கும்; சொல்லுவதெல்லாம் திருமறைச் சொல்லினைப்போல் பயன் உள்ளதாகும்; சோம்பல் அழியும்; உடல் சொன்னபடி இயங்கிடும்;

78. ஷை. 40. முத்துமாரி—1
79. ஷை. 41. தேச முத்துமாரி—1,2
80. வே. பா. 15. பக்தி

வீம்புகள் மறையும் ; நல்ல மேன்மைகள் உண்டாகிப் புயங்கள் பருக்கும், அதாவது எதிலும் துணிவு பிறக்கும். தெய்வ பக்தியினால்,

சந்ததி வாழும்—வெறுஞ்
சஞ்சலங் கெட்டு வலிமைகள் சேர்ந்திடும்
'இந்தப் புவிக்கே—இங்கோர்
ஈசனுண் டாயின் அறிக்கையிட் டேனுன்றன்
கந்தமலர்த்தாள்—துணை ;
காதல் மகவு வளர்ந்திட வேண்டும், என்
சிந்தை யறிந்தே—அருள்
செய்திட வேண்டும்'என் றால்அருள் எய்திடும்

என்று வலியுறுத்திக் கூறுவர். பக்தியுடையவர்களின் தன்மையை யும் அவர்கள் பயனடையும் முறையினையும்,

பக்தி யுடையார் காரியத்தில்
பதறார் ! மிகுந்த பொறுமையுடன்
வித்து முளைக்குந் தன்மைபோல்
மெல்லச் செய்து பயனடைவர்.[81]

என்ற பாடலில் தெளிவாக விளக்குவதைக் காணலாம் ; நம் அநுபவமும் இப்படியிருப்பதை உணர்ந்து மகிழலாம். இன்னொரு பாடலில்;

சக்தி பதமே சரணென்று நாம்புகுந்து
பக்தி யினாற்பாடிப் பலகாலும்—முக்தி நிலை
காண்போம்.[82]

என்று சரணாகதியும் பக்தி நிலையைக் காணும் வழிகளாகும் என்று வலியுறுத்துவர்.

யோகமா ? தவமா ? : எது முத்திக்குச் சிறந்த வழி என்பது பற்றிச் சில அறிஞர்கள் மண்டையையுடைத்துக் கொள்ளுகின்றனர். இதுபற்றிப் பாரதியார் பல்வேறு வினாக்களை எழுப்புகின்றார், அழகு தெய்வத்தினிடம். இறுதியில் இரண்டும் ஒன்றே என்று முடிவு கட்டுகின்றார்[83]. அன்புடைய வாழ்க்கைதான் அனைத்தையும் நல்கும் என்பது பாரதியாரின் அதிராக் கொள்கை.

துன்ப நினைவுகளும் சோர்வும்
பயமு மெல்லாம்

81. ஷை வி. நா. மா—27
82. தோ. பா. 66. விடுதலை வெண்பா—1
83. த. பா. 9 அழகுத் தெய்வம்

அன்பில் அழியுமடீ !—கிளியே
அன்புக் கழிவில்லை காண்.[84]

என்று கூறுவதைக் காண்க. பிறிதோர் இடத்தில்,

தின்ன வரும்புலி தன்னையும் அன்பொடு
சிந்தையிற் போற்றிடுவாய்—நன்னெஞ்சே !
அன்னை பராசக்தி யவ்வுரு வாயினள்
அவளைக் கும்பிடுவாய்—நன்னெஞ்சே ![85]

என்று அன்பை வற்புறுத்துவதைக் காணலாம். இன்னுமோர் இடத்தில்,

ஊனுடலை வருத்தாதீர் ; உணவியற்கை கொடுக்கும்
உங்களுக்குத் தொழிலிங்கே அன்புசெய்தல் கண்டீர்![86]

என்று அன்பு செய்தலை மீண்டும் வற்புறுத்துவதைக் கண்டு மகிழலாம். பிறிதோரிடத்தில்,

அன்பிற் சிறந்த தவமில்லை, அன்புடையார்
இன்புற்று வாழ்தல் இயல்பு.[87]

என்று அன்பே சிறந்த தவம் என்பதை வலியுறுத்துவதைக் காணலாம் ; நம் அநுபவத்தாலும் உணரலாம்.

iv. இவர் காட்டும் சமய சமரசம்

சமயச் சான்றோர்களுள் தாயுமான அடிகள், இராமலிங்க அடிகள் இவர்களே சமயங்களுள் ஒரு சமரச நிலையை நிலை நாட்ட முற்பட்டவர்கள். சமயச் சான்றோர் வரிசையில் வைத்து எண்ணப்படாவிட்டாலும் மேற்கூறிய இரு பெரியார்களை அடுத்து, சமயங்களுள் ஒரு சமரச நிலையை ஏற்படுத்த முயன்றவர் பாரதியார் என்று மதிப்பிடுவதில் தவறில்லை.

எல்லாச் சமயங்கள் கூறும் மந்திரமொழிகள் யாவும் ஒரு பொருளையே குறிக்கும் என்பது பாரதியாரின் தெளிந்த ஞானமாகும். இதனைக் கோவிந்தசாமியின் வாக்காக வெளியிடுகின்றார் கவிஞர்.

ஒருமொழியே பலமொழிக்கும் இடங்கொடுக்கும்.
ஒருமொழியே மலமொழிக்கும் ஒழிக்கும் என்ற
ஒருமொழியைக் கருத்தினிலே நிறுத்தும் வண்ணம்
ஒருமொழி 'ஓம்நமச் சிவாய' என்பர்;

84. தோ. பா. : 78 கிளிப் பாட்டு—3
85. வே. பா. 23 பகைவனுக் கருள்வாய் - 6
86. ஷை : 19. அன்பு செய்தல் - 2
87. தோ. பா : வி. நா. மா : 37

'ஹரிஹரி' என் றிடினும் அஃதே; 'ராம ராம'
'சிவசிவ' வென் றிட்டாலும் அஃதே யாகும்;
தெளிவுறவே 'ஓம்சக்தி' என்று மேலோர்;
ஜெபம்புரிவ தப்பொருளின் பெயரே யாகும்.[88]

இப்படி வற்புறுத்திக் கூறும் கோவிந்தசாமி பின்பும் பகர்வார்;

சாரமுள்ள பொருளினைநான் சொல்லி விட்டேன்.
சஞ்சலங்கள் இனிவேண்டா; சரதந் தெய்வம்.
ஈரமிலா நெஞ்சுடையார் சிவனைக் காணார்.
எப்போதும் அருளைமனத் திசைத்துக் கொள்வாய்;
வீரமிலா நெஞ்சுடையார் சிவனைக் காணார்;
எப்போதும் வீரமிக்க வினைகள் செய்வாய்
பேருயர்த்த ஏஹோவா அல்லா நாமம்
பேணுமவர் பதமலரும் பேணல் வேண்டும்.[89]

இப்பாடலில் எல்லாச் சமயங்களும் குறிப்பிடும் 'அடியார் வணக்கத்தை' வலியுறுத்திப் பேசுவதைக் காணலாம்.

எல்லாச் சமயங்களும் கொண்டுள்ள கருத்து ஒன்றே யாகும் என்பதை;

பூமியிலே கண்டம்ஐந்து மதங்கள் கோடி!
புத்தமதம் சமணமதம் பார்ஸி மார்க்கம்,
சாமியென யேசுபதம் போற்றும் மார்க்கம்
சனாதனமாம் இந்துமதம், இஸ்லாம், யூதம்;
நாமமுயர் சீனத்துத் 'தாவு' மார்க்கம்,
நல்ல'கண் பூசி' மதம் முதலாம் பார்மேல்
யாமறிந்த மதங்கள்பல உளவாம் அன்றே;
யாவினுக்கும் உட்புதைந்த கருத்திங் கொன்றே.[90]

என்று வேற்றுமையில் ஒற்றுமையை உணர்த்துகின்றார். அடுத்து நாம் திடசித்தமாக இருக்கவேண்டும் என்பதை,

பூமியிலே வழங்கிவரும் மதத்துக் கெல்லாம்
பொருளினைநாம் இங்கெடுத்துப் புகலக் கேளாய்;
சாமிநீ; சாமிநீ; கடவுள் நீயே;
தத்வமஸி; தத்வமஸி நீயே அஃதாம்;

---

88. பாரதி அறுபத்தாறு - 63;
89. ஷை - 64.
90. ஷை. 65.

பூமியிலே நீகடவுள் இல்லை யென்று
புகல்வதுநின் மனத்துள்ளே புகுந்த மாயை;
சாமிநீ அம்மாயை தன்னை நீக்கிச்
சதாகாலம் 'சிவாஹோ' மென்று சாதிப் பாயே.[91]

என்ற பாடலில் வலியுறுத்துவதைக் காணலாம். இதில் சர்வ சமய சமரசத்தை நிலை நாட்டுவதையும் கண்டு மகிழலாம்.

இவற்றையெல்லாம் ஆழ்ந்து சிந்தித்தால்,

வேறுபடும் சமயமெல்லாம் புகுந்து பார்க்கின்
விளங்குபரம் பொருளே!நின் விளையாட் டல்லால்
மாறுபடும் கருத்தில்லை, முடிவில்; மோன
வாரிதியின் நதித்திரள்போல் வயங்கிற் றம்மா![92]

என்ற தாயுமான அடிகளின் கருத்து நம் கவிஞரின் கருத்திற்கு அடிப் படையாக இருப்பதைக் கண்டு மகிழலாம்.

91. ஷை. 66.
92. தாயுமான சுவாமிகள்பாடல் - 630.

4. இயற்கை எழில்

இயற்கைப் பொருள்கள் இன்பமயமான சமாதியில் அடங்கிக் கிடக்கின்றன. அந்த அமைதி நிலைக்குக் குந்தகம் விளையாமல் - அந்த நிலையைக் கலைக்காமல் - அதனுடன் கலந்து கொள்ளும் இன்பம் உடையவனே கவிஞன். அவன் இயற்கையோடு பழகும் — தோய்ந்து நிற்கும் — அநுபவம் வாய்ந்தவன். இயற்கையுடன் அவன் ஒன்றி நிற்கும் நிலையே தனிப் பெருமை வாய்ந்தது. உறங்குகின்ற குழந்தையைத் தாய் அணைவதைக் கண்டுள்ளோம் அன்றோ? தாய் குழந்தையை மார்போடு சேர்த்தே தழுவிக் கொள்வாள். என்றாலும், அவ்வாறு அணைவதில் குழந்தையின் துயில் கெடுவதில்லை; அடுத்த கணத்தில் அவளும் தன்னை மறந்து உறங்கி விடுவாள். அவ்விதமே கவிஞனும் இயற்கையை அதன் இன்ப அமைதி கெடாமல் — கலையாமல் — குலையாமல் — தழுவுவான்; தன்னையும் உடனே மறந்து விடுவான்; இன்பப் பெருக்கில் மிதப்பான். அதிலிருந்து வெளி வந்தவுடன் இன்ப வெறி பிடித்தவன்போல் சில சமயம் பாடுவான்; சில சமயம் ஆடுவான். இவையெல்லாம் கலைகளாகின்றன. அவன் அநுபவித்த இன்பப் பெருக்கில் ஒன்றிரண்டு திவலைகள் அவன் பாடிய பாட்டிலும், ஆடிய கூத்திலும் அமைகின்றன. அதைப் பார்த்தே நாம் உயர்ந்த கவிதைகள், கலைகள் என்று உள்ளம் பூரித்துக் கொண்டாடுகின்றோம்.

பாரதியார் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் பிறந்து இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கவிதை ஒளியுடன் திகழ்ந்தவர். 'பாட்டுக்கொரு புலவன் பாரதியடா!' என்று பட்டிக் காட்டான் ஒருவன் வாயில் வைத்து கவிமணியால் பாராட்டப் பெற்றவர்.[1]

பாட்டுத் திறத்தாலே — இவ்வையத்தைப்
பாலித்திட வேணும்[2]

என்ற பேரவாக் கொண்டவர். பராசக்தியின் படைப்பால் தன்னை வீணையாகக் கருதியவர்.

நல்லதோர் வீணைசெய்தே — அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?[3]

என்று பராசக்தியை வினவியவர், தம் புலமையைக் கவிதைகள் படைப்பதிலேயே பயன்படச் செய்ய வேண்டும் என்று விழுமிய

---

1. கவிமணி: மலரும் மாலையும் — 'பட்டிக்காட்டானும் பாரதியும்'—1
2. காணி நிலம் — 3
3. நல்லதோர் வீணை—1

நோக்கத்தைக் கொண்டவர். 'நமக்குத் தொழில் கவிதை'[4] என்று விநாயகப் பெருமானிடம் கூறி,

'என் நாவிற் பழுத்த சுவைத்
தெண்டமிழ்ப் பாடல் ஒருகோடி
மேவிடச் செய்குவையே [5]

என்று அம்பெருமானை வேண்டியவர்.

'என்சொலால் யான்சொன்ன
இன்கவி என்பித்து
தன்சொலால் தான்தன்னைக்
கீர்த்தித்த மாயன் [6]

என்று நம்மாழ்வார் எம்பெருமான் தன்னுள் இருந்து தன்னைக் கருவி யாகக் கொண்டு தன்னையே புகழ்ந்து பாடிக் கொண்டான் என்று கருதுவதைப் போலவே பாரதியாரும்,

பாட்டினிலே சொல்லுவதும்
அவள்சொல் லாகும் [7]

என்று தாம் பாடுவதெல்லாம் பராசக்தியின் வாக்காகும்-தன்னுள் இருந்து அவளே பாடுகின்றாள் - என்று அதிராக் கொள்கையை யுடையவர்.

" சுவை புதிது, பொருள் புதிது, வளம் புதிது
சொற் புதிது சோதி மிக்க
நவகவிதை'' [8]

என்று பாராட்டத்தக்க கவிதைகளைப் படைத்தவர். இத்தகைய புலமை நலம் படைத்த கவிஞரை இயற்கை எழில் எவ்வாறு கவர்ந்தது என்பதைக் காண்போம்.

இயற்கை ஒரு பல்லுருவம் காட்டி : இயற்கை ஒரு பல்லுருவங் காட்டி (Kaleidoscope) என்பதை ஓரிடத்தில் ஒருசேரக் காட்டி அதன் பல்வேறு கோலங்களில் தம் நெஞ்சைப் பறிகொடுத்ததை இங்ஙனம் காட்டுவார் :

கானப் பறவை கலகலெனும் ஓசையிலும்,
காற்று மரங்களிடைக் காட்டும் இசைகளிலும்,
ஆற்றுநீ ரோசை அருவி ஒலியினிலும்,
நீலப் பெருங்கடல்எந் நேரமுமே தானிசைக்கும்;
ஓலத் திடையே உதிக்கும் இசையினிலும்,

4. வி.நா.மா. 25
5. ஷை — 30
6. திருவாய் 7.9:2
7. தோ.பா. 27 பேதை நெஞ்சே—5
8. த.பா .வேங்கடேசு ரெட்டப்ப பூபதி—2-(3)

மானுடப் பெண்கள் வளருமொரு காதலினால்,
ஊனுருகப் பாடுவதில் ஊறிடுந்தேன் வாரியிலும்,
ஏற்றநீர்ப் பாட்டின் இசையினிலும் நெல்லிடிக்கும்,
கோற்றொடியார் குக்குவெனக் கொஞ்சும் ஒலியினிலும்,
சுண்ண மிடிப்பார்தஞ் சுவைமிகுந்த பண்களிலும்,
பண்ணை மடவார் பழகுபல பாட்டினிலும்,
வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்கக்
கொட்டி யிசைத்திடுமோர் கூட்டமுதப் பாட்டினிலும்,
வேயின் குழலோடு வீணைமுத லாம்மனிதர்,
வாயினிலும் கையாலும் வாசிக்கும் பல்கருவி
நாட்டினிலும் காட்டினிலும் நாளெல்லாம் நன்றொலிக்கும்,
பாட்டினிலும், நெஞ்சைப் பறிகொடுத்தேன்.[9]

என்று இயற்கையில் தம் மனம் தோயும் நிலையைக் காட்டுவார்; இதில் கவிஞரின் மனம் பூரிப்படைவதைக் காண்கின்றோம்; இப்பகுதியைப் படிக்கும்போதே நம் மனமும் விம்மி மகிழ்வதையும் உணர்கின்றோம்.

காவியங்களைப் படைப்போருக்கு இயற்கையைப் புனைந்து பாட நல்ல வாய்ப்புகள் ஏற்படும். அல்லது ஆங்கிலக் கவிஞர் வொர்ட்ஸ் வொர்த்தைப் போலவும், பாவேந்தர் பாரதிதாசனைப் போலவும் அழகு, தென்றல், மயில், குயில், கிளி என்பன போன்று பல தலைப்புகளில் பாடுவோரும் இத்தகைய வாய்ப்புகளைத் தக்க முறையில் பயன் படுத்திக் கொள்ளலாம். நாட்டு விடுதலை, தெய்வங்கள் முதலியனபற்றித் தனிப் பாடல்கள் பாடிய நம் புதுமைக் கவிஞர் தாம் பாடியுள்ள வேறு பாடல்களில் — ஏன் தெய்வப் பாடல்களில் கூட - இயற்கைப் புனைவுக்குத் தக்க இடங்களை நல்கியுள்ளதை இவர்தம் பாடல்களைப் படித்து நுகர்வோர் நன்கு அறியலாம். உண்மைக் கருத்தை விளக்குபவனே சிறந்த கவிஞன் ; இக்கருத்தைத் தன் கற்பனையால் வேதியியல் மாற்றம் போன்ற ஒரு வித மாற்றம் செய்து—அதாவது 'இரசவாதம்' செய்து— தந்தால் அவன் ஒப்பற்ற கவிஞனாகின்றான். தான் காணும் பார்வையையே தன் கவிதைகளைப் படிப்போரையும் காணுமாறு செய்யவல்ல கவிஞனே உண்மைக் கவிஞனாகின்றான். இக்கவிஞன் உயர்ந்த மெய் விளக்கக் கருத்துகளையும் இலைமறை காய்கள்போல் தோன்றச் செய்து தன் கவிதைகளின் தரத்தை உயர்த்தி விடுகின்றான். இந்த அடிப்படையில் பாரதியாரின் பாடல்களை நோக்க வேண்டும் ; அவர் பெற்ற அநுபவத்தையே நாமும் பெற முயல வேண்டும்.

9. கு. பா.—3. குயிலின் காதற்கதை அடி (28—44)

அகிலநோக்கு (Cosmic vision) : பாரதியாரின் அகில நோக்கில் இயற்கை அன்னையின் கோலம் தென்படுகின்றது. அகிலத்தையே பராசக்தி வடிவாகக் காண்கின்றார் கவிஞர்.

மாதா பராசக்தி
வையமெல்லாம் நீ நிறைந்தாய்[10]

என்கின்றார். இராமனைப்பற்றிய பாட்டொன்றில்,

ஆகாசந் தீகால் நீர் மண்
அத்தனை பூதமும் ஒத்து நிறைந்தாய்[11]

என்று அகிலத்தை ஒரு 'விசுவரூப தரிசனம்' போல் காட்டுகின்றார். இன்னோர் இடத்தில்,

விண்டு ரைக்க அறிய அரிதாய்
விரிந்த வானவெளியென —நின்றனை
அண்ட கோடிகள் வானில் அமைத்தனை;
அவற்றில் எண்ணற்ற வேகம் சமைத்தனை,
மண்ட லத்தை அணுவணு வாக்கினால்
வருவ தெத்தனை அத்தனை யோசனை
கொண்ட தூரம் அவற்றிடை வைத்தனை.[12]

என்று அகிலத்தின் (Universe) காட்சியைக் காட்டுவார்.

விண்வெளியில் அமைந்துள்ள கோடானு கோடி அண்டங்களைப் பிறிதொரு பாடலில் புலப்படுத்துவார்.

நக்க பிரானருளால்—இங்கு
நடைபெறும் உலகங்கள் கணக்கிலவாம் !
தொக்கன அண்டங்கள்—வளர்
தொகைபல கோடிபல் கோடிகளாம் !
இக்கணக் கெவரறிவார் ?—புவி
எத்தனை யுளதென்ப தியாரறிவார் !
நக்க பிரானறிவான் ;—மற்று
நானறி யேன்பிற நரரறியார் ;
தொக்க பேரண்டங்கள்—கொண்ட
தொகைக்கெல்லை யில்லையென்று சொல்லுகின்ற
தக்கபல் சாத்திரங்கள்—ஒளி
தருகின்ற வானமோர் கடல்போலாம் ;
அக்கட லதனுக்கே—எங்கும்
அக்கரை இக்கரை யொன்றில்லையாம்.

---

10. தோ. பா : நவராத்திரிப் பாட்டு—1
11. தோ. பா : சாகா வரம்—1
12. ஷ. மகா சக்தி வாழ்த்து—1

இக்கட லதனகத்தே—அங்கங்
கிடையிடைத் தோன்றும்புன் குமிழிகள்போல்
தொக்கன உலகங்கள் ; — திசைத்
தூவெளி யதனிடை விரைந்தோடும் ;
மிக்கதொர் வியப்புடைத்தாம்—இந்த
வியன்பெரு வையத்தின் காட்சி கண்டீர்[13]

கரைபோட்டு எல்லை காணா விண்வெளிக் கடலில் தோன்றும் புன் குமிழிகள்போல் எண்ணற்ற உலகங்கள் ஓய்வின்றி விரைந்தோடிக் கொண்டிருப்பதை அற்புதமாகக் காட்டுவார். இக்காட்சியைக் காணும் நமக்கு,

பவ்வநீர் உடைஆடை ஆகச் சுற்றி
பார்அகலம் திருவடியா, பவனம் மெய்யா,
செவ்விமா திரம்எட்டும் தோளா, அண்டம்
திருமுடியா நின்றான்[14]

என்று திருமங்கையாழ்வார் காட்டும் அகிலத்தின் உருவில் உள்ள எம்பெருமான் திருவுருவத்தையும்,

பாராதி விண்அனைத்தும் நீயாச், சிந்தை
பரியமட லாஎழுதிப் பார்த்துப் பார்த்து
'வாராயோ என்பிராண நாதா !' என்பேன்;[15]

என்று தாயுமான அடிகள் நாயகி நிலையில் இறைவனின் திரு உருவத்தை விண்வெளியாகக் காண்பதையும் நினைவுறுத்துகின்றார்.

இந்த விண்வெளிக் காட்சியை அநுபவித்து மகிழுமாறு மனத்திற்குக் கட்டளையிடுகின்றார் கவிஞர் :

நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்
நேர்பட வைத்தாங்கே
குலாவும் அமுதக் குழம்பைக் குடித்தொரு
கோல வெறிபடைத்தோம் ;
உலாவும் மனச்சிறு புள்ளினை எங்கணும்
ஓட்டி மகிழ்ந்திடுவோம்
பலாவின் கனிச்சுளை வண்டியில் ஓர் வண்டு
பாடுவ தும்வியப்போ ?[16]

என்ற கவிதைப்பகுதியில் இதனைக் கண்டு மகிழலாம். கண்ணுக் கெட்டுவதை மட்டிலும் இங்குக் காட்டுகின்றார். விமானத்தைப்போல்

13. ஷை கோமதி மகிசை—5, 6, 7
14. பெரி. திரு. 6. 6:3
15. தாயுமான அடிகள்—ஆகார புவனம்—24
16. த. பா. — நிலாவும் வான்மீனும் காற்றும்

நன்று திரியும் மனத்தைக் கொண்டிருக்கும் நாம் இவற்றை நன்கு அநுபவிக்க முடிகின்றது. இன்னோர் இசைப் பாட்டில்,

எத்தனை கோடி இன்பம்
வைத்தாய்! — எங்கள்
இறைவா! இறைவா!
இறைவா!

என்று மன்பதைக்கு இறைவன் தந்த இயற்கை இன்பங்களை நினைந்து போற்றுகின்றார். அந்த நினைப்பில் கவிஞருக்கு ஓர் எக்களிப்பு ஏற்படுகின்றது. 'இறைவா!' என்று மூன்று முறை விளித்து இன்ப வெறியில்—களிப்பில் — மூழ்கி விடுகின்றார்.

சித்தினை அசித்துடன் இணைத்தாய்; — அங்கு
சேரும் ஐம்பூதத்து வியனுலகு அமைத்தாய்;
அத்தனை உலகமும் வண்ணக் களஞ்சியம்
ஆகப் பலப்பலநல் அழகுகள் சமைத்தாய்.[17]

என்ற பாடற்பகுதியில் விசிட்டாத்வைத உண்மையையும் சிந்திக்க வைத்து விடுகின்றார்.[18]

ஞாயிறு : நம் நாட்டுக் கவிஞர்கள் 'இருசுடர் தோற்றத்தை' மிகவும் சிறப்பாகப் பாடியுள்ளனர். பாரதியாரும் அந்த மரபினை யொட்டியே பாடிப் போற்றியுள்ளார். எழுஞாயிற்றை நோக்கிப் பேசுகின்றார்:

சுருதி யின்கண் முனிவரும் பின்னே
தூமொ ழிப்புல வோர்பலர் தாமும்
பெரிது நின்றன் பெருமையென் றேத்தும்
பெற்றி கண்டுனை வாழ்த்திட வந்தேன்;
பரிதி யே!பொருள் யாவிற்கும் முதலே!
பானுவே! பொன்செய் பேரொளித் திரளே!
கருதி நின்னை வணங்கிட வந்தேன்;
கதிர்கொள் வாண்முகம் காட்டுதி சற்றே[19]

கதிரவனே ஆற்றலின் மூலமாதலால் (The Sun is the ultimate source of enery) நம் நாட்டுமரபினை யொட்டி அவனைக் கண்டு வணங்குகின்றார்.

---

17. தோ. மா; இறைவா! இறைவா!
18. சித்து (ஆன்மா), அசித்து (உயிரற்ற பொருள்), ஈசுவரன்— இவை விசிட்டாத்வைத தத்துவங்கள்.
19. தோ. பா : சூரியதரிசனம் — 1

கதிரவன் கடலின்மீது கதிர்களை வீசிக் கடுகி வானத்தின்மீது ஏறுகின்றான். வானத்தில் படரும் ஒளியினைக்கண்டு புள்ளினங்கள் பாடி மகிழ்கின்றன. பரந்து கிடக்கும் கடலும் தன்னுள்ளே உள்ள நுண்ணிய துளிகளை விழியாகக் கொண்டு சுடரும் பரிதியைக் கண்டு மகிழ்ந்து வேதத்தைப் பாடிப் புகழ்கின்றது. இங்ஙனமே கவிஞரும் பகலவனைக் கண்டு வாழ்த்துகின்றார். 'பகலவனே, நீ நிலமகள்மீது கண்களை விழித்து வைத்தகண் வாங்காமல் — கண் பிறழ்வின்றி — நோக்குகின்றாய். நீ அந்நில மடந்தைமீது காதல் கொண்டனை போலும்! நிலமகளும் நின்மீது மிகுந்த காதல் கொண்டுள்ளாள் என்பதில் ஐயமில்லை. நின்சோதி கண்டு அவள் முகத்தில் புது நகைதோன்றுகின்றது' என்று பகலவனுக்கும் பார்மகளுக்கும் உள்ள காதலைக் கற்பனையில் காண்கின்றார். பகலவனையும் பார் மகளையும் 'ஆதித்தாய் தந்தையர்களாகக்' கொள்ளுகின்றார்.

'வசனகவிதை'யில் ஞாயிற்றைப்பற்றிய புனைவு[20] அற்புதமாக அமைந்துள்ளது. இப்பகுதியிலுள்ள பதின்மூன்று பாடல்களும் சிந்தித்துப் படித்து நுகரத் தக்கவையாகும். இதில் ஒரு கவிதை,

> நீ ஒளி, நீ சுடர், நீ விளக்கம், நீ காட்சி
> மின்னல், இரத்தினம், கனல், தீக்கொழுந்து —
> இவையெல்லாம் நினது நிகழ்ச்சி.
> கண் நினது வீடு.
> புகழ், வீரம் — இவை நினது லீலை.
> அறிவு நின்குறி. அறிவின் குறி நீ.
> நீ சுடுகின்றாய், வாழ்க. நீ காட்டுகின்றாய், வாழ்க.
> உயிர் தருகின்றாய், உடல் தருகின்றாய்,
> வளர்க்கின்றாய், மாய்க்கின்றாய்,
> நீர் தருகின்றாய், காற்றை வீசுகின்றாய், வாழ்க.

இக்கவிதைகளில் கதிரவனுக்கும் வெப்பத்திற்கும், பகலவனுக்கும் இரவுக்கும், தினகரனுக்கும் ஒளிக்கும், ஒளிக்கும் வெம்மைக்கும், ஞாயிற்றுக்கும் அறிவுக்கும், ஞாயிற்றுக்கும் மழைக்கும் கவிஞரால் புனையப்பெற்ற கற்பனை அறிவியலின் அடிப்படையிலமைந்து படிப்போரிடம் அறிவொளி வீசி நிற்கின்றது. அடுத்து 'சக்தி'யைப் பற்றி வரும் வசன கவிதையில்,[21]

> சக்தி வெள்ளத்தில் ஞாயிறு ஓர் குமிழியாம்;
> சக்திப் பொய்கையில் ஞாயிறு ஒரு மலர்.

---

20. வசன கவிதை : இரண்டாம் கிளை — ஞாயிறு.
21. சக்தி — 1

என்று வரும் இரண்டு அடிகளில் அமைந்துள்ள கற்பனை அற்புதம்! அற்புதம்!!

விடியற் புனைவு : பாரதமாதா திருப்பள்ளி எழுச்சியில் விடியற் புனைவு காணப்படுகின்றது. திருவாசகம், திவ்வியப் பிரபந்தம் இவற்றில் காணப்பெறும் 'திருப்பள்ளி எழுச்சி'களை யொட்டியே இந்தப் பாடல்கள் அமைந்துள்ளன என்று கருதுவதற்கு இடம் உண்டு. மணிவாசகப் பெருமானும் தொண்டரடிப் பொடியாழ்வாரும் இறைவனைத் துயிலெழுப்புவதாகப் பாடியிருக்க, பாரதியார் பாரதமாதாவைத் துயிலெழுப்புவதாகத் தம் பாடல்களை அமைத்துள்ளார். 'நாம் செய்த மாதவத்தால் பொழுது புலர்ந்தது. புன்மை இருட்கணம் போயின. பசும்பொற்சுடர் எங்கணும் பரப்பி அறிவெனும் ஞாயிறு எழுந்தது (1) புள்ளினம் ஆர்த்தன. முரசுகள் முழங்கின. சுதந்திர நாதம் எங்கும் பொங்கியது. வெண் சங்கு ஒலி முழங்கியது. தெருவெல்லாம் மங்கையர் கூட்டம் குழுமியது. அந்தணர்கள் நான் மறை ஓதினர் (2) பகலவனின் பேரொளி வானிடைத் தவழ்ந்தது. (3) 'குயில்பாட்டின் தொடக்கத்திலும் விடியற்புனைவு அற்புதமாக அமைந்துள்ளது. 'காலையிளம்பரிதி தன் பசுங்கதிர்களை நீலக் கடலிடையே வீசுகின்றான். இதனால் கடல் நெருப்பெதிரே காணப் பெறும் நீலமணிபோல் ஒளி மிகுந்து கண்கவர் வனப்பாய்க் காட்சி தருகின்றது. கடலின் அலைகள் வேதப் பொருள்பாடிக் கரையைத் தழுவுகின்றன. இங்ஙனம் வளஞ்சார் கடற்கரையைக் கொண்டது புதுவைத் திருநகர்' என்கின்றார் கவிஞர்.

'வசனகவிதை'யிலும் வைகறைக் காட்சி வனப்புற அமைந்துள்ளது. கவிஞர் கூறுவார்:

> வைகறையின் செம்மை இனிது.
> மலர்கள்போல் நகைக்கும் உஷை வாழ்க.
> உஷையை நாங்கள் தொழுகின்றோம்.
> அவள் திரு.
> அவள் விழிப்புத் தருகிறாள், தெளிவு தருகிறாள்,
> உயிர் தருகிறாள், ஊக்கந் தருகிறாள்,
> அழகு தருகிறாள், கவிதை தருகிறாள்.
> அவள் வாழ்க.
> அவள் தேன், சித்தவண்டு அவளை விரும்புகின்றது.
> அவள் அமுதம்.
> ....
> வைகறை நன்று. அதனை வாழ்த்துகின்றோம்.[22]

22. வசனகவிதை — இரண்டாங்கிளை — 3

இதனைத் தொடர்ந்து 'புதுக்கவிதையாக' மலர்வதற்கு இஃது ஒரு விடியற்குறியீடு என்று கருதுவதில் தவறு இல்லை.

காலைப் புனைவு : குயில் பாட்டில் இப்புனைவு அதி அற்புதமாக அமைந்து பாடியவாய் தேனூறச் செய்கின்றது. எழு ஞாயிற்றின் எழில் இது.

தங்க முருக்கித் தழல்குறைத்துத் தேனாக்கி
எங்கும் பரப்பியதோர் இங்கிதமோ? வான் வெளியைச்
சோதி கவர்ந்து சுடர்மயமாம் விந்தையினை
ஓதிப் புகழ்வார் உவமையொன்று காண்பாரோ?
கண்ணையினி தென்றுரைப்பார்; கண்ணுக்குக் கண்ணாகி
விண்ணை அளக்குமொளி மேம்படுமோர் இன்பமன்றோ?
மூலத் தனிப்பொருளை மோனத்தே சிந்தை செய்யும்
மேலவரு மஃதோர் விரியுமொளி என்பாரேல்
நல்லொளிக்கு வேறுபொருள் ஞாலமிசை யொப்புளதோ?
புல்லை நகையுறுத்திப் பூவை வியப்பாக்கி
மண்ணைத் தெளிவாக்கி நீரில் மலர்ச்சிதந்து
விண்ணை வெளியாக்கி விந்தைசெயுஞ் சோதியினைக்
காலைப் பொழுதினிலே கண்விழித்து நான்தொழுதேன்.[23]

நாமும்தான் நாள்தோறும் காலை நேரத்தைக் காண்கின்றோம். கவிஞரின் இந்த அநுபவத்தைப் பெறமுடிகின்றதா? இதைப்படித்த பின் நாம் முயன்றால் ஓரளவு கவிஞரின் இந்த அநுபவத்தை எட்டிப் பிடிக்கலாம். திருவல்லிக்கேணிக் கடற்கரையில் கண்ணகி சிலையினருகில் அமர்ந்துகொண்டு இந்த அநுபவத்தைப் பெற முயல்வோமாக.

மாலைப் புனைவு : படு ஞாயிற்றின் எழிலை - மாலை நேரக் காட்சியை—மிக அற்புதமாகக் காட்டுகின்றார் கவிஞர். பாஞ்சாலி சபதத்தில் இக்காட்சியைப் பார்த்தன் பாஞ்சாலிக்குக் காட்டும் பாங்கில் அமைந்துள்ளது. அருச்சுனன் பேச்சு இது : "பண் மொழியே, வானத்தின் புதுமையைக் காண்பாயாக. கணந்தோறும் மாறி மாறி ஒன்றுக்கொன்று ஒவ்வாமல் புதிது புதிதாகத் தோன்றுவதைக் கண்டு மகிழ்வாயாக ; இக்காட்சியைப்போல் இந்நிலவுலகில் எண்ணரிய பொருட்செலவில் யாரால் இயற்ற முடியும் ? பழவேத முனிவர் போற்றும் செழுஞ்சோதி வனப்பெல்லாம் ஒரு சேர அமைந்திருப்பதைக் காண்பாயாக. கணந்தோறும் வியப்புகள் புதியனவாகத் தோன்றுகின்றன ; கணந்தோறும் வெவ்வேறு கனவுகள் தோன்றுகின்றன ; கணந்தோறும் நவநவமாம் களிப்புத் தோன்றுவதைக் கண்டு அநுபவிப்பாயாக. இதனை மனத்தினால் சிந்திக்கவும்

23. குயில்பாட்டு — இருளும் ஒளியும். அடி (31-43)

முடியாது; சொற்களால் அளந்து காட்டவும் முடியாது. அடிவானத்தில் பரிதிக் கோளம் அளப்பரிய விரைவினொடு சுழலுவதைக் கண்டு மகிழ்வாயாக. மொய்குழலாய், இடிவானத்தில் தோன்றும் பத்துக்கோடி மின்னலை எடுத்து அவற்றை ஒன்று பட உருக்கி வட்டமாக வார்த்து, அதனைக் காளி சுழற்றுகின்றதைக் கண்டு அநுபவிப்பாயாக. கவனத்துடன் பார். மின்னால் செய்யப் பெற்ற வட்டொன்று பின்னால் அசைகின்றது; அதற்கு முன்னால் பச்சை நிற வட்டொன்று பாங்குடன் சுழலுகின்றது. இது போன்ற பசுமையினை உலகில் எங்காவது காண முடியுமா? மின்வட்டத்தின் வயிரத் கால்கள் இடையிடையே தோன்றிக்கொண்டிருப்பதை உற்று நோக்குவாயாக. இவை யாவும் உமையம்மை படைக்கின்ற அற்புதக் கவிதைகளாகும்.''

''இன்னும் காண்பாயாக. ஒளி மிக்க பரிதியை உற்று நோக்குக. அதனைச் சூழ்ந்திருக்கும் படர் முகில் தீப்பட்டெரிகின்றது. இந்த வண்ணத்து இயல்புகள் அற்புதம்! அற்புதம்!! எத்தனை வடிவம்! எத்தனைக் கலவை! தீயின் குழம்புகள்! செழும்பொன் காய்ச்சி விட்ட ஓடைகள்! வெம்மை தோன்றாமல் எரிந்திடும் தங்கத் தீவுகள்! நீலவண்ணமொன்றிலேயே எத்தனையோ வகைகள் திகழ்வதைக் கண்டு மகிழ்க. கரியபெரும், பெரும் பூதங்கள் தோன்றுவதைக் காண்க. நீலப்பொய்கையில் மிதந்திடும் தங்கத் தோணிகளைப் பார்ப்பாயாக. பொற்கரையிட்ட கருஞ்சிகரங்கள் தோன்றுவதைக் காண்பாயாக. இருட்கடலில் தங்கத் திமிங்கலங்கள் மிதக்கின்றன. பார்க்குமிடங்கள்தோறும் நீக்கமற நிறைந்திருக்கும் ஒளித்திரள்கள்! வானமெல்லாம் வண்ணக் களஞ்சியம்!'' பாடல்களைப் படிக்கும்போதே கவிஞர் எழுப்பிய காட்சிகள் யாவும் நம் மனத்திரையிலும் அமைகின்றன. இத்தகைய மாலைக் காட்சியை வேறு எந்த இலக்கியத்திலும் காணாவகையில் மிக அற்புதமாகப் புனைந்திருக்கும் திறம் எண்ணி எண்ணி மகிழ்வதற்குரியது.

'அந்திப்பொழுது' என்ற தனிப் பாடலொன்றில் மாலை நேரக் காட்சியை நேருக்குநேர் பார்ப்பது போன்ற நிலைமையை ஏற்படுத்தி விடுகின்றார்.

காவென்று கத்திடுங் காக்கை—என்றன்
கண்ணுக் கினிய கருநிறக் காக்கை
மேவிப் பலகிளை மீதில்—இங்கு
விண்ணிடை அந்திப் பொழுதினைக் கண்டே
கூவித் திரியும் சிலவே; — சில
கூட்டங்கள் கூடித் திசைதொறும் போகும்.
தேவிபராசக்தி யன்னை—விண்ணிற்
செவ்வொளி காட்டிப் பிறைதலைக் கொண்டாள்

தென்னை மரக்கிளை மீதில்—அங்கோர்
செல்வப் பசுங்கிளி கீச்சிட்டுப் பாயும்
சின்னஞ் சிறிய குருவி—அது
'ஜிவ்'வென்று விண்ணிடை யூசலிட்டேகும்
மன்னப் பருந்தொ ரிரண்டு—மெல்ல
வட்ட மிட்டுப்பின் நெடுந்தொலை போகும்
பின்னர் தெருவிலோர் சேவல்—அதன்
பேச்சினி லே'சக்திவேல்' என்று கூவும்''

என்று மாலைக் காட்சியை நம்முன் நிறுத்துகின்றார். அதன் பின்னர் செவ்வொளிவானில் மறைந்து இளந் தேநிலவு எங்கும் பொழி கிறதாகச் செப்புகின்றார்.

வான் மதி : 'சோம தேவன் புகழ்' என்ற கவிதையில் வான் மதியை இவ்வாறு புகழ்வார் :

'வியனுலகில் ஆநந்த வெண்ணிலவு பெய்தாய்
துயர்நீங்கி யென்னுளஞ் சுடர்கொளைச் செய்தாய் ;
மயல்கொண்ட காதலரை மண்மிசைக் காப்பாய்,
உயவேண்டி இருவருளம் ஒன்றுறக் கோப்பாய் ;
புயலிருண் டேகுமுறி யிருள்வீசி வரல்போற்
பொய்த்திரள் வருவதைப் புன்னகையில் மாய்ப்பாய்'[24]

வெண்ணிலாவே'[25] என்ற பாடலில் நிலவை நோக்கிப் பேசுகின்றார் ; "நிலவே, எல்லையற்ற வானக் கடலிடையே நீ" ஒரு தீவு போல் ஒளிர்ந்து கண்களுக்குக் காட்சியின்பம் நல்குகின்றாய். சொல்லையும் கள்ளையும் நெஞ்சையும் இணைத்து நின் ஒளி மயக்கும் வகைக்குக் காரணம் சொல்வாயோ? நல்ல ஒளியின் வகை பலவற்றை நின்னிடம் காணவில்லை. நனவை மறந்திடச் செய்வதும் காண வில்லை. ஆனால் கொல்லும் அமிழ்தத்தையொத்த கள்ளொன்று நின் ஒளியுடன் கூடியிருப்பதைக் காண்கின்றேன்; அதன் போதையால் மடங்கிக் கிடக்கின்றேன். உலகில் பலரும் மங்கையர் எழில் முகத்தை நினக்கு உவமை கூறுகின்றனர். அகவை முதிர்ச்சி யினாலும், கவலையினாலும், நோயினாலும் அம்முகம் பொலிவிழந்து கெடுகின்றது. ஆனால் நீயோ இளம் பருவம் வாய்ந்த காமன் வில்லைப் புருவமாகக் கொண்ட ஒருத்தி அன்பின் முதிர்ச்சியால் புன்னகை பூத்து முத்தம் வேண்டித் தன் முகத்தில் எழிலைப் புலப் படுத்துவது போல் நின் முகத்தில் அழகொளி வீசிச் சாதல் அழிதல் இலாது என்றும் இலங்குவதற்குக் காரணம் யாதோ? நிலா ஒளி

24. தோ. பா. சோம தேவன் புகழ்
25. ஷை—வெண்ணிலா.

போல் இலங்கும் பாற்கடலில் நீயும் அமுதமும் தோன்றுவது கண்டேன். எல்லாப் பொருள்களிலும் அந்தர்யாமியாக இருக்கும் கண்ணன் அப்பாற்கடலில் சயனித்திருப்பதையும் கண்டேன். நீல வண்ணக் கோலம் கொண்ட பராசக்தியையே இந்த உலகமாகக் கண்டேன். பின்னியிருக்கும் மேகச் சடையில் நீயும் கங்கையும் பெட்புடன் இலங்குதல் கண்டேன்.

"நீ காதலர் நெஞ்சைச் சுடுகின்றாய். ஆனால் நின்னைக் காதல் புரிவார் நெஞ்சிற்கு இன்னமுதமாய் இனிக்கின்றாய். விசும்பாகிய குளத்தில் நீ ஒளிமிக்க வெண்டாமரைபோல் திகழ் கின்றாய். தீமை புரியவரும் கொடியவர்க்கும் நன்மை செய்யும் மேலோர் போல, நின்னை மோதவரும் கருமேகக் கூட்டத்தையும் வெள்ளிய நிலவொளி நல்கி வனப்புறச் செய்கின்றாய். நீ மெல்லிய மேகத்திரைக்குள் மறைந்திருக்கும் நிலையில் நின் மேனி அழகு எங்கள் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றது. இந்நிலையில் மெல்லிய ஆடை கொண்டு மூடியிருக்கும் யவன மங்கையின் மேனி யழகினைப் புலப்படுத்துகின்றாய்.

சொல்லிய வார்த்தையில் நாணுற்றனை போலும்
வெண்ணிலாவே ! — நின்
சோதி வதனம் முழுதும் மறைத்தனை
வெண்ணிலாவே !"

என்று முகிலினுள் மறைந்து கொள்ளும் காரணத்தை நயமாகக் காட்டுகின்றார். அப்படியானால், "சிறியேன் செய்த பிழை பொறுத்து இருட் படலத்தைக் களைந்து ஒளி நிறைந்த நின் முகப்பொலிவைக் காட்டுவாயாக" என்கிறார். பாரதியாரின் நிலவுபற்றிய புனைவு படிப்போரிடையே பல்வேறு உள்ளக்கிளர்ச்சிகளை எழுப்புகின்றன. எனவே நிலவைக் கூவி அழைக்கின்றார் :

மண்ணுக் குள்ளே அமுதைக் கூட்டிக்
கண்ணுக் குள்ளே களியைக் காட்டி
எண்ணுக் குள்ளே இன்பத் தெளிவாய்
வாராய், நிலவே, வா.[26]

காற்று : காற்றுபற்றிய கவிஞரின் புனைவு படிப்போரிடையே களிபேருவகையை விளைவிக்கின்றது. காற்றை நோக்கிப் பேசுகின்றார் :

தென்னையின் கீற்றுச் சலசல வென்றிடச்
செய்துவரும் காற்றே !
உன்னைக் குதிரைகொண் டேறித் திரியுமோர்
உள்ளம் படைத்து விட்டோம்.

26. வசன கவிதைகள்-6. விடுதலை-காட்சி-2 நிலவுப் பாட்டு-2

சின்னப் பறவையின் மெல்லொலி கொண்டிங்கு
சேர்ந்திடு நற்காற்றே !
மின்னல் விளக்கிற்கு வானகங் கொட்டுமிவ்
வெட்டொலி ஏன் கொணர்ந்தாய் ?[27]

காற்றின் செயல்களையெல்லாம் தொகுத்துக் கூறும் கவிஞர் மண்ணுலகத்திலுள்ள நல்லோசைகளனைத்தையும் வானவன் கொண்டு வந்தான் என்று குறிப்பிடுவார். இந்த ஒலிகளனைத்தையும் மண்ணில் இசைத்துப் பாடி மகிழ வேண்டும் என்கின்றார். செவிக் கெட்டும் மணியோசை, நாய்கள் குரைக்கும் ஒலி, 'அன்னக் காவடி பிச்சை' என்று ஏங்கிடுவான் குரல், வீதிக் கதவை அடைப்பதனால் எழும் ஓசை, கீழ்த்திசையில் விம்மி எழும் சங்கொலி, தெருக்களிலும் திண்ணைகளிலும் வாதுகள் பேசி வழக்காடும் மக்கள் குரல் இவற்றையெல்லாம் காற்றுதான் கொண்டு வருகின்றது என்கிறார். கணக்கிலகப்படாத எத்தனையோ குரல்கள் உளவென்று கூறி இவற்றையெல்லாம் காது குளிரக் கேட்டு அநுபவிக்குமாறு மனத்தைத் தூண்டுகின்றார்.

மழை : மழையைப்பற்றிய வருணனையைப் படிக்கும்போது கொட்டு மழையினை நேரில் காணும் அநுபவம் நமக்கு ஏற்படு கின்றது. திக்குகள் எட்டும் சிதறிப் பக்க மலைகள் உடைந்து வெள்ளம் பாய்கின்றது; அண்டம் சாய்கின்றது. பேய் கொண்டு தக்கையடிக்கிறது காற்று. 'தீம் தரிகிட தீம் தரிகிட தீம் தரிகிட' என்ற ஒலி எம்மருங்கும் கேட்கின்றது.

வெட்டி யடிக்குது மின்னல்,—கடல்
வீரத்திரை கொண்டு விண்ணை யிடிக்குது;
கொட்டி யிடிக்குது மேகம் ;—கூ
கூவென்று விண்ணைக் குடையுது காற்று
சட்டச்சட சட்டச்சட டட்டா—என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்;
எட்டுத் திசையும் இடிய—மழை
எங்ஙனம் வந்ததடா—தம்பி வீரா! [28]

என்று பெருமழை பொழிவதை — 'மழை இரைச்சலை'—நேரில் காட்டுவது போன்ற ஒலி நயத்துடன் புனைந்து காட்டுகின்றார். இன்னொரு பாடலில் மழையையும் காற்றையும் பராசக்தியின் செய லென்றே கூறுகின்றார்.

---

27. த. பா.—நிலாவும் வான்மீனும் காற்றும்—4
28. ஷை—மழை.

மழைபொ ழிந்திடும் வண்ணத்தைக் கண்டுநான்
வானி ருண்டு கரும்புயல் கூடியே
இழையு மின்னல் சரேலென்று பாயவும்
ஈரவாடை இரைந்தொலி செய்யவும்
உழைய லாம்இடை யின்றிஇவ் வானநீர்
ஊற்றும் செய்தி உரைத்திட வேண்டுங்கால்
"மழையும் காற்றும் பராசக்தி செய்கைகாண்
வாழ்க தாய்!" என்று பாடுமென் வாணியே.[29]

என்ற பாடலில் கவிஞரின் இக் கருத்தைக் கண்டு மகிழ்க.

காடுபற்றிய புனைவு : 'கண்ணன் என் காதலன்—3' என்ற தலைப்பில் வரும் பாடலொன்றில் இப்புனைவினைக் காண்கின்றோம். காட்டில் காதலி காதலனைத் தேடுவதாக அமைகின்றது பாடல். இங்குக் காதலன் கண்ணன். அந்தக் காடு 'திக்குத் தெரியாத அடர்ந்த காடு'. சிங்கவேழ் குன்றத்தில்[30] சில பகுதிகளிலும், கேரளத்தில் சில இடங்களிலும் காணப்படுவது போன்ற காடு. அங்கு மிகுந்த நலம் பயக்கும் மரங்களும் விந்தைச் சுவைதரும் கனி வகைகளும் நிறைந்து காணப்படுகின்றன. எப்பக்கத்தையும் மறைக்கும் ஓங்கி உயர்ந்த மலைகள் சூழ்ந்துள்ளன. அந்த மலைகளினின்றும் 'நதிகள் பாடிக்கொண்டே ஓடுகின்றன'. 'நெஞ்சில் கனல் மணக்கும் பூக்களும், எம்மருங்கும், கீழே உதிர்ந்து கிடக்கும் இலைகளும் (சருகுகள்), இனிய நீர் நிறைந்த சுனைகளும் முட்கள் மண்டிக் கிடக்கும் புதர்களும் ஆங்கு உள்ளன. மருண்டு மருண்டு ஆசையுடன் விழிக்கும் மான்கள் இங்குமங்கும் அலைந்து திரிகின்றன. உள்ளம் அஞ்சும் குரல் கொடுக்கும் புலிகள் அக்காட்டில் நடமாடுகின்றன. அங்குள்ள பறவைகள் 'நேசக் கவிதைகள்' பாடுகின்றன. பல இடங்களில் நீண்டு படுத்திருக்கும் மலைப் பாம்புகளைக் காணலாம். தன்னிச்சையுடன் திரியும் சிங்கங்களையும் அவற்றின் கர்ச்சனையொலி கேட்டுக் கலங்கியோடும் யானைகளையும் அவற்றின்முன் ஓடும் இளமான்களையும் அங்குக் காணலாம். இவற்றின் கால்களில் மிதிபடாது அயலே பதுங்கும் தவளைகளையும் அங்குப் பார்க்கலாம். இங்கு 'மாயோன் மேய காடுறை உலகத்தை' — காட்டின் காட்சியை—உள்ளது உள்ளவாறே அழகுறப் புனைந்து காட்டுகின்றார் கவிஞர். இன்னோர் உண்மையையும் ஈண்டு சிந்தித்தல் பயனுடையது. யாளி போன்ற இப்பூவுலகில் இல்லாத விலங்குகளை இவர் தம் பாடல்களில் யாண்டும் காட்டிற்றிலர்.

---

29. தோ.பா — பரா சக்தி—4.

30. திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் செய்தது. ஆந்திரத்தில் கடப்பை மாவட்டத்திலுள்ளது.

நாட்டுவளம்: நாட்டுவளம்பற்றிய கவிஞரின் புனைவு மிக நேர்த்தியாக அமைந்துள்ளது. அத்தினபுரத்தில் அமைத்த அழகிய மண்டபத்தைக் காணப் பாண்டவர்களை அழைத்து வருவதற்காகச் சென்ற விதுரன் 'அடவிமலை ஆறெல்லாம் கடந்து' சென்று பாண்டவர்கள் அரசுபுரியும் இந்திரப் பிரத்தத்தின் அருகில் செல்லும் போது வழியிடையே தான் கண்ட நாட்டு வளத்தின் சிறப்பை நோக்கி, இத்தகைய நாடு 'நாசமெய்தத்' தான் துணைபுரிய நேரிட்டதை நினைந்து மனத்திற்குள் இரங்கி வருந்துகின்றான். பாரத நாட்டின் பெருமையை விதுரன் வாய்மொழியாக,

நீலமுடி தரித்தபல மலைசேர் நாடு,
  நீரமுதம் எனப்பாய்ந்து நிரம்பும் நாடு
கோலமுறு பயன்மரங்கள் செறிந்து வாழுங்
  குளிர்காவுஞ் சோலைகளும் குலவு நாடு
ஞாலமெலாம் பசியின்றிக் காத்தல் வல்ல
  நன்செய்யும் புன்செய்யும் நலமிக் கோங்கப்
பாலடையும் நறுநெய்யும் தேனுமுண்டு
  பண்ணவர்போல் மக்களெல்லாம் பயிலும் நாடு.[31]

என்று வருணிப்பர் கவிஞர். கங்கைநதி பாயும் பகுதியும் பஞ்சாப் மாநிலப் பகுதியும் கவிஞர் மனத்தில் இத்தகைய எண்ணத்தை எழுப்பியிருக்க வேண்டும் என்று கருதலாம்.

மேலும், இந்நாட்டில் அன்னங்கள்* தாமரைத் தடாகத்தில் தவழ்கின்றன. வண்டுகள் பண்ணமிழ்தத்தைப் பொழிகின்றன. கிளிகள் மழலைமொழி பேசுகின்றன. கேட்போர் செவியில் அமுதூறும் படியாகக் குயில்கள் பாடுகின்றன. பொன் போன்ற மேனி படைத்த பூவையர்கள் தம் காதலர்களிடம் புலவி கொள்ளும்போது 'காவினத்து நறுமலரின் கமழைத் தென்றல்' வீசுகின்றது. திண்டோள் வாய்ந்த வீரர்கள் மகிழுமாறு மடந்தையர் தம் விழிகளாலேயே காதலைப் புலப்படுத்துகின்றனர். இங்ஙனம் மருதநிலவளம் மாண்புற எடுத்துக்காட்டப்பெறுகின்றது.

நகர்ப் புனைவு: நகரங்கள் செயற்கையாக ஏற்படுத்தப் பட்டவையெனினும் அந்தச் செயற்கையிலும் ஓர் இயற்கை அமைந்து விடுகின்றது. இங்குக் கைபுனைந்தியற்றிய வனப்பை நகர்ப் புனைவில் இயற்கை எழிலாகக் கொள்வதில் தவறில்லை. இவற்றைக் 'கைபுனைந் தியற்றிய கவின் பெறு' வனப்பாகக் கொள்ளலாம். பாரத நாட்டைப் 'பாருக்குள்ளே நல்ல நாடு' என்று

31. பா.ச. 1 : 17 : 116

* இப்பூவுலகில் 'அன்னம்' என்ற பறவையைக் காணமுடியாது. எப்படியோ இது பாட்டில் இடம் பெற்றுவிட்டது.

போற்றியுரைத்த கவிஞர் அதன் தலைநகரையும் சிறப்பிக்க எண்ணி இந்த அவனியில் இணையில்லாத நகரம் அத்தினபுரம் என்று கூறு கின்றார். இன்றைய புதுச்சேரியில் தெருக்கள் வரிசை வரிசையாக அமைந்திருப்பதைப் போலவே, அத்தினபுரத்து வீதிகளும் ஒரு வரிசை யொழுங்கில் அமைந்திருந்தன என்கின்றார். புதுச்சேரியில் வாழ்ந்த கவிஞராதலால் அத்தினபுரத்து வீதிகள் 'பத்தியில் வீதிகள்' என்கின்றார். வெள்ளைப் பனிவரை போன்ற மாளிகைகள், முத் தொளிர் மாடங்கள் இவை நகரத்தின் எழிலை மிகுவிக்கின்றன. இடையிடையே சோலைகளும் வாவிகளும் அமைந்து நகருக்குப் புதுக்களையூட்டுகின்றன.

அந்தணர் வீதிகளில் நான்மறை ஓதுவதன் முழக்கம் கேட் கின்றது. செந்தழல் வேள்விகள் நடைபெற்றவண்ணம் உள்ளன. சாத்திர ஆராய்ச்சி ஓயாது நடைபெறுகின்றது. மந்திர கீதங்களின் ஓசை கேட்கின்றது. தர்க்க வாதங்கள் நடைபெறுகின்றன. இங்கு,

மெய்த்தவர் பலருண்டாம்—வெறும்
 வேடங்கள் பூண்டவர் பலருமுண்டாம்
உய்த்திடு சிவஞானம்—கனிந்
 தோர்ந்திடும் மேலவர் பலருமுண்டாம்;
பொய்த்த விந்திர சாலம்—நிகர்
 பூசையும் கிரியையும் புலைநடையும்
கைத்திடு பொய்ம்மொழியும்—கொண்டு
 கண்மயக் காற்பிழைப் போர்பலராம்.[32]

என்று இக்கால நிலை கண்டு அக்கால நிலையை எடுத்துக்காட்டு கின்றார் கவிஞர். பொதுவாக நாட்டில் பல இடங்களிலும் சென்னை போன்ற நகர்களில் அதிகமாகவும் இந்நிலைகள் நிலைபெற்றிருப் பதை இன்றுங் காணலாம்.

ஒரு பக்கம், மாலைகள் புரண்டசையும் வரையெனத் திரண்ட தோளுடைய மறவர்கள் காட்சி அளிக்கின்றனர். இவர்கள் காலை யிலும் மாலையிலும் 'பகை காய்ந்திடும் தொழில்களைப்' பழகி வரு கின்றனர். இவர்கள் 'கரி நூறினைத் தனி நின்று நொறுக்க வல்லார்'. இவர்கள் 'வேரியங் கள்ளருந்தி — எங்கும் வெம் மத யானைகள் போல்' திரிகின்றனர். இவர்களைக் கவிஞர் 'ஆரிய வேல் மறவர்' என்கின்றார். 'ஆரிய' என்ற சொல் 'உயர்ந்த' என்ற பொருளில் ஆளப்பெற்றுள்ளது. 'ஆரியர்' 'திராவிடர்' — என்ற இக்காலத்தில் பரவியுள்ள கருத்துகளைப் பாரதி பாடினார் என்று கருதுவது இலக்கியத்தையே இகழ்வதாகும்.

32. ஷை 1.3 : 9.

மற்றொரு பக்கம் கலை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன நல்லிசை முழக்கங்கள் நாலா பக்கங்களிலும் கேட்கின்றன. நடன மாதர்கள் நாட்டிய விருந்தளிக்கின்றனர். காவிய ஆராய்ச்சி நிகழ் கின்றது. சிற்பங்கள், ஓவியங்கள் இவற்றின் கண்காட்சிகள் நடை பெறுகின்றன. இவற்றையெல்லாம் கண்டு களிக்கும் மக்கள் கூட்டத்தை எம்மருங்கும் காணலாம். இவையெல்லாம் அரசர் வீதி களில் நடைபெறுவதாகக் குறிப்பிடுகின்றார் கவிஞர். இப்பக்கம் யானைப் படைகள், குதிரைப் படைகள், தேர்ப்படைகள்—இவற்றின் வரிசைகளையும் காணலாம்.

வணிகர் வீதிகளில் பல்வேறு பண்டங்களின் வரிசைகளைக் காணலாம். எண்ணரும் கனி வகைகள், மணப் பொருள்வகைகள், பூமாலை வகைகள், சுண்ண வகைகள், நறும்புகை யூட்டும் பொருள்கள், பல்வேறு நுகர்பொருள்கள் இவற்றின் திரள்களை இங்குக் காணலாம். குபேர சம்பத்துகள் நிறைந்திருந்தன இந்த வீதிகளில். இங்குத் திருடர் பயம் இல்லை என்ற குறிப்பையும் தரு கின்றார் கவிஞர்[33]. இங்ஙனம் அரச வீதி, அந்தணர் வீதி, வணிகர் வீதி, மறவர் வீதி என்று வருணித்திருப்பது 'பழைய முறையை' ஒட்டியதாகும்.

கருப்பொருள் மாட்சி : தருமபுத்திரன் இராசசூயப் பெரு வேள்வி செய்தபோது ஆயிரக்கணக்கான முடிவேந்தர்களும் பல்லாயிரக்கணக்கான குறுநில மன்னர்களும் பல்வேறு வகைப் பரிசுப் பொருள்களை நல்கினர். அப்பொருள்களை நிரல்படத் தொகுத்து இயற்கைப் புனைவு என்று கருதும்படி அற்புதமாக அமைத்துள்ளார்.[34] மலைவளம் காணச் சென்ற செங்குட்டுவன் தன் அரசமாதேவியுடன் சென்றபொழுது திறை சுமந்து நிற்கும் தெவ்வர்போல மலைவாழ் குறவர்கள் பல்வேறு வகைப் பரிசுப் பொருள்களை நல்கினர் என்று இளங்கோவடிகள் கூறும் பகுதியை[35] அடியொட்டி இப்பகுதியைப் பாரதியார் அழகுற அமைத்துள்ளார் என்று கருதத் தோன்றுகிறது.

நெய்தல் நில மக்கள் முத்து, சிப்பி, பவளங்கள், வெண் சங்கின் குவியல்கள், ஒப்பில்லாத வைடூரியம் முதலிய பொருள் களைக் கொண்டுவந்ததாகக் காட்டுவர். மலை நாட்டு மக்கள் கொணர்ந்தவற்றை,

---

33. ஷை 1·3 : 7—14.
34. ஷை 1.5 : 22—37
35. சிலப் 3.25 : 36—54.

மலைநா டுடைமன் னர்—பல
    மான்கொ ணர்ந்தார் புதுத்தேன் கொணர்ந்தார்
கொலைநால் வாய்கொணர்ந்தார்—மலைக்
    குதிரையும் பன்றியும் கொணர்ந்து தந்தார்;
கலைமான் கொம்புகளும்—பெருங்
    களிறுடைத் தந்தமும் கவரிகளும்
விலையார் தோல்வகையும்—கொண்டு
    மேலும்பொன் வைத்தங்கு வணங்கி நின்றார்.[36]

என்று காட்டுவர். மேலும், அவர்கள் புலித்தோல், யானைத்தோல், ஆட்டுத்தோல், பல நிறங்களையுடைய மயிருடைகள், விலை மதிக்க முடியாத பறவைகள், விலங்கினங்கள், சந்தனம், அகில் வகைகள், ஏலம், கருப்பூரம், இலவங்கம், பாக்கு, முத்து மாலைகள், பன்னிறச் சேலை வகைகள், பட்டு வகைகள், ஆடுகள், ஆயிரமாயிரம் பசுக்கள், மாடுகள் பூட்டிய வண்டிகளில் பலவகைத் தானியங்கள், கரும்பு வகைகள், தயில வகைகள், மான்மதம், நெய்க்குடம், கள் வகைகள்; குப்பாயம், சால்வைகள், போர்வைகள்; கம்பளங்கள்—போன்ற பொருள்களையும் கொணர்ந்தனர். தென்திசைச் சாவக நாடு முதல் வடதிசைச் சீனம் வரையிலுமுள்ள நாடுகளிலிருந்து பல்வேறு வகைப்பொருள்கள் வந்து குவிந்தன. இதில் வேள்விக்கு வேண்டிய பல்வேறு பொருள்களும் அடங்கியிருத்தல் கண்டு சிந்தித்து மகிழத் தக்கது.

குதிரை வகைகள், யானைகள், ஒட்டைகள் இவை பல அரசர்கள் கொணர்ந்தமையை,

கழல்களும் கடகங்களும் மணிக்
    கவசமும் மகுடமும் கணக்கிலவாம்;
நிழல்நிறப் பரிபலவும்—செந்
    நிறத்தன பலவும்வெண் ணிறம்பலவும்
தழல்நிறம் மேகநிறம்—விண்ணில்
    சாரும் இந்திரவில்லை நேரும்நிறம்
அழகிய கிளிவயிற்றின்—வண்ணம்
    ஆர்ந்தன வாய்ப்பணி சேர்ந்தனவாய்.

'காற்றெனச் செல்வனவாய்' —இவை
    கடிதுகைத் திடுந்திறல் மறவரொடே
போற்றிய கையின ராய்ப்—பல
    புரவலர் கொணர்ந்து, அவன்சபை புகுந்தார்.

36. பாச. 1·5 : 28.

சீற்ற வன்போர் யானை—மன்னர்
சேர்த்தவை பலபல மந்தையுண்டாம்;
ஆற்றல் மிலேச்சமன்னர்—தொலை
அரபியர் ஒட்டைகள் கொணர்ந்து தந்தார்.[37]

என்று வருணித்திடுவர். இன்னும் அவர்கள்,

தந்தத்தில் கட்டில்களும், — நல்ல
தந்தத்தின் பல்லக்கும், வாகனமும்
தந்தத்தின் பிடிவாளும்—அந்தத்
தந்தத்தி லேசிற்பத் தொழில்வகையும்
தந்தத்தி லாதனமும்—பின்னும்
தமனிய மணிகளில் இவையனைத்தும்,
தந்தத்தைக் கணக்கிடவோ?[38]

என்று தந்தப் பொருள்களைத் தந்ததையும் காட்டுவர். இங்குப் பாரதியார் இளங்கோவடிகள் காட்டிய பரிசில் பட்டியலைவிட நீளமான பட்டியலைக் காட்டுவர். இன்று வெளிநாட்டுத் தலைவர்கள் நம்நாடு வரும்போதும் நம் நாட்டுத் தலைவர்கள் வெளிநாடுகள் செல்லும்போதும் பல சிறப்புப் பொருள்களைப் பெற்று வரும் மரபினை ஈண்டு நாம் நினைக்கின்றோம்.

இறைவன் நமக்குப் புலன்களையும் நுண்ணிய அறிவையும் கொடுத்துள்ளான். இவற்றைத் தக்க முறையில் பயன்படுத்திக் கவிஞன் காட்டும் இயற்கைக் கோலங்களை அநுபவிப்பது நம் கடமை. இலக்கியங்களை நுகரும் அநுபவம் பெற்றுவிட்டால் அறையிலிருந்துகொண்டே அனைத்தையும் நுகர்ந்து மகிழலாம். இரத்தினம் ஓர் உயர்ந்த பொருள்தான். அதனைத் தேர்ந்தெடுத்துப் பழகியவருக்கே அதன் பெருமை தெரியும். சாமானிய மனிதன் சாதிக் கமலத்திற்கும் இரங்கூன் கமலத்திற்குமுள்ள வேறுபாட்டை அறிய முடியாது. கவிதையில், காவியத்தில் சுவை புலப்படுவதும் இம்முறையில்தான் அதில் பழக்கம் அதிகமாகி அநுபவித்துச் சுவையை உணர்வது எளிதானதன்று. இலக்கியத்தைச் சுவைக்க வகையறியாமல் இலக்கிய இன்பத்தைப் புறக்கணிப்பவர்களைப் பற்றி வடமொழிக் கவிஞன் ஒருவன் கூறியுள்ளதைக் காட்டி இக் கட்டுரையைத் தலைக்கட்டுவோம்.

“ஓ இரத்தினமே! உன்னை ஒரு குரங்கு எடுத்தது. முகர்ந்து பார்த்தது ; தன் வழக்கம்போல் முத்தமிட்டுப் பிறகு உன்னை

37. ஷை 1.5 : 32—33.
38. ஷை 1·5 : 37

நக்கியும் பார்த்தது. பாவம்! அதற்கொன்றும் விளங்கவில்லை. பிறகு உன்னைத் தூக்கி எறிந்துவிட்டது. நீ ஏன் வருந்த வேண்டும், 'என் மதிப்பு குரங்கிற்குத் தெரியவில்லையே!' என்று. 'உள்ளே என்ன இருக்கிறது ?' என்று கல்லில் வைத்துத் தட்டிப் பார்க்காமல் இருந்ததில் நீ உண்மையாகவே மகிழ வேண்டும்."

இதிலிருந்து இலக்கியச் சுவையை நுகர்வது எல்லோராலும் இயலாது என்பது தெளிவாகின்றதன்றோ ?

5. சமுதாயப் பார்வை

பாரதியாரின் பாடல்களை மேலோட்டமாகக் கற்றாலேயே அவர் சமுதாயத்தின்மீது கொண்டிருந்த அக்கறை தெளிவாகப் புலனாகும். பாரதியார் தம் காலத்துப் பாரத மக்களின் நிலையை "நெஞ்சு பொறுக்குதிலையே"[1] என்ற கவிதையில் அற்புதமாக எடுத்துக் காட்டுகின்றார். அவர் காலத்து மக்களின் நிலையை நினைந்து,

என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம் ?
என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்.[2]

என்று பாடுகின்றார். தீண்டாமையைப்பற்றிய பாடல்களே இல்லை. நாடு விடுதலை யடைந்த பிறகு இது தீவிரமாகக் கவனிக்க வேண்டிய பிரச்சினை என்று விட்டுவைத்தனர் போலும்.

இவர் காலத்திலேயே 'நம் நாடு', 'நம் மொழி', 'தமிழ்ச் சாதி' என்பன போன்ற எண்ணங்கள் முகிழ்த்துவிட்டன.

நாமிருக்கும் நாடு
நமது என்ப தறிந்தோம்—இது
நமக்கே உரிமையாம்
என்ப தறிந்தோம்—இந்தப்
பூமியில் எவர்க்கும்இனி
அடிமை செய்யோம்—பரி
பூரணனுக் கேயடிமை
செய்து வாழ்வோம்.[3]

வாழிய செந்தமிழ் ! வாழ்கநற் றமிழர் !
வாழிய பாரத மணித்திரு நாடு[4]

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்குங் காணோம்.[5]

என்பன போன்ற பாடற்பகுதிகளால் இதனை யறியலாம். இனி, பாரதியாரின் சமுதாயப் பார்வையைச் சில கோணங்களிற் காண்போம்.

---

1. தே. கீ. 15. பாரத ஜனங்களின் தற்கால நிலைமை.
2. ஷை 28. சுதந்திரத் தாகம்—1
3. ஷை : 31. சுதந்திரப் பள்ளு—5
4. ஷை : 25. வாழிய செந்தமிழ்
5. ஷை : 22. தமிழ்—1

க. தனி மனிதன் கடமை

தனி மனிதன் சமூகத்தில் ஒருவன் ; குடும்பத்திலும் ஒருவன். தனி மனிதன் தன் கடமையைச் சரிவர மேற்கொண்டால் குடும்பம் சிறக்கும் ; பல குடும்பங்கள் அடங்கிய சமூகம் சீர்படும் ; பல சமூகங்கள் அடங்கிய சமுதாயமும் சிறந்து திகழும். தனி மனிதனின் கடமைகளாக நான்கினைக் கூறுகின்றார் கவிஞர்.

கடமை யாவன தன்னைக் கட்டுதல்
பிறர்துயர் தீர்த்தல் பிறர்நலம் வேண்டுதல்
....
உலகெலாம் காக்கும் ஒருவனைப் போற்றுதல் யெனப்படும்
இந்நான் கேயிப் பூமியில் எவர்க்கும்
கடமை யெனப்படும்.[6]

என்ற கவிதைப் பகுதியில் இந்த நான்கினைக் கவிஞர் நிரல்படக் கூறுவதைக் காண்க.

'தன்னைக் கட்டுதல்' என்பது மனத்தைக் கட்டுதல். ஐம்பொறிகளை அடக்கி மனத்தைக் கட்டுதல் என்று ஞானியர் கூறும் பொருளில் அல்ல ஈண்டுக் குறிப்பிடப்பெறுவது. 'பாதரசமாய்ச் சஞ்சலப்பட்டுக்கொண்டே'[7] இருக்கும் மனத்தை, பல பொருள்களின் மீது சபலப்படுகின்ற மனத்தை அடக்கினால் போதும் என்பது பாரதியாரின் கருத்து. மனம் சில சமயம் ஒரு பொருளைப்பற்றிக் கொண்டு ஊசலாடும் ; அடுத்ததை நோக்கி அடுத்தடுத்து உலவும் ; 'விட்டுவிடென்று' கூறினால் விடாது போய் அதன்மீது விழும். புதியனவற்றைக் கண்டால் புலனழிந்து அவற்றின்மீது வெறிகொண்டு வீழும். பிணத்தினை விரும்பும் காக்கை போல, அழுகுதல் சாதல் அஞ்சுதல் முதலிய இழிபொருள்களில் தன்னைப் பறிகொடுக்கும். இன்பத்தை நாடி எண்ணிலாப் பிழை செய்யும் என்றெல்லாம் மனத்தினைப் பெண்ணாக உருவகித்து[8] மனத்தின் தன்மைகளை எடுத்துக் காட்டி,

பேயாய் உழலும், சிறுமனமே !
  பேணாய் என்சொல் இன்றுமுதல்
நீயாய் ஒன்றும் நாடாதே
  நினது தலைவன் யானேகாண்[9]

என்று மனத்தை நன்னெறிப்படுத்த விழைகின்றார் கவிஞர்.

---

6. தோ. பா., வி. நா. மா.—8.
7. தாயுமானவர் பாடல்—9.
9. வே. பா : 22. மனப்பெண்.
8. ஷ : மனத்திற்குக் கட்டளை.

மனம் சில சமயம் கவலையைப் பெருக்கிக்கொண்டு துன்புறும்; சில சமயம் இயல்பாக வரும் கவலைகளால் எற்றுண்டு வருந்தும்; கடந்தவற்றை நினைந்து நினைந்து வருந்துவதும் உண்டு. கவலையைப் போக்கினால்தான் மனம் நன்னெறியில் சென்று உய்யும் வழியைக் காணும் என்பதைக் கவிஞர்,

> சென்றதினி மீளாது மூடரே! நீர்
> எப்போதும் சென்றதையே சிந்தை செய்து
> கொன்றழிக்கும் கவலையெனும் குழியில் வீழ்ந்து
> குமையாதீர்! சென்றதனைக் குறித்தல் வேண்டாம்;
> இன்றுபுதி தாய்ப்பிறந்தோம் என்று நீவிர்
> எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக் கொண்டு
> தின்றுவிளை யாடியின்புற் றிருந்து வாழ்வீர்;
> தீமையெலாம் அழிந்துபோம் திரும்பி வாரா. [10]

என்ற பாடலால் ஆற்றுப்படுத்துகின்றார். விநாயகர் நான்மணி மாலையிலும் இக்கருத்தினையே,

> கவலைப் படுதலே கருநர கம்மா!
> கவலையற் றிருத்தலே முக்தி [11]

என்று வேறொரு விதமாகவும் வற்புறுத்தி உரைப்பர்.

> நெஞ்சிற் கவலை நிதமும் பயிராக்கி
> அஞ்சி உயிர்வாழ்தல் அறியாமை [12]

என்று இதனை மேலும் அரண் செய்வர். ஆன்மாவின் இயல்பைத் தெரிந்துகொண்டால் மனத்தெளிவு உண்டாகும் என்பதை,

> சித்தி னியல்பு மதன்பெருஞ் சக்தியின்
> செய்கையுந் தேர்ந்து விட்டால்—மனமே!
> எத்தனை கோடி இடர்வந்து சூழினும்
> எண்ணஞ் சிறிது முண்டோ? [13]
> [சித்து - ஆன்மா]

என்பதில் கவிஞரின் மனத்தெளிவினைக் காணலாம். தாயுமான அடிகளும் "பந்தமறும் பளிங்கனைய சித்து"[14] என்று கூறிப்

10. வே. பா: 20—சென்றது மீளாது
11. தோ. பா: வி·நா மா.36. அடி 21-22
12. தோ. பா: 17. மகாசக்தி வெண்பா—2
13. ஷை : 24 தெளிவு—3
14. தா. பா.: ஆகாரபுவனம்—18

போந்ததை எண்ணிப் பார்த்தல் வேண்டும். 'தெய்வம் நீ என்றுணர்'[15] என்ற புதிய ஆத்தி சூடியிலும் கவிஞர் உரைக்கும் கருத்து இதனை ஒரு புடை ஒத்திருத்தல் காணலாம். கவிஞரின் இந்தத் தெளிவினை,

மூட நெஞ்சே ! முப்பது கோடி
முறையுனக் குரைத்தேன் ; இன்னும் மொழிவேன் ;
தலையிலிடி விழுந்தால் சஞ்சலப் படாதே ;
ஏது நிகழினும் 'நமக்கென் ?' என்றிரு ;
பராசக்தி யுளத்தின் படியுலகம் நிகழும் ;
நமக்கேன் பொறுப்பு ?[16]

என்ற பாடற்பகுதியிலும் காணலாம். 'பலனைக் கருதாது கடமையைச் செய்' என்ற கீதையுரையும் இதனை ஒருபுடையொத்துள்ளது என்று கருதலாம்.

உடலைத் தூய்மையாக வைத்திருப்பதுபோல் மனத்தையும் தூய்மையாக (Mental hygiene) வைத்திருத்தல் வேண்டும். தீய எண்ணங்கள் மனத்தில் தோன்றுவதற்கு இடமே தருதல் கூடாது. 'கெடுவான் கேடு நினைப்பான்' என்ற முதுமொழியினையும் 'மறந்தும் பிறன் கேடு சூழற்க'[17] என்ற வள்ளுவத்தையும் சிந்தித்தல் வேண்டும்.

தாழ்வு பிறர்க்கெண்ணத் தானழிவா னென்ற
சாத்திரங் கேளாயோ?[18]

என்று நெஞ்சுக்கு எடுத்துக் காட்டுகின்றார் கவிஞர். பகைவனுக்கும் அருளவேண்டும் என்பது இவர் நெஞ்சுக்கு இடும் கட்டளையாகும்.

தின்ன வரும்புலி தன்னையும் அன்பொடு
சிந்தையிற் போற்றிடுவாய் — நன்னெஞ்சே!
அன்னை பராசக்தி யவ்வுரு வாயினள்
அவளைக் கும்பிடுவாய் — நன்னெஞ்சே![19]

என்பது இவர் நமக்குத் தரும் நவநீதம்; இதனை நெய்யாக்கி உண்பது நமது கடன்.

'பிறர் துயர் தீர்த்தல்' என்பது மற்றொரு கடமை.

அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந்து எய்தும் பராபரமே.[20]

15. புதிய ஆத்திசூடி—48
16. தோ. பா ; வி. நா. மா. 36-அடி (11-16)
17. குறள் — 204
18. வே. பா ; 23 பகைவனுக்கு அருள்வாய் — 4
19. ஷை. ஷை. 6.
20. தா. பா. 790.

என்று தாயுமான அடிகளும் இக்கருத்தைத் தெரிவித்துள்ளார். இதனையொட்டியே பாரதியாரும்,

உயிரெலாம்
இன்புற் றிருக்க வேண்டி, நின் னிருதாள்
பணிவதே தொழிலெனக் கொண்டு
கணபதி தேவா! வாழ்வேன் களித்தே.[21]

என்று கூறியுள்ளதைக் காணலாம். பிறிதோரிடத்தில் இவர்,

மண்ணி லார்க்கும் துயரின்றிச் செய்வேன்.
வறுமை யென்பதை மண்மிசை மாய்ப்பேன்.[22]

என்று பிறர் துயர் தீர்ப்பதைக் கடமையாகக் கொள்வதைக் காணலாம்.

பிறர் நலத்தின் பொருட்டே கவிஞர் இறைவனை வேண்டுவதைப் பலவிடங்களில் கண்டு மகிழலாம். ஒரு பாடலில்,

பேசாப் பொருளைப் பேசநான் துணிந்தேன்;
கேட்கா வரத்தைக் கேட்கநான் துணிந்தேன்;
மண்மீ துள்ள மக்கள், பறவைகள்,
விலங்குகள் பூச்சிகள், புல்பூண்டு, மரங்கள்,
யாவுமென் வினையால் இடும்பை தீர்ந்தே
இன்புற் றன்புடன் இணங்கிவாழ்ந் திடவே
செய்தல் வேண்டும் தேவ தேவா! [23]

என்று எல்லோரும் இடும்பை தீர்ந்து இன்பமுடன் வாழவேண்டும் என்பதைச் சக்திகுமரனிடம் வேண்டுவதைக் காணலாம். இதே பாடலில்,

ஞானா காசத்து நடுவே நின்றுநான்
'பூமண்ட லத்தில் அன்பும் பொறையும்
விளங்குக; துன்பமும், மிடிமையும், நோவும்;
சாவும் நீங்கிச் சார்ந்தபல் லுயிரெலாம்
இன்புற்று வாழ்க' என்பேன்! இதனைநீ
திருச்செவி கொண்டு திருவுளம் இரங்கி
'அங்ஙனே ஆகுக' என்பாய் ஐயனே!

என்று இக்காட்சியை நிதர்சனமாகக் காட்ட வைக்கின்றார். மற்றொரு பாடலில்;

கிருத யுகத்தினைக் கேடின்றி நிறுத்த
விரதம்நான் கொண்டனன்; வெற்றி
தருஞ்சுடர் விநாயகன் தாளிணை வாழியே![24]

21. தோ. பா : வி. நா. மா. 8.
22. ஷை. 37 ஹே காளீ!—2.
23. தோ. பா ; வி. நா. மா. 22
24. ஷை. ஷை. 40.

என்று இக்'கலியுகத்தில்' கிருதயுகத்தை நிறுத்த விரதம் கொண்டதை எடுத்து விளம்புகின்றார். இந்த மன உறுதியை மீண்டும்;

பொய்க்கும் கலியை நான்கொன்று
பூலோக கத்தார் கண்முன்னே
மொய்க்கும் கிருத யுகத்தினையே
கொணர்வேன், தெய்வ விதியிஃதே.[25]

என்ற பாடற்பகுதியில் தம் இறுதிக் குறிக்கோளாகக் கொண்டுள்ள தைத் தெளிவுபடுத்தியுள்ளார். தாம் வாழுங்காலத்திலேயே கிருத யுகத்தைக் காணல் வேண்டும் என்று பேரவாக் கொண்டிருந்தார்.

சூழ்க ! துயர்கள் தொலைந்திடுக!
தொலையா இன்பம் விளைந்திடுக!
வீழ்க கலியின் வலியெல்லாம்!
கிருத யுகந்தான் மேவுகவே![26]

என்றும் கூறுவதால் இதனை யறியலாம். நான்காவதாக, உலகங் காக்கும் இறைவனைத் தம் குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக வேண்டுவதைப் பல பாடல்களில் கண்டு மகிழலாம். முருகப் பெருமானைப் போற்றிப் பாடும் போதும்,

நீறு படக்கொடும் பாவம் பிணிபசி
யாவையும் — இங்கு
நீக்கி அடியாரை நித்தமும்
காத்திடும் வேலவா![27]

என்று, இறைவன் அடியாரைக் காத்திடுவான் என்பதைக் குறிப்பிடு வார் அடியார், என்பதற்கு 'மக்கள்' என்ற பொருளைக் கொள்ளல் பொருந்தும். 'மக்கள்' யாவரும் இறைவனின் பிள்ளைகள்தாமே ! 'பராசக்தி' மீதுள்ள பாடலொன்றில் காணும் கருத்து அற்புதமா யுள்ளது. இன்று கவிபாடுவோரை 'அது பாடு, இது பாடு' என்று மக்கள் கேட்பது போல், பாரதியாரையும் அக்காலத்தில் கதைகள் சொல்லிக் கதைகள் எழுதுமாறு சிலர் கேட்டனர்; நீண்ட காவியத்தைப் படைக்குமாறு சிலர் வேண்டினர்; மக்களைப்பற்றிய சித்திரங்களை விதவிதமாகத் தீட்டுமாறும், நாடகச் செய்யுளை நல்குமாறும் பலர் பணித்தனர். ஆனால், அவர் இதயம் பராசக்தி ஒன்றையே பாடுமாறு பணித்தது. கவிஞரே கூறுகின்றார் :

---

25. ஷை. ஷை. — 39
26. ஷை. ஷை — 35
27. தோ. பா : 3 வேலன் பாட்டு — 3

நாட்டு மக்கள் பிணியும் வறுமையும்
நையப் பாடென் றொருதெய்வம் கூறுமே;
கூட்டி மானுடச் சாதியை ஒன்றெனக்
கொண்டு வையம் முழுதும் பயனுறப்
பாட்டி லேயறங் காட்டெ னு மோர்தெய்வம்;
பண்ணில் இன்பமும் கற்பனை விந்தையும்
ஊட்டி எங்கும் உவகை பெருகிட
ஓங்கும் இன்கவி ஓதெனும் வேறொன்றே.[28]

என்ற இதனைப் படிக்குங்கால் "வாய்கொண்டு மானிடம் பாட வந்த கவியேன் அல்லேன்" [29] என்ற நம்மாழ்வாரின் கூற்றை நினைக்கச் செய்கின்றது. மானிடரைப் பாடாது மாதவனை ஏத்தவேண்டும் என்ற ஆழ்வார் கொள்கையினையும் சிந்திக்கின்றோம்.

உ. சமுதாயக் கேடுகள்

எத்தனையோ விதங்களில் சமுதாயத்தில் பல்வேறு கேடுகளைக் காண்கின்றார் பாரதியார். நாட்டு மக்களிடை காணப்பெறும் கேடான நிலைமைகளை எடுத்துக் காட்டுகின்றார்.

நம்பிக்கைகள் : பாரதியார் காலத்தில்தான் மூட நம்பிக்கைகள் நிலவினதாகக் கருதுதல் கூடாது. அவர் காலத்து மக்களிடையே காணப்பெற்ற மூட நம்பிக்கைகளை இன்றும் காணலாம். பேய்க ளிருப்பதையும், அவை மரத்தில், குளத்தில், வீட்டின் முகட்டில் நடமாடுவதையும் எண்ணி எண்ணி அஞ்சி அஞ்சிச் சாவதை எடுத்துக் காட்டுகின்றார். 'மந்திரவாதி'என்ற பெயரைக் கேட்ட மாத்திரத்லேயே இவர்கள் மனக்கிலி பிடித்துத் தத்தளிப்பர். யந்திர சூனியங்கள் போன்ற பல்வேறு துயர்கள் இவர்கள் மனத்தை வாட்டி நிற்கின்றன.

கிலி பிடித்த நெஞ்சினாய் போ போ போ[30]

என்று இத்தகைய பாரத நாடு இருத்தலாகாது என்று அதைத் துரத்துகின்றார்.

போலி சாத்திரங்களில் நம்பிக்கை : பாரதியார் கருத்துப்படிக் கிருதயுகச் சமுதாய அமைப்புக்கு அரணாக அமைந்தவை நான்மறை களும் சாத்திரங்களும் ஆகும். ஆனால், இறைவன் கோத்து வைத்த அந்த வேதங்களில் பல பொய்ம்மைகள், புலைநடைகள் புகுந்து விட்டனவாகக் கருதுகின்றார் கவிஞர்.

28. தோ. பா. 19. பராசக்தி - 2.
29. திருவாய் 3. 9 : 9.
30. தே. கீ : 16 போகின்ற பாரதமும்.... 1

வேதங்கள் கோத்து வைத்தான்—அந்த
வேதங்கள் மனிதர்தம் மொழியி லில்லை
வேதங்கள் என்று புவியோர்—சொல்லும்
வெறுங்கதைத் திரள்களில் அவ்வேதமில்லை [31]

என்று அவற்றைச் சாடுவதை இதில் காணலாம். பிறிதோர் இடத்தில்,

'தமிழ் நாட்டிலே சாஸ்திரங்களில்லை. உண்மையான சாஸ்திரங்களை வளர்க்காமல், இருப்பனவற்றையும் மறந்துவிட்டுத் தமிழ்நாட்டுப் பார்ப்பார் பொய்க்கதைகளை மூடரிடம் காட்டி வயிறு பிழைத்து வருகிறார்கள்'[32] என்று கூறுவார். பின்னுமோரிடத்தில்,

சாத்திரம் கோடி வைத்தாள் ; —அவை
தம்மினும் உயர்ந்ததோர் ஞானம் வைத்தாள் ;
மீத்திடும் பொழுதனிலே—நான்
வேடிக்கை யுறக்கண்டு நகைப்பதற்கே
கோத்தபொய் வேதங்களும்—மதக்
கொலைகளும் அரசர்தம் கூத்துகளும்
மூத்தவர் பொய்ந்நடையும்—இள
மூடர்தம் கவலையும் அவள்புனைந்தாள்[33]

என்று குறிப்பிடுகின்றார். இந்தப் பொய்களைப் பாராட்டுகின்றான் என்று கருதியே அவர் காலத்து இந்தியனை,

சென்றுபோன பொய்யெலாம் மெய்யாகச்
சிந்தைகொண்டு போற்றுவாய் போ போ போ[34]

என்று துரத்தியடிக்கின்றார் இன்னுமோரிடத்தில்,

விசுவா மித்திரன், வசிட்டன், காசிபன்
முதலியோர் செய்த முதல்நூல் மறைந்தது ;
பொய்ந்நூல் பெருகின ; பூமியின் கண்ணே
வேதங் கெட்டு வெறுங்கதை மலிந்தது
போதச் சுடரைப் புகையிருள் சூழ்ந்தது[35]

என்று கூறுவர். இதில் பாரதப் பழமையாகிய பொற்காலம் ஒன்று இருந்ததென்றும், அது எல்லா வகையிலும் உயர்வுடன் திகழ்ந்ததென்றும், காலப்போக்கில் பொய்யும் வழுவும் புகுந்தமையால் அந்தப் பொற்

---

31. க. பா : கண்ணன்—என் தந்தை—7
32. வசன கவிதைகள்—(காற்று-10)
33. க. பா : கண்ணன்—என் தாய்—9
34. தே. கீ : போகின்ற பாரதமும்....2
35. வசன கவிதைகள் : 6. விடுதலை (நாடகம்)—அங்கம் 1 : காட்சி 1.

காலமாம் 'கிருதயுகம்' மாறிக் 'கலி' தலையெடுத்தது என்றும் தெரிவிப்பர். மனிதர்கள் உயர்நிலையை மீண்டும் அடைய வேண்டுமானால் கலியை வென்று கிருத யுகத்தை நிலை நாட்ட முயல வேண்டும் என்கின்றார். இந்த எண்ணத்தில் பாரதியார் மறுமலர்ச்சிச் சிந்தனையாளர்களின் கூட்டத்தில் ஒருவராகச் சேர்ந்துவிடுகின்றார்.

போலிச் சாத்திரங்களை ஊன்றுகோல்களாகக்கொண்டு இக்கால மக்களைக் குறிப்பிடும் போக்கில் அத்தினபுர மக்களைக் காட்டுகின்றார் :

சிந்தையிலறமுண்டாம் ;—எனிற்
சேர்ந்திடும் கலிசெயும் மறமு முண்டாம்
மெய்த்தவர் பலருண்டாம் :—வெறும்
வேடங்கள் பூண்டவர் பலருண்டாம் ;
உய்த்திடு சிவஞானம்—கனிந்
தோர்ந்திடும் மேலவர் பலருமுண்டாம் ;
பொய்த்த விந்திரசாலம்—நிகர்
பூசையும் கிரியையும் புலைநடையும்
கைத்திடு பொய்ம்மொழியும்—கொண்டு
கண்மயக் காற்பிழைப் போர்பலராம்[36]

இப்பகுதியைப் படிக்கும்போது போலி வேடத்துடன் நடமாடும் இல்லறத்தார்களும்போலித்துறவுக் கோலத்தில் உலவும் துறவிகளும் நம் கண் முன்னே தோன்றுகின்றனர். வீட்டுமாச்சாரியன்

வேத முனிவர் விதிப்படி, நீ சொல்லுவது
நீதமெனக் கூடும் ; நெடுங்காலச் செய்தியது[37]

என்ற வாக்கிலும் இதனைக் காணலாம். பாவேந்தர் பாரதிதாசனும் இந்நிலையை ஆங்கிலேயனின் வாக்காக,

பேதம் வளர்க்கப் பெரும்பு ராணங்கள்
சாதிசண் டைவளர்க்கத் தக்கஇதி காசங்கள்
கட்டிச் சமூகத்தின் கண்ணவித்துத் தாமுண்ணக்
கொட்டி அளக்கும் குருக்கள் கணக்கற்றார்
தேன்சுரக்கப் பேசிஇந்து தேசத்தைத் தின்னுதற்கு
வான்சுரரை விட்டுவந்த பூசுரரும் வாழ்கின்றார்.[38]

என்று காட்டுவர்.

36. பா. ச : 1. 3 : 8, 9.
37. ஷை : 5·64 : அடி 57—58
38. பாரதிதாசன் ; சஞ்சீவி பர்வதத்தின் சாரல்.

சாதி வெறி : தன்னாட்டுப்பற்றும் தன்னரசுப்பற்றும், தன் மொழிப்பற்றும் இருக்க வேண்டிய இடத்தில் அவையெல்லாம் மாயா ஜால வடிவங்கொண்டு சாதி வெறிதலை விரித்தாடுகின்றது. தேர்தல் சமயத்தில் கட்சி வெறி, சாதி வெறியாக மாறிப் புதுக்கோலம் கொள்வதை எம்மருங்கும் காணலாம். தம் காலத்தில் இந்தச் சாதி வெறியைக் கண்டு வெகுண்டெழுந்தார் பாரதியார்.

ஆயிரம் உண்டிங்கு சாதி—எனில்
அன்னியர் வந்து புகலென்ன நீதி—ஓர்
தாயின் வயிற்றிற் பிறந்தோர்—தம்முட்
சண்டைசெய் தாலும் சகோதர ரன்றோ ?[39]

என்று புதுக் குறைகளைப் புதிய நடையில் பாடுகின்றார். இந்தப் பாடல் முழுவதையும் 'நவீன கீதை'யாகக் கொள்வர் பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை.[40]

பாரதியார் சாதிக் கொடுமையைத் தகர்த்தெறியக் குழந்தையை அடிப்படையாகக்கொண்டு தொடங்கினார். பிஞ்சு மனங்களில் அவர் விதைத்த அறிவுரை விழலுக்கிறைத்த நீராக ஆயிற்று. மூத்தவர்களின் நடத்தைக் கோலங்களை நேருக்கு நேர் காணும் குழந்தைக்கு இந்த அறிவுரை கறிக்குதவாத ஏட்டுச் சுரைக் காயாயிற்று.

சாதிகள் இல்லையடி பாப்பா—குலத்
தாழ்ச்சி உயர்ச்சிசொல்லல் பாவம் !
நீதி உயர்ந்தமதி கல்வி—அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்[41]

என்ற பாடல் குழந்தையின் உள்ளத்தில் ஆழப்பதியத் தக்கவகையில் தான் உணர்ச்சியோடு அமைந்துள்ளது. ஆனால், அது நீர்க்குள் பாசி போல்வேர் கொள்ளாமல் கிடக்கின்றது. நாடோறும் சாதிப் பிரிவினை நிரந்தரமாகவே இருக்கும் சூழ்நிலைதான் வளர்ந்துகொண்டு வருவதைக் காண்கின்றோம். தேர்தல் காலத்தில் இந்தப் பிரிவினை பேராற்றலைப் பெற்று வருவதைக் காண்கின்றோம்.

பிறப்பினால் உயர்வு கற்பித்த கொள்கை ஆழ்வார்கள் காலத்திலேயே தகர்ந்தது. பிறப்பினால் பார்ப்பனரல்லாத நம்மாழ்வாரைப்

39. தே. கீ. : 11. வந்தேமாதரம்-3
40. பத்மநாபன், ரா. அ : பாரதியார் கவிநயம் (தொகுப்பு) 10வது கட்டுரை.
41. பல்வகைப் பாடல்கள் : 2 பாப்பாப் பாட்டு—15

பார்ப்பன' குலத்தில் பிறந்த வேறு ஆழ்வார்கள் தம் தலைவராகவே கொண்டனர். சண்டாள சண்டாளர்களாயினும் அவர்கள் மணிவண்ண னுக்கு ஆள் ஆகிவிட்டால் அவர்கள் உயர்ந்தவர்கள் ஆகின்றனர் என்பது நம்மாழ்வாரின் கருத்து.[41] இங்ஙனமே வேளாளர் குலத்தில் உதித்த நாவுக்கரசர் பார்ப்பன குலத்தில் பிறந்த சம்பந்தராலும் நம்பியாரூராலும் போற்றப்பெற்றார். பாரதியார் சாதிக்கொள் கைக்கு அப்பாற்பட்ட ஒரு வேதாந்தி. வசன கவிதையில் அவர் 'வைதிகம்', 'வைதிக மனுஷன்' (Orthodox man) என்றே சுட்டப் பெறுகின்றார்.[43] இந்த வைதிகப் பார்ப்பார்தான்,

நந்தனைப் போலஒரு பார்ப்பான் — இந்த
நாட்டினில் இல்லை; குணம்நல்ல தாயின்
எந்தக் குலத்தின ரேனும் — உணர்
வின்பம் அடைதல் எளிதெனக் கண்டோம்.[44]

இதே பாடலில்,

சூத்திர னுக்கொரு நீதி — தண்ட
சோறுண்ணும் பார்ப்புக்கு வேறொரு நீதி;
சாத்திரம் சொல்லிடு மாயின் — அது
சாத்திரம் அன்று சதிஎன்று கண்டோம்.

என்று வற்புறுத்திப் பேசுவர். மேற்குலத்தவர் யாவர்? கவிஞரையே கேட்போம்:

வையகம் காப்பவ ரேனும் — சிறு
வாழைப் பழக்கடை வைப்பவ ரேனும்
பொய்யக லத்தொழில் செய்தே — பிறர்
போற்றிட வாழ்பவர் எங்கணும் மேலோர்.

என்று இதே கவிதையில் அடித்துப் பேசுவர்.

'ஜாதிக் குழப்பம்' என்ற தலைப்பில் பாரதியார் குறிப்பிடும் நிகழ்ச்சி ஒன்று, சாதிக் கொள்கை எவ்வளவு ஆழத்தில் வேரூன்றி யுள்ளது என்பது தெரியவரும். கடையத்தில் (நெல்லை மாவட்டத்தி லுள்ள ஓர் ஊர்)ஒரு செல்வந்தர் வீட்டுச் சிறப்பு நிகழ்ச்சிக்கு கோவில் யானையைக் கொண்டுவந்திருந்தனர். அது ஆண்யானை; 18 வய துள்ள குட்டி. துஷ்ட யானை என்று பேர் பெற்றிருந்தது. இந்த யானைக்கு மாவுத்தர் ஒரு பிராமணன் (சாதாரணமாக முகம்மதியரும் இந்துக்களில் தணிந்த சாதியாருமே மாவுத்தராக இருப்பது

42. திருவாய். 3. 7 ; 9.
43. வசன கவிதைகள் : 3 காற்று — (1)
44. புதிய பாடல்கள் — 19 உயிர்பெற்ற தமிழர் பாட்டு

வழக்கம்). இந்த மாவுத்தன் அந்த யானையைக் கருணையின்றி அடித்துக்கொண்டிருந்ததைக் கண்ட பாரதியார் அவனிடம் 'மிருகங்களை அன்பினால் பழக்கவேண்டும்' என்று இதோபதேசம் செய்ய, உடனே அவன் தன் சாத்திரக் கட்டுகளை நீளமாக அவிழ்த்து விரிக்கத் தொடங்கினான். "இந்த யானை கீழ்ஜாதியானை' யானைகளில் பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் என்ற நான்கு முக்கிய ஜாதிகளுண்டு. ஒவ்வொரு ஜாதியிலும் கிளை வகுப்புகளிருக்கின்றன. அவற்றுள் இது சூத்திர ஜாதியைச் சேர்ந்த யானை. மனிதர்களில் சூத்திரர்களுக்குள்ளே ஈழுவர் என்ற ஜாதியார் இருக்கிறார்களே, அதேமாதிரி இந்த யானை 'வீரன்' வகுப்பைச் சேர்ந்தது" என்பதாக.......பாரதியார் கூறுகின்றார் : "நான் இந்த விஷயத்தை இங்கு எடுத்துச் சொல்லியதன் நோக்கம் யாதெனில், நம்மவர்கள் மனத்தில் இந்த ஜாதிக்கொள்கை எத்தனை ஆழமாகப் பதிந்திருக்கிறது என்பதை உணர்த்தும் பொருட்டேயாம். யானையை எடுத்தால் அதில் பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்! குதிரையிலும் அப்படியே! வானத்திலுள்ள கிரகங்களிலும் அதே மாதிரி பிரம்ம, க்ஷத்திரிய, முதலிய ஜாதிபேதங்கள். இரத்தினத்திலும் அப்படியே!"[45]

இந்தச் சாதிக் கொடுமை பாட்டியல் இலக்கணம் எழுந்த காலத்தில் தமிழ் எழுத்துகளில் நான்கு வருணத்தாருக்கும் உரிய எழுத்துகள் எவை எவை என்று பாகுபாடு செய்திருப்பதில் காணலாம். கற்றறிந்த புலவர்கள் செய்த விநோத செயல்களில் இதுவும் ஒன்று.

"சாதிக் கொடுமைகள் வேண்டாம்"[46] என்று கூறியவர் பாரதியார்.

> சாதிப் பிரிவுகள் சொல்லி — அதில்
> தாழ்வென்றும் மேலென்றும் கொள்வார்
> நீதிப் பிரிவுகள் செய்வார் — அங்கு
> நித்தமும் சண்டைகள் செய்வார். [47]

என்றும் இக்கொடுமைகளை வகுத்தும் காட்டியுள்ளார்.

> வெள்ளை நிறத்தொரு பூனை — எங்கள்
> வீட்டில் வளருது கண்டீர்;
> பிள்ளைகள் பெற்றதப் பூனை; — அவை
> பேருக் கொருநிற மாகும்.

---

45. பாரதியார் கட்டுரைகள் — பக். 399-400
46. ப. பா : — 3. முரசு — 8
47. ஷை. ஷை — 7

சாம்பல் நிறமொரு குட்டி, — கருஞ்
சாந்து நிறமொரு குட்டி
பாம்பு நிறமொரு குட்டி, — வெள்ளைப்
பாலின் நிறமொரு குட்டி.

எந்த நிறமிருந் தாலும் — அவை
யாவும் ஒரேதர மன்றோ?
இந்த நிறம்சிறி தொன்றும் — இஃது
ஏற்ற மென்றும்சொல்ல லாமோ?[48]

இப்படி நியாயங்கள் கூறி, வண்ணங்கள் வேறுபட்டாலும் மானிடர்கள் வேற்றுமையில்லை என்றும், எண்ணங்களும் செயல்களும் ஒன்றாகவே இருக்கின்றன எனறும் கூறிச் சாதிப் பிரிவினையைக் கண்டிக்கின்றார்.

இக் கூற்றுகளுக்கு முரணாக இவரே இதே பாட்டின் தொடக்கத்தில் சாதிப்பிரிவு 'வருணாசிரம தருமத்தின்' அடிப்படையில் அமைந்ததாகக் கூறுகின்றார்.

வேதம் அறிந்தவன் பார்ப்பான் — பல
வித்தை தெரிந்தவன் பார்ப்பான்
நீதி நிலைதவ றாமல் — தண்ட
நேமங்கள் செய்பவன் நாய்க்கன்.

பண்டங்கள் விற்பவன் செட்டி — பிறர்
பட்டினி தீர்ப்பவன் செட்டி
தொண்டரென் றோர்வகுப் பில்லை — தொழில்
சோம்பரைப் போல்இழி வில்லை.

மானிடச் சாதி தொழில் அடிப்படையில் பார்ப்பான், செட்டி, நாய்க்கன், தொழிலாளி (?) என்று நான்கு குலங்களாகப் பிரிந்திருந்தால்தான் ஞாலம் சீராக வளர முடியும் என்று கருதுகின்றார்.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.[49]

என்ற வள்ளுவர் கோட்பாட்டின்படி சாதிப்பிரிவு தொழிலினால் ஏற்பட்டதேயன்றிப் பிறப்பினால் ஏற்பட்டதன்று என்பதை ஒப்புக்கொண்டுதானாக வேண்டும். ஏனென்றால், எல்லாச் சாதியினரும் எல்லாத் தொழில்களிலும் ஈடுபட்டிருப்பதைக் காண்கின்றோம். பாரதியாரும் இந்த நான்கு வகுப்பும் இங்கு ஒன்றேயென்றும், இந்த நான்கினில் ஒன்று குறைந்தாலும்;

48. ஷை - ஷை. 14, 15, 16.
49. குறள் — 972

வேலை தவறிச் சிதைந்தே—செத்து
வீழ்ந்திடும் மானிடச் சாதி.

என்கின்றார். இங்குக் கவிஞர் வீண் கவலை கொள்ளுகின்றார் என்றே தோன்றுகிறது. பிறப்பின் அடிப்படையில்தான் தொழில் செய்ய வேண்டும் என்ற கருத்தினால்தான் இந்தக் கவலை—குழப்பம்—கவிஞரிடம் எழுந்ததாகவே தோன்றுகிறது. வேலையும் தவறிச் சிதையாது; மானிடச் சாதியும் செத்து வீழ்ந்திடாது. இலாபம் கருதி எல்லாத் தொழில்களையும் எல்லாச் சாதியாரும் மேற்கொள்வதால் உலகம் சரி வர இயங்கிக்கொண்டுதான் வரும். எனவே, தொழிலை மேற்கொள்ளும் தகுதி பிறப்பினால் ஏற்பட்டது என்ற கொள்கை தானாகவே தகர்ந்து போகின்றது.

இந்தக் குலப்பிரிவு இறைவனால் வகுக்கப்பட்டதாகவும், பிற்காலத்தில் மனிதர்கள் அந்த அமைப்பை நாசமுறப் பண்ணிவிட்டதாகவும் கவிஞர் கருதுவது மற்றொரு குழப்பம்.

நாலு குலங்கள் அமைத்தான் ;—அதை
நாசமுறப் புரிந்தனர் மூடமனிதர்[50]

என்ற கூற்று குழப்பத்தினால் எழுந்ததே. ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்பதே உண்மை. அடுத்த அடி பாடும்போதே இக் குழப்பம் நீங்கி விடுகின்றது கவிஞருக்கு.

சீலம் அறிவு கருமம்—இவை
சிறந்தவர் குலத்தினில் சிறந்தவராம்;
மேலவர் கீழவ ரென்றே—வெறும்
வேடத்திற் பிறப்பினில் விதிப்பனவாம்

என்று உண்மையை நவின்றுவிடுகின்றார்.

போலிச் சுவடியை யெல்லாம்—இன்று
பொசுக்கிவிட்டா லெவர்க்கும் நன்மையுண்டென்பான்

என்று கண்ணன் வாக்கில் வைத்துப் பேசுகின்றார்; தந்தை பெரியார் பாணியில் பேசுகின்றார். நாட்டில் தாண்டவமாடும் சாதி வெறியைக் கண்டு இவ்வாறு வெகுண்டுரைக்கின்றார் என்று கருதலாம்.

ஒற்றுமையின்மை : இந்த நோய் மனித சாதியிடம் புற்றுநோய் போல் வளர்ந்து வருவதை இன்றும் காணலாம். எல்லாக் கட்சிகளிலும் பிளவுகள் தோன்றுவது அந்நோயின் அறிகுறிகளாகும். அரசியல் கட்சிகளின் பிளவுகளை,

---

50. க. பா : கண்ணன்—என் தந்தை—8

எங்கள் நாட்டில்
கட்சிகள் பற்பல
குட்டிகள் போடும். [51]

என்று ஒரு புதுக்கவிதை கிண்டல் செய்கின்றது. ஒவ்வொரு குடும்பத்திலும் இப்பிரிவு நோய் ஊடுருவிக் கிடக்கின்றது. இந்நிலையை எண்ணி

கொஞ்சமோ பிரிவினைகள்!—ஒரு
கோடிஎன் றால்அது பெரிதாமோ? [52]

என்று ஏங்குகின்றார். ஒவ்வொரு நிகழ்ச்சியும் பிரிவுக்கு வித்திடும் கொடுமையை அவர் நெஞ்சு பொறுக்க முடியவில்லை.

ஐந்துதலைப் பாம்பென் பான்—அப்பன்
ஆறுதலை யென்று மகன் சொல்லிவிட்டால்
நெஞ்சு பிரிந்திடுவார்—பின்பு
நெடுநாள் இருவரும் பகைத்திருப்பார்.

என்று பிரிவுக்குக் காரணமாயுள்ள சிறு நிகழ்ச்சியைக் குறியீடுகளினால் விளக்குகின்றார் கவிஞர்.

ஒன்றுபட் டால்உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே [53]

என்று நவீன கீதையின் வாக்காகக் கவிஞர் ஒலிக்கின்றார். இதில் ஒற்றுமையின்மையின் கேட்டினை எடுத்துக் காட்டி ஒற்றுமையின் இன்றியமையாமையை விளக்குவதைக் காணலாம்.

பெண்ணுரிமை : பெண்ணுரிமைபற்றிய சிந்தனை பாரதியாரிடம் மிகுதியாகவே இருந்தது. பெண்களுக்கு இவ்வுரிமை மிகவும் இன்றியமையாதது என்று வற்புறுத்துவர். சுய சரிதையில் இவர்,

பெண்ணுக்கு விடுதலையென் றிங்கோர் நீதி
பிறப்பித்தேன்; அதற்குரிய பெற்றி கேளீர்
மண்ணுக்குள் எவ்வுயிரும் தெய்வ மென்றால்
மனையாளும் தெய்வமன்றோ? மதிகெட் டீரே!

....

பெண்ணுக்கு விடுதலைநீ ரில்லை யென்றால்
பின்னிந்த உலகினிலே வாழ்க்கை யில்லை [54]

51. மீரா : ஊசிகள்— தலை குனிவு'—பக். 57
52. தே.கீ : 15. பாரத மக்களின் தற்கால நிலைமை—4
53. ஷை : 1. வந்தே மாதரம்—4
54. பாரதி அறுபத்தாறு—45

என்று பெண் விடுதலையை வற்புறுத்துவர். நம்மைப் பிறப்பித்துப் பாலூட்டிச் சீராட்டிப் பாராட்டி வளர்த்த தாய் உமையவளுக்கு ஒப்பாவாள் என்பது கவிஞரின் அதிராக் கொள்கை. தாய்க்கு மேல் இவ்வுலகில் வேறொரு தெய்வம் இல்லை என்பது இவர் கருத்து. 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்ற ஔவைப் பாட்டியின் வாக்கிலும் 'அன்னைதானே' முதலிடம் பெறுகின்றாள்? ஓரிடத்தில்,

> வலிமை சேர்ப்பது தாய்முலைப் பாலடா!
> மானஞ் சேர்க்கும் மனைவியின் வார்த்தைகள் [54]

என்று அன்னையையும் மனைவியையும், உயர்த்திப் பேசுவர். இன்னும்,

> 'போற்றி தாய்'என்று தோள்கொட்டி யாடுவீர்
> புகழ்ச்சி கூறுவீர் காதற் கிளிகட்கே [55]

என்று இதற்கு அரணும் அமைத்துக் காட்டுவர். 'காதல் செயும் மனைவியே சக்தியென்றும், கடவுள்நிலை அவளாலே எய்த வேண்டும்' என்றும் கூறுவர்.[56]

ஆணும் பெண்ணும் சமம் என்று முற்கால நூல்கள் கூறும், ஆணே உயர்வு, பெண் அடிமை என்பது தற்கால நூல்கள் புரட்டிப் பேசும்.

> இப்பொழுதை நூல்களினை யெண்ணுங்கால் ஆடவருக்
> கொப்பில்லை மாதர்; ஒருவன்தன் தாரத்தை
> விற்றிடலாம்; தானமென வேற்றவர்க்குத் தந்திடலாம்
> முற்றும் விலங்கு முறைமையன்றி வேறில்லை [57]

என்ற வீட்டுமன் பேச்சில் இதனைக் காணலாம்.

> புதுமைப் பெண்ணிவள் சொற்களும் செய்கையும்
> பொய்மை கொண்ட கலிக்குப் புதிதன்றிச்
> சதும றைப்படி மாந்தர் இருந்தநாள்
> தன்னி லேபொது வான வழக்கமாம் [58]

என்று புதுமைப்பெண் வாயில் வைத்துப் பேசுவர்.

> ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
> அறிவி லோங்கிஇவ் வையம் தழைக்குமாம் [59]

54. ப. பா : 5. பெண்மை—50
55. ஷை — ஷை — 7
56. பாரதி அறுபத்தாறு—50
57. பா. ச—5.64 : அடி (61—64)
58. ப.பா : 4. புதுமைப் பெண்—6
59. ஷை ஷை 4
பா—7

என்று புதுமைப் பெண்ணையே பேச வைக்கின்றார். பிறி தோரிடத்தில்,

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான்—புவி
பேணி வளர்த்திடும் ஈசன்;
மண்ணுக் குள்ளே சிலமூடர்—நல்ல
மாத ரறிவைக் கெடுத்தார் [60]

என்றும்,

கண்கள் இரண்டில் ஒன்றைக்—குத்திக்
காட்சி கெடுத்திட லாமோ?
பெண்க ளறிவை வளர்த்தால்—வையம்
பேதைமை யற்றிடும் காணீர் [61]

என்றும் முரசு கொட்டி முழக்கித் தம் கொள்கையை வற்புறுத்துவர். 'மனைக்கு விளக்கம் மடவார்' என்று நான்மணிக்கடிகையாசிரியரின் கூற்றும் ஈண்டு நினைக்கத் தக்கது.

பெண்களைத் தம் விருப்பம்போல் ஆண்கள் அடக்கியாள்வதைப் பாரதியார் விரும்பவில்லை. மாட்டை வசக்கித் தொழுவினில் மாட்டும் வழக்கத்தைப் போன்ற ஒரு வழக்கத்தை வீட்டிலுள்ள பெண்களிடம் காட்டுவதை இவர் விரும்பவில்லை. நாயை விற்பது போல் பெண்களை விற்கும் பழக்கத்தை வெறுப்பவர் பாரதியார் பெண்களின் கற்பைப்பற்றி ஆண்கள் எப்போதும் ஈரமின்றிக் கதைப்பதையும், அதனைப் பெண்களுக்கு எடுத்துக் காட்டுவதையும் இவர் விரும்புவதில்லை. கற்பு ஆணுக்கும் பெண்ணுக்கும் பொது வென்பது கவிஞரின் கொள்கை.

ஆணெல்லாம் கற்பைவிட்டுத் தவறு செய்தால்
அப்போது பெண்மையுங்கற் பழிந்தி டாதோ?
நாணற்ற வார்த்தையன்றோ? வீட்டைச் சுட்டால்
நலமான கூரையுந்தான் எரிந்தி டாதோ? [62]

என்று கவிஞர் பேசுவதைக் காண்க.

கற்பு நிலையென்று சொல்லவந் தார், இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம் [63]

என்று பெண்களையே கும்மியடித்துச் சொல்லச் செய்வர்; பெண் கல்விதான் பெண்களை முன்னேற்றமடையச் செய்யும் என்ற கருத்து

60. ஷை. 3 முரசு—9
61. ஷை ஷை—10
62. பாரதி அறுபத்தாறு—56
63. ப.பா: 6. பெண்கள் விடுதலைக் கும்மி—5

களையுடையவர் பாரதியார். கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை யவர்கள்,

> மங்கைய ராகப் பிறப்பதற்கே—நல்ல
> மாதவம் செய்திட வேண்டுமம்மா [64]

என்று தாய்க் குலத்தையே உயர்த்திக் கூறியுள்ளமை ஈண்டு நினைவு கூரத்தக்கது.

பொதுவுடைமைக் கருத்து : பாரதியாரின் மேல்மனத்தில் எப்போதும் சமூகத்தில் நிலவும் கேடுகள் தோன்றிக்கொண்டிருந்தன; அவர் உள்மனம் அதற்குரிய கழுவாயைச் சிந்தித்துக்கொண் டிருந்தது. இதன் காரணமாகவே எதைப்பற்றிப் பாடினாலும் சமுதாயத்தைப்பற்றிய எண்ணம் நிழலிடுவதைக் காணலாம். இரஷ்யப் புரட்சியை 'மாகாளி பராசக்தியின் கடைக்கண் நோக்கு' என்றே கருதுகின்றார் நம் கவிஞர். அதனால்தான் அங்கு 'ஆகா வென் றெழுந்ததுபார் யுகப் புரட்சி' என்று சங்கநாதம் செய்கின்றார். இஃது உலகிற்கோர் புதுமை என்பது பாரதியாரின் கருத்து.

அந்த நாட்டில் 'பொய் சூது தீமையெல்லாம் அரணியத்தில் பாம்புகள்போல் மலிந்து வளர்ந்தோங்கின'. மேலும் அந்நாட்டில்,

> உழுதுவிதைத் தறுப்பாருக் குணவில்லை ;
> பிணிகள்பல உண்டு ; பொய்யைத்
> தொழுதடிமை செய்வார்க்குச் செல்வங்கள்
> உண்டு ; உண்மை சொல்வோர்க் கெல்லாம்
> எழுதரிய பெருங்கொடுமைச் சிறையுண்டு. [65]

இன்னும் அங்கு,

> இம்மென்றால் சிறைவாசம் ; ஏனென்றால்
> வனவாசம் ; இவ்வா றங்கே
> செம்மையெலாம் பாழாகிக் கொடுமையே
> அறமாகி

நின்றது. இந்த நிலையில்தான் பராசக்தி கண் விழிக்கின்றாள். இதனைக் கவிஞர்,

> அம்மைமனங் கனிந்திட்டாள் ; அடிபரவி
> உண்மைசொலும் அடியார் தம்மை
> மும்மையிலும் காத்திடுதல் விழியாலே
> நோக்கினாள் ; முடிந்தான் காலன். [66]

---

64. மலரும் மாலையும் — 73. பெண்களின் உரிமைகள்—1
65. தே. கீ. 52. புதிய உருஷியா—3
66. ஷை ஷை 4

என்கின்றார். ஜாரரசனைச் சூழ்ந்துகொண்டு முகத்துதி பாடி அவன் பாட்டுக்குத் தாளம் போடும் சுயநலவாதிகள் சரிந்ததை,

சமயமுள படிக்கெல்லாம் பொய்கூறி
அறங்கொன்று சதிகள் செய்த
சுமடர்சட சடவென்று சரிந்திட்டார்,
புயற்காற்றுச் சூறை தன்னில்
திமுதிமென மரம்விழுந்து காடெல்லாம்
விறகான செய்தி போல.[67]

என்று காட்டுவர். இதனை மேலும்;

இடிபட்ட சுவர்போல கலிவிழுந்தான்
கிருதயுகம் எழுக மாதோ ![68]

என்று குறியீட்டாக விளக்குவர்.

வறுமைத் துன்பத்தில்வாடிய கவிஞருக்குப் 'பசிப்பிணி' என்பது நன்கறிந்த அநுபவம். சமூகத்தில் பலர் உணவின்றி வாடுதலைக் காணக் கவிஞருக்கு மனம் பொறுக்க முடியவில்லை. ஏதாவது தொழில் செய்து பிழைக்கவேண்டும் என்பது கவிஞரின் அதிராக் கொள்கை.

முன்புநிற் கின்ற தொழிலே சக்தி
முக்தி நிலையின் முடிவே சக்தி.[69]

என்ற கூற்று இதனை அரண் செய்யும்.

வையகம் காப்பவ ரேனும்—சிறு
வாழைப் பழக்கடை வைப்பவ ரேனும்
பொய்யக லத்தொழில் செய்தே—பிறர்
போற்றிட வாழ்பவர் எங்கணும் மேலோர்.[70]

என்ற பாடல் பின்னும் இந்த அரணுக்கு வலிவூட்டும்.

இரந்து வாழ்தல் பாரதியாருக்குப் பிடிக்காத செயல்.

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்.[71]

என்று பாடிய வள்ளுவர்வழி வந்தவர் நம் கவிஞர் பெருமான். 'பாரத சமுதாயம்' எப்படியிருக்க வேண்டும் என்பதை,

---

67. ஷை. ஷை—5
68. ஷை. ஷை—6
69. தோ. பா. 21 சக்தி—1
70. புதிய பாடல்கள்—19 உயிர் பெற்ற தமிழர் பாட்டு—14
71. குறள்—1062

முப்பது கோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக் கும்பொது உடைமை
ஒப்பி லாத சமுதாயம்
உலகத்துக்கொரு புதுமை.[72]

என்று கற்பனையில் காண்பர். இனிய பொழில்கள் நெடிய வயல்கள் நிறைந்த வளமிக்க நம் நாட்டில், கனியும் கிழங்கும் தானியங்களும் கணக்கின்றித் தரும் நாட்டில்,

மனிதர் உணவை மனிதர் பறிக்கும்
வழக்கம் இனியுண்டோ ?
மனிதர் நோக மனிதர் பார்க்கும்
வாழ்க்கை இனியுண்டோ ?

என்று கேட்கின்றார். இந்த இழிநிலை ஏற்படாதிருப்பதற்கு ஒரு வழியையும் தெரிவிக்கின்றார்.

இனியொரு விதிசெய் வோம்—அதை
எந்த நாளும் காப்போம் ;
தனியொருவனுக் குணவிலை யெனில்
ஜகத்தினை அழித்திடு வோம்.

என்ற பாடற் பகுதியில் இந்த வழியினைக் காணலாம். 'இரஷ்யப் புரட்சி'யைப் போன்ற ஒரு புரட்சி நம் நாட்டில் ஏற்பட வேண்டும் என்று கனவு காண்கின்றாரா என்றுகூட நினைக்கத் தோன்று கின்றது. பாரதியாரின் தாசனாகத் தம்மைச் செய்துகொண்ட பாவேந்தர்,

ஓடப்ப ராயிருக்கும் ஏழை யப்பர்
உதையப்ப ராகிவிட்டால் ஓர்நொ டிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப் பாரீ.[73]

என்று வேகத்துடன் இந்த வழியில் நடக்கவேண்டும் என்பதைத் தெரிவிக்கின்றார். மேற்காட்டிய "தனியொருவனுக்கு" என்ற அடியை நினைந்தே இக்காலப் புதுக் கவிஞர் ஒருவர்,

சமதர்மக் காற்று
சஞ்சாரம் செய்த
அபூர்வ அக்கிரஹாரம்....[74]

---

72. தே. கீ. 17—பாரத சமுதாயம்
73. பாரதிதாசன் கவிதைகள்—உலகப்பன் பாட்டு.
74. 'பாரதி ஒரு பிள்ளையார் சுழி' (கல்கி விடுமுறைச் சிறப்பு மலர்—1981)

என்று இரத்தினச் சுருக்கமாகப் பாரதியாரை எடைபோட்டுக் காண்கின்றார். திருவின் திருவருளால்,

செல்வ மெட்டு மெய்தி—நின்னாற்
செம்மை யேறி வாழ்வேன் ;
இல்லை என்ற கொடுமை—உலகில்
இல்லை யாக வைப்பேன்.[75]

என்று வள்ளுவர் கூறும் 'இன்மையென ஒரு பாவி'[76]யை இல்லாதவாறு செய்வதாகச் சூளுரைக்கின்றார்.

75. தோ. பா : திருவேட்கை—5
76. குறள்—1042

6. கல்விபற்றிய சிந்தனைகள்

தோற்றுவாய் :

பாட்டுத் திறத்தாலே— இவ்வையத்தைப்
பாலித் திடவேணும்[1].

என்ற 'கவிதை வெறி' கொண்ட பாரதியின் சிந்தையில், 'கற்பனையில், சிந்தனையில் எண்ணற்ற உயர்நோக்கங்கள் குமிழியிட்டெழுந்ததை அவர்தம் பாடல்களையும் கட்டுரைகளையும் கற்போர் நன்கு அறிவர். பொதுமக்கள் கடவுளை வழிபடுவதற்குத் திருக்கோயில்கள் இன்றியமையாதவை; வழிபாட்டிற்கு இன்றியமையாத நல்ல சூழ்நிலையையும் தூய்மையையும் போற்றிக் காப்பவை. அதுபோலவே பொதுமக்கள் தம் குழந்தைகள், சிறுவர்கள்; வளர்ந்தவர்கள் இவர்கள் கல்வியில் பயிற்சி பெறுவதற்கு எல்லா நிலைகளிலும் பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் இன்றியமையாதவை என்பதை,

வீடு தோறும் கலையின் விளக்கம்
வீதி தோறும் இரண்டொரு பள்ளி;
நாடு முற்றிலும் உள்ளன ஊர்கள்
நகர்க ளெங்கும் பலபல பள்ளி[2]

என்ற கவிதையில் புலப்படுத்துவர். நாடு விடுதலை பெற்ற பிறகு இந்த நிலையை எம்மருங்கும் காணலாம். வழிவழியாக முன்னோர் தேடி வைத்த அறிவுச் செல்வத்தைப் பின்னால் வரும் இளைஞர்கள் பெற்றுப் பயன்பெற வேண்டும், தம்மையும் உயர்த்தித் தாம் பிறந்த நாட்டையும் உயர்த்த வேண்டும் என்பது கல்விபற்றிக் கவிஞர் கண்ட கனவு. வறுமையின் காரணமாக இளைஞன் ஒருவன் கல்வி பெறுவதற்குத் தடை ஏற்படக் கூடாது என்பதையும் சிந்தித்துள்ளார் கவிஞர். செல்வர்களும் அரசும் இதற்கு வழிவகை செய்தல் வேண்டும் என்பதை வலிவுறுத்துவதுபோல்,

இன்ன றுங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்;
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆல யம்பதி னாயிரம் நாட்டல்;

---

1. தோ.பா. காணி நிலம் வேண்டும்—3.
2. ஷை வெள்ளைத் தாமரை—6.

பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர்வி ளங்கி யொளிர நிறுத்தல்,
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல்[3]

என்று பேசுவர். அப்பொழுதுதான் தமிழகம் 'கல்வி சிறந்த தமிழ் நாடு' என்ற பழம்பெரும் புகழை நிலைநிறுத்தும் என்பது கவிஞரின் நீள் நோக்கு. கல்விபற்றிய இவர்தம் சிந்தனை பல கிளைகளில் சென்றுள்ளது என்பதையும் காண்கின்றோம். நாற்றங்கால்களை நன்கு கவனித்தால்தான் உழவுத் தொழில் வளமாக அமையும். அதுபோலவே குழந்தைகளைத் தொடக்கத்திலிருந்தே சிறந்த முறையில் கல்வி கற்றலில் ஈடுபடுத்த நினைக்கும் கவிஞர்,

காலை எழுந்தவுடன் படிப்பு— பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு;
மாலை முழுதும்விளை யாட்டு— என்று
வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா![4]

என்று பாப்பாவுக்கு—குழந்தைக்கு—அன்பு வழியில் அறிவுரை பகர்கின்றார்.

தொடக்கநிலைக் கல்விக்கு ஒரு பாடத்திட்டத்தையே வகுத்துக் காட்டுகின்றார். (அ) எழுத்து, படிப்பு, கணக்கு; (ஆ) இலேசான சரித்திரப் (வரலாற்றுப்) பாடங்கள்; (இ) பூமி சாஸ்திரம் (புவியியல்); (ஈ) மதப்படிப்பு (சமயக் கல்வி); (உ) ராஜ்ய சாஸ்திரம் (Civics); (ஊ) பொருள் நூல் (Economics); (எ) சயன்ஸ் அல்லது பௌதிக சாஸ்திரம் (இயற்பியல்—Physics) ; (ஏ) கைத்தொழில், விவசாயம் (வேளாண்மை), தோட்டப்பயிற்சி (Gardening), வியாபாரம் (வாணிகம்); (ஐ) சரீரப் (உடற்) பயிற்சி; (ஒ) யாத்திரை (சுற்றுலா-(Excursion). இவற்றை அநுபவ அடிப்படையில் கற்பிக்க வேண்டும் என்று சுட்டியுரைக்கின்றார். நடைமுறையில் மேற்கொள்ள வேண்டியதற்குப் பொதுக் குறிப்புகளையும் தருகின்றார். தாய்மொழி மூலம் கல்வி பயிற்றப் பெறுதல் வேண்டும் என்பது இவர்தம் உயிராய கொள்கை.

ஆங்கிலக் கல்வி : ஆங்கிலக் கல்வி பற்றி இவர் கூறும் கண்டனக் கருத்துகள் மிகைபடக் கூறுவதாகவே தோன்றுகின்றன. காந்தியடிகள், நேரு, இராஜாஜி போன்ற பெருந்தலைவர்கள் இம்

3. டை—9.
4. ப.பா. பாப்பா பாட்டு—6.
5. பாரதியார்-கட்டுரைகள். பக். 353—365

முறைக் கல்வியைப் பெற்றவர்களே. இவர்கள் யாவரும் கெட்டா போனார்கள்? இம்முறைக் கல்வியின் விளைவுபற்றி,

செலவு தந்தைக்கோ ராயிரஞ் சென்றது;
தீதெ னக்குப்பல் லாயிரஞ் சேர்ந்தன;
நலமோ ரெட்டுணை யுங்கண்டி லேனிதை
நாற்ப தாயிரங் கோயிலிற் சொல்லுவேன்
[எட்டுணை-எள்+துணை]

என்று இவர் கூறும் கருத்து ஒப்புக்கொள்ளத்தக்கதாக இல்லை. இந்தக் கல்வி முறையை 'வார்தாக் கல்விமுறை'யாலும், இராஜாஜி கொண்டுவந்த 'குலமுறைக் கல்வி'யாலும் தகர்த்தெறிய முடிய வில்லை; அவைதாம் நம் நாட்டில் செல்லாக்காசாயின. நாடு விடுதலையடைந்து கிட்டத்தட்ட நாற்பதாண்டுகள் ஆயினும் மைய அரசாலும் மாநில அரசாலும் நம் நாட்டுக்கேற்ற கல்வி முறையை வகுக்க இயலவில்லை. இன்னதுதான் நம் நாட்டுக் கல்விமுறை என்று திட்டவட்டமாக உறுதிப்படுத்தவும் இயலவில்லை. பழைய ஆங்கில முறைக் கல்வியில் சில ஒட்டுவேலைகள் செய்கின்றனரேயன்றி, அதனை அடியோடு அகற்றிப் புதுக் கல்வி ஏற்பாட்டை (Curriculum) வகுக்கவில்லை. இங்குப் பாரதியின் கவிதைக்கு மதிப்புத் தரும் அளவுக்குக் கவிதை நுவலும் கருத்திற்குத் தரமுடியவில்லை. நாடு விடுதலை பெறுவதற்குமுன் இஃது ஒரு பிரசாரக் கவிதையாகப் பயன்பட்டிருக்கலாம்; இப்போது இதனைக் கூறுவது பத்தாம் பசலித்தனமாகும். நாமே வகுத்துக்கொண்ட அரசு இன்னும் தாய்மொழிமூலம் கல்வி புகட்ட வழிவகைகளை வகுக்க முடியாம லிருக்கின்றது. அப்படியொருமுறை செயற்பட்டால் பின்விளைவுகள் என்னமோ என்று எண்ணித் தயங்குகிறதோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

அறிவியல் கல்வி: இன்று அறிவியல் வளர்ச்சியை 'அறிவு வெடிப்பு' (Explosion of knowledge) என்று கூறலாம். அணு வாற்றல் ஆய்விலும் விண்வெளி ஆய்விலும் நாடு நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. நாடு விடுதலை பெற்ற பிறகுதான் இத்தகைய துறைகளிலெல்லாம் கவனம் செலுத்த நம் அறிவியலறிஞர்கட்கு வாய்ப்புக் கிட்டியது. அண்மைக் காலத்தில் **ஆரியபட்டா, பாஸ்கரா, ஆப்பிள்** போன்ற விண்கலங்களை-துணைக் கோள்களை-விண்வெளியில் செலுத்தி உலகப் புகழ் பெற்றனர் நம் நாட்டு அறிவியலறிஞர்கள். நாடு விடுதலை பெறுவதற்கு முன்னரே பாரதியார் உள்ளத்தில் அறிவியல் கல்விபற்றிய சிந்தனை ஓடியுள்ளது.

6. சுயசரிதை—29.

புத்தம் புதிய கலைகள்— பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும் ;
மெத்த வளருது மேற்கே— அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை''[7]

என்று மேனாட்டான் ஒருவன் கூறியதாக நினைந்து உள்ளம் குமுறுகின்றார் கவிஞர். அதிலும் 'சொல்லும் திறமை தமிழ்மொழிக் கில்லை'— 'மெல்லத் தமிழினிச் சாகும்' என்ற கூற்றுகள் அவர் உள்ளத்தை உறுத்துகின்றன. இந்தப் பழிதீரக் கவிஞர் நமக்கு வழிகாட்டுகின்றார்.

சென்றிடு வீர்எட்டுத் திக்கும்— கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்[8].

என்றும்,

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்;
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்[9]

என்றும் யோசனை கூறுகின்றார். தமிழில் எல்லாக் கலைகளையும் எழுதவும் விளக்கவும் முடியும் என்பதைச் சிலர் இன்னும் ஒப்புக் கொள்வதில்லை. இவர்கள், தமிழ்மொழியில் எல்லாவற்றிற்கும் தக்க கலைச்சொற்கள் இல்லாத காரணத்தால் இவ்வாறு எண்ணுகின்றனர். எந்த மொழியிலும் அதன் வாயிலாகப் பொருள்களை விளக்க முயன்றாலன்றிப் புதிய கலைகட்கு வேண்டிய சொற்களும் சொற்றொடர்களும் அமைவதில்லை. பொருள்களை - கருத்துகளை - எடுத்துக்கொண்டு விளக்க முயன்றால் இவை தாமாக அமைந்துவிடும். இவ்வாறே மேற்புல மொழிகளனைத்திலும் கலைச்சொற்கள் உண்டாகி அம்மொழிகள் வளர்ச்சியடைந்து வருகின்றன. கலைச்சொற்களை உண்டாக்கிக்கொண்டு தாய்மொழியில் கற்பித்தலைத் தொடங்க வேண்டும் என்று நினைப்பது, நீந்தக் கற்றுக்கொண்ட பிறகு நீரில் இறங்க வேண்டும் என்று எண்ணுவது போலாகும். செயலில் இறங்கினால்தான் அனைத்தும் சீர்படும். தார் சாலை அமைப்பதற்கு முன்னர் மண்சாலை, மண்ணும் பெரிய சல்லிகளும் கலந்த சாலை, மண்ணும் சிறிய சல்லிகளும் கலந்த சாலை என்றிப்படிப் பல படிகளைத் தாண்ட வேண்டியுள்ளதல்லவா? இந்நிலையைத் தாய்மொழி பயிற்றுமொழியாக அமைவதிலும் சந்திக்க நேரிடும். இலக்கிய இலக்கண வளமும், சொற்

7. தே.கீ. தமிழ்த்தாய்—9.
8. ஷை ஷை— 11.
9. ஷை தமிழ்— 3.

களஞ்சியப் பேறும் பெற்றுள்ள தமிழ் மொழியின் நீர்மையை அறிந்து, பிற கலைகளைத் தமிழ்மொழியில் வடித்துத் தரும் பணியில் ஈடுபடுவோர்கள்தாம் 'தமிழ்மொழி அனைத்திற்கும் வளைந்து கொடுக்கும்' என்ற உண்மையை அறிவர். அப்பொழுதுதான் 'சொல்லும் திறமை தமிழ் மொழிக்கில்லை' என்ற வசையும் நீங்கும். தமிழ்மொழியும் வளர்ந்து மேலும் வளம் பெறும்.

உள்ளத்தில் உண்மையொளி யுண் டாயின்
வாக்கினிலே ஒளியுண் டாகும்[10]

என்ற பாட்டடியில் கவிஞரின் 'ஞானம் கனிந்த நலம்' தெளிவாகப் புலனாகும்.

பயிற்றிப் பலகல்வி தந்து— இந்தப்
பாரை உயர்த்திடல் வேண்டும்.[11]

என்று கவிஞர் அறிவியல் கல்விக்கு ஆற்றுப்படுத்துகின்றார். தாய் மொழிமூலம் அக்கல்வி பெற வாய்ப்பு அமைக்கப்பெறுமானால் பருத்தி புடைவையாய்க் காய்த்தது போன்ற பலனை நல்கும். விலைப் பாலைவிட முலைப்பால் சிறந்ததன்றோ?

மந்திரம்கற் போம்வினைத் தந்திரம்கற் போம்;
வானையளப் போம்கடல் மீனையளப் போம் ;
சந்திரமண் டலத்தியல் கண்டுதெளி வோம்;
சந்திதெருப் பெருக்கும் சாத்திரம் கற்போம்.[12]

என்ற கவிதையில் கவிஞரின் அறிவியல் கல்வியில் பேரவா; நிழலிடுவதைக் கண்டு மகிழலாம்.

அறிவியல் கல்வி தமிழில் (தாய்மொழியில்) தரப்பெறவேண்டுமென்பது இவர்தம் கொள்கை. அதற்கு முன்னர் அறிவியல் துறைகட்குரிய கலைச்சொற்களை அறுதியிடல் வேண்டும் என்பதற்கும் கோடி காட்டுகின்றார்; யோசனைகள் கூறுகின்றார்.[13] 'தமிழில் சாஸ்திர பரிபாஷை' 'அஸ்திவாரக் காரியம்', 'பரிபாஷை சேகரிக்க ஒருபாயம்' என்ற தலைப்புகளில் இவற்றைக் காணலாம். இராஜாஜி தலைமையமைச்சராக இருந்த காலத்திலும் (நாடு விடுதலை அடைவதற்கு முன்பு), திரு தி. சு. அவினாசிலிங்கம் கல்வியமைச்சராகப் பணிபுரிந்த காலத்திலும் (விடுதலைக்குப் பின்னர்), திரு. சி. சுப்பிர

10. ஷை. ஷை—4.
11. ப. பா. முரசு—30.
12. தே. கீ. பாரததேசம்— 11.
13. பாரதியார்-கட்டுரைகள். பக். (208-210).

மணியம் கல்வியமைச்சராகப் பணிபுரிந்த காலத்திலும் (விடுதலைக்குப் பின்னர்) கலைச்சொற்கள் தொகுக்கப் பெற்றதை நாம் அறிவோம்.[14] இன்னும் தொடர்ந்து செய்யவேண்டிய பணிகள் நிறைய உள்ளன.

தொழில் கல்வி : தொழில்வளம் பெருகினால்தான் நாட்டு வளம் பெருகும் என்பது இக்காலப் பொருளியல் காட்டும் உண்மை. ஜப்பான் போன்ற சிறு நாடுகளிலும் செல்வம் கொழிப்பதை இன்று நாம் காணாமல் இல்லை. பின்தங்கிய நாடுகளின் 'வளர்ச்சிக்கு இத்தகைய சிறுநாடுகளும் உதவி வருவது நமக்கு வியப்பினை உண் டாக்குகின்றது.

பல்வேறு தொழில்கள்மூலம் பல்வேறு பண்டங்களின் உற்பத்தி பெருக வேண்டுமானால் எல்லா மட்டங்களிலும் தொழில்கல்வி பெருக வேண்டும். சிறியனவும் பெரியனவுமான தொழிற்சாலைகள் பெருக வேண்டும். பண்டங்களை வேற்று நாடுகட்கு ஏற்றுமதி செய்து, அந்நியச் செலாவணியைப் (Foreign exchange) பெருக்கு தல் வேண்டும். இவ்வாறெல்லாம் நாட்டின் தொழில் வளம் பற்றிக் கனவுகள் காண்கின்றார் பாரதியார்.

பட்டினில் ஆடையும் பஞ்சினில்உடை யும்
பண்ணி மலைகளென வீதிகுவிப் போம்
கட்டித் திரவியங்கள் கொண்டுவரு வார்
காசினி வணிகருக்கு அவைகொடுப் போம்![15]

என்ற பாடலில் இக்கனவுகளைக் கண்டு தெளியலாம். பல்வேறு பண்டங்களை உற்பத்தி செய்தலையும் தொழில்சாலைகளை அமைத் தலையும் தொழில் கல்வி நிலையங்களை நிறுவுதலையும்பற்றிய திட்டங்களை,

ஆயுதம்செய் வோம்நல்ல காகிதம்செய் வோம்
ஆலைகள்வைப் போம்கல்விச் சாலைகள்வைப் போம்.
ஓயுதல்செய் யோம்தலை சாயுதல்செய் யோம்;
உண்மைகள்சொல் வோம்பல வண்மைகள்செய் வோம்

குடைகள்செய் வோம்உழு படைகள்செய் வோம்
கோணிகள்செய் வோம்இரும் பாணிகள்செய் வோம்;

14. இதன் விவரங்களையும் இதன் தொடர்பான ஆக்கச் செயல்களையும் இந்த ஆசிரியரின் 'அறிவியல் தமிழ்' (கட்டுரை-6) என்ற நூலில் (பாரி நிலையம், சென்னை-600 001) விரிவாகக் காணலாம்.

15. தே. கீ. பாரத தேசம்—8

நடையும் பறப்புமுணர் வண்டிகள்செய் வோம்;
ஞாலம் நடுங்கவரும் கப்பல்கள்செய் வோம்.

....

ஓவியம்செய் வோம்நல்ல ஊசிகள்செய் வோம்'
உலகத் தொழிலனைத்தும் உவந்துசெய் வோம்

என்ற கவிதைப் பகுதிகளில் கண்டு மகிழலாம்.

இன்னும் புதிய பாரதத்தில் சிங்களத் தீவுக்குப் பாலம் அமைத்தல், கங்கை நதியின் மிகை நீரை நடு நாட்டுக்குக் கொணர்ந்து உழவுத் தொழிலை மேம்பாடடையச் செய்தல், நிலத்தினை அகழ்ந்து தங்கம் முதலாம் கனிவளங்களை அடைதல், முத்துக்குளித்தல், கோதுமைக்கு வெற்றிலையைப் பண்டமாற்று செய்தல் போன்ற வகைகளில் செல்வ வளத்தைப் பெருக்குதலைப்பற்றிய கனவுகள் காண்கின்றார்.

காசி நகர்ப்புலவர் பேசும்உரை தான்
காஞ்சியில் கேட்பதற்கோர் கருவிசெய் வோம்;[16]

என்று வானொலிப் பெட்டிகள் உண்டாக்குவதையும் வானொலி அஞ்சல் செய்தலையும் முத்தாய்ப்பாகக் காட்டுவர்.

பொறியியல் கல்வியின் பயனை ஒரு கவிதையில் விளக்குகின்றார் கவிஞர் பெருமான். இறைவனையே ஒரு பெரிய பொறியியல் வல்லுநராகக் காண்கின்றார். அவன் படைத்து மன்பதைக்குத் தந்த இன்பங்களை நினைந்து போற்றுகின்றார்.

எத்தனைகோடி இன்பம்
வைத்தாய்!— எங்கள்
இறைவா! இறைவா! இறைவா!

அந்த நினைப்பில் ஓர் எக்களிப்பு தோன்றுகின்றது. 'இறைவா!' என்று மூன்றுமுறை விளித்து இன்பவெறியில்— களிப்பில்— மூழ்கி விடுகின்றார்.

சித்தினை அசித்துடன் இணைத்தாய்;— அங்கு
சேரும்ஐம் பூதத்து வியனுலகு அமைத்தாய்;
அத்தனை உலகமும் வண்ணக் களஞ்சியம்
ஆகப் பலப்பலநல் அழகுகள் சமைத்தாய்[17]

என்ற பாடற்பகுதியால் நம்மைச் சிந்திக்க வைத்துவிடுகின்றார்.

16. ஷை. ஷை— 9, 10, 12.
16. ஷை. ஷை—7.
17. ஷை இறைவா! இறைவா!—1.

எம்பெருமான் ஒரு பொறியியல் வல்லுநராக நின்று சித்தாகிய பல பொறிஞர்களைக்கொண்டு, அசித்தாகிய கல், மண், சிமைக்காரை (cement) முதலியவற்றின் துணைகொண்டு மேட்டூர் அணை, வைகையணை போன்ற அணைகளைக் சட்டுவித்து, நீரைத் தேக்கி, நீர்ப்பாசனத் திறனை விரிவாக்கி, 'இன்னறுங்கனிச் சோலைகள்', பச்சைப்பட்டு விரித்தாற்போன்ற நெல் வயல்கள், இயற்கை வளஞ் செறிந்த பிருந்தாவனம் போன்ற இளமரக் காக்கள் (கர்நாடக மாநிலத்திலுள்ளது) போன்றவற்றைத் தோன்றச் செய்து, இவை போன்ற எத்தனையோ கோலங்கள் புனைவித்து, நமக்குத் தேவையான விதவிதமான வசதிகளையெல்லாம் அமைத்து, இந்த உலகினைக் 'கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்' நுகர்தற்குரிய வண்ணக் களஞ்சியமாக ஆக்குவித்த அற்புதத்திறனை எண்ணி எண்ணி வியக்கின்றார் கவிஞர். இறைவனின் 'கைபுனைந் தியற்றாக் கவின் பெறு வனப்பை'த் திருமுருகாற்றுப்படையில்வியந்து போற்றினார் நக்கீரர் பெருமான்; நம் புதுமைக் கவிஞர்— புதுவைக் கவிஞர்— இறைவன் தோன்றாத் துணையாக நின்று சித்தைக் கொண்டு இயற்றிய 'கைபுனைந்தியற்றிய கவின்பெறு வனப்பினைக்' கண்டு களிக்கின்றார். இதனால் 'விசிட்டாத்துவித தத்துவத்தையும்' ஒருவகையில் விளக்கம் பெறச் செய்துவிடுகின்றார்.

தொழில் வளமும் தொழிற்கல்வியும் பெருக வேண்டும் என்பதை,

— தொழில்
பண்ணப் பெருநிதியம் வேண்டும்—அதில்
பல்லோர் துணைபுரிதல் வேண்டும்;
. . . .
கூடுந் திரவியத்தின் குவைகள்—திறல்
கொள்ளும் கோடிவகைத் தொழில்கள்—இவை
நாடும் படிக்குவினை செய்து—இந்த
நாட்டோர் கீர்த்தியெங்கும் ஓங்கக்—கலி
சாடுந் திறனெனக்குத் தருவாய்—அடி
தாயே! உனக்கரிய துண்டோ?[18]

என்ற கவிதைப் பகுதிகளில் தெரிவிக்கின்றார். இப்படித் தமக்கு ஒரு 'பேராசை' இருப்பதை 'ஓம் காளி, வலிய சாமுண்டி' தேவதையிடம் காட்டி, இந்த ஆசையை நிறைவேற்றுமாறு 'கோடி முறை' தொழுகின்றார்.

வேளாண்மைத் தொழிலுக்கும் கைத்தொழில் போன்றவற்றிற்கும் மதிப்புத் தரும் கல்வியைப் போற்றுகின்றார். 'உழவுக்கும்

18. தோ. பா. யோக சித்தி—7, 9.

தொழிலுக்கும் வந்தனை செய்வோம்'[19] என்ற கூற்றினால் இதனைத் தெளியலாம் ''தொழில்''[20] என்ற கவிதையில் பல்வேறு தொழில் களைப் பாராட்டி;

அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயி ரந்தொழில் செய்திடு வீரே ![21]

என்று ஆற்றுப்படுத்துகின்றார். இதனால், இவர் தொழிற்கல்விக்கும் ஊக்கம் தருவதை உணரலாம்.

பெண் கல்வி : ஆறு, மலை, செல்வம், கலை, உடுக்கள் இவற்றையெல்லாம் பெண் தெய்வமாகப் பாவிக்கும் நம் நாட்டில் பாரதியார் இக்காலச் சமூகம் பெண்ணினத்திற்கு மதிப்புத் தராத இழிநிலையை நினைந்து பார்க்கின்றார். 'ஞாலம் முற்றும் பராசக்தி தோற்றம்' என்பதில் அழுந்திய மனத்தையுடைய கவிஞர் பெண் ணினத்தைப்பற்றிச் சிந்திப்பது இயல்பே யன்றோ? எனவே,

செவ்விது, செவ்விது, பெண்மை!—ஆ!
செவ்விது, செவ்விது, செவ்விது காதல்!

காதலி னாலுயிர் தோன்றும்;—இங்கு
காதலி னாலுயிர் வீரத்தி லேறும்;
காதலி னாலறி வெய்தும்,—இங்கு
காதல் கவிதைப் பயிரை வளர்க்கும்[22]

என்று பெண்மையையும் காதலையும் இணைத்துப் போற்றுவர். காதலின் ஊற்று பெண்ணன்றோ?

'மனைக்கு விளக்கு மடவார்' என்று பேசுவர் நான்மணிக் கடிகையாசிரியர். ஒரு குடும்பத்தின் தலைவி கற்றவளாக இருந்தால் அவள் வழித்தோன்றல்கள் யாவரும் நல்ல சூழ்நிலையில் கல்வி பெறுவதற்கு அடிப்படை அமைத்துத் தருவாள் என்பது கவிஞரின் கருத்து. பெண்களுக்கு உரிமையில்லாததாலும், பெண்கள் படிக்கக் கூடாது என்ற மூடப் பழக்கம் எப்படியோ ஏற்பட்டுவிட்டதாலும், சமூகம் பெண்களை இழிவு செய்வதாலும் பெண் கல்வியில் தேக்கம் ஏற்பட்டதைக் கண்ட கவிஞர்,

19. தே.கீ. சுதந்திரப் பள்ளு—4.
20. ப.பா. தொழில்
21. ஷை. ஷை—1.
22. த.பா. அந்திப்பொழுது—3, 4.

மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமை யைக்கொ ளுத்துவோம்;[23]

என்று வெகுண்டு உரைப்பர்.

வைய வாழ்வு தன்னில் எந்த
வகையி னும்ந மக்குளே
தாதர் என்ற நிலைமை மாறி
ஆண்க ளோடு பெண்களும்
சரிநி கர்ச மான மாக
வாழ்வம் இந்த நாட்டிலே[24]

என்று வீர முழக்கம் செய்வர்.

இயல்பாகவே பெண்கள் அறிவுக் கூர்மை யுடையவர்கள்; ஆண்களைவிட இளமையிலேயே பொறுப்பை உணர்பவர்கள்; கடமையைப் போற்றுபவர்கள். இதனை நன்கு உணர்ந்த கவிஞர்;

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான்,—புவி
பேணி வளர்த்திடும் ஈசன்;
மண்ணுக் குள்ளே சிலமூடர்—நல்ல
மாத ரறிவைக் கெடுத்தார்[25]

என்று சில அறிவிலிகளை அம்பலப்படுத்துகின்றார். சமூகத்தில்—குடும்பத்தில்—ஆணும் பெண்ணும் இரு கண்களையொத்தவர்கள். ஒரு கண்ணைக் குத்திக் கெடுத்தல் மடமைச் செயலாவது போலவே, அவர்கள் அறிவை வளராது தடுத்தலும் அறிவுடைமைச் செயலன்று என்று உவமையால் விளக்குகின்றார்.

கண்கள் இரண்டில் ஒன்றைக்—குத்தி
காட்சி கெடுத்திட லாமோ?
பெண்க ளறிவை வளர்த்தால்—வையம்
பேதைமை யற்றிடும் காணீர்.[26]

என்று பேசுவதைக் காண்க.

---

23. தே.கீ. விடுதலை— 3.
24. ஷை.
25. ப.பா. முரசு— 9.
26. ஷை— 10.

ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவி லோங்கிஇவ் வையம் தழைக்குமாம்.[27]

என்று மேலும் இக்கருத்தினை அரண் செய்வர். பெண்கள் உயர் கல்வியைப் பெற்று உயர்ந்தோங்க வேண்டும் என்பது கவிஞரின் உட்கிடக்கை.

உலக வாழ்க்கையின் நுட்பங்கள் தேரவும்
ஓது பற்பல நூல்வகை கற்கவும்
இலகு சீருடை நாற்றிசை நாடுகள்
யாவும் சென்று புதுமை கொணர்ந்திங்கே
திலக வாணுத லார்நங்கள் பாரத
தேச மோங்க உழைத்திடல் வேண்டுமாம்;
விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை
வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பராம்.

சாத்தி ரங்கள் பலபல கற்பராம்;
சவுரி யங்கள் பலபல செய்வராம்;
மூத்த பொய்ம்மைகள் யாவும் அழிப்பராம்;
மூடக் கட்டுகள் யாவுந் தகர்ப்பராம்;
காத்து மானிடர் செய்கை யனைத்தையும்
கடவு ளர்க்கினி தாகச் சமைப்பராம்;
ஏத்தி ஆண்மக்கள் போற்றிட வாழ்வராம்;
இளைய நங்கையின் எண்ணங்கள் கேட்டிரோ![28]

என்றெல்லாம் மேல்நிலைக் கல்வி பெற்ற பெண்கள் குலம் தழைக்கப் பேரவாக் கொள்கின்றார். பெண்கல்விபற்றி இங்ஙனம் பல இடங்களில் பேசுவார் கவிஞர்.

புதுமுறைக் கல்வி : பாரதியாரின் கவிதைகளையும் பிறவற்றையும் ஊன்றிப் பயிலுங்கால் அவர் ஏதோ ஒரு புதுமுறைக் கல்வியைப் பற்றிச் சிந்தித்ததாக ஊகம் செய்யத் தூண்டுகின்றது. இந்த முறைக் கல்வியினால் பண்பாடு, புதுமுறையான சமய நம்பிக்கை, பக்தி வளர்ச்சி, மூடப் பழக்க வழக்கங்களை ஒழித்தல் போன்ற வகையில்—சீர்திருத்த முறையில்—மக்களிடம் அமைய வேண்டும் எனக் கருதினாரோ என்று எண்ணத் தோன்றுகின்றது. இவற்றையும் காண்போம்.

பாரதியின் காலத்தில் மக்களிடம் மூடப் பழக்கங்கள் நிறைந்திருந்தன. பேய்கள், மந்திரவாதிகளின் செயல்கள்; யந்திர சூனியங்கள்; பொய்ச் சாத்திரங்கள் ஆகியவற்றில் நம்பிக்கை-இவற்றைக் கண்டு

27. ஷை. புதுமைப்பெண்— 4.
28. ஷை— 8, 9.

''நெஞ்சு பொறுக்குதிலையே''[29] என்று நொந்துகொள்ளுகின்றார். சாதிக் கொடுமைகள், சாதிப் பிரிவுகள், பலபல தெய்வ வழிபாடு களால் பிரிவுகள் - இவற்றைக் கண்டு இரங்குகின்றார். வெள்ளை நிறப் பூனையொன்று சாம்பல் நிறம்,கருஞ்சாந்து நிறம், பாம்பு நிறம், பாலின் நிறம் - இந்நிறங்களில் குட்டிகள் போட்டாலும் அவையாவும் ஒரே தரமானவை என்று எடுத்துக் காட்டுகின்றார். எங்கும் சகோதரத் தன்மை நிலவ விழைகின்றார்.

சமயத்தைப்பற்றியும் சில கருத்துகள் இவர் பாடலில் சிதறிக் கிடக்கின்றன. அன்னை பராசக்தியே சிந்தையாலும் செய்கையாலும் இவர் வழிபடும் தெய்வம் என்பதைப் பல பாடல்களால் அறியலாம்.

நெஞ்சிற் கவலை நிதமும் பயிராக்கி
அஞ்சிஉயிர் வாழ்தல் அறியாமை—தஞ்சமென்றே
வையமெலாம் காக்கும் மகாசக்தி நல்லருளை
ஐயமறப் பற்றல் அறிவு.[30]

என்ற வெண்பா இக்கருத்தினை அரண் செய்யும். விநாயகர், முருகன், காளி, முத்துமாரி, கோமதி, நான்முகன், கண்ணன், திருமகள், கலைமகள், அல்லா, யேசு முதலிய தெய்வங்கள் சிறப்பாகப் பேசப் பெறுவதால் இவர்தம் சமரச நோக்கம் புலனாகும்; இவர்தம் தோத்திரப் பாக்களும் ஞானப் பாடல்களும் இக்கருத்தினை அரண் செய்யும்.

ஆயிரந் தெய்வங்கள் உண்டென்று தேடி
அலையும் அறிவிலிகாள்!—பல்
லாயிரம் வேதம் அறிவொன்றே தெய்வமுண்
டாமெனல் கேளீரோ?[31]

என்ற பாடல் ஒன்றே போதும் எடுத்துக்காட்டுக்கு.

'ஓம் நமச்சிவாய', 'ஹரி ஹரி', 'ராம ராம', 'சிவசிவ', 'ஓம் சக்தி' என்று செபித்தாலும் 'யேஹோவா'; 'அல்லா' நாமங்களைப் பேணினாலும் அவை யாவும்[32] ஒரே பரம்பொருளைப்பற்றியனவாகும் என்பர் கவிஞர். அங்ஙனமே பல சமயங்களைப்பற்றியும் கூறுவார்:

பூமியிலே, கண்டம்ஐந்து, மதங்கள் கோடி!
புத்தமதம், சமணமதம், பார்ஸி மார்க்கம்,
சாமியென யேசுபதம் போற்றும் மார்க்கம்,
சநாதனமாம் ஹிந்துமதம், இஸ்லாம், யூதம்,

29. தே.கீ. பாரத ஜனங்களின் தற்கால நிலைமை.
30. தோ.பா. மகா சக்தி வெண்பா— 2.
31. வே.பா. அறிவே தெய்வம்— 1.
32. பாரதி அறுபத்தாறு— 63.

நாமமுயர் சீனத்துத் ''தாவு'' மார்க்கம்
நல்ல''கண் பூசி''மதம் முதலாப் பார்மேல்
யாமறிந்த மதங்கள்பல உளவாம் அன்றே!
யாவினுக்கும் உட்புதைந்த கருத்திங் கொன்றே.

பூமியிலே வழங்கிவரும் மதத்திற் கெல்லாம்
பொருளினைநாம் இங்கெடுத்துப் புகலக் கேளாய்;
சாமீநீ,; சாமிநீ; கடவுள் நீயே;
தத்வமஸி; தத்வமஸி; நீயே அஃதாம்;
பூமியிலே நீகடவுள் இல்லை என்று
புகல்வதுநின் மனத்துள்ளே புகுந்த மாயை
சாமிநீ அம்மாயை தன்னை நீக்கி
சதாகாலம் 'சிவோஹம்'என்று சாதிப் பாயே[33].

இவற்றால் இவர்தம் சமரச மனப்பான்மை தெளிவாகும். இத்தகைய கருத்துகள் நம் நாட்டு இளைஞர்களிடையே கால்கொள்ள பல நிலைகட்கும் பயன்படுமாறு கல்வி ஏற்பாடு (Curriculum) அமைக்க வேண்டும் என்ற எண்ணம் இவரிடம் இருந்திருத்தல் கூடும் என்று எண்ணத் தோன்றுகின்றது.

இறுவாய் : இன்று நாட்டில் நடைபெறுவது 'ஜனநாயக நாடகம்'. ஆள்வோரிடம் மனத்தூய்மை இல்லை; நாட்டு முன்னேற்றத்தைப்பற்றியோ நாட்டுமக்கள் முன்னேற்றத்தைப்பற்றியோ 'உண்மையான' அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை. இதனால் ஆள்வோரின் சிந்தையில்—சிந்தனையில்—தெளிவான வழி தோன்றுவதற்கே வாய்ப்பு இல்லாது போகின்றது. ஆகவே, நாமும் கவிஞருடன் சேர்ந்து ஆள்வோருக்கும் ஆளப்படுவோருக்கும்,

அறிவிலே தெளிவு, நெஞ்சிலே உறுதி
அகத்திலே அன்பினோர் வெள்ளம்
பொறிகளின் மீது தனியர சாணை
பொழுதெலாம் நினதுபே ரருளின்
நெறியிலே நாட்டம் கரும யோகத்தில்
நிலைத்திடல் என்றிவை அருளாய்.[34]

என்ற மனநிலை அருள வேண்டும் என்று அன்னை பராசக்தியை வேண்டுவோமாக. பாரதியார் கல்விபற்றிக் கூறும் கருத்துகள் கல்வி ஏற்பாட்டில் இடம் பெறும் என எதிர்பார்ப்போமாக.

33. ஷை— 65, 66.
34. சுய சரிதை— 49.

7. வசன கவிதைகள்

சென்ற நூற்றாண்டு வரையில் தமிழ் இலக்கியம் செய்யுள் வடிவத்தில்தான் இருந்து வந்தது. வானியல், மருத்துவம், தத்துவம், தருக்கம் போன்ற எந்த நூலாக இருந்தாலும் அவையனைத்தும் செய்யுள் நடையில்தான் அமைந்தன. அச்சுப்பொறி அறியப் பெறாத காலத்தில் ஏடும் எழுத்தாணியும் கொண்டு விரைவில் எழுதி முடிக்கவும், எழுதியவற்றை எளிதில் நினைவில் நிறுத்தவும், அடுத்த தலைமுறையினருக்கு அவற்றைச் செவிவழியாகக் கடத்துவதற்கும் செய்யுளின் ஓசையும் யாப்பு முறையும் உறுதுணை புரிந்தன. இலக்கியமும் 'செவிநுகர் கனி' யாகத் திகழ்ந்ததற்கு இதுவே சிறப்பான காரணம் எனக் கருதலாம். இதனால்தான் உரையாசிரியர்களும் திட்பமும் நுட்பமும் கொண்ட உரைகளைச் சுருக்கமாகவே எழுத நேர்ந்தது. இக்காலத்தில் இவ்வுரையைப் புரிந்துகொள்வதற்குச் "சர்பத் கலக்குவதுபோல்' மேலும் சொற்களைப் பெய்து நீராளமாகச் செய்து விளக்க வேண்டிய இன்றியமையாமையும் ஏற்பட்டு வருகின்றது.

இன்றைய நிலை வேறு. நாம் வாழ்வது அறிவியல் தொழில் நுட்பக் காலம். தட்டச்சுப் பொறி, அச்சுப் பொறி, அச்சுப் பொறிகளிலும் பல்வேறு நுட்ப வகைகள்-இவை எழுதுவதற்குத் துணையாக அமைந்துவிட்டன. நாடாப் பதிவும், 'பிலிம்' படங்களில் பதிவு செய்யும் முறையும், நூலக அமைப்பு முறைகளும் எழுதியவற்றைப் பேணும் சாதனங்களாக அமைந்துவிட்டன. செவிப்புலன் ஆட்சியைவிடக் கட்புலன் ஆட்சி மிகுந்துவிட்டது. எவற்றையும் நினைவில் நிறுத்தித் 'தலைக்கனம்' செய்ய வேண்டிய இன்றியமையாமை இல்லாது போய்விட்டது. கல்வி முறையிலும் நெட்டுருச் செய்து நினைவிலிருத்த வேண்டிய முறை தளர்ந்துவிட்டது; தகர்ந்தே போய்விட்டது என்றுகூடச் சொல்லலாம். வாய்விட்டுப் படித்தல் குறைந்து வாய்க்குட் படித்தல் செல்வாக்கு அடைந்துவிட்டது. ஒரே அறையில் - பெரிய மண்டபத்தில் - பலர் இருக்கைகளில் அமர்ந்து 'கல்லாலின் புடை அமர்ந்துள்ள தென்முகக் கடவுள்போல்' நூல்களிலும் வார, பிறை, திங்கள் இதழ்களிலும் ஆழங்கால் பட்ட நிலையில் அமர்ந்திருக்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருப்பதை நூலகங்களில் காணலாம். இந்தச் சூழ்நிலையில் செய்யுள் வடிவம் செல்வாக்கிழந்து, உரைநடை வடிவம் உயர்ந்தோங்கிவிட்டது. மேனாட்டார் வருகைக்குப் பிறகு உரைநடை இலக்கியங்களான புதினம், சிறுகதை, கட்டுரை வகைகள் ஆகியவை தோன்றி,வளர்ந்து; நிலைத்து நின்றுவிட்டன. இந்த நிலையில் கவிதையும் உரைநடை

யில் ஏன் இயங்கக் கூடாது என்ற வினாவும் எழத் தொடங்கியது. மேனாட்டு இலக்கியப் புரட்சிகளின் தாக்கமும் ஆங்கிலக் கல்வியின் வாயிலாக நமக்குக் கிடைத்தது.

மேனாடுகளில் இலக்கியப் புரட்சி : மேனாடுகளின் அண்மைக் காலத்து இலக்கிய வரலாற்றை நோக்கினால் கவிதை இலக்கியத்தின் யாப்பமைப்பு ஆட்டம் கொண்டது தெளிவாகும். புதிய சமுதாயத்தின் சிந்தனை வேகமாக வளர்ந்து வருகின்றது. இந்த வேகத்திற் கேற்பப் பழைய யாப்பு வடிவங்களால் இயைந்து கொடுக்க முடியவில்லை. இந்நிலையில் மக்களிடம் புதினம் ஏற்படுத்தின செல்வாக்கும் இதழ்த்துறையில் தொடர்கதைகளுக்கு ஏற்பட்ட பரபரப்பான வரவேற்பும் கவிதைக்கு எதிர்காலமே இல்லையோ என்ற ஐயமும் தோன்றத் தொடங்கியது. யாப்பு வடிவங்களைத் தகர்த்தெறியவும் கவிதையில் புதிய தொடர் அமைப்பை (Syntax) ஏற்கச் செய்யவும் பல புது முயற்சியாளர்கள் முன்வந்தனர்; செயலாற்றவும் தொடங்கினர். மொழியைப் புதிய முறைகளில் செயற்படச் செய்தால்தான், வளர்ந்து வரும் கருத்துச் செல்வ வெளியீட்டிற்கு அஃது இயைந்து கொடுக்கும் ஆற்றலைப் பெறும் என்று நம்பினர். இவர்கள் முயற்சியால்தான் வசன கவிதை (Prose—Poetry), கட்டற்ற கவிதை (Vers-libre) என்ற கவிதை வடிவங்கள் தோன்றின.

அமெரிக்காவில் ஏற்பட்ட மாற்றங்களைக் காண்போம். **வால்ட் விட்மென்** (Walt Whitman) என்பார் (1819-1892) தம் பன்னிரண்டு கவிதைகளைப் 'புல்லின் இதழ்கள்' என்ற தொகுப்பாக 1855-இல் வெளியிட்டார். இக்கவிதைகளில் ஆங்கில மொழிக் கவிதையின் யாப்பு மரபு பின்பற்றப்பெறவில்லை; அதனைப் புறக் கணித்துவிட்டு எழுதப்பெற்ற கவிதைகள் வசனமாகவே அமைந்திருந்தன. அடிகளிலும் அம்மொழிக் கவிதைமரபிற்கேற்ப வரும் இயைபுத் தொடை (Rhyme) காணப்பெறவில்லை. சொற் கட்டமைப்பால் தோன்றும் ஆற்றலே கவிதைக்கு வடிவம் கொடுத்து விடுவதாகக் கூறுவர் விட்மென். இவர் கையாண்ட கவிதை வடிவமே 'சுயேச்சைக் கவிதை' (Free verse) அல்லது 'இலகு கவிதை' என்ற வசன கவிதையாகச் செல்வாக்குப் பெற்றது. கவிதையின் உள்ளடக்கத்திலும் புதுமைத் தன்மையைக் காணமுடிருந்தது. கவிதைகளும் இதுவரை பேசாப் பொருள்கள்பற்றியும் அமைந்தன. **ஹோமர், மில்ட்டன்** போன்ற மிகப்பெருங் கவிஞர்களின் படைப்புகளில் மனநிறைவு பெறாத **எமர்சன்** விட்மெனின் கவிதைகளால் ஈர்க்கப்பெற்றார். 'பேசாப் பொருளைப் பேசத் துணிந்த'[1] **'பாரதி** யாரையும் இக்கவிதைகள் கவர்ந்தன. விட்மெனின் அடிச்சுவட்டைப்

1. வி. நா. மா. 32.

பின்பற்றிப் பல கவிஞர்கள் எழுந்தனர். இவர்களுள் **எஸ்ரா பவுண்ட்** குறிப்பிடத்தக்கவர். இவர்தம் கருத்துகள் கவிதை வடிவில் பேரெழுச்சியை விளைவித்தன.

சற்றேறக்குறைய விட்மென் வாழ்ந்த காலத்தில் பிரெஞ்சு நாட்டில் குறியீட்டியல் கவிஞர்கள் (Symbolists)[2] **பௌதலேர், மல்லார்மே, பி. வெர்லெய்ன், ஏ. ரிம்பாடு** போன்றோர்—யாப்பிலக்கண விதிகளுடன் போராடிக்கொண்டிருந்தனர். இவர்கள் யாப்பு விதிகளைப் புறக்கணிக்காவிட்டாலும், யாப்பு முறை, கருத்து வெளியீட்டிற்குத் தடையாக இருந்ததை உணர்ந்தனர். இவர்களுள் **ரிம்பாடு** தமது பதினேழாவது வயதில் **ஒளி வெள்ளம்** என்ற தலைப்பில் முதன் முதலாக வெளியிட்ட கவிதைகள் வசன நடையிலேயே அமைந்திருந்தன. வியப்புறும் வகையில் ரிம்பாடு (1854-1891) தமது உணர்ச்சிகளை அழகாக அவற்றில் வடித்துக் காட்டியிருந்தார். இவரும் **ஜூல்ஸ் லாஃபோர்க்** (1860-1887) என்பாருந்தான் 'கட்டற்ற கவிதை' (Vers libre) யின் முதல் முயற்சியாளர்கள் என்று கருதப்பெறுகின்றனர். இவர்களைத் தொடர்ந்து 1889-இல் **வியல் கிரிப்பின்** என்ற மற்றொரு கவிஞர் 'கட்டற்ற கவிதைகள்' (Le Versest libre)என்ற அறிவிப்புடன் தம் கவிதைகளை உலகுக்கு அளித்தார்.

ஃபிரெஞ்சு அமெரிக்க முயற்சிகள் ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் கால் கொள்ளலாயின. இங்கிலாந்தில் **மில்ட்டன், வொர்ட்ஸ் வொர்த், மாத்யூ ஆர்னால்டு** ஆகியோர் அவ்வப்போது ஆங்கில மரபில் சோதனை நிகழ்த்தியவர்கள். கவிதையின் உயிராற்றல் பகுதிகளை உரைநடையில்தான் வளமாகத் தருதல் இயலும் என்பது வொர்ட்ஸ் வொர்த்தின் கருத்தாகும். நந்தமிழ் மொழியிலும் இறையனார் களவியலுரையிலும், **மறைமலையடிகள்,** பேராசிரியர் **திரு. வி. க.,** பேராசிரியர் **ரா. பி. சேதுப்பிள்ளை** போன்றவர்களின் சில உரைநடைப் பகுதிகள் இத்தகைய உரைவளத்தைக் கொண்டிருத்தலைக் காணலாம். **விட்மெனின்** வசன கவிதை முயற்சிகள் **எஸ்ரா புவுண்டு, டி. எஸ். எலியட்டு** போன்றவர்களால் ஆங்கில மொழியில் கையாளப்பெற்றன. கடந்த அரை நூற்றாண்டுக் காலத்தில் இத்தாலி, ஸ்பானிஷ், செர்மென், இரஷ்ய மொழிகளின் இலக்கண மரபில்

2. Symbolism-குறியீட்டியல். இஃது ஒரு வகை இலக்கிய உத்தி. புற உலகம் நிலையற்றதென்பதும், அதன் தோற்றம் நாம் காண்பதுபோல் இல்லை என்பதும், காண முடியாத ஏதோ ஒரு முழுமையின் பிரதிபலிப்பென்பதும் இந்த உத்தியைப் பயன்படுத்துவோரின் கொள்கை. நம் கண்ணுக்குப் புலப்படும் பொருள்களின் தோற்றமெல்லாம் மாயையானவை என்பது இவர்தம் கருத்து.

கணிசமான நெகிழ்ச்சியும் மாற்றமும் ஏற்படலாயின. நந்தமிழ் மொழியிலும் பாரதியாரின் காலம் முதல் (இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கம்) புதிய பாணியில் கவிதைகள் முகிழ்க்கத் தொடங்கின. தொடக்கக் காலத்தில் யாப்பு முறைகட்குக் கட்டுப்படாமல் கவிதை உணர்வுகட்குச் சுதந்திரமான எழுத்து வடிவம் கொடுக்கும் இப் படைப்பு முயற்சி **வசன கவிதை** என்றே வழங்கப் பெற்றுள்ளது.

மேலை நாடுகளில் நடைபெற்ற கவிதைச் சோதனைகள் பாரதியின் காலம்முதல் தமிழகத்திலும் நடைபெற்றன. வால்ட்விட்மெனின் கவிதைப் பொருளிலும் ஜனநாயகக் குரலிலும் கவரப் பட்டவர் பாரதியார். விட்மெனைப்பற்றி அவர் கூறுவார்

> இவருடைய பாட்டில் புதுமை என்னவென்றால் இது வசன நடைபோலத்தான் இருக்கும். எதுகை மோனை தளை ஒன்றுமே கிடையாது. எதுகை மோனை இல்லாத கவிதைதான் உலகத்திலே பெரிய பாஷைகளில் பெரும்பகுதியாகும். வால்ட் விட்மென் கவிதையைப் பொருளில் காட்ட வேண்டுமேயல்லாது சொல்லடுக்கில் காட்டுவது பிரயோசனமில்லை என்று கருதி ஆழ்ந்த ஓசை மாத்திரம் உடையதாக மற்றப்படி வசனமாகவே எழுதி விட்டார்[3].

பாரதியார் காலம்வரை கவிதை, புலவர்களிடமும் பண்டிதர்களிடமும் சிக்கித் தவித்தது. கவிதை, செய்யுள் வடிவில்தான் இருக்க வேண்டும் என்ற இலக்கண விதிதான் இதற்கு முதற்காரணமாகும். இதனால் கவிதைப் பண்புமறைந்து யாப்பே முந்திரிக் கொட்டைபோல் முன்னின்று 'தரிசனம்' தந்தது. பாரதியார் புலவர்களின் கடுமையான நடையை—தேர் வடம் போன்ற விறைப்பான தமிழ் நடையை இவ்வாறு கண்டனம் செய்வார் :

> அருமையான உள்ளக்காட்சிகளை எளிமை நடையில் எழுதுவது நல்ல கவிதை. ஆனால்; சென்ற சில நூற்றாண்டுகளாகப் புலவர்களும் சாமியார்களும் சேர்ந்து வெகு சாதாரணமான விஷயங்களை அசாதாரண அலெளகிக அந்தகார நடையில் எழுதுவதுதான் உயர்ந்த கல்வித் திறமை என்று தீர்மானம் செய்துகொண்டார்கள்.[4]

---

3. பாலா : புதுக்கவிதை— ஒரு புதுப்பார்வை— பக். 41-இல் காட்டப்பெற்றது.
4. ஷை— பக். 42.

பாரதியார் மரபுக் கவிதைகளை எளிமையாக்கினதோடன்றி வசன கவிதைகளையும் எழுதித் தமிழில் புதிய கவிதைச் சோதனைகளை மேற்கொண்டார்; செய்யுள் வடிவ உடைப்பை மேற்கொண்டு—முட்டையை உடைத்துக்கொண்டு குஞ்சு வெளிவருவதுபோல்—வசன கவிதைகளை எழுதி வெளியிட்டார். இதனைத் தெளிவுறுத்தும் போக்கில்,

பண்டிதர்கள்
கடத்திச் சென்ற
பைந்தமிழ்க் குழந்தையைக்
கண்டு பிடித்துக்
கொண்டு வந்த
காவல் நிலையம்.....[5]

புதுக்கவிஞர் ஒருவர் கிண்டல் செய்கின்றார். இன்னொரு புதுக் கவிஞர் முத்தொள்ளாயிரப் பாணியில்,

அன்று மணிக்கதவை
தாயர் அடைக்கவும்
மகளிர் திறக்கவும்
செய்தார் மாறிமாறி;
என்றும்
புலவர் அடைப்ப
கவிஞர் திறப்பார்[6]

என்று இந்நிலையைக் காட்டுவார். புலவர் அடைத்த கவிதைத் திருக் கதவத்தைக் கவிஞர் வந்து திறக்கும் புதுமுயற்சியாகத் தமிழ் வசன கவிதை முயற்சிகள் அமைந்தன என்பது இக்கவிஞர் பெறவைக்கும் குறிப்பாகும்.

பாரதியின் வசன கவிதைகள் : பாரதியார்தான் முதன் முதலாக மேனாட்டார் பாணியில் வசன கவிதையைத் தோற்று வித்தவர். இவரைத் தமிழில் வசன கவிதையின் தந்தை என்று கூறுவதிலும் தவறு இல்லை. உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் போன்றவற்றை எடுத்துக்காட்டிப் பாரதிக்கு முன்னர் — மிகப் பண்டைக் காலத்திலேயே - வசன கவிதை இருந்துள்ளது என்று நிலைநாட்ட முயல்வது பொருத்தமன்று. 'உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்' வேறு; 'வசன கவிதை' வேறு. செய்யுளின்

5. கவிஞர் வாலி : பாரதி ஒரு பிள்ளையார் சுழி (கல்கி—விடுமுறைச் சிறப்பு மலர்— 1981)
6. மணி, சி : வரும் போகும்.

யாப்பு பெற்று உரைநடைபோல் இருந்துவிட்டால் அது வசன கவிதையாகாது. இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்து, எது வசன கவிதை? என்பதைத் தெளிவு பெறுக. மேனாட்டார் தோற்றுவித்த வசன கவிதைப் பாணியில் பாரதியார்தான் முதன் முதலாகத் தமிழில் வசன கவிதைகள் எழுதிச் சோதனைகள் செய்து வெற்றி கண்டவர். இந்த வசன கவிதைதான் அடுத்துத் தோன்றிய புதுக் கவிதைக்கு மூலமாக—தாயாக—அமைந்தது என்று சொல்லலாம்.

'வசன கவிதை' என்ற தலைப்பில் 1. **காட்சி.** 'முதற்கிளை: இன்பம்' என்ற தலைப்பில் 7 கவிதைகளும்; 'இரண்டாங் கிளை: புகழ்'—ஞாயிறு என்ற தலைப்பில் 13 கவிதைகளும்; 2. **சக்தி** என்ற தலைப்பில் 8 கவிதைகளும்; 3. **காற்று** என்ற தலைப்பில் 15 கவிதைகளும்; 4. **கடல்** என்ற தலைப்பில் 2 கவிதைகளும்; 5 **ஜகத் சித்திரம்** என்ற தலைப்பில் 5 காட்சிகளடங்கிய ஒரு சிறு நாடகமும்; 6 **விடுதலை** என்ற தலைப்பில் இரண்டு காட்சிகளைக் கொண்ட ஓர் ஓரங்க நாடகமும் காணப்பெறுகின்றன.[7] இந்தக் கவிதைகளை ஆழ்ந்து கற்போர் பாரதியாரின் தத்துவத்தையும் வசன கவிதைகளின் போக்கையும் தெளிவாக அறியலாம்.

தமது கவிதையுணர்வுகளையும், அகத்தெழுச்சிகளையும், கனவுகள், கற்பனைகள், முற்போக்கு எண்ணங்கள், சமுதாயப் பார்வைகள், நாட்டு நிலைகள் ஆகிய அனைத்தையும் மரபு நிலை கெடாத, எளிய, இனிய, புதிய புதிய யாப்புகளில், சந்த நயங்கட்கு உட்படும் பல்வேறு புதிய வடிவங்களில் வெளிப்படுத்திய பாரதியார் இலக்கண விதிகட்குக் கட்டுப்படாத வடிவத்திலும் கவிதைகளைப் படைக்க முயன்றுள்ளார். இந்த முயற்சிகளின் விளைவுகளே வசன கவிதைகளாகும். இத்தொகுப்பிலுள்ள கவிதைகள் வசனத்தை மீறியவையாயினும், கவிதையின் முழுத் தன்மையை எய்தாத ஒரு முயற்சியாகவே படைத்துள்ளார் என்று கருதலாம். இதிலுள்ள முதற் கவிதை,

இவ்வுலகம் இனியது. இதிலுள்ள வான்
இனிமை யுடைத்து;
காற்றும் இனிது.
தீ இனிது. நீர் இனிது. நிலம் இனிது.

ஞாயிறு நன்று; திங்களும் நன்று.
வானத்துச் சுடர்களெல்லாம் மிக இனியன
மழை இனிது. மின்னல் இனிது. இடி இனிது.
....

என்று தொடங்கிச் செல்லுகின்றது. இது வசனமா கவிதையா

7. பாரதியார் கவிதைகள் (வானவில் பிரசுரம்).

வசன கவிதையா என்பதை ஆராய்வோம். அதற்கு முதலாக, ரசிகமணி டி. கே. சியின் கவிதைபற்றிய கருத்தினைக் காண்போம்.

> கவி(தை) என்றால் இன்னதென்று சொல்வதற்கு இலக்கணம் கிடையாது. உலகத்தில் எங்கும் கிடையாது. யாப்பியல் இந்த விஷயத்தில் எந்த உதவியும் புரியவில்லை. வெண்பா இது, விருத்தம் இது என்று ஏதோ சொல்லலாம். ஆனால், கவி இது என்று சொல்லவே முடியாது. ஒரு பாஷையோடும் அதிலுள்ள சிறந்த கவிகளோடும் உண்மையான ஆர்வத்தோடு படாடோபத்தையெல்லாம் தூரத்தே விட்டுவிட்டு நெடுநாள் பழகி வருவோமானால் அது தெரியவரலாம்.[8]

இதிலிருந்து யாப்பமைதி வேறு, கவிதையின் வடிவ அமைதி வேறு என்பதை டி. கே. சி. அவர்களின் கருத்து தெளிவுறுத்துகின்றது. எனவேதான் வசன கவிதையைப் படைப்போர் இலக்கணம் வேறு, கவிதை வேறு என்பதை உணர்ந்து யாப்பைப் புறக்கணித்தனர்.

கவிதையின் சுருதி வேறு; வசனத்தின் சுருதி வேறு. 'தீ இனிது' என்பதில் 'இனிது' என்ற சொல் சுவையை (நாக்கின் செயலை)ச் சார்ந்தது. 'தீ சுடும்' என்பதில் 'சுடும்' என்ற சொல் (நொப்புல செயலைத்) ஊற்றுணர்வைத் தெரிவிக்கின்றது. 'தீ சுடும்' என்ற தொடர் அறிவோடு பேசுகின்றது. 'தீ இனிது' என்ற தொடர் உணர்வோடு பேசுகின்றது. எனவே, முன்னது வசனம்; பின்னது கவிதை. சொற்றொடர் வெறும் செய்தியை மட்டிலும் சொல்லாமல், உவமையைப்போல் உணர்வினிடம் பேசுமானால் கவிதை பிறந்துவிடுகின்றது. தீ இல்லை என்றால் ஊன் ஏது? உலகு என்பது நிலைபெற முடியுமா? அதனால்தான் 'தீ இனிது' என்பதை உணர்ச்சி ஒப்புக் கொள்ளுகின்றது. ஒரு பொறிக்கு உரித்தான தொழிலைப் பிறிதொரு பொறியின்மீதேற்றிக் கவிதையின் சிறப்பைக் காட்டும் கற்பனை உத்தி இங்குக் கையாளப்பெற்றிருப்பதைக் கண்டு மகிழலாம். பிறிதோரிடத்தில்,

> செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
> தேன்வந்து பாயுது காதினிலே[9].

என்று பாடுகின்றார் பாரதியார். இயற்கையாகச் சுவையை நாக்கின் மூலமே உணர்கின்றோம். காதின் மூலம் இந்தச் சுவையை உணரலாம் என்பது இயற்கைக்கு முரண்பட்டது. ஆனால், நாக்கின் தொழிலைக் காதின் மேலேற்றிக் கூறும் திடுக்கிடும் அநுபவம் தன்

---

8. டி. கே. சி. மொழிகள்— தீபம், செப். 1972.
9. தே. கீ.— செந்தமிழ்நாடு— 1.

னுணர்வின்பாற்பட்டது. பொறிகளுக்குள்ள வேறுபாடு உடலியலைப்பற்றிய வரையில் உண்மையாகும்; உளவியல் அல்லது மனநிலையைப்பற்றிய வரையில் வேறுபாடு காண இயலாது. இரண்டின் விளைவும் ஒன்றுதான் என்ற நுண்ணுணர்வைக் காணும்பொழுது தான் வன கவிதை பிறக்கின்றது. காதை அடிப்படையாகக்கொண்ட எதுகை மோனைகட்கு இப்பொழுது இன்றியமையாமை இயலாமல் போய்விடுகின்றது என்பது உண்மை; கசப்பான உண்மையுங்கூட. மேற்காட்டிய இரண்டு இடங்களிலும் பொறிகள் தங்கள் தங்கள் தொழில்களைப் பரிவர்த்தனை செய்துகொள்ள இயலும் என்ற கவிதை உண்மை தட்டுப்படுகின்றது. இந்த இடங்களில் பொறிகளின் தயவையும் மீறிய நேரிடையான அநுபவத்தால் இயற்கையான நுண்ணுணர்வு செயற்படுவதைக் கண்டு வியப்படைகின்றோம். இக் கவிதையை மேலோட்டமாகப் படிக்கும்போது 'வசனம்' போல் நடக்கின்றது; சற்றுச் சிந்தித்துப் படிக்கும்போது 'கவிதை' யாகிவிடுகின்றது. சிறகுடன் பறப்பது போன்ற உணர்ச்சி மேலிடுகின்றது. இதனால்தான் இது 'வசன கவிதை' என்ற திருநாமமும் பெற்றது போலும்!

தெளிவுறவே அறிந்திடுதல்; தெளிவுதர
மொழிந்திடுதல்; சிந்திப் பார்க்கே
களிவளர உள்ளத்தில் ஆனந்தக்
கனவுபல காட்டல்; கண்ணீர்த்
துளிவரஉள் ளுருக்குதல்.[10]

என்ற கவிஞனின் குறிக்கோளையும் நிலைபெறச் செய்துவிடுகின்றது. கவிதையைப் படிப்போரிடமும் மந்திர ஆற்றல் போன்ற ஒருவித ஆற்றலால் இந்த உணர்வுகளை எழுப்பிவிடுகின்றது.

மேற்கூறியவற்றை அறிந்த பிறகும் வசனமும் கவிதையும் ஒன்றாகுமா என்ற வினா நம்மிடையே எழுகின்றதல்லவா? இதற்கு ஓர் அமைதி கூற வேண்டியது இன்றியமையாததாகின்றது. உண்மையில் வசனமும் கவிதையும் ஒன்றாகா. கவிதை வசனமாகாது என்பது மட்டிலும் உறுதி. வசனம் (Prose), செய்யுள் (Verse) ஆகிய இரண்டிற்கும் அப்பாற்பட்டது கவிதை. வசனம் அல்லது உரை நடை, செய்யுள் ஆகியவை கவிதை இயங்கும் தளங்களாகும். இவை இரண்டும் கவிதையின் புற வடிவங்களாகும்.; கவிஞன் கையாளும் ஒருவிதச் சாதனங்களாகும் (Devices). இந்த இரண்டு சாதனங்களில் மட்டிலும் கவிதையைக் காண இயலாது. இவற்றைக் கவிஞன் கையாளும் முறையில்தான் கவிதை தென்படும். படைப்புத் திறம்

10. பாரதி : பாஞ்சாலி சபதம்—154.

மிக்க கவிஞனுக்குச் செய்யுளில் கவிதை கிடைக்கும்; வசனத்திலும் கவிதை கிடைக்கும். இன்று மரபுக் கவிதையாளர்கள் எழுதும் புதுக் கவிதைகளில் இந்த உண்மையைத் தெளிவாகக் காணலாம். ஊன்றி நோக்குவார்க்கே இது தட்டுப்படும்.

செய்யுள்; உரைநடை என்ற இரண்டிலும் கவிதை தென்படும் என்பது உண்மையேயாயினும், கவிதையின் கருப்பொருளுக்கிணங்கத் தான் மேற்கொள்ள வேண்டிய சாதனத்தை அறுதியிட்டுக்கொள்கின்றான் கவிஞன். கவிஞன் மேற்கொள்ளும் சாதனம் செய்யுளா வசனமா என்று அலட்டிக்கொள்ளாமல், இவை இரண்டுமே உண்மையான கவிதையின் வடிவம் என்று கொள்ளல் வேண்டும். பாரதியார் மரபுக் கவிதை வடிவத்தில், பல்வேறுவித சந்த நயத்தில், கவிதைகளைப் படைத்தார்; இசைக் கவிதைகளையும் படைத்துப் புகழ் பெற்றார். வசன கவிதைகளையும் சோதனையாக எழுதி அவற்றிலும் வெற்றி பெற்றார்.

> உடல் நன்று. புலன்கள் மிகவும் இனியன.
> உயிர் சுவை யுடையது.
> மனம் தேன். அறிவு தேன். உணர்வும் அமுதம்.
> உணர்வே அமுதம்.
> உணர்வு தெய்வம்.[11]

என்பது 'இன்பம்' என்ற தலைப்பில் காணப்படும் வசன கவிதை. இதனை மீண்டும் மீண்டும் படித்தால் கவிதை தட்டுப்படும். தேனாகவும் அமுதமாகவும் இனிப்பதையும் உணரலாம். இந்த உணர்வில் தெய்வமும் காட்சியளிப்பதைக் காணலாம்.

ஞாயிறு: ஞாயிற்றை நோக்கிப் பேசுகின்றார் :

> ஞாயிறே, இருளை என்ன செய்துவிட்டாய்?
> ஓட்டினாயா? கொன்றாயா? விழுங்கிவிட்டாயா?
> கட்டி முத்தமிட்டு நின் கதிர்களாகிய
> கைகளால் மறைத்துவிட்டாயா?
> இருள் நினக்குப் பகையா?
> இருள் நின் உணவுப் பொருளா?
> அது நின் காதலியா?
> ....
> உங்களுக்கு மரணமில்லையா? நீங்கள் அமுதா?
> உங்களைப் புகழ்கின்றேன்.
> ஞாயிறே, உன்னைப் புகழ்கின்றேன்.[12]

இதனைத் திரும்பத் திரும்பப் படிக்கும்போது படிமங்கள் (Images)

11. வசன கவிதை—1. காட்சி (2).
12. ௸—1. காட்சி (இரண்டாங்கிளை)-ஞாயிறு—5.

அலை அலையாக நம் மனத்தில் கிளர்ந்தெழுகின்றன அல்லவா? இப்போதுதான் கவிதைத் தேவி நமக்குத் தரிசனம் தருகின்றாள்.

ஞாயிற்றின் தன்மையைப்பற்றிக் கூறும் பகுதி இது:

ஒளிக்கும் வெம்மைக்கும் எவ்வகை உறவு?
வெம்மை யேற ஒளி தோன்றும்,
வெம்மையைத் தொழுகின்றோம்.
வெம்மை, ஒளியின் தாய், ஒளியின் முன்னுருவம்.
வெம்மையே, நீ தீ.
நீதான் வீரத் தெய்வம்.
நீதான் ஞாயிறு.
தீயின் இயல்பே ஒளி.
....
தீயே, நீ எமது உயிரின் தோழன்.
உன்னை வாழ்த்துகின்றோம்
....
ஞாயிற்றினிடத்தே, தீயே, நின்னைத்தான் போற்றுகின்றோம்.
ஞாயிற்றுத் தெய்வமே, நின்னைப் புகழ்கின்றோம்.
நினதொளி நன்று. நின்செயல் நன்று. நீ நன்று.[13]

இதில் ஞாயிற்றைத் தெய்வமாக்கிவிடுகின்றார். ''ஞாயிறு போற்றுதும், ஞாயிறு போற்றுதும்'' என்ற இளங்கோவடிகளின் மரபினைப் பின்பற்றுகின்றார். இப்பகுதியைப் படிக்கும்போது நம் உள்ளம் கிளர்ந்தெழுவதை உணர்கின்றோம். கவிதையும் தட்டுப்படுகின்றது. இன்னும் ஞாயிற்றின் தன்மையை,

செவ்வாய், புதன் முதலிய பெண்கள்
ஞாயிற்றை வட்டமிடுகின்றன.
இவை தமது தந்தைமீது காதல் செலுத்துகின்றன.
அவன் மந்திரத்திலே கட்டுண்டு வரை கடவாது சுழல்கின்றன.
அவனுடைய சக்தியெல்லையை என்றும் கடந்து செல்லமாட்டா
....
ஞாயிறு மிகச் சிறந்த தேவன். அவன் கைப்பட்ட
இடமெல்லாம் உயிருண்டாகும்.
அவனையே மலர் விரும்புகிறது.
இலைகள் அவனுடைய அழகிலே யோகமெய்தியிருக்கின்றன.
அவனை நீரும் நிலமும் காற்றும் உகந்து களியுறும்.
அவனை வான் கவ்விக்கொள்ளும்.

13. ந்டி— ஞாயிறு— 8.

அவனுக்கு மற்றெல்லாத் தேவரும் பணி செய்வர்.
அவன் புகழைப் பாடுவோம்.
அவன் புகழ் இனிது.[14]

என்ற பகுதியில் கண்டு மகிழலாம்.

ஒரு பாடலில் ஞாயிற்றைத் துதிப்பதற்குப் புலவர்களையும் அறிவுப் பொருள்களையும் (Sentient beings) உயிர்ப்பொருள் களையும் 'சேர வாரும் செகத்தீரே' என்று அழைப்பு விடுக்கின்றார்.

....
அவன் நமக்கெல்லாம் துணை.
அவன் மழை தருகின்றான்.
மழை நன்று.
மழைத் தெய்வத்தை வாழ்த்துகின்றோம்.
ஞாயிறு, வித்தை காட்டுகின்றான்.
கடல்நீரைக் காற்றாக்கி மேலே கொண்டு போகிறான்.
அதனை மீளவும் நீராக்கும்படி காற்றை ஏவுகிறான்.
மழை இனிமையுறப் பெய்கிறது.
மழை பாடுகிறது.
அது பல கோடி தந்திகளுடையதோர் இசைக்கருவி.
வானத்திலிருந்து அமுத வயிரக் கோல்கள் விழுகின்றன.[15]

இப்பகுதியிலுள்ள இறுதி மூன்று அடிகளில் கவிதையின் கொடுமுடியினைக் காணலாம். இந்த மூன்று அடிகளையும் பலமுறை சொல்லிப் பாருங்கள்; கவிதையின் அடிநாதம் தட்டுப்படும். இப்பாடலின்,

பூமிப்பெண் விடாய் தீர்கிறாள்; குளிர்ச்சி பெறுகின்றாள்.
வெப்பத்தால் தண்மையும் தண்மையால்
வெப்பமும் விளைகின்றன,
அனைத்தும் ஒன்றாதலால்.
வெப்பம் தவம், தண்மை யோகம்
வெப்பம் ஆண், தண்மை இனிது.
ஆணிலும் பெண் சிறந்ததன்றோ?
அது வாழ்க.

என்ற இறுதிப் பகுதி முத்தாய்ப்பாக அமைந்துவிடுகின்றது. 'போகமும் யோகமும்' இணைந்து செல்லும் தத்துவத்தைக் காண்கின்றோம்.

14. ஷை— ஞாயிறு— 10.
15. ஷை— ஞாயிறு— 11.

அடுத்து, ஞாயிற்றை இயற்கைக் குறியீடுகளாகவும், தெய்வக் குறியீடுகளாகவும் பேசும்போது கவிதைப் பண்பு கொடுமுடியை எட்டிவிடுகின்றது.

....

வெம்மைத் தெய்வமே, ஞாயிறே, ஒளிக்குன்றே,
அமுதமாகிய உயிரின் உலகமாகிய உடலிலே
மீன்களாகத் தோன்றும் விழிகளின் நாயகமே!
பூமியாகிய பெண்ணின் தந்தையாகிய காதலே.[16]
வலிமையின் ஊற்றே, ஒளிமழையே, உயிர்க் கடலே,
சிவனென்னும் வேடன் சக்தியென்னும் குறத்தியை
　　உலகமென்னும் புனங்காக்கச்
　　சொல்லிவைத்துவிட்டுப்போன விளக்கே!
கண்ணனென்னும் கள்வன் அறிவென்னும் தன்முகத்தை
　　மூடிவைத் திருக்கும் ஒளியென்னும் திரையே!
ஞாயிறே; நின்னைப் பரவுகின்றோம்.
மழையும் நின்மகள்; மண்ணும் நின்மகள்;
காற்றும் கடலும் கனலும் நின்மக்கள்;
வெளி நின் காதலி;
இடியும் மின்னலும் நின் வேடிக்கை.
நீ தேவர்கட்குத் தலைவன்.
நின்னைப் புகழ்கின்றோம்.[17]
....

அடுத்த பாடலில் மின்னலை ஒளித்தெய்வத்தின் ஒரு லீலையாக-ஒளித் தெய்வத்தின் தோற்றமாகக்—காண்கின்றார். அதனை மின் சக்தியாகக் காணும் கவிஞரின் அறிவியல் கற்பனையைக் கண்டு வியக்கின்றோம்.

....

மின்னலைத் தொழுகின்றோம்;
அது நம்மை ஒளியுறச் செய்க.
மேகக் குழந்தைகள் மின்னற்பூச் சொரிகின்றன.
மின்சக்தி இல்லாத இடம் இல்லை.
எல்லாத் தெய்வங்களும் அங்ஙனமே.
கருங்கல்லிலே, வெண்மணலிலே, பச்சையிலையிலே,
செம்மலரிலே, நீலமேகத்திலே,
காற்றிலே, வரையிலே—எங்கும் மின்சக்தி உறங்கிக் கிடக்கின்றது.
அதனைப் போற்றுகின்றோம்.
....

16. தோ. பா: ஞாயிறு வணக்கம்-(3) என்பதுடன் இந்த அடியை ஒப்பிடுக.
17. ஞாயிறு—12

சக்தி : பாரதியாருக்குச் சக்தியே தெய்வம்; அதனை அவா பேசாத இடம் இல்லை. தோத்திரப் பாடல்களின் தொகுதியில் காணப்பெறும் சக்திபற்றிய பாடல்களனைத்தும் இதனை மெய்ப் பிக்கின்றன. இங்கு ஞாயிற்றைச் சக்தியின் ஒரு கூறாகக் காண்கின்றார் கவிஞர் கூறுவார்:

சக்தி வெள்ளத்திலே ஞாயிறு ஓர் குமிழியாம்
சக்திப் பொய்கையிலே ஞாயிறு ஓர் மலர்.
சக்தி அநந்தம், எல்லையற்றது, முடிவற்றது.

இதனை அடுத்து வரும் அடிகளில் சக்தியின் லீலா விநோதங்களை அற்புதமாகக் காட்டுவார்.

பிரமன் மகள், கண்ணன் தங்கை; சிவன் மனைவி.
கண்ணன் மனைவி, சிவன் மகள், பிரமன் தங்கை.
பிரமனுக்கும் கண்ணனுக்கும் சிவனுக்கும் தாய்

என்று புராணக் கருத்துகளையெல்லாம் தொகுத்து—'மலையாள அவியல்' போல் சுவையாகக் காட்டுவார். கவிஞரின் கற்பனை உல கெல்லாம் விரிந்து செல்கின்றது; விரிந்த பார்வையில் அனைத்தையும் காண்கின்றார்; நாம் **'விசுவரூப தரிசனத்தைக்' காண்கின்றோம்.**

சக்தி முதற் பொருள்.
பொருளில்லாப் பொருளின் விளையில்லா விளைவு.
சக்திக் கடலிலே ஞாயிறு ஓர்நுரை;
சக்தி வீணையிலே ஞாயிறு ஒரு வீடு; ஒரு ஸ்வர ஸ்தானம்.
சக்திக் கூத்திலே ஒளி ஒரு தாளம்.
சக்தியின் கலைகளிலே ஒளியொன்று.
சக்தி வாழ்க.[18]

என்று சக்தியின் 'பொருளில்லாப் பொருளின் விளைவில்லா விளை வினைக்' காட்டுவர். அடுத்த கவிதையில், உலகில் நடைபெறும் தொழில்களனைத்தும் சக்தியின் தொழிலாகக் காட்டுவார்; நம்மைக் ''கர்ம யோகத்தில்'' ஈடுபடுத்துமாறு சக்தி தெய்வத்தை வேண்டுவார்.

பாம்புப் பிடாரன் குழலூதுவதில் ஒரு தத்துவத்தைக் காண்கின் றார் கவிஞர். அந்தக் குழலிசை 'ஒரு பண்டிதன் தர்க்கிப்பதுபோல் இருக்கின்றது' என்கின்றார். தத்துவத்தைக் காணும்போதே ஒரு கிண்டல் வீச்சினையும் கண்டு மகிழ்கின்றோம். தத்துவத்தை ஒரு குழந்தையின் பேச்சாக்கிக் காட்டுகின்றார். குழந்தை சொல்லும் பொருள்:

18. வசன கவிதைகள்—சக்தி—(1).

''காளிக்குப் பூச்சூட்டினேன். அதைக்
கழுதையொன்று தின்ன வந்ததே''

என்பது. இதன் உட்பொருளைக் கவிஞர் இவ்வாறு விளக்குவார்:

பராசக்தியின் பொருட்டு இவ்வுடல் கட்டினேன்
அதைப் பாவத்தால் விளைந்த நோய் தின்ன வந்தது.
பராசக்தியைச் சரணடைந்தேன்.
நோய் மறைந்து விட்டது.
பராசக்தி ஒளியேறி எனது அகத்திலே விளங்கலாயினள்.
அவள் வாழ்க.

நம் மனம் கவிஞனின் எண்ணத்தோடு இணைந்து செல்ல முடியாவிட்டால் இத்தத்துவத்தை அறிதல்—உணர்தல்—அரிது. அடுத்த கவிதையிலும் (7) பாம்புப் பிடாரன் தொடர்கின்றான்.

பாம்புப் பிடாரன் குழலூது கின்றான்
குழலிலே இசை பிறந்ததா? தொளையிலே பிறந்ததா?
பாம்புப் பிடாரன் மூச்சிலே பிறந்ததா?

என்று மூன்று வினாக்களை எழுப்புகின்றார். அவரே இவற்றிற்கு விடையும் தருகின்றார்.

அவனுள்ளத்திலே பிறந்தது; குழலிலே வெளிப்பட்டது.
உள்ளம் தனியே ஒலிக்காது, குழல் தனியே இசை புரியாது,
உள்ளம் குழலிலே ஒட்டாது.
உள்ளம் மூச்சிலே ஒட்டும், மூச்சு குழலிலே ஒட்டும்,
குழல் பாடும்.
இஃது சக்தியின் லீலை.

என்பதாக. இந்த விளக்கத்தைப் பின்னர்,

கருவி பல. பாணன் ஒருவன்.
தோற்றம் பல. சக்தி ஒன்று.
அஃது வாழ்க.

என்று ஒரு வாய்பாடாக்கித் தந்துவிடுவார். அடுத்த கவிதையில்,

வாழ்க்கையாவது சக்தியைப் போற்றுதல்;
இதன் பயன் இன்பமெய்தல்.
உள்ளம் தெளிந்திருக்க; உயிர்வேகமும் சூடும் உடையதாக;
உடல் அமைதியும் வலிமையும் பெற்றிருக்க,
மகாசக்தியின் அருள் பெறுதலே வாழ்தல்;
நாம் வாழ்கின்றோம்.

என்ற வாழ்க்கையின் மெய்ப்பொருளைத் தெளிவாக்கிவிடுவார். இந்தக் கவிதைகளில் ஆழங்கால் பட வேண்டுமானால் 'வாஸனை' வேண்டும்; பூர்வபுண்ணியமும் வேண்டும். கருத்துகளை அறிதல் வேறு; உணர்தல் வேறு; அவற்றோடு ஒன்றிப்போதல் வேறு.

காற்று : காற்றைப்பற்றிய கவிதைகள் அற்புதமாக அமைந்துள்ளன. குறியீடுகள் இங்குக் கொஞ்சுகின்றன. ஒரு சாண் கயிற்றை ஆணாகவும் முக்கால் சாண் கயிற்றைப் பெண்ணாகவும் உருவகித்துள்ளார் கவிஞர். கவிஞரை இக்கவிதை ஒரு சித்தர் நிலைக்கு உயர்த்திவிடுகின்றது.

எனக்கு முன்னே சித்தர்பலர் இருந்தா ரப்பா!
யானும் வந்தேன் ஒருசித்தன் இந்த நாட்டில்.[18]

என்று அவரே தம்மை ஒரு சித்தராகச் சொல்லிக்கொண்டவரல்லவா? மேற்குறிப்பிட்ட இரண்டு கயிறுகட்கும் 'கந்தன்' என்றும் 'வள்ளி' என்றும் திருநாமம் இட்டு வழங்குகின்றார்.

ஒரு கயிற்றிலிருந்து வாயுதேவன் வெடித்துத் தோன்றுகின்றான். அவன் வயிர ஊசிபோல் ஒல்லியான ஒளி வடிவத்தைக் கொண்டிருக்கின்றான். அவனைக் கவிஞர்,

'காற்றே, போற்றி, நீயே கண்கண்ட பிரம்மம்'[19] என்று போற்றி வணங்குகின்றார். அவன் தோன்றிய பொழுதில் வான் முழுதும் பிராணசக்தி நிரம்பக் கனல் வீசிக்கொண்டிருந்தது. காற்றுத்தேவன் பேசுகின்றான் (கவிஞரை நோக்கி) :

'மகனே, ஏதடா கேட்டாய்? அந்தச் சிறிய கயிறு (வள்ளி) உறங்குகிறதா என்று கேட்கிறாயா? இல்லை, அது செத்துப் போய்விட்டது. நான் பிராணசக்தி. (அண்மை வீட்டிற்கு நீர் பருகச் சென்றிருந்த வைதிகம்—கவிஞர்—"அம்மா நல்ல நித்திரை போலிருக்கிறதே ?" என்று விடுத்த வினாவுக்கு இது பதில்)

காற்றுத்தேவன் தொடர்கின்றான். "என்னுடனே உறவு கொண்ட உடல் இயங்கும். என்னுறவில்லாதது சவம். நான் பிராணன். என்னாலேதான் அச்சிறு கயிறு உயிர்த்திருந்தது; சுகம் பெற்றது. சிறிது களைப்பெய்திய வுடனே அதை உறங்க—இறக்க—விட்டுவிட்டேன். துயிலும்

18. சுய சரிதை : 2. பாரதி அறுபத்தாறு—1.
19. 'நமஸ்தேவாயோ, த்வமேவ பிரத்யட்சம் பிரஹ்மாஸி'—என்பது வேத வாக்கியம்.

சாவுதான்,[20] சாவும் துயிலே. யான் விளங்குமிடத்தே அவ் விரண்டும் இல்லை. மாலையில் வந்து ஊதுவேன். அது மறுபடி பிழைத்துவிடும்.

நான் விழிக்கச் செய்கிறேன். அசையச் செய்கிறேன். நான் சக்திகுமாரன், என்னை வணங்கி வாழ்க.''

காற்றைப்பற்றிய வசன கவிதை ஓர் அற்புதமான **வசன காவியம்.** சூறாவளியும் வாயு தேவனே. நடுக்கடலிலுள்ள கப்பல் நீர்த்தூளிப்பட்டு அழிகிறது. கப்பலிலிருந்து அழியும் உயிர்கள் ஊழிக் கூத்து எப்படியிருக்கும் என்பதை அறிந்தவண்ணம்[21] மறை கின்றன. காற்றைப்பற்றிய கவிதை(2)யின் இறுதிப் பகுதி :

ஊழி முடிவும் இப்படியேதானிருக்கும்
உலகம் ஓடு நீராகிவிடும்; தீ நீர்,
சக்தி காற்றாகிவிடுவாள்.
சிவன் வெறியிலே யிருப்பான்
இவ்வுலகம் ஒன்றென்பது தோன்றும்.
அஃது சக்தி யென்பது தோன்றும்
காற்றே பந்தல் கயிறுகளை அசைக்கிறான்.
அவற்றில் உயிர் பெய்கிறான்.
காற்றே நீரில் சூறாவளி காட்டி, வானத்தில் மின்னேற்றி,
நீரை நெருப்பாக்கி, நெருப்பை நீராக்கி, நீரைத் தூளாக்கித்
தூளை நீராக்கிச் சண்டமாருதம் செய்கின்றான்.
காற்றே யுகமுடிவு செய்கின்றான்.
காற்றே காக்கின்றான்.
அவன் நம்மைக் காத்திடுக.
'காற்றே போற்றி. நீயே கண்கண்ட பிரம்மம்.'

அடுத்து வரும் கவிதைகளில் காற்றின் நிலை பற்றிய விளக்கம், (3) பாலைவனத்தின் கொடுமை பற்றிய விளக்கம் (4), உயிர் தான் காற்று எனல் (5) காற்றைப் போற்றுதல் (6), சிற் றெறும்பின் இயக்கம் (7), காற்றுத் தேவனுக்கு வரவேற்பு (8), காற்றோடு தோழமை கொள்ளல் (9), குளிர்ந்த காற்று நலமென உணர்த்துதல் (10), சக்தியின் பல வடிவங்களில் காற்றும் ஒன்று எனக் காட்டுதல் (11), 'வாயு' பௌதிகத்தூள் என்றும், அதனை ஊர்ந்து வரும் சக்தியே காற்றுத் தேவன் என்றும் காட்டுதல்(12),[22]

20. 'துஞ்சினார் செத்தாரின் வேறல்ல'—குறள் 926.
21. தோ. பா : 35. 'ஊழிக் கூத்து' என்ற பாடலை இசை யுடன் படித்து இந்த அநுபவத்தைப் பெறுக.
22. என்ன கூறுகின்றார் என்பது கவிஞருக்கே வெளிச்சம்!

வையகம் உயிருடையது என்றும், அந்த வையகத்தின் உயிரையே காற்று எனக் கூறுதல் (13) என்பனபோன்ற தத்துவ உண்மைகள் கவிஞனின் குரலாக வெளிப்படுகின்றன. கவிதை 14உம், 15உம் தத்துவத்தின் கொடுமுடிகளைக் காட்டுகின்றன.

> காற்றைப் புகழ நம்மால் முடியாது
> அவன் புகழ் தீராது.
> ....
> பிராண வாயுவைத் தொழுகின்றோம்.
> அவன் நம்மைக் காத்திடுக. (14)

இக்கவிதையில் அபாநன், வியாநன், உதாநன், ஸமாநன் என்ற காற்றின் வடிவங்களைத் தொழுகின்றார். காற்றின் செயல்களைப் பரவி 'உயிர் வாழ்க' என்று கவிதை நிறைவு பெறுகின்றது.

15-ஆம் கவிதை காற்றின் பெருமை பகரப்படுகின்றது. காற்றை உயிராக உருவகித்து அதனுடன் பேசுகின்றார்.

> உயிரே, நின்பெருமை யாருக்குத் தெரியும்?
> நீ கண் கண்ட தெய்வம்.
> எல்லா விதிகளும் நின்னால் அமைவன.
> எல்லா விதிகளும் நின்னால் அழிவன.
> உயிரே,
> நீ காற்று, நீ தீ, நீ நிலம், நீ நீர், நீ வானம்.
> தோன்றும் பொருள்களின் தோற்ற நெறி நீ.
> மாறுவனவற்றை மாற்றுவிப்பது நின் தொழில்.
> ....
> மஹத்— அதனிலும் பெரிய மஹத்—
> அதனிலும் பெரிது— அதனிலும் பெரிது—
> அணு— அதனிலும் சிறிய அணு—
> அதனிலும் சிறிது— அதனிலும் சிறியது—
> இருவழியிலும் முடிவில்லை, இருபுறத்திலும் அநந்தம்.
> ....

இக்கவிதையிலுள்ள தத்துவத்தை அறிதல் அரிது; உணர்தலும் அரிது, முயன்று பார்ப்போம். ஆழங்கால் பட்டால் முடியாதது ஒன்றுமில்லை.

கடல் : இதுபற்றி இரண்டே கவிதைகள். இரண்டும் அறிவியல் உண்மைகளை அற்புதமாகக் காட்டுவன.

> கடலே காற்றைப் பரப்புகின்றது;
> விரைந்து சுழலும் பூமிப்பந்தில்

பள்ளங்களிலே தேங்கியிருக்கும் கடல். நீர், அந்தச் சுழற்சியிலே தலைகீழாகக் கவிந்து திசைவெளியில் ஏன் சிதறிப் போய்விடவில்லை?

பராசக்தியின் ஆணை.

அவள் நமது தலைமீது கடல் கவிழ்ந்து விடாதபடி ஆதரிக்கின்றாள்.
அவள் திருநாமம் வாழ்க.
கடல் பெரிய ஏரி; விசாலமான குளம்; பெருங்கிணறு.
கிணறு நம் தலையிலே கவிழ்கிறதா?
அதுபற்றியே கடலும் கவிழவில்லை.
பராசக்தியின் ஆணை.

மேற்குறிப்பிட்ட கவிதைப் பகுதியில் கவிஞர் குறிப்பிடும் செயல்கள் நிலைப்படுவதற்குப் புவியீர்ப்பு விசையே காரணம் என்பதை நாம் அறிவோம்; **சர் ஐசாக் நியூட்டன்** கண்டறிந்த உண்மை என்பதும் நமக்குத் தெரியும். ஒன்றை நாம் இவ்விடத்தில் சிந்திக்க வேண்டும். இச்செயல்கள் யாவும் இறைவன் படைத்த ஏதோ ஆற்றலால் நடைபெறுகின்றன. இவை நடைபெறும் காரணத்தைக் கண்டு அதற்குப் புவியீர்ப்பு விசை என்று பெயர் சூட்டினார் நியூட்டன். ஆனால், காரியங்கள் நடைபெறும் ஆற்றலை நியூட்டன் படைக்கவில்லை; இறைவனே படைத்தான் என்பதை நாம் அறிதல் வேண்டும். இதனால்தான் கவிஞர்,

உலகம் எல்லா வகையிலும் இயல் பெறுகின்றது.
இஃதெல்லாம் அவளுடைய திருவருள்.
அவள் திருவருளை வாழ்த்துகின்றோம்.

என்று கவிதையை நிறைவு செய்கின்றார். அடுத்த கவிதையில் கடற்காற்று மழையைப் பெய்விக்கின்றது என்று கூறி மழைக்குக் காரணமாக இருக்கும் கடற்கடவுளாம் வருணனையும், தேவர் தலைவனான இந்திரனையும் வாழ்த்துகின்றார். இந்திரன்தானே மேகநாதன்!

வசன கவிதைப் பகுதியில் ஐந்தாவதாகவுள்ள **ஜகத் சித்திரமும்** ஆறாவதாகவுள்ள **விடுதலையும்** சிறு நாடகங்கள். முதல் நாடகம் 'கடவுள் ஒளிப் பொருள். அறிவு கடவுள்; அதன் நிலை மோட்சம்' என்ற தத்துவத்தையும்; இரண்டாம் நாடகம்,

மந்திரம் கூறுவோம் உண்மையே தெய்வம்
கவலையற்றிருத்தலே வீடு. களியே

அமிழ்தம், பயன்வரும் செய்கையே அறமாம்.
அச்சமே நரகம்; அதனைச் சுட்டு
நல்லதை நம்பி நல்லதே செய்க.

என்ற உண்மையை அறவுரையாக—அறிவுரையாகத் தருகின்றது.

மரபுக் கவிதைகளையே படித்துப் பழகியவர்கள் யாப்பு முறையில் அமைந்த புறவடிவத்தையே— செய்யுளையே— கவிதை என்று கருதுகின்றனர். வெற்றெனத் தொடுத்த சொல்லடுக்குகளையும் கவிதை என மயங்குகின்றனர். இவர்கள் வசன கவிதைகளைக் கவிதை என்று ஒப்புக்கொள்வதில்லை. உண்மையான கவிதை எது என்பதைச் சோதித்து அறியும் சுவைஞர்கட்கு—கவிதைத் திறனாய்வாளர்கட்கு— வசனத்திலும் கவிதை தட்டுப்படும். இக் காலப் புதுக்கவிஞர் ஒருவர் ''புராணத்தில் வரும் மன்மதனை ஓவியத்தில் எழுதிக் காட்டுவதற்கு ஒப்பானதாகும். சிவனால் எரிக்கப்பட்ட மன்மதன் ரதிதேவியின் கண்களுக்கு மட்டிலுமே தென்படுவானாம். அதுபோல இலக்கணத் தெய்வத்தின் நெற்றிக்கண் நெருப்புக்கு இரையான புதுக்கவிதையின் உருவமும் உண்மையான இலக்கிய ரதிகளுக்கே தென்படக்கூடும்''[23] என்று கூறிய கூற்று வசன கவிதைகட்கும் பொருந்தும்.

பாரதியாரின் வசன கவிதைகள் அனைத்திலும் கவிதையைக் காணலாம். அஃது உண்மையான 'இலக்கிய ரதிகளுக்கு' மட்டிலுமே தென்படும் என்று சொல்லி வைக்கலாம்.

வங்கக் கவிஞர் இரவீந்திர நாத தாகூர் தம் **கீதாஞ்சலி** என்ற வங்க மொழியில் எழுதப்பெற்ற நூலை ஆங்கில மொழிபெயர்ப்பு செய்யும்போது அதை வசன நடையிலேதான் செய்தார். இந்த மொழி பெயர்ப்பிலேயே ஐரிஷ் கவிஞர் **யேட்ஸ்** தாகூரை அறிந்து உலகம் அறியப் போற்றிப் புகழ்ந்தார். நூலாசிரியர் கையாண்ட எளிமை, அழகு, ஆன்மிகத் தேடல் இவற்றை வெளிப்படுத்தியிருந்த முறையை உணர்வதற்கும் போற்றுவதற்கும் வசனம் ஒரு தடையாக அமையவில்லை. தாகூரின் மொழிபெயர்ப்பாளர் காரைக்குடி **வி. ஆர். எம். செட்டி**யாரும் தமிழில் கீதாஞ்சலியை மொழிபெயர்க்கும்போது இதே உண்மையைக் காண்கின்றார். ''கவிதையின் உள்ளத் தீயை இம்சையின்றி வசன காவிய நடையில்தான் பிரதிபலிக்கச் செய்ய முடியும்....பாரதியாரின் 'ஞான ரதமும்', 'காட்சிகளும்' வசன காவிய நடையிலேயே அமைந்திருக்கின்றன''[24] என்பது அவர் கூற்று. 1913-இல் தாகூரின் 'கீதாஞ்சலி கவிதைகள்'

23. மீரா :புதுக் கவிதையில் உருவம் (அன்னம் மலர்-1976)
24. செட்டியார், வி. ஆர். எம்: **இரவீந்திர நாத் தாகூரின் வாழ்க்கையும் கவிதையும்.**

நோபெல் பரிசைப் பெற்றன. இந்தப் பரிசுக்குப் போட்டியிடவேண்டும் என்று விரும்பிய பாரதிக்கு வால்ட் விட்மெனின் ஜனநாயகக் குரலும் தாகூரின் கீதாஞ்சலிப் புகழும் உந்து சக்தியாக அமைந்து 'காட்சிகள்' (என்ற வசனகவிதைகளை) எழுதத் தூண்டியிருக்கலாம்.[25] இன்னும் சிலர் வடமொழி வேதங்கள், உபநிடதங்களைப் படித்து அநுபவித்ததனால் அவற்றின் தாக்கம் 'காட்சிகள்' எழுதக் கை கொடுத்து உதவியிருக்கலாம் என்று கருதுகின்றனர்.

பாரதியின் வசன கவிதைகள் யோகநிலையில் கண்ட பேரின்பக் கனவுகள். இப்பகுதியிலுள்ள ஒவ்வொரு கவிதையும் இவ்வுண்மையைப் பறைசாற்றுகின்றது. வேதகாலத்து ரிஷிகளைப் போலவே அழகு பொருந்திய அருட்சொற்களில் 'காட்சிகள்' வருணிக்கப் பெறுகின்றன.

பாட்டினிலே சொல்லுவதும் அவள்சொல் லாகும்!
பயனின்றி உரைப்பாளோ? பாராய், நெஞ்சே![26]

என்று கூறியவரல்லவா? பாடல்கள் வசனத்திலிருந்தாலும் திருமூலர் சொற்களின் வேகத்தைப் பெறுகின்றன; பொருள்கனத்தையும் தாங்கிச் செல்லுகின்றன. இதனால் பாரதியார் சித்தர்கள் நிலைக்கு உயருகின்றார். "யானும் வந்தேன் ஒரு சித்தன் இந்த நாட்டில்"[27] என்று தன்னம்பிக்கையுடனும் சொல்லிக் கொள்ளுகின்றார். பாரதியார் முதன்முதலில் வசன கவிதைகளை எழுதினவராதலால் வசன கவிதையின் தந்தையாகின்றார்; வசன கவிதை புதுக் கவிதை பிறக்கக் காரணமாக இருந்ததால் 'வசன கவிதை' என்ற பாரதியின் மகள் (சேய்) புதுக்கவிதையின் தாயாகின்றாள். ஆகவே பாரதியார் புதுக் கவிதையின் பாட்டன் (பிதாமகன்) ஆகின்றார்.

25. பாலா : புதுக்கவிதை : ஒரு புதுப்பார்வை - பக் 44-45.
26. தோ. பா: பேதை நெஞ்சே—5.
27. சுயசரிதை-பாரதி அறுபத்தாறு—1.

8. வாழ்க்கை உண்மைகள்

'**வா**ழ்க்கையைப்பற்றிய திறனாய்வே கவிதையின் அடிப்படை' என்று கூறிப்போந்தார் **மாத்யூ ஆர்னால்டு** என்ற ஆங்கிலத் திறனாய்வாளர். அவர் மேலும் கூறுவார்: 'கவிதை நுவலும் பொருள் மிகச் சிறந்த அளவில் உண்மையையும் புறக்கணிக்கத்தக்கதல்லாத தன்மையையும் பெற்றிருக்கும் பொழுதுதான் சிறந்த கவிதை தனித் தன்மை பெற்றுத் திகழ்கின்றது'[1] என்பதாக. **ஐ. ஏ. ரிச்சர்ட்ஸ்** என்ற மற்றொரு திறனாய்வாளர், 'கவிதைப் பண்புகளை நாம் மதிப்பீடு செய்யுங்கால், பண்பாடு, சமயம், சில சிறப்பான பொருள்களில் அறிவுரை நல்குதல், வெறி உணர்வுகளை அடங்கச் செய்தல், வாழ்வின் நலன்களை மிகுதிப்படுத்தல் ஆகியவற்றைக் கவிதை நுவல்கின்றனவா என்பதைச் சீர்தூக்கிக் காணல் வேண்டும். கவிதை அநுபவப் பயன்களாகவுள்ள இவை இல்லாவிடில் கவிதை பயனற்ற ஒலியாகவே அமைந்துவிடும்'[2] என்று கூறுவர். இவற்றையும் இவை போன்று அறிஞர்கள் கூறும் கருத்துகளையும், நம் அநுபவத்தோடு வைத்துச் சிந்தித்தால், 'வாழ்க்கை எவ்வாறு அமைய வேண்டும்? வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய உண்மைகள் யாவை?' என்பன போன்ற வினாக்கட்கு விடை அமையும் பாங்கில் கவிதை அமைதல் வேண்டும் என்றாகின்றது. எனவே, 'கலை கலைக்காகவே', 'கவிதை கவிதைக்காகவே' என்று **ஏ. சி. பிராட்லி** போன்ற சில மேனாட்டுத் திறனாய்வாளர்கள் எழுப்பும் குரல் தமிழ்க் கவிதையைப் பொறுத்தமட்டில் அவ்வளவாகப் பொருந்துவதில்லை. வெறும் இன்பம் ஒன்றையே அடிப்படையாகக்கொண்டு கலையோ கவிதையோ இருத்தற்கியலாது என்பது தமிழ்க்கவிஞர்கள் கண்ட உண்மை. வெறும் இன்பம் என்பது, நிலையற்றதும், உடனே மறைந்துவிடுவதுமானதாகும். கலைகளும் இலக்கியமும் அழகின் அடிப்படையில் தோன்றியவையாதலால் அவை என்றும் இன்பந் தருவது. அழகு என்றும் இன்பந்தருவது. அழகே வடிவான முருகன்

1. 'Poetry is at bottom a criticism of Life.' ...The substance and matter of the best poetry acquires their special character from possessing, in an eminent degree truth and seriousness.

—M. Arnold : *Essays in criticism*; pp. 143 & 21.

2. Culture, religion, instruction in some special senses, softering of the passions, and furtherance of good causes may be directly concerned in our judgements of the poetic values of experiences. Otherwise, as we shall see, the word 'poetic' becomes a useless sound.

—I. A. Richards : *Principles of Litarary Criticism*-p. 74.

என்றும் இன்பந் தருகின்றானல்லவா ? **கீட்ஸ்** என்ற கவிஞர் 'அழகே வடிவமான பொருள் என்றும் இன்பந் தருவது'[3] என்று கூறியுள்ளதை ஈண்டு நினைவுகூரலாம். இதே கவிஞர், 'அழகே உண்மை, உண்மையே அழகு'[4] என்றும் கூறியுள்ளார். இஃது 'அன்பே சிவம், சிவமே அன்பு' என்ற திருமூலரின் கருத்துடன் ஒருபுடை ஒத்திருப்பதைக் கண்டு மகிழலாம்.

தமிழ் இலக்கியத்தில் தலைசிறந்த கவிதைகளுள் ஒன்றாகிய **மதுரைக்காஞ்சி** மாத்யூ ஆர்னால்டு கூறிய கவிதையின் இயல்புகளுக்குப் பெரும்பாலும் ஒத்து வருகின்றது. என்றும் அழியா உண்மைப் பொருள்களைத் தன்னகத்தே கொண்டு இலங்குகின்றது. முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரமும் மூன்று பெரு நீதிகளை அடிப்படையாகக்கொண்டு தோன்றிய காவியம் என்பதை நாம் அறிவோம். காவியமும் தனி விட்டமின் மாத்திரை போலன்றி உண்ணும் உணவாகிய கறிகாய்களைப்போல்—பழங்களைப்போல்—இன்பந் தருகின்றது. காவியத்தைப் படிக்குங்கால் உணவினை உண்பது போன்ற அநுபவத்தையே பெற்றுவிடுகின்றோம். அறவுரைகளைக் கேட்கின்றோம் என்ற அநுபவமே நமக்கு ஏற்படுவதில்லை. வெறும் ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் நுவலும் நூல்களும் தமிழில் உண்டு. இடைக்காலத்தில் தோன்றிய **பழமொழி, ஆசாரக்கோவை, திரிகடுகம், நான்மணிக்கடிகை** போன்றவை இவ்வகையைச் சார்ந்தவை. இவையும் வாழ்க்கை நெறிகளையே கூறினும், கூறும் முறையில் வேற்றுமை உண்டு. இவற்றைப் பயிலுங்கால் அழகிய விட்டமின் குளிகைகளை விழுங்குவது போன்ற அநுபவம் ஏற்படுகின்றதை அறியலாம்.

இக்கூறியவற்றால் அறவுரை கூறும் செய்யுள் கவிதையாக இருக்க முடியாது என்று கருதுவது தவறு என்பதை அறிதல் வேண்டும். இதனால் கவிஞனின் வேலை அறவுரை கூறுவதே என்று கருதுவதும் கூடாது. அவன் வேலை இன்பத்தை ஊட்டும் கவிதை புனைவது தான். ஆனால் அவ்வின்பம் நிலைத்ததாக அமைய வேண்டுமாயின், அக்கவிதையும் ஆழமான உண்மைப் பொருளைக்கொண்டு இலங்க வேண்டும். தமிழ்க் கவிதையின் இந்த உண்மைக்கு **ஆபர் குரோம்பி**யின் கருத்தும் அரணாக அமைகின்றது. அவர் கூறுவார்: ''இலக்கியத்தில் காட்டப்பெறும் கற்பனை வாழ்வின் உயரிய குறிக்கோள் நடைமுறை வாழ்க்கையில் என்றும் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டிய தூண்டு விசையாக அமைதல் வேண்டும்; நடைமுறையில் அல்லது அறிவாற்றலின் அடிப்படையில் இதனை அடைவதில்

3. A thing of beauty is a joy forever—Keats.
4. Beauty is Truth, is Truth, beauty—Keats.

மேற்கொள்ளும் முயற்சி மிகவும் குறிப்பிடத்தக்கதாக இருக்கும்"[5] என்பதாக. அப்பொருளைக் கலைஞன் ஏனையோர்போலச் சாதாரணமாக எடுத்துக் கூறான். உண்மையைக் கற்பனை, அநுபவம் என்ற இரண்டுடன் கலந்து அழகு வடிவமான கலைப் பிண்டமாக்கித் தருவான். இங்ஙனம் செய்தால்தான் அவன் கலை, நிலை பெற்றிருக்கும்; நிரந்தரத்துவமும் அடைந்திருக்கும்.

நெஞ்சுக்கு உரைத்தல் : நெஞ்சுக்கு உரைப்பதுபோல் பாரதியாரின் சில பாடல்கள் காணப்படுகின்றன. தனிமனிதன் சமூகத்தின் ஓர் உறுப்பு. தனிமனிதன் யோக்கியனாக, சிறந்தவனாகத் தன்னை ஆக்கிக்கொண்டால் சமூகமும் சிறந்த ஒன்றாக அமையும் என்பது பாரதியாரின் கோட்பாடு. நமது மனம் பேயாய் அலையும். ஏதாவது ஒன்றைப் பற்றிக்கொண்டு ஊசலாடும்; அடுத்ததை நோக்கி அடுத்தடுத்து உலவும். புதியதைக் காணில் புலனழிந்து நிற்கும். பிணத்தினை விரும்பும் காக்கையைப்போல் அழுகுதல், சாதல், அஞ்சுதல் முதலிய இழிபொருள் காணில் விரைந்து அதனை நாடும். இன்பத்தையே நாடி எண்ணிலாப் பிழை செய்யும்; இன்பமென்றெண்ணி துன்பத்து வீழ்ந்து மயங்கும். இது சகத்தின் விதிகளைத் தனித்தனியாக அறிந்தாலும் பொது நிலையை அறியாது; அறியவேண்டிய பொருளையும் அறியாது மயங்கும். இத்தகைய மனத்திற்குக் கட்டளையிடுகின்றார் கவிஞர்.

பேயாய் உழலும் சிறுமனமே!
பேணாய் என்சொல் இன்றுமுதல்
நீயாய் ஒன்றும் நாடாதே
நினது தலைவன் யானேகாண்;
தாயாம் சக்தி தாளினிலும்
தருமம் எனயான் குறிப்பதிலும்
ஓயா தேநின் றுழைத்திடுவாய்
உரைத்தேன் அடங்கி உய்யுதியால்.[6]

இங்ஙனம் கட்டளையிட்டவர் மனப்பெண்ணை நோக்கிப் பேசுவார்:

மனமெனும் பெண்ணே! வாழிநீ கேளாய்!
நின்னொடு வாழும் நெறியுநன் கறிந்திடேன்;
இத்தனை நாட்போல் இனியுநின் இன்பமே
விரும்புவன்; நின்னை மேம்படுத் திடவே

5. But the perfect significance we find in the imagined life of literature is a continual incentive to the noblest endeavour of actual life; the endeavour to attain, a practically or intellectually as much significance as may be.

—Lascelles Abercrombic; *Principles of Literary Criticism* p. 57

6. வே. பா. மனத்திற்குக் கட்டளை.

முயற்சிகள் புரிவேன்; முத்தியுந் தேடுவேன்.
உன்விழிப் படாமல் என்விழிப் பட்ட
சிவமெனும் பொருளைத் தினமும் போற்றி
உன்றனக் கின்பம் ஓங்கிடச் செய்வேன்.[7]

இங்கு மனம் வேறு, ஆன்மா வேறு என்பதை உணர்ந்தால்தான் இப் பாடலின் உட்கருத்து தெளிவாகும்.

'தன்னை வென்றாலவை யாவும் பெறுவது
சத்திய மாகு மென்றே
முன்னை முனிவர் உரைத்த மறைப் பொருள்
முற்றும் உணர்ந்தால்தான்'[8]

தன்னை (மனத்தை) வென்றாளும் திறமையை அடையலாம் என்பது கவிஞர் உணர்த்தும் உண்மை.

அன்பினால் அனைத்தையும் வெல்லலாம் என்பது கவிஞர் காட்டும் உண்மை.

துன்ப நினைவுகளும் சோர்வும் பயமுமெல்லாம்
அன்பில் அழியுமடீ!— கிளியே!— அன்புக்கழிவில்லை காண்.[10]

என்ற பாடலில் கூறுவதைக் காண்க. இன்னொரு பாடலில்

— வையகத்தில்
அன்பிற் சிறந்த தவமில்லை, அன்புடையார்
இன்புற்று வாழ்தல் இயல்பு[11].

என்று தவத்தினால் விரும்பியவற்றையெல்லாம் எய்தலாம் என்று கூறிய கவிஞர் அன்பே தவமனைத்திலும் சிறந்ததென்று காட்டி அன் புடையார் இன்புற்று வாழ்தல் இயல்பு என்பதைக் கோடிட்டுக் காட்டுவர். பாரதி நெஞ்சுக்கு உரைத்தவை யாவும் நமக்கு உரைத் தனவாகவே கொள்ளல் வேண்டும்.

தவிர்க்க வேண்டியவை : ஒருவன் தன் வாழ்க்கையில் தவிர்க்க வேண்டியவையாக நாணம், கவலை, சினம், பொய், அச்சம், வேட்கை என்ற ஆறனைக் கூறுவார் கவிஞர். இந்த ஆறனையும் ஒருவன் தவிர்த்துவிட்டால் அவன் மரணமிலாப் பெருவாழ்வை எய்துவான் என்கின்றார். "மிச்சத்தைப் பின் சொல்வேன், சினத்தை

7. ஷெ : மனப்பெண். அடி (31-38).
8. ஷெ : ஆத்மஜெயம்— 2.
9. தோ. பா : கிளிப்பாட்டு-2.
10. ஷெ : வி. நா. மா-37.

முன்னே—வென்றிடுவீர், மேதினியில் மரணமில்லை'' என்று முதலில் சினத்தைத் தவிர்க்குமாறு வேண்டுவார். ஞானத்தை மறத்தலால் தான் மானுடர்க்கு நெஞ்சில் சினமாகிய தீ தோன்றுகின்றது என்பது கவிஞரின் கருத்து.

சினத்தின் கேட்டை வள்ளுவப் பெருந்தகை 'வெகுளாமை' என்ற அதிகாரத்தில் தெளிவாக விளக்குவர்:

'தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்''[11]

என்பது இவ்வதிகாரத்தின் உயிராய குறள். ஒருவன் தன்னைக் காத்துக்கொள்ள வேண்டுமானால் அவன் தன் மனத்தில் சினம் எழாமல் காத்துக்கொள்ளல் வேண்டும்; அங்ஙனம் காவாக்கால் அச்சினம் அவனையே கொன்றொழிக்கும் என்பது வள்ளுவரின் கருத்து. இக்குறளுக்கு விளக்கம் தருவதுபோலப் பாரதியார்,

சினங்கொள்வார் தம்மைத்தாமே தீயாற் சுட்டுச்
செத்திடுவார் ஒப்பாராவார்; சினங்கொள் வார்தாம்
மனங்கொண்டு தங்கழுத்தைத் தாமே வெய்ய
வாள்கொண்டு கிழித்திடுவார் மானு வாராம்.
தினங்கோடி முறைமனிதர் சினத்தில் வீழ்வார்*
சினம்பிறர்மேற் றாங்கொண்டு கவலை யாகச்
செய்ததெணித் துயர்க்கடலில் வீழ்ந்து சாவார்[12]

என்று கூறுவார். சினங்கொள்பவர் தம்மைத் தாமே தீயாற் சுட்டுச் செத்திடுவாரை ஒப்பர் என்றும், தம் கழுத்தைத் தாமே வெய்ய வாளினொன்றினால் கிழித்துக்கொண்டழிவாரை மானுவார் என்றும் விளக்குவார். பிறர்மேல் சினங்கொள்பவர் கவலையால் துயர்க் கடலில் வீழ்ந்து அழிவர் என்று பின்னும் விளக்குவார்.

அச்சம்: 'அச்சமே கீழ்களது ஆசாரம்'[13] என்று கூறுவர் வள்ளுவப் பெருந்தகை. கீழ்மக்கள்—'கீழ்கள்'—தமக்கு அரசனால் துன்பம் நேரிடக்கூடும் என்று சதா எண்ணிக்கொண்டிருப்பதாகக் கூறுவர் இப்பெருமகனார். பாரதியார் தம் காலத்துப் பாரத மக்களின் நிலைமையை 'நெஞ்சு பொறுக்குதிலையே'[14] என்ற பாடலில்,

11. குறள்—305.
* இந்த அடியில் பாதி காணப்பெறவில்லை. (எந்தப் பதிப்பிலும் இல்லை).
12. பாரதி அறுபத்தாறு—8.
13. குறள்—1075.
14. தே. கீ: பாரத மக்களின் தற்கால நிலைமை.

அஞ்சி அஞ்சிச் சாவார்—இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே

இவர்தம் அச்சத்தை எடுத்துக் காட்டி இதற்குரிய காரணங்களைப் பட்டியலிட்டும் காட்டுவார். கணபதியின் தாளைக் கருத்திடை வைத்தால் அச்சம் தீரும் என்கின்றார்.[15] பிறிதொரு பாடலில் 'அச்சம் வேண்டேன்' என்கின்றார்.[16] 'புலை, அச்சம் போய் ஒழிதல் வேண்டும்'[17] என்று காளியை வேண்டுகின்றார். இன்னொரு பாடலில்,

கரணமுந் தனுவும் நினக்கெனத் தந்தேன்,
காளிநீ காத்தருள் செய்யே;
மரணமும் அஞ்சேன்; நோய்களை அஞ்சேன்
மாரவெம் பேயினை அஞ்சேன்[18]

என்று கரணமும் தனுவும் காளிக்கு ஈந்து மரணம், நோய்கள், மாரவெம் பேய்க்குத் தனது அஞ்சாமையைத் தெரிவிக்கின்றார். கிளிப்பாட்டில்,[19]

துன்ப நினைவுகளும் சோர்வும் பயமும் எல்லாம்
அன்பில் அழியுமடி—கிளியே—அன்புக் கழிவில்லை காண்''

என்று பயம் அன்பினால் அழிந்துபடும் என்று அச்சத்தைப் போக்கும் வழியையும் காட்டுவர். 'அச்சமில்லை''[20] என்ற பாடலில்,

அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
இச்சகத்து ளோரெலாம் எதிர்த்துநின்ற போதினும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே

என்று கூறுபவர் 'உச்சிமீது வானிடிந்து வீழ்ந்த போதிலும்' தமக்கு அச்சமில்லை என்று பறைசாற்றுகின்றார். இந்தப் பாடலைப் படிக்கும்போதே.

நாமார்க்குங் குடியல்லோம்
நமனை அஞ்சோம்.[21]

என்ற நாவுக்கரசரின் வாக்கையும் நினைவுகூரச் செய்துவிடுகின்றார். இன்னொரு பாடலில்,

15. தோ. பா; வி. நா. மா. 4.
16. ஷை— ஷ, 20.
17. தோ. பா. யோக சித்தி— 10.
18. ஷை. மகாசக்தி பஞ்சகம்— 1.
19. ஷை. கிளிப்பாட்டு— 2.
20. வே. பா. 1. அச்சமில்லை. 1
21. தேவாரம் 4. 98 1

பயமெனும் பேய்தனை அடித்தோம்— பொய்ம்மைப்
பாம்பைப் பிளந்துயிரைக் குடித்தோம்[22]

என்று ஜயபேரிகை கொட்டி முழக்குகின்றார். 'மாயையைப் பழித்தல்'[23] என்ற பாடலில்,

சாகத் துணியிற் சமுத்திர மெம்மட்டு
மாயையே!— இந்தத்
தேகம் பொய்யென் றுணர்தீ ரரைஎன்
செய்வாய்?

என்று தம் அஞ்சாமையைத் தெரிவிக்கின்றார். இதே பாடலில் நாவுக்கரசரை நினைவுறுத்தும் பாங்கில்,

யார்க்கும் குடியல்லேன் யானென்ப
தோர்ந்தனன் மாயையே!— உன்றன்
போர்க்கஞ்சு வேனோ பொடியாக்குவேன்
உன்னை

என்று வீர முழக்கம் செய்கின்றார்.

சித்தி னியல்பும் அதன்பெருஞ் சக்தியின்
செய்கையும் தேர்ந்து விட்டால்—மனமே!
எத்தனை கோடி இடர்வந்து சூழினும்
எண்ணஞ் சிறிது முண்டோ?'[24]

என்று தெளிவு பெற்றவரல்லவா? சிறுவர்க்கு நீதி உரைக்கும் பாங்கில், எடுத்த எடுப்பில் 'அச்சந்தவிர்' என்று புதிய ஆத்தி சூடியைத் தொடங்குகின்றார். இதில்,

பேய்களுக்கு அஞ்சேல்
ரௌத்திரம் பழகு[25]

என்ற அறவுரைகளும் அச்சத்தைத் தவிர்க்கச் செய்யும் அறவுரைகளாகும். பாப்பாவை நோக்கி,

பாதகஞ் செய்பவரைக் கண்டால்—நாம்
பயங்கொள்ள லாகாது பாப்பா!

22. வே. பா. ஜயபேரிகை— 1.
23. ஷை. மாயையைப் பழித்தல்.
24. ஷை : தெளிவு-3.
25. ப. பா. : புதிய ஆத்தி சூடி.

மோதி மிதித்துவிடு பாப்பா!—அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா!

என்று மழலை மொழியில் வழங்கும் நீதியிலும் அச்சம் கொள்ள லாகாது என்பதை உணர்த்துகின்றார்.

பயம் கொள்வதால் பயனில்லை என்பதை,

மேன்மைப் படுவாய் மனமே!கேள்
விண்ணின் இடிமுன் விழுந்தாலும்
பான்மை தவறி நடுங்காதே,
பயத்தால் ஏதும் பயனில்லை;
யான்முன் உரைத்தேன் கோடிமுறை
இன்னும் கோடி முறைசொல்வேன்[26]

என்று கூறுவர். கணபதியின் அருள் இருப்பதால் பயம் ஒழிந்தது என்றும் கூறுவர். இதற்கு அடுத்த பாடலிலும் அச்சத்தைத் தவிர்க் கும் உறுதியுடன் உள்ளதைக் காட்டுவார். தாம் எல்லா நலன்களும் பெற்றுக் 'களித்துரை செய்யக் கணபதி பெயரும்' இருப்பதால்,

அச்ச மில்லை அழுங்குத லில்லை,
நடுங்குத லில்லை நாணுத லில்லை,
பாவ மில்லை பதுங்குத லில்லை;
ஏது நேரினும் இடர்ப்பட மாட்டோம்;
அண்டஞ் சிதறினால் அஞ்ச மாட்டோம்
கடல்பொங்கி எழுந்தாற் கலங்க மாட்டோம்;
யார்க்கு மஞ்சோம், எதற்கு மஞ்சோம்;
எங்கு மஞ்சோம், எப்பொழுது மஞ்சோம்[27]

என்கின்றார். ''மனத்திலுறுதி வேண்டும்....காரியத்திலுறுதி வேண் டும்''[28] என்று தம் திடசித்தத்தைக் கூறியவரல்லவா?

கவலை : கவலை மனிதனின் மனத்தையும் உடலையும் அரித்துத் தின்னும் ஒருவகைப் புற்று நோய். அதனைத் தலையெடுக்க வொண்ணாமல் ஒழித்துக் கட்ட வேண்டும் என்பதைப் பல பாடல் களில் தெரிவிப்பார். ஒரு பாடலில்,

மூட நெஞ்சே! முப்பது கோடி
முறையுனக் குரைத்தேன்; இன்னும் மொழிவேன்;

26. தோ. பா: வி. நா. மா. 23.
27. ஷ்டி—ஷ்டி. 24.
28. வே. பா. உறுதி வேண்டும்— 1, 2.

தலையிலிடி விழுந்தால் சஞ்சலப் படாதே;
ஏது நிகழினும் 'நமக்கென்?' என்றிரு;
பராசக்தி யுளத்தின் படியுலகம் நிகழும்;
நமக்கேன் பொறுப்பு? ''நான்என்றோர் தனிப்பொருள்
இல்லை; நான்எனும் எண்ணமே வெறும்பொய்''
என்றான் புத்தன்; இறைஞ்சுவோம்! அவன்பதம்.[29]

என்ற பகுதியில் எதற்கும் சஞ்சலப்படுதலாகாது என்று உரைத்திடுவர். இதனைத் தொடர்ந்து,

இனியெப் பொழுதும் உரைத்திடேன், இதைநீ
மறவா திருப்பாய், மடமை நெஞ்சே!
கவலைப் படுதலே கருநர கம்மா!
கவலையற் றிருத்தலே முக்தி;
சிவனொரு மகனிதை நினக்கருள் செய்கவே.

என்று கவலையைத் தவிர்க்குமாறு நெஞ்சை வற்புறுத்துவர்.

நெஞ்சிற் கவலை நிதமும் பயிராக்கி
அஞ்சி உயிர்வாழ்தல் அறியாமை[30]

என்கின்றார். பெரும்பாலும் கவலையை மனிதனே விளைவித்துக் கொள்கின்றான். ஆசையை வளர்ப்பதால் சாணத்தில் புழுக்கள் உண்டாதல்போல் மனத்தில் கவலைகள் தோன்றுகின்றன. இக் கவலைகளைப் போக்க வேண்டுமானால்,

—தஞ்சமென்றே
வையமெலாங் காக்கும் மகாசக்தி! நல்லருளை
ஐயமறப் பற்றல் அறிவு.

என்று கூறுவார். இன்னும் சிலர் கடந்தவற்றை— வாழ்க்கையில் எதிர்பாராமல் நிகழ்ந்தவற்றையும், தாமே விளைவித்துக்கொண்டது துன்பங்களையும்—நினைந்து கவலைப்படுவர். இவர்களை நினைந்து பேசுகின்றார் :

சென்றதினி மீளாது மூட ரே!நீர்
எப்போதும் சென்றதையே சிந்தை செய்து
கொன்றழிக்கும் கவலையெனும் குழியில் வீழ்ந்து
குமையாதீர்! சென்றதனைக் குறித்தல் வேண்டாம்

29. தோ. பா. வி. நா. மா. 36.
30. ஷை : மகாசக்தி வெண்பா— 2.

இன்றுபுதி தாய்ப்பிறந்தோம் என்று நீவிர்
எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக் கொண்டு
தின்றுவிளை யாடியின்புற் றிருந்து வாழ்வீர்;
தீமையெலாம் அழிந்துபோம் திரும்பி வாரா[32]

என்று அறிவுரை கூறுவார். இன்னொரு பாடலில் நெஞ்சை நோக்கிப் பேசுவார் :

ஏழை
நெஞ்சே! வாழி! நேர்மையுடன் வாழி!
வஞ்சக் கவலைக் கிடங்கொடேல் மன்னோ!
தஞ்ச முண்டு சொன்னேன்
செஞ்சுடர்த் தேவன் சேவடி நமக்கே[33]

கவலைக்கிடங்கொடாமல் உமைக்கினிய மைந்தன் சேவடியைத் தஞ்சமெனக் கொள்ளுமாறு அறிவுரை கூறுவார்.

பொறுமையின் பெருமை : 'பொறுத்தவர் பூமி ஆள்வார்' என்ற பழமொழியினை எடுத்துக்காட்டிப் பொறுமையின் பெருமையினை விளக்குவார். அவனியிலே பொறையுடையான் தேவன் என்று புகழப்பெறுவான். பொறையுடைமைக்கு எடுத்துக்காட்டாக விளங்குபவன் யுதிட்டிரன்; அறக்கடவுளின் புதல்வனான இவன் நெடுநாள் செங்கோலாச்சிப் புவியைக் காத்தான். இறுதியில் பொறுமை நெறி தவறித் தம்பியருடன் (துரியோதனாதியோருடன்) போரிட்டுப் பாரதத்தைப் போரில் அழித்தான்; பூமியில் வறுமையையும் நிறுத்திவிட்டு மலைமீது சென்று தவமியற்றி வானுலகம் சென்றான். பொறையுடைமை தவறியதால் தருமன் வாழ்க்கை சீர்கெட்டுப் போனதை எடுத்துக் காட்டிப் பொறுமையின் இன்றியமையாமையை விளக்குகின்றார் கவிஞர்.

பொறாமையின் கேடு : பாஞ்சாலி சபதத்தில், துரியோதனனை நடுவாக வைத்து இந்த உண்மை விளக்கப்பெறுகின்றது. இராசசூயப் பெருவேள்வியினால் பாண்டவர்க்கு வந்த ஏற்றத்தைக் கண்டு துரியோதனன் மனம் புழுங்கி நைகின்றதைக் கவிஞர் பல பாடல்களில் (1.5 : 19-38) எடுத்துக் காட்டுகின்றார். 'எண்ணிலாத பொருட்குவையும், யாங்கணும் செலும் சக்கர மாண்பும் வார்கடல் பெருஞ்சேனையையும் கொண்டு' இந்திர போகங்களைத் துய்க்கும் வாய்ப்பிருந்தும்,

பாண்டவர் முடியுயர்த்தே—இந்தப்
பார்மிசை யுலவிடு நாள்வரை நான்

32. வே. பா : சென்றது மீளாது.
33. தோ. பா: வி. நா. மா. 24. அடி (16— 20).

ஆண்டதோர் அரசாமோ?—எனது
ஆண்மையும் புகழுமோர் பொருளாமோ?[34]

என்று எண்ணுகின்றான். வேள்வியினால் பாண்டவர்கட்குக் கிடைத்த பொருள்களையும், பெருமைகளையும் சிறப்புகளையும் எண்ணி எண்ணி ஏங்குகின்றான். நெஞ்சிற் கருதியவற்றையெல்லாம் சகுனியிடம் (1.6 : 42-51) சொல்லுகின்றான். ஏந்திழையாள் (திரௌபதி) தன்னை நோக்கிச் சிரித்ததையும் கோடிட்டுக் காட்டி,

பேச்சை வளர்த்துப் பயனொன்று
மில்லை,என் மாமனே!—அவர்
பேற்றை அழிக்க உபாயஞ்
சொல்லுவாய் என்றன் மாமனே!
தீச்செயல் நற்செயல் ஏதேனினும்
ஒன்றுசெய்து நாம்—அவர்
செல்வங் கவர்ந்தவ ரைவிட
வேண்டும் தெருவிலே.[35]

என்று தன் மனக்கருத்தை வெளியிடுகின்றான்.

பாண்டவர் வேள்வியிற் சமைத்தது போன்று, அளவற்ற பொருட்செலவில் வையகமீதில் இணையற்றதாக மண்டபம் சமைக்கச் செய்ததும், அதனைப் பார்த்து மகிழப் பாண்டவர்களை 'மறுவிருந்தாட' அழைத்து வருமாறு விதுரனைப் போக்கியதும் விருந்திற்குப் பின்னர்ச் சகுனியைத் தருமனுடன் கவறாடச் செய்ததும், அதில் பாண்டவர்கள் அனைத்தையும் இழந்து அடிமைகளானதும், துரியோதனன் தம்பி துச்சாதனனைக்கொண்டு பாஞ்சாலியை மன்றுக்கு இழுத்து வந்து உலகம் கேட்டிராத முறையில் அவமானம் அடையச் செய்ததுமான செயல்கள் தொடர்சங்கிலி போல் நிகழ்வதைக் காட்டிப் பாரதப்போரையும் அதில் துரியோதனன் தன் தம்பியருடன் மாண்டு போவதையும் நினைக்கச் செய்கின்றார். இவை 'அழுக்காறு உடையார்க்கு அதுவே சாலும்'[36] என்றும்

அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்[37]

என்றும் பொது மறையில் காணப்பெறும் வள்ளுவரின் வாய்மொழிகளையும் சிந்திக்கச் செய்கின்றன.

34. பா. ச. 1, 5 : 20.
35. ஷை. 1. 6 : 52.
36. குறள்— 165.
37. ஷை— 168.

கவறாடலின் கொடுமை : கவிஞர் தருமனைக்கொண்டு இதனைப் பேசச் செய்கின்றார். ஆயினும், அவனே சூதாட்டத்தில் இறங்கிப் பலியாவதையும் காட்டுகின்றார். அறத்தோன்றலையே' கவறாடலுக்குத் திருப்புவதில் சகுனியைச் சிறந்த சமர்த்தனாக்கு கின்றார். ''மன்னர் சூதாட வல்லுக்கழைத்தபோது மறுப்பதில்லை. வாட்போரிலும் சாத்திரப் போரிலும் வல்லவன் வெல்வான்; வன்மை இல்லாதவன் தோற்றிடுவான். இது சதியன்று. நல்லவன், அல்லா தான் என்ற மரபு இங்கில்லை. வல்லமர் செய்ய மன்னர் அவைமுன் நின்னை அழைத்துவிட்டேன். வருவதுண்டேல் சொல்லுக; துணி வின்றேல் அதனையும் கூறுக'' என்கின்றான் சகுனி. சிலம்பில் 'விதி' வெல்வதைக் காண்பதைப் போல், இங்கும் விதி வெல்வதைக் காண்கின்றோம். தருமன் சூதிற்கிணங்குகின்றான்.

மெய்யறிந்தவர் தம்மு ளுயர்ந்தோர்
விதியினாலத் தருமனும் வீழ்ந்தான்.''[38]

என்கின்றார் கவிஞர். கவறாடலின் கொடுமையைத் தருமன் எங் ஙனம் அநுபவித்தான்? அனைத்தையும் இழந்த பிறகு தம்பியரையும் தன் மனைவியரையும் இழந்து உலகப் பழிக்கு ஆளாகின்றான்.

சிறுமை பலசெய்து சீரழிக்கும் சூதின்
வறுமை தருவதொன் றில்.[39]

என்ற வள்ளுவத்திற்குச் சரியான இலக்கியமாகின்றான். இதனால் அரசவையில் பெருத்த அவமானம், பன்னிரண்டு ஆண்டுகள் காடுறை வாழ்க்கை, ஓராண்டு கரந்துறை வாழ்க்கை இவனுக்குக் கிடைத்த பரிசுகள்!

குழந்தைகட்கு நீதிகள் : பிஞ்சு மனங்கட்கும் வாழ்க்கை யில் கடைப்பிடிக்க வேண்டிய வழிகளைக் காட்டுகின்றார்.[40]

ஓடி விளையாடு பாப்பா!—நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா!
கூடி விளையாடு பாப்பா!—ஒரு
குழந்தையை வையாதே பாப்பா!

இதில் சின்னஞ்சிறு வயதிலேயும் சுறுசுறுப்பு வேண்டும் என்கின்றார்.

காலை எழுந்தவுடன் படிப்பு—பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு;

38. ஷெ பா. ச. 2.36 : 181.
39. குறள். 934.
40. ப. பா. பாப்பாப் பாட்டு.

மாலை முழுதும்விளை யாட்டு—என்று
வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா.

என்று குழந்தைகட்குப் படிப்புக்கும் உடற்பயிற்சிக்கும் ஊக்கம் காட்டுகின்றார். குழந்தைகட்கு நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் இன்றியமையாதவை என்பதை,

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற—எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா!
....
சொல்லில் உயர்வுதமிழ்ச் சொல்லே—அதைத்
தொழுது படித்திடடி பாப்பா!

சாதி வேற்றுமையைக் களையும் பாங்கில்,

சாதிகள் இல்லையடி பாப்பா!—குலத்
தாழ்ச்சி உயர்ச்சிசொல்லல் பாவம்;
நீதி உயர்ந்தமதி கல்வி—அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்.

என்று பிஞ்சு மனங்களில் உயர்ந்த கருத்துகளை விதைக்கின்றார்.

உயிர்க ளிடத்தில்அன்பு வேணும்;—தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்;
வயிர முடையநெஞ்சு வேணும்;—இது
வாழும் முறைமையடி பாப்பா!

என்று அருட்பெருஞ்சோதி வள்ளலார் பாணியில் பாப்பாவிடம் பேசுகின்றார். பெண் கல்விக்கும் பெண்ணுரிமைக்கும் முன்னுரிமை அளிக்கும் கவிஞர் 'பாப்பாவுக்கு' (பெண் பிள்ளை) அறவுரை கூறுவது நம்மைச் சிந்திக்க வைக்கின்றது.

படித்துப் பதவிகளிலிருப்பவர்க்கு :—இன்று நாட்டில் படித்துப் பல துறைகளிலும் பணியாற்றுபவர்கட்கும் நீதி வழங்குகின்றார். எங்கும் கடமை உணர்வும், பொறுப்புணர்வும் இல்லாமையைக் காண்கின்றோம். தாம் வகிக்கும் பதவியை வைத்துக்கொண்டு சொல்லுவதற்கே கூச்சப்பட வேண்டிய அக்கிரமங்கள் நடப்பது எங்கணும் பெருவழக்காகிவிட்டது. கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் மதிப்பெண்கள் வழங்குவதிலும், மதிப்பெண் பட்டியலை மாற்றுவதிலும் நடைபெறும் ஊழல்கள் சொல்லி முடியா. கலப்படக்காரர்கள், கள்ள வணிகர்கள், கடத்தல் பேர்வழிகள்—இவர்கள் நாட்டில் விளைவிக்கும் ஊழல்கள் ஆயிரமாயிரம். இவற்றிற்கெல்லாம் ஆளுங்கட்சியிலுள்ள அரசியல்வாதிகள் புரியும்

அக்கிரமங்கள், சட்டத்தை மீறும் போக்கு, சட்டத்தையே தமக்கு நன்மை விளைக்குமாறு செய்யும் சாணக்கியம், ஈடும் எடுப்பும் அற்ற முறையில் கையூட்டுப் பேய் தாண்டவமாடுவதைப் பார்த்துக்கொண்டு வாளா இருத்தல், தலைமைப் பீடங்களிலிருப்போரே கையூட்டின் மூலமாக இருத்தல் முதலியவை இன்று அன்றாட வாழ்வில் நாம் காணும் காட்சிகள். இன்று பாரதியார் வாழ்ந்து இவையெல்லாம் 'சுதந்தர இந்தியாவில்' நடைபெறுவதைக் கண்டால் என்ன செய்வாரோ? அவருடைய மனம் கொதித்து என்னென்ன பாடல்களைப் படைக்குமோ? இவையெல்லாம் படித்தவர்களால் நடைபெறுவதால்,

படிச்சவன் சூதும் பாவமும் பண்ணினால்
போவான், போவான், ஐயோவென்று போவான்![41]

என்று மனம் வருந்திக் குடுகுடுப்பாண்டி வாயில் வைத்துப் பேசுகின்றார் கவிஞர்.

ஊழின் பெருவலி : 'பால்வரைத் தெய்வம்' எனக் கூறப்படும் ஊழின் பங்கு பாஞ்சாலி சபதம் முழுவதுமே ஊடுருவி நிற்பதைக் காண்கின்றோம். இடத்திற்கேற்றவாறும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறும் இதை மாந்தர்களின் வாயிலாக ஊழின் வலி எடுத்தோதப் படுகின்றது.

(1) பாண்டவர்களைச் சூதிற்கழைக்குமாறு தந்தையை வற்புறுத்துகின்றான் துரியோதனன். அப்படிச் செய்யாவிடில் தன் தலையைக் கொய்து உயிர் விடுவதாக அச்சுறுத்துகின்றான். திருதராட்டிரனின் மனம் தளர்வுறுகின்றது. விதியை நினைக்கின்றான்; பாண்டவர்க்கு அழைப்பு விடுக்கவும் ஒருப்படுகின்றான். விதுரன் 'போச்சுது! போச்சுது பாரத நாடு' என்று ஏங்கிக் கூறும்போது,

சென்று வருகுதி, தம்பி, இனிமேல்
சிந்தனை ஏதும் இதிற்செய மாட்டேன்!
வென்று படுத்தனன் வெவ்விதி என்னை
மேலை விளைவுகள் நீஅறி யாயோ?
'அன்று விதித்ததை இன்றுத டுத்தல்
யார்க்கெளி' தென்று'.[42]

விதியின்மீது பாரம்போட்டு மெய் சோர்ந்து விழுகின்றான்.

(2) தருமன் அத்தினபுரம் செல்ல ஒருப்படுகின்றான். வீமனும் வில் விசயனும் தமையன் பேச்சைத் தட்டிப் பணிவோடு

41. ப. பா. புதிய கோணங்கி—2.
42. பா. ச—1.45 : 113.

பேசுகின்றனர்; அவர்கள் அழைப்பை ஏற்க ஒருப்படவில்லை. அப்போது பல நியாயங்களை எடுத்துரைக்கும் தருமன் 'எல்லாம் விதிப் படி நடக்கும்' என்றும், கடமையை ஆற்றுவது தம் கடன் என்றும் கூறுகின்றான்.

(3) பாண்டவர் அத்தினபுரத்திற்குப் பயணப்படுகின்றனர். இப்போது கவிப்பரிவு (Poetic sympathy) செயற்படுகின்றது. இது கவிஞரின் தற்கூற்றாக, விதியைப்பற்றிய விளக்கமாக வெளிப்படுகின்றது. இந்தப் பயணத்தை 'நெடுங்கரத்து விதிகாட்டும் நெறி' என்றே குறிப்பிடுகின்றார், கவிஞர். மேலும், விதியின் திரு விளையாடல்களை 'நரிவகுத்த வலையினிலே' (1.26 : 146) என்ற பாடலில் தமக்கே உரிய முறையில் மிக அற்புதமாகக் காட்டுவர்.

(4) நாட்டினைப் பணயம் வைக்குமாறு தருமனிடம் சகுனி சொல்லும்போது விதுரன் வெகுண்டெழுந்து அறவுரை கூறுகின்றான். இதனைக் கேட்ட சுயோதனன் விதுரனைப் பலவாறு ஏசுகின்றான். அதற்கு விதுரன் மறுமாற்றம் உரைக்கும்போது தன்னை 'விதி வழியை' நன்குணர்ந்தவனாகக் குறிப்பிடுகின்றான். 'சரி சரி; இங்கே துரைத்துப் பயனொன்றில்லை; மதிவழியே செல்லுக' என்று வாய்மூடி மௌனி யாகின்றான்.

(5) தலைவிரிகோலமாக அவைக்கு இழுத்து வரப்பெற்ற திரௌபதியின் அவல நிலையைக் கண்ட வீமனின் வெஞ்சினம் கரைபுரண்டோடுகின்றது. 'கதிரை வைத்திழந்தான் கையை எரித் திட' 'எரிதழல் கொண்டுவா' என்று சகாதேவனைப் பணிக்கும் போது, பார்த்தன் குறுக்கிட்டுப் பேசும் பேச்சில் 'விதியின் வலி' சுட்டப்பெறுகின்றது. 'தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்' (5.67: 283) என்ற அற்புதமான பாடலில் 'விதியின் சதி'யைக் காட்டுகின்றார் கவிஞர்.

மேற்கூறியவாறு பாரதியின் பாடல்கள் உணர்த்தும் உண்மைகள்— வாழ்க்கை உண்மைகள் — பலவாகும். தமிழ் இலக்கியத்தைப் பொறுத்தவரை, கவிதையின் பொருளமைப்பே முக்கியமாகக் கொள்ளப்பெறுகின்றது. தமிழர்கள் இன்பம் என்ற சொல்லுக்குக் கண்ட பொருள் சற்று ஆழமுடையது. நிலைபேறுடைய இன்பத் தைத் தருவது எதுவாயினும் அஃது உண்மையும் ஆழமும் உடைய தாயிருத்தல் வேண்டும் என்பது அவர்கள் கொள்கை. மேனாட்டுத் திறனாய்வாளர்களிலும் சிலர் இக்கொள்கையையுடையவர்கள். "கவிதையை ஆராயுங்கால், நம்முடைய முதற்சவனம் கவிஞன்பால் செல்ல வேண்டும்; அவன் ஆளுமையிலும் அவன் உலகைப்பற்றிக் கொண்டுள்ள மனப்பான்மையிலும் செல்ல வேண்டும்; வாழ்க்கையை எவ்வாறு நோக்கி விளக்கந் தருகின்றான் என்பதைக் கவனித்தல்

வேண்டும். இது வெளிப்படையாகவும் இருக்கலாம்; குறிப்பாகவும் இதனைப் பெற வைக்கலாம். கலை, வடிவம், வரலாறு போன்ற செய்திகளில் நாம் எவ்வளவு ஆழ்ந்திருந்தபோதிலும், மேற்கூறிய கவிதையின் முதனிலைக் கூறுகள் எவ்விதத்திலும் நம் பார்வையினின்று நழுவாமல் காக்க வேண்டும்"[43] என்று **அட்சன்** கூறுவதை ஈண்டுச் சிந்தித்தல் வேண்டும். இதுபற்றியே கவிதையைப்பற்றிக் கூறவந்த தொல்காப்பியரும்,

இழுமென் மொழியால் **விழுமியது நுவலல்**[44].

என்று கூறிப்போனார். விழுமியதே கவிதையில் கூறப்பெறல் வேண்டும் என்பது தமிழரின் சட்டம். தமிழ்க் கவிதைகள் பெரும்பாலும் அறங்கூறும் இயல்பும் கவிதை இயல்பும் கொண்டே திகழ்கின்றன.

---

43. Hudson, W. H.: *An Introduction to the Study of Literature*, பக். 95.
44. செய்யு. நூற். 230 (இளம்).

9. கவிதைகளில் காணும் சுவைகள்

இறையநுபவத்திற்கு அடுத்த நிலையில் வைத்தெண்ணக் கூடியது இலக்கியச் சுவையாகும். இலக்கியச்சுவையில் ஈடுபட்டு மனத்தை அதில் பறிகொடுத்த புலவர் ஒருவர்,

இருந்தமிழே உன்னால் இருந்தேன்; இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்.[1]

என்று தம் அநுபவத்தை வெளியிடுகின்றார். தம் வாழ்நாள் முழு வதும் தமிழ் இலக்கியத் தேனை மாந்திய பாவேந்தர்,

கன்னற்
பொருள்தரும் தமிழே நீஓர்
பூக்காடு; நானோர் தும்பி[2]

என்று தம் அநுபவத்தை வெளிப்படுத்துகின்றார். இவர்கள் இரு வரும் தமிழ் இலக்கியச் சுவையில் ஈடுபட்ட புலவர்கள். தமிழ்ச் சுவையை மாந்திய பாரதியாரும்,

சொல்லில் உயர்வுதமிழ்ச் சொல்லே ;—அதைத்
தொழுது படித்திடடி பாப்பா![3]

என்று தமிழ்ச்சொல்லின் உயர்வைக் கூறி அதைப் படித்திடுமாறு பாப்பாவுக்குஆர்வம் ஊட்டுகின்றார். 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்' என்கின்றார்.

சுவைபற்றிய அடிப்படைக் கருத்தை அறிந்துகொள்வதற்காக சில நிகழ்ச்சிகளை உடன் வைத்து எண்ணுவோம்.

(1) வண்ணப் படத்தில் வரையப்பெற்ற பன்றி ஒன்று சேற்றில் மூழ்கி வெளியேறிய தோற்றத்தை அப்படியே ஓவியர் காட்டுவதாக வைத்துக்கொள்வோம். அதைப் பார்க்கும் நாம் அதனையே பன்முறை உற்று நோக்கி ஒருவித இன்பத்தை அடைகின் றோம் அல்லவா? ஆயினும், பன்றி ஒன்று சேற்றில் புரண்டு எழுந்து சேறும் அழுக்குமாக நம் எதிரில் தோன்றினால் நாம் அக்காட்சியைக் கண்டு இன்பம் அடைகின்றோமா? இல்லையன்றோ? சில சமயம் அக்காட்சியைக் காணச் சகியாமல் அருவருப்புடன் முகத்தைக்கூட

1. தமிழ்விடு தூது— கண்ணி-151.
2. அழகின் சிரிப்பு— தமிழ்— பாட்டு 10.
3. பர. பா. பாப்பாப் பாட்டு— 12.

வேறுபக்கமாகத் திருப்பிக் கொள்ளுகின்றோமன்றோ? அதுவும் சேற்று நாற்றமும் சேர்ந்து வீசத் தொடங்கினால் சொல்ல வேண்டிய தில்லை.

(2) நாம் அரிச்சந்திர நாடகத்தைப் பார்க்கின்றோம். சந்திரமதி சொல்லொணாத் துயர்ப்பட்டும் அதற்கு ஒரு முடிவு இல்லாமலும் தவிக்கின்றாள். இந்நிலையில் அவளுடைய ஒரே மகன் லோகிதாசன் பாம்பால் கடியுண்டு மயக்கமுற்றுக் கிடப்பதையும், அவனைத் தூக்கி மடியில் கிடத்திக்கொண்டு தாயுள்ளம் தாங்க முடியாமல் தவிப்பதையும் காண்கின்றோம். இக்காட்சியைக் காணும் நம் உள்ளம் வருந்தாமலும் உருகாமலும் இருக்க முடியுமா? நாடகத்தைப் பார்ப்போர் கூட்டம் சந்திரமதியாய் நடிக்கும் பெண்ணின் திறனைக் கொண்டாடுவார்கள்; அவர்கள் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாய் வடிந்த வண்ணமும் இருக்கும். இங்ஙனம் துக்கக் கடலில் மக்களை மூழ்கடித்த போதிலும், மக்கள் மறுமுறையும் அந்நாடகத்தைப் போட்டி போட்டுக்கொண்டு பார்க்கச் செல்லுகின்றார்கள். யான் காரைக்குடியில் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் பணியாற்றியபொழுது, அந்த ஊரில் பெண்ணெடுத்து மணந்துகொண்ட மாணாக்கர் ஒருவர், மாமனார் வீட்டிலிருந்து கொண்டு கல்லூரியில் சேர்ந்து பயிற்சி பெற்றார். அவர் அப்பொழுது 5, 3, 1 வயதுகளில் உள்ள மூன்று பிள்ளைகளின் தந்தை. பெரியம்மை வீட்டிலுள்ள அனைவரையும் பார்த்துவிட்டது. ஏதோ ஒருவகையில் பெரும்பாலோர் தப்பித்துக்கொண்டனர்; ஒரே வாரத்தில் பிள்ளைகள் மூவரும் ஒருவர் பின் ஒருவராக அம்மை நோயால் மாண்டனர். இக்காட்சியைக் கேட்போருக்கே குலை நடுக்கம் ஏற்படுகின்றதன்றோ? நேரில் கண்ட எனக்கு எப்படியிருந்திருக்கும்? இப்படி ஒரு காட்சியை மனம் மறுபடி ஒருமுறை காண விரும்புமா?

(3) கலிங்கத்துப்பரணியில் 'களம் பாடியது' என்ற பகுதியில் போர்க்களக்காட்சிகளைப் படிக்கின்றோம். கால்வேறு, கைவேறு, தலை வேறாக வெட்டுண்டு கிடக்கும் வீரர்களைப்பற்றிய செய்திகள், மரித்த கணவன்மார்களின் உடலைத் தேடிக்கொண்டு வரும் மனைவிமார்களின் சோகக் குரல்பற்றிய செய்திகள், தலைமகள், குற்றுயிராகக் கிடந்த தன் கொழுநனின் உடலைத் தன் மடியில் கிடத்திக்கொண்டு அழும் சோகக் காட்சிகள்பற்றிய செய்திகள் போன்றவற்றைக் கண்ணீர் உகுத்துக் கொண்டே படிக்கின்றோம்; மீண்டும் மீண்டும் படிக்கின்றோம்; பலமுறை அக்காட்சிகளை வருணிக்கும் பாடல்களைப் படிப்பதற்கு ஆர்வம் கொள்ளுகின்றோம். சில ஆண்டுகட்கு முன்னர்க்கிழக்குவங்காளத்தில் நடைபெற்ற போர்க் காட்சிகளையும், நேரில் சென்று பார்த்தவர்கள் சொல்லக் கேட்டதுண்டு. பிணத்தின்மேல் பிணமாகக் கிடந்த நிலைகள்,

தாங்க முடியாத நாற்றங்கள் வீசும் நிலைகள், பிணங்களில் புழுக்கள் நெண்டும் காட்சிகள் - இவற்றைக் கண்டதாகக் கூறினர். கேட்பதற்கே சகிக்கவில்லை; கண்டவர்கள் நிலை எப்படி யிருந்திருக்கும்?

உலகியல் நிகழ்ச்சிகள் சுவை தருவன அன்று : இணை இணை யாக உள்ள இந்த மூன்று நிகழ்ச்சிகளையும் சீர்தூக்கினால் உலகிய லில் நிகழும் செயல்களால் இன்பம் உண்டாவதில்லை என்பது தெளி வாகும். உலகியற் செயல்களுள் நகை, காதல் போன்றவற்றில் இன்பம் உண்டாதல் போன்று அழுகை, இழிவரல், அச்சம், வெகுளி முதலிய வற்றில் இன்பம் உண்டாதல் இல்லை என்பது அனைவரும் அறிந்த உண்மை. ஒரு சுவைக்குக் கூறும் இலக்கணம் எல்லாச் சுவைகளுக்கும் பொருந்துவதில்லை. இதனால்தான் சுவை இலக்கண நூலார் உலகியலின்பத்தைச் சுவையென்று கொள்ளாமல் நாடகம், காவியம், ஓவியம் - இவற்றில் காணும் நிகழ்ச்சிகள்தாம் சுவையாகின்றன என்று அறுதியிட்டனர். மேற்காட்டப்பெற்ற மூன்று இணை நிகழ்ச்சிகளி லும் ஓவியத்தில் காணும் பன்றியும், நாடகத்தில் வரும் சந்திரமதியின் நிலையும், கலிங்கத்துப்பரணியின் போர்க்களக் காட்சிகளுந்தாம் இன் பத்தை விளைவிக்கின்றன என்றும், அவற்றுக்கு இணையான உலகியல் நிகழ்ச்சிகள் சுவை பயப்பதில்லை என்றும் அறிகின்றோம்.

சுவை அநுபவம் : நூலைக் கையில் எடுத்தவர்கள் யாவரும் சுவையில் ஈடுபட முடியும் என்று கருதுதல் தவறு. நன்றாக மனத் தைச் செலுத்திப் படித்து அடிக்கடி சுவைக்கும் பழக்கமுடையோர் கட்கே சுவை சிறிதளவு புலனாகத் தொடங்கும். இரத்தினம் ஓர் உயர்ந்த பொருள் என்பதை நாம் அறிவோம். அதன் பெருமையை, அதன் தரத்தினை எல்லோரும் அறுதியிட்டு அறிய முடிகின்றதா? இல்லையன்றோ? அதனைச் சோதித்து அறிந்து பழகியவர்கட்கு மட்டிலுமே அதன் பெருமை புலனாகும். இரங்கூன் கமலம், புஷ்ப ராகம், வைரம் - இந்த மூன்றுக்கும் உள்ள வேற்றுமையை அவர்களே நன்கு அறிதல் முடியும். இத்தகைய கற்களின் தரத்தினை அறியும் 'வாஸனை' உள்ளிருப்பவர்கட்கே பல தடவை பார்ப்பதால் அதனை அறியும் திறனும் பெருகும். 'வாஸனை' இல்லாதவர்கள் பல நாள்கள் பல்லாயிரம் இரத்தினங்களைப் பார்த்தாலும் அவர்கள் மனத்தில் யாதொரு மாறுபாடும் உண்டாக மாட்டாது. காவியத்தில், கவிதைகளில் சுவை காண்பதும் அப்படித்தான். அதிலுள்ள சுவை களை அறிந்து சுவைப்பதற்கு வழிவழி வரும் 'வாசனை' வேண்டும் என்பர் வடமொழி வாணர்கள்.

சுவைகளின் நுட்பமனைத்தும் கண்ணாலும் செவியாலும் திட்ப மாக அறியவல்ல நுண்ணறிவுடைய பெருமக்களுக்கே அவை புலப்படும்.

என்றும், ஏனையோர்க்கு அஃது ஆராய்ந்து அறியத்தக்கது என்றும் தொல்காப்பியரும் குறிப்பிட்டுள்ளார்.

> கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்
> உணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியின்
> நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே[4]

என்ற நூற்பாவினால் இஃது அறியப்பெறும்.

சுவைபற்றிய விளக்கம்: சுவை என்பது என்ன? அது காணப் படும் பொருளால் காண்போரகத்தின் வருவதோர் விகாரம் என்பர் இளம்பூரணர். 'இருவகை நிலத்தின் இயல்வது சுவையே' என்ற செயிற்றிய நூற்பாவினை எடுத்துக்காட்டி, 'உய்ப்போன் செய்தது காண்போர்க்கு எய்துதல்' என்ற வேறொரு செயிற்றிய நூற்பாவால் விளக்குவர். ஈண்டு உய்ப்போன் என்பது நடிகனை. நடிகன் செய்யும் அபிநயம் முதலியவற்றால் அச்சுவை காண்போரிடம் உண்டாதல் கூடும். இதனை வேறொரு வகையில் மேலும் விளக்கலாம். இனிப்பு, கசப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, உறைப்பு என்பன அறுசுவைகள் என்பதை நாம் அறிவோம். இவை நாவாகிய பொறி வழியே ஒரு வரது உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சிகளாகும். இவ்வுணர்ச்சி களைத் தரும் பொருள்கள் முறையே கரும்பு, வேம்பு, புளி, உப்பு, கடுக்காய், மிளகு போன்றவைகளாகும் என்டதை அறிவோம். இவை 'சுவைப் பொருள்கள்' என்று வழங்கப்பெறும். கரும்பினை நாவா கிய பொறியால் சுவை உணருமிடத்து இனிப்புச் சுவையுணர்ச்சி தோன்றுகின்றது. அங்ஙனம் தோன்றுங்கால் அது காரணமாக விருப்புத் தோன்றுகின்றது. இங்ஙனமே வேம்பினைச் சுவைத்து உணருங்கால் கைப்பு உணர்ச்சி தோன்றுகின்றது என்பது நமக்குத் தெரியும். அது தோன்றுங்கால் வெறுப்புத் தோன்றுகின்றது என் பதையும் நாம் உணர்கின்றோம். இங்ஙனம் உள்ளத்தே தோன்றும் விருப்பு வெறுப்புகளே 'உள்ளக்குறிப்புகள்' என்று வழங்கப்பெறு கின்றன. இத்தகைய உள்ளக் குறிப்புகளைக்கொண்டு இச்சுவை யுணர்ச்சிகள் வெளிப்படுங்கால் முகமலர்ச்சி, முகச்சுளிப்பு முதலிய மெய்க்குறிகளைக்கொண்டு பிறர் அறியுமாறு வெளிப்படுகின்றன; இம்மெய்க்குறிகளையே 'விறல்'[5] அல்லது 'சத்துவம்' என்று வழங்கு

4. தொல். பொருள். மெய்ப். நூற். 27.

5. விறல், பத்து வகைப்படும். அவை மெய்ம்மயிர் சிலிர்த்தல், கண்ணீர் வார்தல், நடுக்கமெய்தல், வியர்த்தல், தேற்றம், களித்தல், விழித்தல், வெதும்பல், சாக்காடு, குரல் சிதைவு என்பனவாகும். அவ்விறல், சுவைகளிலே மனக்குறிப்பு உளதாயவழி உடம்பிலே தோற்றும்; உடம்பினும் முகத்து மிகத் தோற்றும்; முகத்தின் மிகத் தோற்றும் கண்களில்; கண்ணின் மிகத் தோற்றும் கண்ணின் கடை யகத்து. இவை எட்டென்பது வடநூலார் மதம் (சிலப். பக். 84 உ.வே.சா. அய்யர் பதிப்பு).

வர் இலக்கண நூலார். எனவே, சுவையின் இயல்பினை அறியு மிடத்துகாரணகாரிய முறையாகச்சுவைக்கு நிலைக்களனாய பொருள்; சுவை, குறிப்பு, விறல் என்ற நான்கு வகைப் பொருள்களை அறிகின் றோம்.[6] நாம் ஒரு காவியத்தைப் படிக்குங்கால் நம்மிடையே உண் டாகும் இன்ப உணர்ச்சியே சுவையாகும். மனம் உணர்ச்சியால் பூரித்திருக்கும்பொழுது அதில் ஓர் ஒளி வீசும். அதுவே இன்பம்; அதுவே ஆன்ம ஒளி. ஆன்மா அங்குத்தான் பிரதிபலிக்கின்றது. அந்நிலையினை அடைவதற்கு மனம் சலனமற்றிருத்தல் வேண்டும். அந்த அசைவற்ற நிலை மனத்திற்குப் பலவிதங்களில் உண்டாகலாம். யோகியர் தம் மனத்தை வசப்படுத்தி நிலை நிறுத்திச் சமாதி நிலை யில் ஆன்ம ஒளியைப் பெறுகின்றனர். உறக்கத்திலும் மனம் சோர்ந்து அசைவற்றுக் கிடக்கும்பொழுது அங்கும் ஆன்மா தோற்ற மளிக்கின்றது; இன்பமும் தலைகாட்டுகின்றது. காவியங்களைப் படித்து உணர்ச்சிப் பெருக்கால் மனம் பூரிக்கும்பொழுது ஆன்ம ஒளி வீசும்; மனத்திற்கும் மட்டற்ற மகிழ்ச்சியும் ஏற்படும்.

சுவைப் பாகுபாடு: சுவையின் பாகுபாட்டையும் காண் போம். நம்முடைய பேச்சும் எழுத்தும் உணர்ச்சியுடன் நின்றுவிடு கின்றன. ஆகவே, சுவையைப் (ரஸத்தைப்) பாகுபாடு செய்வது இயலாததாகின்றது. சுவை நிறைந்த மாம்பழத்தைத் தின்ற ஒருவன் அதன் சுவையைப்பற்றிப் பலவாறு வருணிக்கலாம். ஆனால் அதன் சுவையை அவன் பிறரால் உணரும்படி செய்தல் இயலாது. பிறரும் அம்மாம்பழத்தைத் தின்று சுவைத்தாலன்றி அதன் சுவையை உணர முடியாது. சுவை ஒருவருடைய அநுபவம். அதைப் பிறருக்கு எடுத்துக் கூற எவராலும் இயலாது. எனவே, சுவை இலக்கண நூலார் சுவை நிலையை வைத்துக்கொண்டு அதனை வகுத்துக் காட்ட முற்படாமல், சுவைக்கு முன்னிலையாகின்ற உணர்ச்சிகளை வைத்துச் சுவைகளைப் பாகுபாடு செய்தனர். நம் மனத்தில் தோன்றக்கூடிய எண்ணற்ற உணர்ச்சிகளை **ஒன்பதாகப்** பிரித்துள்ள னர் அவர்கள்; அனைத்தும் இந்த ஒன்பதிற்குள்ளேயே அடங்கும் என்பது அவர்கள் கருத்தாகும்.[7] இந்த ஒன்பதிற்குப் புறம்பான மன

---

6. இங்ஙனம் இலக்கண நூலார் கூறும் சுவைக்கப்படும் பொருள், சுவை, குறிப்பு, விறல் என்பவற்றையே உள வியலார் முறையே பொருள் (Object), புலன்காட்சி (Perception), பொது உணர்வு (அநுபவம்), உடல்நிலை மாறுபாடுகள் (Organic states) என்று கூறுவர்.

7. இசையினை **ஏழே** சுரத்தின் சேர்க்கையாக உணர்த்த வில்லையா? ஆயிரக்கணக்கான சுவை உணவு வகைகள் இருந்தும் அவற்றை **ஆறு** சுவைக்குள் அடக்கிவிட வில்லையா? அவற்றைப் போலவே இதுவும் என்க.

நிலையே இல்லை என்பது அவர்களுடைய துணிபு. உலகப் பொருள்கள் எந்த விதமான மன பாவங்களை எழுப்பினாலும் அவற்றை இந்த ஒன்பதற்குள் ஒன்றாகவே பாகுபாடு செய்துவிடலாம். இந்த ஒன்பது சுவைகட்கும் அவர்கள் தனித்தனி பெயர்களிட்டுள்ளனர். அவை :

	வடமொழி	தமிழ்
1.	சிருங்காரம்	உவகை
2.	கருணம்	அழுகை
3.	வீரம்	பெருமிதம்
4.	ரௌத்திரம்	வெகுளி
5.	ஹாஸ்யம்	நகை
6.	பயானகம்	அச்சம்
7.	பீபத்ஸம்	இழிவரல்
8.	அற்புதம்	மருட்கை
9.	சாந்தம்	(நடுவுநிலை)

என்பனவாகும். இவற்றுள் சாந்த ரஸம் உலகியலின் நீங்கினார் பெற்றியாகலின் அதனை யொழித்து ஏனைய எட்டனையுமே பரத முனிவர் தமது நூலில் கூறியுள்ளார். ஆசிரியர் தொல்காப்பிய னாரும் அவ்வாறே எண் சுவைகளையே கூறியுள்ளார்.[8]

பாரதியார் பாடல்களில் சுவைகள் : பாரதியார் பெரும் பாலும் வடமொழி அலங்கார நூல்களின் அடிப்படையிலேயே தம் பாடல்களில் ரஸங்களை அமைத்துள்ளபடியால் அந்த அடிப் படையிலேயே அவர் காட்டும் ரஸங்களைக் காண்பது பொருத்த மாகும்.

சிருங்காரம் : வடமொழி வாணர்கள் சிருங்காரத்தைச் 'சம் போக சிருங்காரம்' (காதலன்-காதலி சேர்ந்திருக்கும் நிலையைச் சித்திரிப்பது) என்றும், 'விப்ரலம்பசிருங்காரம்' (காதலன் - காதலி பிரிந்திருக்கும் நிலையைக் கூறுவது) என்றும் இருபிரிவாகப் பிரித்துப் பேசுவர். காதலியைக் கண்டு உள்ளம் பூரிக்கும்பொழுது அவளை அணுகித் தழுவுவது ஒரு மனநிலை; அப்பொழுது மனத்தை ஒருபுற மாய் நிறுத்தித் தன் காதலியின் அழகிய செயல்களையும் இனிய சொற்களையும் கண்டு மகிழ்வது அதிலும் மேலான மனநிலை.

8. சுவைபற்றி இதற்கு மேல் விளக்கம் வேண்டுவோர் இந்த ஆசிரியரின் கண்ணன் பாட்டுத்திறன் (சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை - 1) என்ற நூலில் இயல்3 - ல் (ரஸத் தைப்பற்றிய ஒரு சிறு விளக்கம்) கண்டு தெளிக.

இதனையே சுவைஞர்கள் உயர்ந்ததென ஒப்புக்கொள்வர். இந்த இரண்டு வகையும் சேர்க்கையுள் அடங்கும்.

சாத்திரம் பேசுகின்றாய்—கண்ணம்மா!
சாத்திர மேதுக் கடீ!
ஆத்திரங் கொண்டவர்க்கே—கண்ணம்மா!
சாத்திர முண்டோடீ!
மூத்தவர் சம்மதியில்—வதுவை
முறைகள் பின்பு செய்வோம்;
காத்திருப் பேனோ டீ—இதுபார்,
கன்னத்து முத்தமொன்று![9]

இதில் நாயகன் நாயகியைக் கண்டு உள்ளம் பூரிக்கின்றான்; அவளிடம் பேச்சுக் கொடுக்கின்றான். வதுவை முறையைப் பின்னர் 'மூத்தவர் சம்மதியில் செய்வோம்' என்று கூறி வேகமாக நெருங்கி நாயகியின் கன்னத்தில் முத்தமொன்று ஊன்றி விதைக்கின்றான்!

இன்னொரு பாடலில் நாயகன்—நாயகியினிடையே காதல் உரையாடல் மட்டிலும் நடைபெறுகின்றது.

....
சொல்லித் தெரிவதில்லை மன்மதக்கலை—முகச்
சோதி மறைத்துமொரு காதலிங் குண்டோ?

....
யாரிருந் தென்னையிங்கு தடுத்திடுவார்—வலு
வாக முகத்திரையை அகற்றி விட்டால்?
காரிய மில்லையடி வீண்பசப்பிலே—கனி
கண்டவன் தோலுரிக்கக் காத்தி ருப்பனோ?[10]

இந்த இரண்டு நிகழ்ச்சிகளும் சம்போக சிருங்காரத்தைச் சித்திரிப்பவையாகும்.

சம்போக சிருங்காரத்தைவிட 'விப்ரலம்ப சிருங்காரமே' உயர்வு பெற்று விளங்கும். சிருங்காரத்தைப் பிரிவில் வருணிப்பதிலேயே கவிஞர்கள் அதிக மகிழ்ச்சி அடைவர். தலைவன் தலைவியருக்குச் சினத்தாலும், வேற்று நாட்டிற்குச் செல்வதாலும், சாபத்தாலும் மணந்துகொள்வதற்கு முன் நிகழும் இடையூறுகளாலேயே பலவிதங்களில் பிரிவு நிகழலாம். ஒவ்வொன்றையும் வாய்ப்புக் கிடைத்தபொழுது விரிவாகக் கேட்போர் இன்புறத்தக்க முறையில்

9. கண்ணம்மா— என் காதலி—(1)— 3.
10. கண்ணம்மா— என் காதலி—(3)— 1, 2.

சித்திரித்துள்ளனர் வடமொழிப் புலவர்கள். தமிழ் இலக்கியத்திலும் புணர்ச்சி நிலையைக் குறிப்பிடும் குறிஞ்சி, முல்லைத் திணைகளை விடப் பிரிவினைத் தெரிவிக்கும் பாலைத்திணையும், ஏதோ ஒரு வகையில் பிரிவினையே காட்டும் நெய்தலும் மருதமும் அதிக இன்பம் பயப்பதை நாம் நன்றாக அறிவோம்.

கனவு கண்டதிலே— ஒருநாள்
　　கண்ணுக்குத் தோன்றாமல்
இனம் விளங்க வில்லை— எவனோ
　　என்னகந் தொட்டு விட்டான்
வினவக் கண்விழித்தேன்—சகியே
　　மேனி மறைந்து விட்டான்;
மனதில் மட்டிலுமே— புதிதோர்
　　மகிழ்ச்சி கண்டதடீ![11]

பாரதியாரின் இந்த பாடல் விப்ரலம்ப நிலையைச் சித்திரிக்கின்றது. பாரதி நாயகி தன்னுடைய பிரிவு நிலையை அற்புதமாகப் புலப்படுத்துகின்றாள். கனவில் கண்ட காதலன் மறைந்துவிட்ட போதிலும் அவள் மனத்தில் தன் பிரிவினால் புதியதோர் மகிழ்ச்சியை விளைவித்துவிடுகின்றான். தான் பெற்ற அந்த மகிழ்ச்சியை— இன்ப உணர்ச்சியைத் - தன் தோழிக்கு அற்புதமாகச் சித்திரித்துக் காட்டுகின்றாள்.

கருணம் : இந்த ரஸம் 'சோகம்' என்ற ஸ்தாயி **பாவ**த்தால் பிறப்பது. நம் நாட்டுக் கவிஞர்கள் ஒரு காவியத்தில் அல்லது நாடகத்தில கருண ரஸமே கடைசி வரையில் நிற்க வேண்டும் என்று பாடுபடவில்லை. ரஸம் என்ற மட்டில் கருணத்திற்கு ஒரு குறைவுமில்லை. ஆயினும், துக்க உணர்ச்சியே அதன் நிலைக்களமாதலால் அதனை மேலை நாட்டாரைப்போல் சிறப்பாக வளர்க்கவில்லை.

தமிழில் கருணம் அழுகை என்று வழங்கப்பெறும். அழுகை என்பது, அவலம்; இரக்கம். தொல்காப்பியர் கருத்துப்படி அவலம் தானே அவலித்தலும், பிறர் அவலங்கண்டு அவலித்தலும் என இரு வகைப்படும். பின்னது கருணம் என்றும், அஃதுடன் சுவை ஒன்பது தாதலும் உண்டு என்றும் கூறுவர் பேராசிரியர்.[12] துச்சாதனனால் தலைவிரிகோலமாக அவைக்கு இழுத்துவரப்பெற்ற திரௌபதி நீதி கேட்டழுகின்றாள்.

---

11. கண்ணன்— என் காதலன்— (1)— 5.
12. விரிவான விளக்கத்தை இவ்வாசிரியரின் 'தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை' (பழனியப்பா பிரதர்ஸ், சென்னை-14) என்ற நூலில் 22-வது கட்டுரை 2. அழுகை என்ற தலைப்பிலுள்ளவற்றைக் காண்க.

விம்மி யழுதாள்—விதியோ கணவரே!
அம்மி மிதித்தே அருந்ததியைக் காட்டியெனை
வேதச் சுடர்த்தீமுன் வேண்டி மணஞ்செய்து
பாதகர்முன் இந்நாள் பரிசழிதல் காண்பீரோ[13]

இப்பாடற்பகுதியில் திரௌபதி பண்டைய நிலை கெட்டு வேறொரு வாறாகிய நிலையை நினைந்து அழுகின்றாள். இதில் கருண ரஸத்தைக் கண்டு அநுபவிக்கலாம்.

திரௌபதியின் நிலை கண்டு வீடுமன் அவளிடம் பேசுகின்றான்:

சூதிலே வல்லான் சகுனி தொழில்வழியால்
மாதரசே, நின்னுடைய மன்னவனை வீழ்த்திவிட்டான்.
மற்றிதனி லுன்னையொரு பந்தயமா வைத்ததே
குற்றமென்று சொல்லுகிறாய், கோமகளே, பண்டையுக
வேத முனிவர் விதிப்படி, நீசொல்லுவது
நீதமெனக் கூடும்; நெடுங்காலச் செய்தியது!
ஆணொடுபெண் முற்றும் நிகரெனவே அந்நாளில்
பேணிவந்தார். பின்னாளில் இஃது பெயர்ந்துபோய்
இப்பொழுதை நூல்களினை யெண்ணுங்கால், ஆடவருக்
கொப்பில்லை ,மாதர், ஒருவன்தன் தாரத்தை
விற்றிடலாம்; தானமென வேற்றவர்க்குத் தந்திடலாம்,
முற்றும் விலங்கு முறைமையன்றி வேறில்லை.[14]

இதில் பண்டைய நிலைமை கெட்டு வேறொருவாறாகிய நிலையைக் கண்டு வீடுமன் தனக்குத் தீங்கு தடுக்கும் திறமின்மைக்கு வருந்து கின்றான்.

வீரம் : எந்தச் சிக்கலான சந்தர்ப்பத்திலும் மனம் குன்றாமல் விடாமுயற்சியைக் கடைப்பிடிப்பவனே வீரனாவான், தவிர, ஆயுள் முழுவதும் தனது புலன்களை அடக்கப் பாடுபடுவதுங்கூட வீரத்தின் அடையாளம் ஆகும். (எ-டு.) வீடுமன்; தலை அறுபட்ட பிறகும் முண் டங்கள் கையில் ஏந்திய கத்தியோடு வீரனொருவன் பகைவரோடு சிறிது நேரம் போரிட்டதாகப் புராணங்களில் போர் வருணனையில் காண லாம்.(எ-டு.) கும்பகருணன். சிபிச்சக்கரவர்த்தி ஒரு புறாவின் உயிரைக் காத்தற்பொருட்டுத் தன் தொடையிலிருந்து தசையை அறுத்துக் கொடுத்ததும், அரிச்சந்திரன் சத்தியத்தை நிலைநாட்ட நினைக்க வும் முடியாத துன்பத்தை அநுபவித்ததும் வீரத்தின் தோற்றங்கள் என்று ஏற்க வேண்டும். இதில் பெரியோர்கள் ஒரு வரம்பு கட்டி யிருக்கின்றனர். எத்தகைய துன்பம் நேரிட்டாலும் அதனைச் சிறிதும்

13. பா. ச. 5. 63 : 27-30.
14. ஷை. 5, 6 : 53-64.

பொருட்படுத்தாமல் இருப்பது சாந்தத்திலும் வீரத்திலும் ஏற்படும், ஆயினும், தான் என்ற அகங்காரம் சிறிதளவாகிலும் இருந்தால் அது வீரமாகிவிடும். இல்லாவிடில் சாந்த நிலைதான். இந்த வேறு பாட்டை வைத்துக்கொண்டுதான் நாம் வீர ரஸத்தை அறுதியிடல் வேண்டும்.

வீரத்தைத் தமிழில் பெருமிதம் என்று குறிப்பர். அஃது ஏனைய பெருமைகளோடும் ஒப்ப நில்லாது பேரெல்லையாக நிற்ப தால் பெருமிதம் எனப்பட்டது என்பர் பேராசிரியர். துச்சாதனன் திரௌபதியைத் துகில் உரிகையில் சினம் கொண்ட வீமன் தரும னிடம் தம் புகழ்பற்றிப் பேசுகின்றான் :

> சோரத்தில் கொண்ட தில்லை— அண்ணே!
> சூதிற் படைத்த தில்லை
> வீரத் தினாற் படைத்தோம்— வெம்போர்
> வெற்றியினாற் படைத்தோம்.

இப்பாடலில் வீமன், திரௌபதியைப் பெற்ற தம் புகழை நினைந்து கூறுவதைக் காண்க. இசைமை, பெருமிதத்தின் நிலைக்களன்களில் ஒன்று என்பது தொல்காப்பிய விதி.

ரௌத்திரம் : பகைவன் செய்த தீச்செயல்களை நினைந்து, மனம் கொதிக்கும் நிலையைக் 'குரோதம்' என்று வழங்குவர். குரோத உணர்ச்சியில் மலர்ந்த ரஸமே— சுவையே— ரௌத்திர மாகும். ரௌத்திர ரஸமே தமிழில் வெகுளிச் சுவை என்று வழங்கப் பெறுகின்றது. கரந்துறை வாழ்க்கை நிறைவு பெற்றதும் பாண்ட வர்கள் எவ்வளவோ இன்னல்களுக்கிடையில் போருக்கு ஆயத்த மாகின்றனர். வீமனுக்கு உள்ளம் பூரிக்கின்றது. தங்களை அவ மதித்து வீண் சிரமங்களுக்கு ஆளாக்கிய துரியோதனனையும் துச்சா தனனையும் பழிவாங்க நல்ல தருணம் வாய்த்ததென்று அவன் உள்ளம் இன்பத்தால் பொங்குகின்றது. இந்நிலையில் கண்ணனைத் தூதனுப்பிச் சமாதானம் செய்துகொள்ளலாம் என்று தருமபுத்திரர் தீர்மானித்தது அவன் செவியில் விழுகின்றது. சினம் தாங்க முடிய வில்லை. பொங்கி எழுகின்றது. தானே நேரில் போரில் இறங்கித் துரியோதனனைப் பழிவாங்கத் தீர்மானிக்கின்றான் வீமன். இதனை அறிந்த சகாதேவன், 'அண்ணா, பெரிய அண்ணனின் மனம் நொந்துவிடும். அண்ணனுக்கு விரோதமாகப் பேசுவது நீதியன்று' என்று வேண்டுகின்றான்.

இதற்கு வீமன் அளித்த மறுமொழி என்ன? ''அரக்கு மாளிகை யில் அனலிட்டதும், நஞ்சு கலந்த சோற்றை அளித்ததும், சூதாட் டத்தில் பாஞ்சாலியை அவமதித்ததும் சிறிய செயல்களல்ல. தம்

முடைய சொத்தையும் பறிக்க வழி தேடின கொடியவன் துரியோதனன். அவனை நான் விட்டு வைக்கப் போவதில்லை. அவனுக்குத் துணை செய்த துச்சாதனனையும் விட்டுவிட மாட்டேன். கண்ணன் பதத்தில் ஆணையிட்டுச் சொல்லுகின்றேன். 'துரியோதனனின் தொடையைப் பிளந்து உயிர் மாய்ப்பேன். தம்பி துச்சாதனனின் தோள்களைப் பிய்ப்பேன். உன் அண்ணன் சமாதானம் செய்து கொள்ளட்டும். நான் போர் தொடுக்கிறேன். இன்று ஒருநாள் அவர் எனக்கு அண்ணனும் அல்லர்; நான் அவருக்குத் தம்பியும் அல்லன்' என்கின்கின்றான். இத்தகைய மனோவேகந்தான் 'குரோதம்' என்பது. இதனை வீரத்திற்கு உறுப்பாகவும், அளவு கடந்து நிற்கும் வீரத்தின் நிலை என்றும் கூறலாம். நாட்டியக் கலையில் பரத முனிவர் ரௌத்திர ரஸத்தில் இருந்து கருணம் ஏற்படுவதாகக் கூறுவர். மேலும், குரோதம் என்பது மனிதனுடைய பகுத்தறிவைக் கீழடக்கிப் பொங்கி எழும் ஓர் உணர்ச்சி. அஃது ஒரு பேயின் வேகத்தோடு கிளம்புவதால் அதன் செயல்கள் பின்னர் வருந்தத்தக்கவையாகவே இருக்கும். 'குரோதம் கொண்டவன் குருவையும் கொல்வான்' என்பது முதுமொழி. பரசுராமர், தம் தந்தைக்குக் கார்த்தவீரியன் அவமானம் விளைவித்ததால் க்ஷத்திரிய குலத்தையே குரோதத்தால் அழிக்கக் கங்கணம் கட்டிக்கொண்டார். முடிவில் தம் யோசனை இல்லாச் செய்கையை நினைத்துப் பலவிதத்தில் வருந்தியதாகவும் வரலாறு கூறுகின்றது.

மாடு நிகர்த்த துச்சாதனன் திரௌபதியின் மைக்குழல்பற்றி இழுப்பதைக் காணும் வீமனுக்குக் கரைமீறி எழுகின்றது வெஞ்சினம். தருமனை நோக்கிப் பேசுகின்றான். அந்தப் பேச்சின் இறுதிப் பகுதி:

துருபதன் மகளைத்— திட்டத்
 துய்ம னுடற் பிறப்பை
இருபகடை யென்றாய்— ஐயோ!
 இவர்க் கடிமை யென்றாய்!

'இது பொறுப்பதில்லை,— தம்பி!
 எரிதழல் கொண்டுவா
கதிரை வைத்திழந்தான்— அண்ணன்
 கையை எரித்திடுவோம்.'[15]

என்று வீமன் சகதேவனிடத்தில் சொல்லும் பேச்சில் வெகுளிச் சுவை கொப்புளித்து நிற்பதைக் காணலாம்.

ஹாஸ்யம் : தமிழில் இச்சுவை 'நகை' என்று வழங்கப்பெறும். இயற்கைக்கு மாறாக ஏதையாகிலும் நாம் உணர நேர்ந்தால் அது

15. ஷை 5. 66 : 280— 281.

நம்மிடத்தில் நகைப்பினை விளைவிக்கும். ஆடவன் ஒருவன் மகளிர் அணியும் சேலையை வேட்டிபோல் உடுத்திச் சென்றால் அவனைப் பார்ப்பவர்களின் உள்ளத்தில் ஒரு வேற்றுமையுணர்ச்சி பிறக்கின்றது. இதனையே நாம் 'ஹாஸ்யம்' என்ற மனோபாவமாய்க் கருதுகின்றோம். பள்ளிகள், கல்லூரிகளில் நடைபெறும் 'மாற்றுடைப்போட்டி'யில் (Fancy dress competition) விதவிதமான நகைச்சுவை நிகழ்ச்சிகளைக் காணலாம். தெனாலிராமன் கதையில் பல நகைச்சுவை நிகழ்ச்சிகளைக் கண்டு களிக்கலாம். எனவே, ஹாஸ்யத்திற்கு இதுதான் காரணம் என்று அறுதியிட்டுக் கூறுவது பிசகு.

அரசியல், சமூக இயல், குடும்ப இயல்-இவைபற்றி இதழ்களில் வெளியாகும் எண்ணற்ற துணுக்குகளும், கேலி (குறும்பு) ஓவியங்களும் நகைச்சுவையை எழுப்புகின்றதைக் கண்டு மகிழலாம். விலைவாசிகள் இராக்கெட்டு வேகத்தில் ஏறிக்கொண்டு போகின்றன. தொலைபேசியிலும் வானொலியிலும் விலைவாசிகள் இறங்குமுகமாக உள்ளன என்ற விளம்பரமும், விலைவாசிபற்றி அரசு தயாரித்து வெளியிடும் புள்ளி விவரங்களும் முன்னுக்குப் பின் முரணாகக் காணப்படுவதால் 'உம்மனா மூஞ்சுகளும்' கூடச் சிரித்துவிடுகின்றார்கள்! இவை உலக வாழ்க்கையில் வருவதால் இலக்கண விதிப்படி ரஸமாகாவிட்டாலும் நன்றாகப் பழகிப்போன இவை தொல்லையை விளைவிப்பதைவிட நகைப்பையே விளைவிக்கின்றன.

'கண்ணன்— என் தாய்' என்ற பாடலில்,

சாத்திரம் கோடிவைத்தாள்;— அவை
　　தம்மினும் உயர்ந்ததோர் ஞானம் வைத்தாள்
மீத்திடும் பொழுதினிலே— நான்
　　வேடிக்கை யுறக்கண்டு நகைப்பதற்கே
கோத்தபொய் வேதங்களும்— மதக்
　　கொலைகளும் அரசர்தம் கூத்துக்களும்
மூத்தவர் பொய்ந்நடையும்— இள
　　மூடர்தம் கவலையும் அவள்பு னைந்தாள்'[16]

பொய் வேதங்கள், மதக்கொலைகள், அரசர்தம் கூத்துகள் (அரசியல்வாதிகளின் நாடகங்கள்!) மூத்தவர் பொய்ந்நடை இளமூடர்தம் கவலைகள்-இவை நடைமுறையில் இருப்பதைக் கண்டு ஒருவர் நகைக்காமலிருந்தால் அவர் 'சித்தம் தெளிய மருந்தொன்று' கண்டறிய வேண்டியதுதான்!

அத்தினபுர வருணனையில் வரும் ஒரு பாடல்:

மெய்த்தவர் பலருண்டாம்;— வெறும்
　　வேடங்கள் பூண்டவர் பலருண்டாம்.
உய்த்திடும் சிவஞானம்— கனிந்
　　தோர்ந்திடும் மேலவர் பலருண்டாம்;

16. கண்ணன்— என் தாய் - 9.

பொய்த்த விந்திரசாலம்— நிகர்
பூசையும் கிரியையும் புலைநடையும்
கைத்திடும் பொய்ம்மொழியும்—கொண்டு
கண்மயக் காற்பிழைப் போர்பலராம்[17]

இப்பாடலில் வரும் நிகழ்ச்சிகள் யாவும் சமய விதிகள், சட்டங்கள் வழி நடைபெற்று வருவதை நாம் காணும்போது உண்மையில் 'ஹாஸ்யத்தை' அநுபவிக்கத்தான் செய்கின்றோம்.

பயாநகம் : பயம் மாந்தர்கட்கு உடன்பிறந்த சொத்து. பயம் என்ற உணர்ச்சியற்றவர்களே இல்லை என்றே சொல்லலாம். பயத்தை உண்டாக்கும் பொருள்கள் மனிதர்க்கு மனிதர் வேறு படலாம். பய உணர்ச்சி மட்டிலும் எல்லோருக்கும் பொதுவானது. ஆனால், இவ்வளவு பழக்கமான உணர்ச்சியாக இருந்தபோதிலும் பயத்தை ஓர் இலக்கியத்திற்கு முக்கிய ரஸமாகக் கவிஞர்கள் விவரிக்க வில்லை. ஆயினும், சில இடங்களில் இந்த ரஸம் சிறப்பாகவே சித்திரிக்கப்பெற்றுள்ளது. பாரதத்தில் விராடன் மகன் உத்தர குமாரன் இந்த ரஸத்திற்கு ஏற்ற நாயகனாக அமைகின்றான். விராடநகரில் போர்க்கொடி உயர்த்தப்பெற்றபொழுது இவன் அந்தப்புரத்தில் மறைந்துகொள்வதும், இவனைப் பிரகந்நளை என்ற பெயரிலுள்ள பார்த்தன் வல்லந்தமாய்த் தேரில் ஏற்றிக்கொண்டு போர்க்களத்திற்குக் கொண்டுபோனாலும் இவன் அச்சத்தால் நடுங்கி முகத்தைத் திருப்பிக்கொண்டு இருந்ததும், பகைவர்கள் ஓடிவிட்ட னர் என்று அறிந்தவுடன் ஆறுதலடைந்து பெருமூச்செறிந்து தெளிவு வுற்றதுமான நிகழ்ச்சிகள் யாவும் பயத்திற்குத் தக்க சான்றுகளாகவே அமையும்.

கண்ணன்-என் காதலன்-(3) என்ற பாடலில் கொலை வேடன் பாரதி நாயகியைச் சந்தித்துக் காதல் பேச்சினைத் தொடங்கிய பொழுது இவளைப் பய உணர்ச்சி ஆட்கொள்ளுகின்றது.

— "அடி
கண்ணே, எனதிருகண் மணியே— உனைக்
கட்டித் தழுவமனம் கொண்டேன்
சோர்ந்தே படுத்திருக்க லாமோ?— நல்ல
துண்டக் கறிசமைத்துத் தின்போம்— சுவை
தேர்ந்தே கனிகள் கொண்டு வருவேன்— நல்ல
தேங்கள் ளுண்டினிது களிப்போம்"
என்றே. கொடிய விழிவேடன்— உயிர்
இற்றுப் போகவிழித் துரைத்தான்.[18]

17. பா. ச. 1. 3 : 9.
18. கண்ணன்— என் காதலன்-(3)-(6-8).

என்ற பகுதியில் பய உணர்ச்சி தலைக்காட்டுகின்றதைக் காணலாம். இந்தப் பய உணர்ச்சியால் பாரதி நாயகி 'இருகரமும் குவித்து' அந்த நீசன் முன்னர் இவற்றைச் சொல்லுகின்றாள் :

''அண்ணா உனதடியில் வீழ்வேன்—எனை
அஞ்சக் கொடுமை சொல்ல வேண்டா—பிறன்
கண்ணாலஞ் செய்துவிட்ட பெண்ணை—உன்றன்
கண்ணாற் பார்த்திடவுந் தகுமா?''

இந்தப் பகுதியில் பயத்தினால் ஏற்படும் நடுக்கத்தைக் காண முடிகின்றது.

பாரதியார் தம் கால நிலைமை மக்களின் நிலைமையைக் கூறும் 'நெஞ்சு பொறுக்குதிலையே'[19] என்ற பாடலில்,

அஞ்சி அஞ்சிச் சாவார்—இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே;
வஞ்சனைப் பேய்கள் என்பார்—இந்த
மரத்தில் என்பார்; அந்தக் குளத்தில் என்பார்
துஞ்சுது முகட்டில் என்பார்—மிகத்
துயர்ப்படுவார் எண்ணிப் பயப்படுவார்!

என்ற இந்தப் பகுதியில் அச்ச உணர்ச்சி பொங்கி வழிவதைக் காணலாம்.

பீபத்ஸம் : அருவருப்பு அல்லது 'இழிவு' தோன்ற நிற்கும் செயல்களனைத்தும் 'இளிவரல்' சுவையை நல்கும். குருதி பெருக்கெடுத்து ஓடுவதும், அதில் பிணங்கள் குறுக்கிட்டுத் தடையாய்க் கிடப்பதும், குடல்மாலையும், எலும்புகளும் அறுபட்ட கையும் காலும் உடம்பில் ஒழுகிய நிணநீரும், யானையும் குதிரையும் அடிபட்டு அதில் தோய்ந்து கிடப்பதும் எல்லாம் நினைக்கும்போது மனத்தை வெறுக்கச் செய்யும். இதையும் காவியத்தில் வருணித்துக் கவிஞர்கள் ரஸிகர்களை இன்புறச் செய்துவிடுகின்றனர். கலிங்கத்துப்பரணியிலுள்ள போர்க்களக் காட்சிகளின் வருணனை பீபத்ஸ ரஸம் பீறிட்டோடச் செய்கிறது.[20] நாணத்தக்க செயலாலும் இச்சுவை பிறக்கும்.

பாரதி நாயகி நள்ளிரவில் தூங்குவதாகப் 'பாசாங்கு' செய்கின்றாள். வீட்டில் நற்றாய் அல்லது செவிலித்தாய் என்ற ஒருத்தி இருக்கின்றாள் என்ற நினைவுகூட இன்றி நாயகியின் தோழிமார் 'அரட்டைக் கச்சேரி' நடத்திக் கொட்டம் அடிக்கின்றனர். அரட்டைக் கச்சேரியில் பேசப்படும் பேச்சுகள்:

19. தே. கீ. 15 பாரத மக்களின் தற்கால நிலைமை—1.
20. க. ப. : களம் பாடியது.

....

கூனன் ஒருவன்வந்திந் நாணி பின்னலைக்
கொண்டை மலர்சிதற நின்றிழுத்ததும்
ஆனை மதம்பிடித்திவ் வஞ்சி யப்மையின்
அருகினி லோடஇவள் மூர்ச்சை யுற்றதும்
பானையில் வெண்ணெய்முற்றும் தின்று விட்டதால்
பாங்கி யுரோகிணிக்கு நோவு கண்டதும்

பத்தினி யாளையொரு பண்ணை வெளியில்
பத்துச் சிறு ர்வந்து முத்த மிட்டதும்
நத்தி மகளினுக்கோர் சோதிடன் வந்து
நாற்ப தரசர்தம்மை வாக்க ளித்ததும்
கொத்துக் கனல்விழியக் கோவினிப் பெண்ணைக்
கொங்கத்து மூளிகண்டு கொக்க ரித்ததும்
வித்தைப் பெயருடைய வீணி யவளும்
மேற்குத் திசைமொழிகள் கற்று வந்ததும்
எத்தனை பொய்களடி! என்ன கதைகள்![21]

என்று 'குறியிடம்' செல்லக் காத்திருக்கும் நாயகியின் காதில் விழுகின்றன. இவள் காதில் விழுந்த செயல்கள் யாவும் அருவருப்பை விளைவிக்கக்கூடியவை என்பது சொல்லாமலே போதரும்.

அற்புதம் : இதனைத் தமிழில் வியப்புச் (மருட்கைச்) சுவை என்று வழங்குவர். மக்கள் பல பொருள்களைக் கண்ணுறுங்கால் அவற்றோடு தம் மனநிலையைச் சேர்த்துச் சிறப்பாக அநுபவிக்கும் பழக்கம் ஏற்பட்டுள்ளது. ஒரு பொருளைக் கண்ணால் கண்டவுடன் அதைப்பற்றிச் சில எண்ணங்கள் மனத்தில் உதிக்கின்றன. எதிரில் காணப்பெறும் பொருளின் பண்புகள், அதன் சிறப்பியல்புகள் இவைபற்றி ஆராய்கின்றனர். பிறகு தம் மனநிலைக்கு ஏற்றவாறு அப்பொருள்களை உட்கொள்ளுகின்றனர். இது வழக்கமாக நடைபெறுவது. இதற்கு மாறுபாடாக எதையாவது கண்ணுற்றால் உடனே வியப்புணர்ச்சி எழுகின்றது. வியப்பிற்கும் நகைப்பிற்கும் பொருள்களின் இயற்கைக் குணங்கள் மாறியிருப்பது பொதுவான காரணம். ஆனால், நகைப்பிற்குரிய பொருள் இயற்கையினின்று மாறுபடுவதுடன் பிறரால் வேண்டாத வண்ணமும் அமைந்திருக்கும்; வியப்பு அங்ஙன மன்று. அதன் பரிணாமம் யாவராலும் விரும்பத்தக்க வண்ணம் இருக்கும். சில இடங்களில் விரும்பத்தகாத முறையிலும் மாறுதல் உண்டாகிப் பார்ப்போரை வியக்கச் செய்வதும் உண்டு. இதை மறுப்பதற்கில்லை. ஆயினும், நாம் எதிர்பாராத முறையில் ஒன்று

21. கண்ணன்—என் காதலன்—(2)—2, 3, 4

நிகழ்ந்துவிடின் அதனை வியப்பு என்றும், இயற்கைக்கு மாறாகப் பரிணாமம் ஏற்பட்டால் நகைப்பு உண்டாகும் என்றும் இரண்டிற்கு முள்ள வேற்றுமையை அறிதல் வேண்டும். வியப்பும் நகைப்பும் வேறு வேறு உணர்ச்சிகள் என்பதில் ஐயமில்லை. அதற்குக் காரணத்தை மட்டிலும் தனியாய் விளக்க முடியாவிடினும் நம் மனமே இரண்டு விதமாக ஏற்பதை உணர்கின்றோமன்றோ? அந்தந்த இடங்களில் அவ்வவற்றிற்கேற்ற காரணங்கள் இருப்பதாலேயே சில இடங்களில் விந்தையும், சில இடங்களில் நகைப்பும் ஏற்படுவதாய் ஒப்ப வேண்டும்.

இரண்டு எடுத்துக்காட்டுகளால் இதனை விளக்கலாம். யசோதைப் பிராட்டிக்குப் பரந்தாமனே குழந்தையாக இருக்கின் றான் என்பது எப்படித் தெரியும்? அவள் கண்ணனைச் சாதாரணக் குழந்தையாகவே எண்ணியிருந்தாள். ஒருநாள் கண்ணன் மண்ணைத் தின்பதைப் பார்த்துவிட்டாள். மண்ணைத் தின்றது தவறு என்று மகனைக் கண்டித்தாள். கண்ணன் தான் மண்ணைப் புசிக்க வில்லை என்று மறுத்தான். உடனே அவனை அதட்டி வாயைத் திறந்து காண்பிக்கச் செய்தாள். அவன் வாயைத் திறந்ததும், அதில் பதினான்கு உலகங்களையும் கண்டாள்; அசைவற்று நின்றுவிட்டாள் ஒரு கணநேரம். குழந்தையின் காலில் விழுந்து கும்பிடவும் கருதி விட்டாள். பிறகு நிதானித்தாள். குழந்தை வாயை மறுபடியும் நோக்கினாள். வெறும் வாய்தான் இருந்தது. கண்ணன் கோவர்த் தனத்தைத் தூக்கி நிறுத்தி ஆயர்களையும் ஆநிரைகளையும் காத்த நிகழ்ச்சி ஆயர்களையும் நம்மையும் வியப்புறச் செய்வதோடு கல்மாரியை ஏவிய இந்திரனையும் வியப்புறச் செய்தது.

இவை நிற்க. இவ்வுலகம் எப்படித் தோன்றியது? இதற்குக் காரணம் என்ன—இதுவும் வியப்பைத் தருவதுதான். பாரதியாரின் ஒரு பாடலில்,

> பூமிக் கெனைய னுப்பினான்;—அந்த
> புதமண்ட லத்தில்என் தம்பிக ளுண்டு;
> நேமித்த நெறிப்படியே—இந்த
> நெடுவெளியெங்கணும் நித்தம் உருண்டே
> போமித் தரைகள்.[22]

என்ற பகுதி வியப்புணர்ச்சியை எழுப்புகின்றதன்றோ?

இன்னொரு பாடலில் அகிலக் காட்சியைச் சித்திரித்துக் காட்டு கின்றார் சொல்லோவியமாக.

22. கண்ணன்—என் தந்தை—1.

விண்டு ரைக்க அறிய அரிதாய்
விரிந்த வான வெளியென நின்றனை;
அண்ட கோடிகள் வானில் அமைத்தனை;
அவற்றில் எண்ணற்ற வேகஞ் சமைத்தனை;
மண்ட லத்தை அணுவணு வாக்கினால்,
வருவ தெத்தனை அத்தனை யோசனை
கொண்ட தூரம் அவற்றிடை வைத்தனை
கோல மேனியைக் காளியென் றேத்துவேன்[23]

பார்த்தன் 'விசுவரூப தரிசனம்' காண்பதுபோல் அகில உலகக் காட்சியைக் (Universal vision) காண்கின்றார் கவிஞர். இஃது அன்னை பராசக்தியின் லீலை என்றும் கருதுகின்றார்; இந்தப் பாடலும் நம்மிடையே அற்புத உணர்ச்சியை எழுப்புவதை உணரலாம். இந்தக் காட்சியையே வேறொரு விதமாகவும் காட்டுவார்:

நக்க பிரானருளால்—இங்கு
நடைபெறும் உலகங்கள் கணக்கிலவாம்!
தொக்கன அண்டங்கள்—வளர்
தொகைபல கோடிபல் கோடிகளாம்!
இக்கணக் கெவரறிவார்?—புவி
எத்தனை யுளதென்ப தியாரறிவார்!

நக்க பிரானறிவான்;—மற்று
நானறி யேன்பிற நரரறியார்;
தொக்கபே ரண்டங்கள்—கொண்ட
தொகைக்கெல்லை யில்லையென்று சொல்லுகின்ற
தக்கபல் சாத்திரங்கள்—ஒளி
தருகின்ற வானமோர் கடல்போலாம்;
அக்கட லதனுக்கே—எங்கும்
அக்கரை இக்கரை யொன்றில்லையாம்.

இக்கட லதனகத்தே—அங்கங்
கிடையிடைத் தோன்றும்புன் குமிழிகள்போல்
தொக்கன உலகங்கள்:—திசைத்
தூவெளி யதனிடை விரைந்தோடும்;
மிக்கதோர் வியப்புடைத்தாம்—இந்த
வியன்பெறு வையத்தின் காட்சி கண்டீர்[24].

முன்காட்டிய பாடலில் 'வியன்பெரு வையத்தின் காட்சியை' அன்னையின் லீலையாகக் கண்ட கவிஞர் இதில் அப்பனின் திருவிளையாட

23. தோ. பா: 34. மகாசக்தி வாழ்த்து—1.
24. ஷை. 42. கோமதியின் மகிமை. 5, 6, 7.

லாகக் காண்கின்றார். பாடலைப் படிக்கும் நமக்கும் அக்காட்சியைக் காட்டி நம் அகத்தில் வியப்புணர்ச்சியை எழுப்புகின்றார்; நாமும் அற்புத ரஸத்தை மாந்திக் களிக்கின்றோம்.

சாந்தம் : தொல்காப்பியரும் பரத முனிவரும் சுவைகளை எட்டு என்று அறுதியிட்டாலும் இவற்றிற்கு அப்பாலும் ஒன்று உண்டு என்பதாக நம் பண்டைய அறிஞர்கள் சிந்தித்துள்ளனர். இது வடமொழியில் 'சாந்த ரஸம்' என்றும், தமிழில் 'நடுவு நிலைமை' என்றும் குறிக்கப்பெறும். இதனையும் விளக்குவது இன்றியமை யாததாகின்றது. அமைதி, ரஸங்களுக்கு அடிப்படையான நிலையா யிருப்பதால் அதற்கு ஒரு தனிச் சிறப்புண்டு. எல்லா ரஸங்களும் சாந்த நிலையில் நின்று எழுந்து சாந்தத்திலேயே அடங்கிவிடுகின்றன என்று பண்டைப் பெரியோர்கள் கருதுவர். இதில் உண்மை இல்லா மல் இல்லை. ஒரு பொருள் உருவெடுப்பதற்கு முன் சமநிலையில் தான் இருந்திருக்க வேண்டும். அங்ஙனமே உருவழிந்த பிறகும் சமநிலையைத்தான் அஃது அடைய வேண்டும். இவ்வுண்மையை எவரும் எளிதாக உணரலாம். அவ்விதமே ரஸங்கள் உருவெடுத்து நிலைத்து மடியும் இடத்தைச் 'சாந்தம்' என்று வழங்குவர் அப் பெரியார்கள். 'சாந்தம்' என்பதை அவர்கள் ஒரு ரஸமாக ஒப்புக் கொள்ளாவிடினும், அந்த நிலையை அவர்கள் மறுப்பதில்லை.

சாந்தம் என்பது மாமுனிவர்களின் உள்ளத்தில் குடிகொண் டிருக்கும் ஒரு நிலை. இந்நிலையை ரஸத்தைப்பற்றி ஆராய்பவர்கள் சிறிதும் அறியாமலிருப்பர். அப்படியிருந்தால் அதை அவர்கள் மறுப்பதில் சிறப்பான கருத்து இருப்பதற்கு இடம் இல்லை. இதனை ஆனந்த வர்த்தனாசிரியர், ''பலருடைய அநுபவத்தில் இல்லை யென்பதனால் மட்டும் ஓர் உயர்ந்த ரஸத்தை மறுப்பது அநியாய மாகும். ஓர் அறிஞனுக்குத் தோன்றிய விஷயம் பல்லாயிரச் சாதா ரண மனிதர்கட்குப் புலப்படாமலேயே இருக்கலாம். அதற்காக அவ்விஷயத்தைப் புறக்கணிப்பது எளிதன்று'' என்று உறுதியாக அறுதியிட்டுக் கூறுவர்.

உலகில் பற்றில்லாமலிருப்பது ஓர் உயர்ந்த மனநிலை. 'அற்றது பற்றெனில் உற்றது வீடு.' உண்மையில் பற்று அறவே நீங்க வேண்டு மானால் மனத்தில் விருப்பும் வெறுப்பும் (ஆசையும் பகையும்) நீங்க வேண்டும். ஒரு பொருளில் விருப்பம் வந்துவிட்டால் நம் மனமே அப்பொருளை மற்றவற்றைக்காட்டிலும் உயர்ந்ததாகக் கருதுகின் றது. அவ்விதமே வெறுப்பும் ஒன்றில் ஏற்பட்டுவிடின் அதனை மனம் இழிந்ததாகவே கருதிவிடும். ஆகவே, விருப்பும் வெறுப்பும்—ஆசை யும் பகையும்—இருக்கும்வரை மனத்திற்குச் சமநிலை அல்லது சாந்தநிலை நிலவாது என்பது தெளிவாகும். அதனால்தான் பெரி

யோர்கள் சமநிலையைப் பெறுவதற்குத் தவம் செய்து பாடுபடுகின்றனர். சமம் ஓர் உயர்ந்த மனநிலை. அதனை எய்தப்பெற்றவன் சாமானிய மனிதனைப்போல் இருப்பதில்லை. அவன் வேறு விதமாகவே தோற்றுவான். அத்தகைய மகான்களைப்பற்றியும் கவிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். இரண்டு எடுத்துக்காட்டுகள் இந்நிலையைத் தெளிவாக்கும்.

(1) மகளிர் நீராடப்போகும் வழியில் ஒரு மண்கட்டியைத் தலையணையாக வைத்துக்கொண்டு சதாசிவப் பிரம்மம் படுத்துக்கொண்டிருந்தார். அதைக் கண்ணுற்ற மகள் ஒருத்தி 'பாரடி, இந்தச் சதாசிவக் கட்டைக்குத் தலைக்கு உயரங்கூட வேண்டியிருக்கிறது!' என்று பரிகாசமாகச் சொல்லிப் போனாள். இதனைச் செவியுற்ற சுவாமிகள், 'ஆ! நமக்குத் துறவு பூண்ட பிறகுகூடத் தலைக்கு உயரத்தால் ஏற்படும் இன்பத்தில் நாட்டம் ஏற்பட்டது தவறு' என்று அதனைத் தள்ளிவிட்டுப் படுத்திருந்தார். நீராடித் திரும்பியபோது முன் பரிகசித்த அதே மகள் 'ஐயையோ! பார்த்தாயா? இந்தச் சதாசிவக் கட்டைக்கு ரோஷம் வேறு. என் பரிகாசம் அந்தக் கட்டைக்கு ரோஷத்தை உண்டாக்கிவிட்டது போலும்!' என்று கூறினாள். உடனே சதாசிவ பிரம்மம் அம்மண்கட்டியை எடுத்து மறுபடியும் தலைக்கு வைத்துக்கொண்டார், பிறர் சொல்லுக்குத் தம்மைக் கட்டுப்படுத்திக்கொள்வது சரி அல்ல என்று கருதி.

(2) இராமகிருஷ்ண பரமஹம்ஸர் ஒரு சமயம் தம் மனைவியுடன் வாரணாசியை நோக்கி நடந்து சென்றுகொண்டிருந்தார். வழியில் ஒரு தங்கத் துண்டு கிடந்தது. அதைத் தம் துணைவி கண்டால் ஆசைப்பட்டுவிடுவாள் என்று கருதிய இராமகிருஷ்ணர் அதனை மறைக்க முயன்றார். அச்செயலைக் கவனித்த அவர் துணைவி 'என்ன அது? தாங்கள் எதையோ மூடுகின்றீர்களே' என்று வினவினாள். வேறு வழியில்லாமல் பரமஹம்ஸர் உண்மையை நவில வேண்டியதாயிற்று. உடனே அந்தத் தேவி, 'உங்களுக்கு இன்னும் தங்கம் வேறு, மண்கட்டி வேறு என்ற வேற்றுமை தெரிகின்றதா!' என்று கேட்டாள்.

இந்த நிகழ்ச்சிகளைப் படிக்கும் நம் மனத்திலும் சம உணர்ச்சி குடிகொள்ளும். அதிலும் ரஸ இன்பத்தை நாம் துய்க்கலாம். மேற்கூறிய இரண்டு நிகழ்ச்சிகளும் நமக்குச் சாந்தநிலை கிட்டுவது அரிது என்பதை விளக்கினாலும் சாந்த ரஸத்திற்கே அவை எடுத்துக்காட்டுகளாக அமைவதில் இருவேறு கருத்துகள் இருக்க முடியாது. பாரதியார் பாடல்களைப் படிக்கும் நமக்கு, அவர் எவற்றிற்கெல்லாம் பாடுபட்டாலும், அவர் மனம் அமைதியை—சாந்த நிலையை—நாடியிருந்தது என்பது தெரியாமல் போகாது. தோத்திரப் பாக்களும் வேதாந்தப் பாக்களும் இந்நிலையைத் தெளிவாக்கும்.

எனக்கு வேண்டும் வரங்களை
    இசைப்பேன் கேளாய் கணபதி!
மனத்தில் சலனம் இல்லாமல்
    மதியில் இருளே தோன்றாமல்
நினைக்கும் பொழுது நின்மவுன
    நிலைவந் திடநீ செயல் வேண்டும்[25].

சார்ந்து நிற்பாய் எனதுளமே
    சலமும் கரவும் சஞ்சலமும்
பேர்ந்து, பரம சிவாநந்தப்
    பேற்றை நாடி, நாள்தோறும்
ஆர்ந்த வேதப் பொருள்காட்டும்
    ஐயன், சக்தி தவப்பிள்ளை
கூர்ந்த இடர்கள் போக்கிடுநங்
    கோமான் பாதக் குளிர்நிழலே[26].

என்ற விநாயகப் பெருமான்மீது இசைத்த பாடல்களில் சாந்த ரஸத்தைக் காணலாம்; கவிஞர் வேண்டுவது அதனைத்தான் என்பதனையும் தெளியலாம்.

அறிவிலே தெளிவு, நெஞ்சிலே உறுதி
    அகத்திலே அன்பினோர் வெள்ளம்,
பொறிகளின் மீது தனியர சாணை,
    பொழுதெலாம் நினதுபே ரருளின்
நெறியிலே நாட்டம்! கருமயோ கத்தில்
    நிலைத்திடல் என்றிவை அருளாய்
குறிகுண மேதும் இல்லதாய் அனைத்தாய்க்
    குலவிடு தனிப்பரம் பொருளே [27]

என்று பரம்பொருளை வேண்டுவதிலும் இந்தச் சாந்தரஸம் தட்டுப் படுவதைக் கண்டு தெளியலாம்.

இறுவாய் : நம் நாட்டுப் பெரியோர்கள் இலக்கியங்களில் ரஸத்தை முக்கியமாகக் கூறியதிலிருந்து இலக்கியம் மனத்திற்கு இன்பமளிப்பதைவிட உள்ளத்திற்கு அமைதி அளிக்கவல்லதாயிருத்தல் வேண்டும் என்று கருதியது தெளிவாகின்றது. ரஸம், அநுபவத்தை மட்டிலுமே குறிப்பிடும். தம்முடைய அநுபவத்தை எடுத்துக் கூற எவர்க்கும் திறன் இல்லை. முழுமையான இன்ப அநுபவத்திற்கு

25. தோ. பா. வி. நா. மாலை—7.
26. ஷை. ஷை. 15.
27. சுயசரிதை—49.

அயர்ந்து நன்றாய் உறங்கும் நிலையையே சமமாகக் கூறலாம். உறக்கத்தில் நாம் என்ன செய்தோம் என்று யாருக்கும் புலப்படாமற் போனாலும், விழித்தவுடன் ஒரு புதுவகையான உணர்ச்சி நம் உடல் முழுதும் பரவியிருப்பதை உணரலாம். அங்ஙனமே ஒரு காவியத்தைப் படித்தாலும், ஒரு நாடகத்தைப் பார்த்தாலும் ரஸிகர்களாகிய நமக்குப் புலன்களின் தெளிவு ஏற்படுகின்றது. இலக்கியத்தில் நாம் ரஸம் அநுபவித்ததன் பயன்தான் நம் புலன்களின் தெளிவு என்பதை அறிகின்றோம்.

10. பாடல்களில் படிமங்கள்

இறைவன் நமக்குப் புலன்களையும் நுண்ணிய அறிவையும் நல்கியிருப்பது அவற்றைத் தக்க முறையில் பயன்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான். வேதாந்திகள் 'புலனடக்கம்' என்று குறிப்பிட்டிருப்பது புலன்களை நன்னெறியில் செலுத்துவதுதான் என்பதைத் தெளிவாக உணர்தல் வேண்டும். அங்ஙனமன்றிப் 'புலனொடுக்கம்' செய்தல் மிகமிகக் கொடுமையாகும். புலன்களை நன்னெறிப்படுத்தி இயற்கை அன்னையுடன் சற்று உறவாட்டம் வைத்துக்கொண்டாலும், இலக்கியங்களைப் படித்து அநுபவிக்கக் கற்றுக்கொண்டாலும், அந்த உறவும், அநுபவமும் நமக்கு அளிக்கும் ஆறுதல் மிகப்பெரிது. அவை நம்மை வாட்டும் வறுமைப் பிணியிலிருந்தும், மேல் அலுவலர்களும் முதலாளிகளும் ஓயாமல் துன்புறுத்துவதனின்றும் ஓரளவு தப்பலாம்; அவற்றை மறக்கவும் செய்யலாம். இதனால் நம்மிடம் என்றுமில்லாத ஊக்கம் தலையெடுப்பதற்கும் வழி பிறக்கும்.

நமது இன்பத்தின் உறைவிடம் ஆலைத் தொழிலகங்களும், அலுவலகங்களும், இயந்திர சாலைகளும் அல்ல. அகன்ற நீலவானும் அதில் கண் சிமிட்டும் விண்மீன்களும் நமக்கு இன்பத்தை அள்ளித் தெளிக்கக் காத்திருக்கின்றன. மரகதத்தை உருக்கி வார்த்தாற் போல் கண்கொள்ளாக் காட்சியளிக்கும் மாக்கடல் நமக்கு நல்கும் இன்பத்தை அளவிட்டுரைக்க முடியுமா? அதனைக் கண்ணுற்ற மாத்திரத்தில் நம் உள்ளத்தில் எழும் உணர்வுகளுக்கு எல்லையே இல்லை. நம் முன்னோர்கள் இயற்கையைக் கண்டு களித்தே தமது வாழ்வைச் சிறப்பித்துக்கொண்டனர் என்பதற்கு அவர்கள் இயற்றியுள்ள நூல்களே சான்றுகளாக நிற்கின்றன. ஒரு வேத வாக்கியத்தில் வருவது இது: ''வானத்தைப் பார்த்தீர்களா? என்ன அழகு! ஒரே நீலமாய் மேடு பள்ளமில்லாத தூய்மையான விளையாட்டு மைதானம்! இதில் இரண்டு அழகிய குழந்தைகள் விளையாடுகின்றனர். அவர்களின் மேனியொளி கண்களைப் பறிக்கின்றது; உள்ளத்தையும் கொள்ளை கொள்ளுகின்றது. குணதிசையிலிருந்து குடதிசை நோக்கி இவர்கள் நகர்ந்துகொண்டிருப்பதைப் பார்க்க யாருக்குத்தான் ஆசை பொங்கி எழாது?'' என்று பகலவனையும் தண்மதியத்தையும் வருணித்திருப்பது இயற்கையில் அவர்கள் தோய்ந்திருந்த நிலையைக் காட்டுகின்றதன்றோ?

இன்னொரு வடமொழிக் கவிஞன், இயற்கையில் தான் கண்ட வியப்பைத் தன் மொழியால் காட்டிய சொல்லோவியம் இது:

"அந்திப் பொழுது என்னும் கன்னி பகலென்னும் கட்டழகனைக் காதலிக்கின்றாள். அவள் உள்ளத்தில் ஊறும் காதல் வெள்ளம் அவளுடைய கட்டுக்கடங்கவில்லை. அது மட்டிலாத வேகத்துடன் வானம் முழுவதும் செவ்வெனப் படர்ந்து கிடக்கின்றது. அவள் என்ன செய்வாள், பாவம்? விடா முயற்சியோடு தன் காதலனாகிய பகலவனைப் பின்தொடர்ந்து ஓடுகின்றாள். அவன் திரும்பியும் நோக்குவதில்லை. ஒரு கணம் காதலியின்பால் இரக்கம் காட்டி நிற்பதுமில்லை. இது தெய்வத்தின் திருவிளையாடல்!" இங்ஙனம் கவிஞன் தன் உள்ளத்தின் உணர்ச்சியைக் காட்டியுள்ளான். பகலை ஆணாகவும் அந்தியைப் பெண்ணாகவும் கூறுவது நம் நாட்டுக் கவிஞர்களிடையே வந்த மரபு. அவற்றை அழகிய படிமமாய்ப் (உருக் காட்சியாய்ப்)[1] பாவித்து நமக்கு அளிக்கின்றான் கவிஞன். இத்தகைய அநுபவம் நமது கட்புலனால் ஏற்படுகின்றது.

பாரதியாரின் பாடல்களில் இத்தகைய ஓர் அநுபவ நிலையைக் காணலாம். இயற்கையையும் பிறவற்றையும் அவர் அநுபவித்ததைப் போலவே அவர் தம் பாடல்களின்மூலம் நம் புலன்களின் துணை கொண்டு நாமும் அநுபவிக்கலாம். கவிஞன் தன் அநுபவத்தைத் தேர்ந்தெடுத்த சொற்களால் உணர்வூட்டி நமக்குத் தருகின்றான். உருக்காட்சிகள் (படிமங்கள் - Images), சிந்தனை இவற்றின் குறியீடுகளாகப் (Symbols) பணிபுரிகின்றன என்பதை நாம் அறிவோம். "கவிதையின் உருக்காட்சி (படிமம்) சொற்களின்மூலம் நம் புலன்களைத் தொடுகின்றது. புலன்களின்மூலம் படிப்போரின் உணர்ச்சிகளும் அறிவும் விரைவாகத் தூண்டப்பெறுகின்றன. இதன் காரணமாகக் கவிதையில் படிமம் அதிகமாகப் பயன்படுகின்றது."[2] அவர் மேலும் கூறுவது: "செலுத்தப்பெறும் புலன்களுக்கேற்பப் படிமம் வகைப்படுத்தப்பெறுகின்றது. ஆகவே, நாம் பெறுபவை: கட்புலப் படிமங்கள் (Visual images), (இவற்றில் வண்ணப் படிமங்களும் வடிவப் படிமங்களும் அடங்கும்), செவிப்புலப் படிமங்கள் (Auditory images), சுவைப்புலப் படிமங்கள் (Gustatory images), நாற்றப்புலப் படிமங்கள் (Olfactory images), தொடுபுலப் (நொப் புலப்) படிமங்கள் (Tactual images)-இவற்றைத் தவிர, இயக்க நிலைப் படிமங்கள் (Kinaesthetics images), மரபுநிலைப் படிமங்கள் (Conventional images) என்பவையும் உள்ளன.[3] இவை தனியாகவும் ஒன்று இரண்டு பலவுமாக இணைந்து கலவைப் படிமங்களாகவும் கவிதையில்

1. படிமம்— Imagery
2. Burton, N: *The Criticism of Poetry* (Longmans and Green Co : London) பக் 97.
3. மேலது—பக். 99.

அமைகின்றன. மேலும் குறியீடுகளாக அமையும் சொற்கள் 'கட்டுண்ட' படிமங்களையும் (Tied images) விடுதலைப் படிமங்களையும் (Free images) உண்டாக்கிப் படிப்போரிடையே ஒத்துணர்வுத் துலங்கலையும் (Sympathetic response), ஒட்ட உணரும் துலங்கலையும் (Empathetic response) எழுப்புகின்றன. இவற்றால் கவிதையநுபவம் - முருகுணர்ச்சி-கொடுமுடியை எட்டுகின்றது. இந்தக் கருத்துகளை அடிப்படையாகக்கொண்டு பாரதியாரின் பாடல்களை ஆராய்வோம். அப்பெருமகனின் முருகியல் நோக்கு அவர்தம் கவிதைகளில் எவ்வாறு படிமங்களாக அமைந்துள்ளது என்பதையும் காண்போம்.

கட்புலப் படிமங்கள் : பாண்டவர்கள் அத்தினபுரத்திற்கு மேற்கொண்ட பயணத்தின் நடுவில் மாலைக்காலம் வருகின்றது. மன்னனின் சேனை வழியிடையில் ஒரு பூம்பொழிலில் தங்கியிருந்த பொழுது, பார்த்தன் பாஞ்சாலிக்குப் பரிதியின்எழிலை விளக்குகின்றான். 'செழுஞ்சோதி வனப்பையெல்லாம் சேரக் காண்பாய்' என்று கூறி,

கணந்தோறும் வியப்புக்கள் புதிய தோன்றும்;
கணந்தோறும் வெவ்வேறு கனவு தோன்றும்;
கணந்தோறும் நவநவமாக் களிப்புத் தோன்றும்;
கருதிடவும் சொல்லிடவும் எளிதோ? ஆங்கே,
கணந்தோறும் ஒருபுதிய வண்ணங் காட்டிக்
காளிபரா சக்திஅவள் களிக்கும் கோலம்
கணந்தோறும் அவள்பிறப்பாள் என்று மேலோர்
கருதுவதன் விளக்கத்தை இங்குக் காண்பாய்[4]

என்ற பாடலில் கட்புலப் படிமங்களில் வண்ணப் படிமங்கள் பல இணைந்து ஓர் அற்புதக் கலவைக் காட்சியினை நம் மனத்தில் தோற்றுவித்து நம்மைப் பூரிப்படையச் செய்கின்றன. இன்னும் இதே பகுதியில் பரிதியை 'பரிதிக்கோளம்', 'மின் செய்த வட்டு', 'பச்சை நிற வட்டம்' என்றும்,

'இடிவானத் தொளிமின்னல் பத்துக் கோடி
எடுத்தவற்றை ஒன்றுபட உருக்கி வார்த்து
முடிவான வட்டத்தை'

....

'இமைகுவிய மின்வட்டின் வயிரக் கால்கள்
எண்ணில்லா திடையிடையே எழுதல்'

என்றும் வரும் பாடற்பகுதிகளில் பரிதியை விளக்கும் வடிவப் படிமங்களைக் கண்டு மகிழலாம். மேலும் 'எத்தனை வடிவம்', 'நீலப்பொய்கைகள்!', 'நீலவன்னமொன்றில் எத்தனை வகையடீ!', 'எத்தனை

4. பா. க. அழைப்புச் சருக்கம்—149.

செம்மை!', 'பசுமையும் கருமையும் எத்தனை!', 'கரிய பெரும் பூதம்!', 'நீலப் பொய்கையின் மிதந்திடும் தங்கத் தோணிகள்', 'சுடரொளிப் பொற்கரையிட்ட கருஞ்சிகரங்கள்!', 'தங்கத் திமிங்கலம் தாம்பல மிதக்கும் இருட்கடல்!' என்று படுஞாயிற்றின் மேகச் சூழலை அற்புத மாகக் காட்டுவதைக் கண்டு களிக்கலாம். இவற்றில் வண்ண, வடிவக் கட்புலப் படிமங்கள் கவிதையைப் பொலிவுறச் செய்வதைக் காண்க.

'கண்ணன் பாட்டில்' இத்தகைய கட்புலப் படிமங்கள் பாட்டிற்குப் புதுமெருகூட்டுகின்றன[5]. 'பொன்னவிர் மேனிச் சுபத்திரை', 'கண் மகிழ்சித்திரம்'(1), 'சந்திரன் என்றொரு பொம்மை', 'மந்தை மந்தையா மேகம்',

'வானத்து மீன்க ளுண்டு—சிறு
மணிகளைப் போல்மின்னி நிறைந்திருக்கும்'(2)

'நிறந்தனிற் கருமை கொண்டான்'(3)

'முல்லை மென்னகை மாதர்'(5),

—'தடி
ஊன்றிச் சென்றாரோர் கிழவனார் ;—ஒளி
கூடு முகமும், தெளிவுதான்—குடி
கொண்ட விழியும், சடைகளும்,—வெள்ளைத்
தாடியும் கண்டு வணங்கியே—பல
சங்கதி பேசி வருகையில்' (7)

என்று வரும் பகுதிகளில் இவ்வகைப் படிமங்கள் அமைந்திருப்பதைக் கண்டு மகிழ்க.

வேறு தனிப்பாடல்களிலும் கட்புலப் படிமங்கள் பாட்டிற்கு எழிலூட்டுகின்றன. சிலவற்றைக் காண்போம்:

வெள்ளிப் பனிமலையின் மீதுலவுவோம்; அடி
மேலைக் கடல்முழுதும் கப்பல் விடுவோம்;
பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம்[6].

....

'பல்லினைக் காட்டிவெண் முத்தைப் பழித்திடும்
வள்ளி'[7]

பொன்னையே நிகர்த்த மேனி
மின்னையே நிகர்த்த சாயல்[8]

5. இங்குப் பிறைக் குறிக்குள் உள்ள எண்கள்கண்ணன் பாட்டு எண்ணைக் குறிக்கும்.
6. தே.கீ: பாரத தேசம்—1.
7. தோ.பா: வேலன் பாட்டு. 1.
8. ஷை. கண்ணம்மாவின் நினைப்பு—சரணங்கள்.

பொங்கிவரும் பெருநிலவு போன்றவொளி முகமும்,
புன்னகையின் புதுநிலவும் போற்றவரும் தோற்றம்,
துங்கமணி மின்போலும் வடிவத்தாள்[9]

என்று வரும் பாடற்பகுதிகளில் கட்புலப் படிமங்கள் கவின்பெற வருவதைக் கண்டு மகிழ்க.

செவிப்புலப் படிமங்கள் : பாரதியாரின் முருகியல் நோக்கு செவிப்புலப் படிமங்களைப் படைப்பதிலும் செல்லுகின்றது.

மந்திர கீதங்களாம்;—தர்க்க
வாதங்களாம்.

இவை அத்தினபுர வருணனைக் கூறும் இடத்தில் வருபவை. இவற்றைப் படிக்கும்போது நம் மனக் காது 'மந்திர கீதங்களைக்' கேட்கின்றது; பட்டிமன்றம் போன்ற அமைப்பில் நடைபெறும் 'தர்க்க வாதங்களையும்' கேட்கின்றது. விதுரனின் தூதுச் செய்தியால் சூதுபற்றிய சதியை அறிந்ததும் வீமன் திகைத்து நிற்கின்றான். தருமபுத்திரன் ஆணைப்படி படை முதலியவற்றை ஆயத்தம் செய்யப் புகுந்தவனின் சினத்தைக் காட்டும் கவிஞர்,

'தாமதம் செய்வோமோ?—செலத்
தகும்தகும் எனஇடியுற நகைத்தான்'

என உரைப்பதில் வீமனின் 'இடிக்குரல்' நம் மனக் காதில் விழுகின்றது. தருமன் கவறாட்டலை மறுக்கும்போது சகுனியின் ஏச்சினைக் காட்ட வந்த கவிஞர்,

கலகல...வெனச்சிரித் தான்—பழிக்
கவற்றையே சாத்திர மெனப் பயின்றோன்

என்று கூறுவதில் சகுனியின் சிரிப்பொலியைக் கேட்கின்றோம். விதுரனை வீட்டைவிட்டு வெளியேறுமாறு துரியோதனன் கூறியதைக் கேட்டதும், அவன் மீண்டும் நீதியுரைத்து 'வாய்மூடித் தலைகுனிந்து இருக்கை கொண்டதும்,

பதிவுறுவோம் புவியிலெனக் கலிம கிழ்ந்தான்
பாரதப்போர் வருமென்று தேவர் ஆர்த்தார்.

என்று நிலைமையைக் கவிஞர் விளக்குவதில் தேவர்களின் ஆர்ப்பொலிகள் நம் மனக் காதில் விழுகின்றனவன்றோ? பாஞ்சாலி தன் சபதத்தை உரைத்து முடித்ததும்,

9. த.பா: அழகுத் தெய்வம்—1.

ஓமென்று உரைத்தனர் தேவர்—ஓம்
ஓமென்று சொல்லி உறுமிற்று வானம்
பூமி அதிர்ச்சி உண்டாச்சு—விண்ணைப்
பூழிப் படுத்திய தாஞ்சுழற் காற்று

என்று கூறிக் கவிஞர் கதையை முடிக்கின்றார். இதில் தேவர்களின் 'ஓம்' ஒலியும், வானத்தின் 'ஓம் ஓம்' என்ற ஒலியும், பூமியின் நடுக்கமும், சுழற்காற்றின் திருவிளையாடலும் நம் மனக் காதில் விழுவதை உணர்கின்றோம்.

'கண்ணன் பாட்டிலும்' செவிப்புலப் படிவங்களைக் காண முடிகின்றது. தாய் குழந்தைக்கு 'விரிகடல் பொம்மை' யைக் காட்டுகின்றாள். அப்பொம்மை.

'ஓல்லெனும் பாட்டினிலே—அம்மை
ஓமெனும் பெயரென்றும் ஒலித்திடுங்காண் (2)

என்கின்றாள். 'ஓம்' என்று ஒலித்திடுவதில் செவிப்புலப் படிமத்தைக் காண்கின்றோம். கவிஞர் கண்ணனாகிய சீடனிடம் சினந்து பேசுகின்றார்:

"என்றுமிவ் வுலகில் என்னிடத் தினிநீ
போந்திடல் வேண்டா, போபோபோ" என்று
இடியுறச் சொன்னேன் (6)

இப்பேச்சில் இடியொலி போன்ற ஓர் ஒலியைக் கேட்கின்றோம். கண்ணனாகிய ஆண்டானிடம் பஞ்சைப் பறையன் பேசுகின்றான்:

சேரி முழுதும் பறையடித் தேயருட்
சீர்த்திகள் பாடிடுவேன்;

பேரிகை கொட்டித் திசைக ளதிரநின்
பெயர் முழக்கிடுவேன்.

இதில் 'பறையொலி'யும், 'பேரிகை ஒலி'யும், 'அருள் சீர்த்திகளின் இசையும்' கேட்கின்றனவன்றோ?

வேறு பாடல்களிலும் செவிப்புலப் படிமங்களைக் கண்டு களிக்கலாம்.

—எங்கள்
அன்னையர் தோன்றி மழலைகள் கூறு
அறிந்ததும் இந்நாடே (10)

10. தே.கீ. நாட்டு வணக்கம்—2.

என்பதில் அன்னையர் கூறும் 'மழலை மொழிகள்' கேட்கின்றன வல்லவா?

இன்னிசை யாம்இன்பக் கடலில்—எழுந்து
எற்றும் அலைத்திரள் வெள்ளம்
தன்னிடம் மூழ்கித் திளைப்பாள்—அங்குத்
தாவிக் குதிப்பாள்எம் அன்னை[11]

இதில் 'ஏற்றும் அலைத்திரளின்' ஒலி கேட்கின்றது. 'பாரத மாதா திருப்பள்ளி எழுச்சி'யில் ஒரு பாடல் :

புள்ளினம் ஆர்த்தன; ஆர்த்தன முரசம்;
பொங்கியது எங்கும் சுதந்திர நாதம்;
வெள்ளிய சங்கம் முழங்கின, கேளாய்!
வீதியெ லாம்அணு குற்றனர் மாதர்;
தெள்ளிய அந்தணர் வேதமும், நின்றன்
சீர்த்திரு நாமமும் ஓதிநிற் கின்றார்; (2)

இப்பாடலைப் படிக்கும்போதே நம் மனக்காது புள்ளினத்தின் ஆர்ப்பையும், முரசத்தின் ஆர்ப்பையும், சுதந்திர நாதத்தையும், சங்கின் முழக்கத்தையும், அந்தணரின் வேத ஒலியையும் கேட்கின்றதன்றோ?

கூறு படப்பல கோடி அவுணரின்
கூட்டத்தைக்—கண்டு
கொக்கரித் தண்டங் குலுங்க
நகைத் திடுஞ் சேவலாய் ![12]

இதில் வேலன் சேவலின் 'கொக்கரிப்பொலி' நம் மனக் காதில் விழுகின்றது.

சுவைப்புலப் படிமங்கள் : இவ்வகைப் படிமங்கள் அரியனவாகவே காணப்பெறுகின்றன. இவற்றையும் தேடிக் காண்போம். பாஞ்சாலி சபதத்தில் கலைமகளைக் 'கற்பனைத் தேனிதழாள்' என்று கவிஞர் உரைக்கும்போது நம் மனம் தேனின் சுவையை உணர்கின்றது. திருதராட்டிரனின் நல்லுரைகளைக் கேட்ட துரியோதனன் கடுஞ்சினமுற்றுப் பேசுவான்:

—கெட்ட
வேம்பு நிகரிவ னுக்குநான்;—சுவை
மிக்க சருக்கரை பாண்டவர்

11. டை. வெறி கொண்ட தாய்—2.
12. தோ.பா. வேலன் பாட்டு—3.

என்று பேசும்போது வேம்பின் கசப்புச் சுவையும் சருக்கரையின் தீஞ்சுவையும் நம் மனத்தில் தட்டுப் படுகின்றனவல்லவா?

'கண்ணன் பாட்டில்' சுவைப்புலப் படிமங்கள் தென்படு கின்றன.

உண்ண உண்ணத் தெவிட்டாதே—அம்மை
உயிரெனும் முலையினில் உணர்வெனும் பால்;
வண்ணமுற வைத்தெனக் கே—என்றன்
வாயினிற்கொண் டூட்டுமோர் வண்மையுடையாள் (2)

இதில் தெவிட்டாத பாலின் சுவையை உணர முடிகின்றது. விளை யாட்டுப்பிள்ளையாகிய கண்ணன் செய்யும் சிறு குறும்புகளைக் கவிஞர்,

தின்னப் பழங்கொண்டு தருவான்;—பாதி
தின்கின்ற போதிலே தட்டிப் பறிப்பான்;
என்னப்பன் என்னையன் என்றால்—அதனை
எச்சிற் படுத்திக் கடித்துக் கொடுப்பான் (9)

பாடலைப் படிக்கும்போதே பழத்தின் சுவையை உணர்கின்றோம். கண்ணனாகிய காந்தனைக் குறிப்பிடும்போது,

கனிகள் கொண்டுதரும்—கண்ணன்
கற்கண்டு போலினிதாய் (15)

என்பார் கவிஞர். இந்த அடியைப் படிக்கும்போதே கனிகளின் சுவை யையும் கற்கண்டின் சுவையையும் நம் மனம் உணர்கின்றதன்றோ? காதலி கண்ணம்மாவைக் குறிப்பிடும்,

ஆசை மதுவே கனியே
அள்ளு சுவையே கண்ணம்மா (21)

என்ற அடியைப் படிக்கும்போது மதுவின் சுவையும் கனியின் சுவையும் மனத்திற்குத் தட்டுப்படுவதை உணர முடிகின்றது.

இதர பாடல்களிலும் இந்தச் சுவைப்புலப் படிமங்களைக் காண லாம்.

தங்க மதலைகள் ஈன்றமு தூட்டித்
தழுவிய திந்நாடே[13]

இந்த அடியைப் படிக்கும்போதே மதலைகட்கு ஊட்டப்பெறும் அமுதின் சுவையை உணர முடிகின்றது.

13. தே.கீ. நாட்டு வணக்கம்—3.

> சொல்லினைத் தேனிற் குழைத்துரைப்பாள்—சிறு
> வள்ளி[14]

என்று வள்ளியைக் குறிப்பிடும் அடியில் தேனின் சுவை தட்டுப்படுகின்றது.

நாற்றப்புலப் படிமங்கள் : இவ்வகைப் படிமங்களும் அரியனவாகவே அமைந்துள்ளன. பாஞ்சாலி சபதத்தில் இராசசூயப் பெருவேள்வியினைத் தருமன் நடத்தியபொழுது பல நாட்டு மன்னர்களும் மக்களும் காணிக்கைப் பொருள்களைக் கொண்டுவந்து குவித்ததைத் துரியோதனன் எண்ணி நைகின்றதாகக் காட்டப்பெறும் கவிதைப் பகுதி இது:

> பொன்னிறப் பாஞ்சாலி—மகிழ்
> பூத்திடும் சந்தனம் அகில் வகைகள்
>
> ஏலம் கருப்பூ ரம்—நறும்
> இலவங்கம் பாக்குநற் சாதிவகை
> கோலம் பெறக்கொணர்ந் தே—அவர்
> கொட்டி நின்றார்,கரம் கட்டிநின்றார்.

இப்பகுதியினை நாம் படித்துச் சுவைக்கும்போது மணப்பொருள்களின் மணம் நம் மனத்தைத் துளைப்பதை உணர்கின்றோம்.

> நாடுறு தயிலவகை—நறு
> நானத்தின் பொருள்பலர் கொணர்ந்துதந்தார்

என்ற அடிகளைப் படிக்கும்போது தயில வகைகளின் வாசனையும் கஸ்தூரியின் நறுமணமும் நம் மூக்கைத்துளைப்பதாக உணர்கின்றோம்.

'கண்ணன் பாட்டிலும்' நாற்றப் புலப்படிமங்கள் கவிதைக்குப் பொலிவூட்டுகின்றன. காதலி கண்ணனாகிய காதலனைக் கானகத்தில் தேடுகின்றாள். கானகத்தை வருணிக்கும் பகுதியில் வரும் ''நெஞ்சில் கனல் மணக்கும் பூக்கள்''[15] என்ற அடியில் வாசனையின் உறைப்பினை மனம் உணர்கின்றது. கண்ணனாகிய காந்தன் தனக்குத் தரும் பொருள்களைக், காதலி பட்டியலிட்டுக் காட்டுகின்றாள் ;

> பனிசெய் சந்தனமும்—பின்னும்
> பல்வகை அத்தர்களும்,
> குனியும் வாண்முகத் தான்—கண்ணன்
> குலவி நெற்றியிலே
> இனிய பொட்டிட வே—வண்ணம்
> இயன்ற சவ்வாதும்

14. **தோ.பா :** வேலன் பாட்டு—1.
15. **கண்ணன்—என் காதலன்—(3)—2.**

கொண்டை முடிப்பதற்கே—மணங்
கூடு தயிலங்களும்[16]

இந்தப் பகுதியைப் படிக்கும்போது மணப்பொருள்களை விற்கும் அங்காடியில் நாம் பெறும் வாசனையைப் போன்ற வாசனையை நம் 'மன மூக்கு' உணரத் தொடங்குகின்றது.

நொப்புலப் படிமங்கள் : இந்த நுண்ணிய படிமங்களும் கவிதைக்குப் பொலிவூட்டுகின்றன. துரியோதனின் பொறாமைத் தீயை வருணிக்கும் கவிஞர்,

குன்ற மொன்று குழைவுற் றிளகிக்
குழம்பு பட்டழி வெய்திடும் வண்ணம்
கன்று பூதலத் துள்ளுறை வெம்மை
காய்ந்தெ ழுந்து வெளிப்படல் போல[17]

என்று கூறும்போது 'வெப்ப உணர்ச்சி' தட்டுப்படுகின்றது. பொறாமையைத் தீ என்று உருவகித்ததைப் போலவே சினத்தையும் தீ என்று உருவகிப்பார் பாரதியார். இன்ப நிகழ்ச்சிகளில் பொழுது போக்குமாறு தந்தை கூறுவதைச் செவிமடுத்த 'சுயோதனன் சினங் கொள்ளுகின்றான்.

— கோமகன்
வெந்தழல் போலச் சினங்கொண்டே— தன்னை,
மீறிப் பலசொல் விளம்பினான்(62)

என்று இதனைக் கவிஞர் கூறும்போதும்,

— நெஞ்சைத்
தின்னும் கொடுந்தழல் கொண்டவர் —சொல்லுஞ்
செய்தி தெளிய உரைப்பரோ?(63)

என்ற சகுனியின் பேச்சிலும் இந்த வெப்பத்தை நம் மனம் உணர் கின்றது. சகுனி தருமனிடம் அவனுடைய சகோதரர்களைப் பணயப் பொருளாக வைக்குமாறு கூறியதைக் கேட்டு,

கங்கை மைந்த னங்கே— நெஞ்சம்
கனலுறத் துடித்தான்;
பொங்கு வெஞ்சினத்தால்— அரசர்
புகையுயிர்த் திருந்தார்(228)

என்று பிதாமகன் அடைந்த நிலையையும் அவையிலிருந்த அரசர்கள் அடைந்த நிலையையும் கவிஞர் காட்டுவதில் இந்த வெப்ப உணர்ச்சியை உணர்கின்றோம்,

16. கண்ணன்—என் காந்தன்—1
17. பா.ச : 1.5 : 38

'வீமனைப் பணயம் கூறுக' என்று சகுனி தருமனைக் கேட்கும்போது அவன்,

> தக்கஃது செய்தல் மறந்தனன்—உளஞ்
> சார்ந்திடு வெஞ்சின வெள்ளத்தில்—எங்கும்
> அக்கரை இக்கரை காண்கிலன்(235)

என்று கூறுவதில் 'சின வெள்ளத்தின்' வெப்பத்தை உணர முடிகின்றது. 'மின் செய் கதிர் விழியால் வெந்நோக்கு நோக்கினாள்', 'எரிதழல் கொண்டு வா', 'சினமான தீ அறிவைப் புகைத்தலாலே', 'எவ்வாறு புகைந்தாலும், புகைந்து போவீர்', 'காமனைக் கண்ணழலாலே சுட்டுக் காலனை வென்றவன்' என்ற சந்தர்ப்பங்களுக்கேற்ற சொற்றொடர்களில் நொப்புலப் படிமங்கள் தென்படுகின்றன.

'கண்ணன் பாட்டிலும்' பல நொப்புலப் படிமங்களைக் காணலாம். 'தண்மைக் குணமுடையான்' 'தழலின் குணமுடையான்', 'அழலினும் கொடியான்'(1), 'சினத்தீயாகி நான்' (6), என்ற சொற்றொடர்களில் 'வெப்ப நிலையை' உணர முடிகின்றது. கண்ணனாகிய காதலனை,

> எண்ணும் பொழுதிலெல்லாம்—அவன்கை
> இட்ட விடத்தினிலே
> தண்ணென் றிருந்தது தடீ(10)

என்று காதலி (கவிஞர்) கூறுவதில் 'தண்மை உணர்ச்சி' தென்படுகின்றது.

பாரதியாரின் பிற பாடல்களிலும் இந்தப் படிமத்தைக் காண்போம்.

> காயழல் ஏந்திய பித்தன்—தனைக்
> காதலிப்பாள் எங்கள் அன்னை[18]

> நீசக்குயிலும் நெருப்புச் சுவைக்குரலில்
> ஆசை ததும்பி அமுதூறப் பாடியதே[19]

> இப்பொழுதே நின்னை முத்தமிட்டுக் களியுறுவேன்[20]

என்ற பாடற் பகுதிகளில் நொப்புலப் படிமங்களைக் (முதலிரண்டில் வெப்பம், மூன்றாவதில் ஊற்றுணர்வு) கண்டு மகிழலாம்.

18. தே.கீ. வெறிகொண்ட தாய்—1.
19. குயில் பாட்டு—அடி (55—56).
20. ஷை. அடி. 70.

இயக்கநிலைப் படிமங்கள் : இந்த வகைப் படிமங்களும் கவிதைக்குப் புது மெருகூட்டுகின்றன. அத்தினபுர வீரர்களைக் காட்டும்,

மாலைகள் புரண்டசையும்—பெரு
வரையெனத் திரண்டவன் தோளுடையார்

என்ற அடிகளில் 'புரண்டசையும்' என்பதில் இயக்க நிலையை உணர்கின்றோம். சகுனியின் சூழ்ச்சித் திறனை மெச்சிய துரியோதனின் மகிழ்ச்சியை,

பொங்கும் உவகையின் மார்புறக்—கட்டிப்
பூரித்து விம்மித் தழுவினான்

என்ற சொற்களில் இயக்க நிலைப்படிமங்கள் தட்டுப் படுகின்றதன்றோ?

'நீரமுதம் எனப் பாய்ந்து நிரம்பும் நாடு'

'கைப்பிடி கொண்டு சுழற்றுவோன்— தன்
கணக்கிற சுழன்றிடும் சக்கரம்'

'கிரிவகுத்த ஓடையிலே மிதந்து செல்லும்'

'அடிவானத் தேயங்கு பரிதிக் கோளம்
அளப்பரிய விரைவினொடு சுழலக் காண்பாய்'
'வடிவான தொன்றாகத் தகடி ரண்டு
வட்டமுறச் சுழலுவதை வளைந்து காண்பாய்'

'இடையின்றி அணுக்களெலாம் சுழலுமென
இயல்நூலார் இசைத்தல் கேட்டோம்;
இடையின்றிக் கதிர்களெலாம் சுழலுமென
வானுலார் இயம்பு கின்றார்!'

இவண் காட்டியுள்ள அடிகளிலெல்லாம் இயக்கநிலைப் படிமங்கள் தென்படுவதைக் காணலாம்.

'கண்ணன் பாட்டி'லும் இயக்கநிலைப் படிமங்கள் கவிதையைக் கவினுறச் செய்வதை அறியலாம்.

'தேர்நடத் திக்கொடுப் பான்'(1)

'ஆட்டங்கள் காட்டியும்'(1)

பாசியை யெற்றி விடும்—பெரு
வெள்ளத்தைப் போல்'(1)

'தீபத்திலே விழும் பூச்சிகள்'(1)

'நல்லநல்ல நதிகளுண்டு—அவை
நாடெங்கும் ஓடிவிளை யாடிவருங்காண்;
மெல்லமெல்லப் போயவைதாம்—விழும்
விரிகடற் பொம்மையது' (2)

என்ற பாடற்பகுதிகளில் இவ்வகைப் படிமங்கள் பொதிந்துள்ளமையைக் கண்டு மகிழ்க.

வேறு சில பாடல்களிலும் இவ்வகை உருக்காட்சிகள் கவினுறுத்துவதைக் காண்போம்.

கன்னிய ராகி நிலவினி லாடிக்
களித்ததும் இந்நாடே—தங்கள்
பொன்னுடல் இன்புற நீர்விளை யாடிஇல்
போந்ததும் இந்நாடே[21].

இப்பாடற்பகுதியில் 'ஆடுதல்' 'நீர் விளையாடுதல்' என்ற சொற்றொடர்கள் இயக்கநிலையை உணர்த்துவதை அறிக.

'இமயமலை வீழ்ந்ததுபோல வீழ்ந்துவிட்டான்
ஜாரரசன்; இவனைச் சூழ்ந்து
சமயமுள படிக்கெல்லாம் பொய்கூறி
அறங்கொன்று சதிகள் செய்த
சுமடர் சடசடவென்று சரிந்திட்டார்,
புயற்காற்று சூறை தன்னில்
திமுதிமென மரம்விழுந்து காடெல்லாம்
விறகான செய்தி போல![22]

இப்பாடலில் 'வீழ்ந்தது' 'வீழ்ந்துவிடுதல்' 'சடசடவென்று சரிதல்' 'திமு திமென மரம் வீழ்தல்' என்பவை இயக்கநிலையை உணர்த்துவதைக் கண்டு மகிழ்க.

கலவைநிலைப் படிமங்கள் : சில பாடல்களில் ஒன்றுக்கு மேல் பல்வேறுவகைப் படிமங்கள் அமைந்து கவிதைக்குப் பொலிவூட்டி முருகுணர்ச்சியை மிகுவிக்கின்றன.

அன்னங்கள் பொற்கமலத் தடத்தின் ஊர
அளிமுரலக் கிளிமழலை அரற்றக் கேட்போர்
கன்னங்கள் அமுதூறக் குயில்கள் பாடும்
காவினத்து நறுமலரின் கமழைத் தென்றல்

21. தே.கீ: நாட்டு வணக்கம்— 2.
22. ஷை: புதிய ருஷ்யா— 5.

பொன்னனங்க மணிமடவார் மாட மீது
புலவிசெயும் போழ்தினிலே போந்து வீச,
வன்னங்கொள் வரைத்தோளார், மகிழ மாதர்
மையல்விழி தோற்றுவிக்கும் வண்மை நாடு[23]

என்ற பாடலில் அன்னங்கள் தடத்தில் ஊரல், தென்றல் வீசுதல் இவை இயக்க நிலைப் படிமங்கள்,; அளிமுரலுதல், கிளிமிழற்றுதல், குயில்கள் பாடுதல் இவை செவிப்புலப் படிமங்கள்; அன்னங்கள் பொற்கமலத்திருத்தல், அளி, கிளி, குயில்கள், காவினத்து நறு மலர்கள், பொன்னனங்க மணிமடவார், வன்னங்கொள்வரைத் தோளார் இவை கட்புலப் படிமங்கள். இவை யாவும் கலந்தமைந்து கவிதைக்குப் பொலிவூட்டுவதைப் பாடலைப் பன்முறைப் படித்து படிமங்களை மனத்திற்குக் கொணர்ந்து அநுபவிக்கும்போது தெளி வாக அறியலாம்.

மந்திர கீதம் முழக்கினர் பார்ப்பனர்;
வன்தடந் தோள்கொட்டி ஆர்த்தனர் மன்னவர்
வெந்திறல் யானையும் தேரும் குதிரையும்
வீதிகள் தோறும் ஒளிமிகச் செய்தன;
வந்தியர் பாடினர்; வேசையர் ஆடினர்
வாத்தியம் கோடி வகையின் ஒலித்தன;[24]

பாண்டவர்க்கு அத்தினபுரத்தில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சி யினை வருணிக்கும் சொல்லோவியம் இது. இங்கு மந்திர கீத முழக்கம், தோள்கொட்டி ஆர்த்தல், வந்தியர் பாடுதல், வாத்தியம் ஒலித்தல் இவை செவிப்புலப் படிமங்கள்; யானை குதிரை தேர் வீதிகள் தோறும் ஒளிசெய்தல்—இது கட்புலப் படிமம்; வேசையர் ஆடுதல் என்பது இயக்கப்புலப் படிமம். இவை யாவும் கலந்து கலவை நிலைப் படிமமாக நிகழ்ச்சியை மனத்தில் பதிக்கின்றன.

ஆவியில் இனியவளை—உயிர்த்
தணிசுமந் துலவிடு செய்யமுதை
ஓவியம் நிகர்த்தவளை—அரு
ளொளியினைக் கற்பனைக் குயிரதனைத்
தேவியை நிலத்திருவை—எங்குந்
தேடினும் கிடைப்பருந் திரவியத்தை

படிமிசை இசையுறவே—நடை
பயின்றிடுந் தெய்விக மலர்க்கொடியைக்

23. பா. ச. 1. 17 : 117.
24. ௸ 4. 52: 243, 244.

கடிகமழ் மின்னுருவை,— ஒரு
கமனியக் கனவினை காதலினை
வடிவுறு பேரழகை. ....[25]

இப்படிப் போகின்றது திரௌபதிபற்றிய சொல்லோவியம். இதில் கட்புல, செவிப்புல, இயக்கப்புலப் படிமங்கள் அமைந்து திரௌபதியை நம் மனம் காணச் செய்கின்றன.

'கண்ணன் பாட்டி'டிலும் சில கலவைநிலைப் படிமங்களைக் கண்டு மகிழ்வோம்.

பிள்ளைக் கனியமுதே,— கண்ணம்மா
பேசும்பொற் சித்திரமே!
அள்ளி யணைத் திடவே— என்முன்னே
ஆடிவருந் தேனே![26]

இதில் கனியமுது, தேன் இவை சுவைப்புலப் படிமங்களை எழுப்புவன; பேசுதல் செவிப்புலப் படிமம்; பொற்சித்திரம் கட்புலப்படிமம்; ஆடி வருதல் இயக்கப்புலப் படிமம்; அள்ளி அணைத்திடுதல் நொப்புலப் படிமம். இந்த நான்கு வகைப் படிமங்களும் கலவைப் படிமமாகிக் கவிதையைக் கவினுறச் செய்கின்றன.

பாலும் கசந்த தடீ!— சகியே!
படுக்கை நொந்த தடீ!
கோலக் கிளிமொழியும்— செவியில்
குத்த லெடுத்த தடீ![27]

இதில் கசத்தல் சுவைப்புலப் படிமம்; படுக்கை நோதல் நொப்புலப் படிமம்; செவியில் குத்தல் எடுத்தலும் நொப்புலப் படிமமே; கோலக் கிளிமொழி செவிப்புலப் படிமம். இவை கலவைநிலைப் படிமமாகச் சமைந்து கவிதைக்குப் பொலிவூட்டுவதைக் கண்டு மகிழ்க.

கூடிப் பிரியாமலே—ஓரிராவெலாம்
கொஞ்சிக் குலவி யங்கே
ஆடி விளையாடியே,—உன்றன் மேனியை,
ஆயிரங் கோடிமுறை
நாடித் தழுவிமனக்—குறைதீர்ந்துநான்
நல்ல களியெய்தியே.
பாடிப் பரவசமாய்—நிற்கவே தவம்
பண்ணியதில்லை யடீ![28]

25. ஷை. 4.52 : 243, 244.
26. கண்ணம்மா— என் குழந்தை— 2.
27. கண்ணம்மா—என் காதலன் - (1)— 4.
28. கண்ணம்மா—என் காதலி—(5)— 4.

இதில் கொஞ்சிக் குலவுதல், நாடித் தழுவுதல் நொப்புலப் படிமங்கள்; ஆடுதல், விளையாடுதல் இயக்கப்புலப் படிமங்கள்; பாடிப் பரவசப் படுதல், செவிப்புலப் படிமம். இவை கலந்த கலவை நிலைப் படிமம் பாட்டில் பொலிந்து நிற்பதைக் கண்டு களிப்பெய்துக.

பிற பாடல்களிலும் கலவைநிலைப் படிமங்கள் தென்படுகின்றன.

சிந்து நதியின்மிசை நிலவினிலே
சேரநன் னாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினிற் பாட்டிசைத்துத்
தோணிக ளோட்டிவிளை யாடிடுவோம்[29]

இதில் சிந்து நதி, நிலவு, இளம் பெண்கள், தோணிகள் கட்புலப் படிமங்கள்; பாட்டிசைத்தல் செவிப்புலப் படிமம்; ஓட்டி விளையாடுதல் இயக்கப்புலப் படிமம். இவை கலவைநிலைப் படிமமாகிப்படிப் போரைப் பாட்டனுடவக் கோடுமுடிக்கு இட்டுச் செல்வதைக் காண்க.

தீஞ்சொற் கவிதையஞ் சோலை—தனில்
தெய்விக நன்மணம் வீசும்
தேஞ்சொரி மாமலர் சூடி—மதுத்
தேக்கி நடிப்பாள் எம்அன்னை[30]

இப்பாடலில் சோலை, மாமலர், அன்னை இவை கட்புலப் படிமங்கள்; தீஞ்சொல், தேன், மது இவை சுவைப்புலப் படிமங்கள்; நன்மணம் நாற்றப்புலப் படிமம்; சொரிதல், நடித்தல் இவை இயக்கப்புலப் படிமங்கள். இவை யாவும் ஒன்று சேர்ந்து அன்னையை அற்புதமாகக் காட்டுகின்றன.

காலைக் கதிரழகின் கற்பனைகள் பாடுகின்றேன்
தங்கம் உருக்கித் தழல்குறைத்துத் தேனாக்கி
எங்கும் பரப்பியதோர் இங்கிதமோ? வான்வெளியைச்
சோதி கவர்ந்து சுடர்மயமாம் விந்தையினை
ஓதிப் புகழ்வார் உவமையொன்று காண்பாரோ?

இப்பாடற் பகுதியில் பாடுதல், ஓதிப் புகழ்தல் செவிப்புலப் படிமங்கள்; உருக்குதல், பரப்புதல் இவை இயக்கப்புலப் படிமங்கள்; தங்கம், வான்வெளி, சோதி, சுடர் இவை கட்புலப் படிமங்கள்; தழல்குறைத்தல் நொப்புலப் படிமம்; தேனாக்குதல் சுவைப்புலப் படிமம். இந்த

29. தே.கீ. பாரத தேசம்— 5.
30. ஷை வெற்றி கொண்ட தாய்— 3.
31. குயில் பாட்டு—அடி 30-34.

ஐந்து வகைப் படிமங்களும் கலந்த கலவைப் படிமம் எழு ஞாயிற்றின் எழிலைக் கண்டுப் பழநிப் 'டஞ்சாமிர்தம்' போல் இனிமையான காட்சி யாக்குகின்றது.

மின்வெட்டுப் போன்ற மணிமொழிப் படிமங்கள் : இவண் காட்டிய பல்வேறு வகைப் படிமங்களைத் தவிர பல்வேறு இடங்களில் கவிஞரின் சொற்களிலும், சொற்றொடர்களிலும் மின்வெட்டுப் போன்ற பல்வேறு மணிமொழிப் படிமங்கள் பாங்குற அமைந்திருப் பதையும் கண்டு மகிழலாம். புல்லடிமைத்தொழில், தங்க மதலைகள், பாகுமொழி, எழு பசும்பொற் சுடர், பூந்தென்றல், தீஞ்சுவைக் காவியம், தேமதுரத் தமிழோசை, சுதந்தரத் தாகம்; உயிர் வெல்லம், பஞ்சை மகளிர் இவை 'தேசிய கீதங்கள்' என்ற பகுதியில் காணப் பெறுபவை.

கமலாசனத்துக் கற்பகம், கனக்கும் செல்வம், பல்லுருவாகிப் படர்ந்த வான்பொருள்; முக்தி நிலைக்கு மூலவித்து, வஞ்சகக் கவலை; மொய்க்கும் கவலை, கிள்ளை மொழிச் சிறுவள்ளி, வேடர்கனி (வள்ளி), பிள்ளைக் கிளிமென்குதலை, திருவருட் சுனை, மதிமூடும் பொய்மை இருள், வேதவான், பொன்னை நிகர்த்த மேனி, மின்னை நிகர்த்த சாயல், நிலவு செய்யும் முகம், கலகலென்ற மொழி, வேல் கரு விழியுடையாள், காதலெனும் தீவு, கொள்ளை இன்பம் குலவு கவிதை, மதுரத் தேமொழி மாதர், சோதிமுகம், மாம்பழவாய், விசனப் பொய்க் கடல், மணிவண்ணன், ஞானமலை, வானக்கடல், சோதி முகம்—இவை 'தோத்திரப் பாடல்கள்' என்ற தலைப்பின் கீழ் அடங்கிய கவிதைகளில் வருபவை.

பொய்மைப் பாம்பு, மையுறு வாள் விழியார், கள்ள மதங்கள், பொய்ப் பாம்பு, கவலையெனும் குழி, பேய் மனம், கற்பனையூர், சொப்பனநாடு—இவை 'வேதாந்தப் பாடல்கள்' என்ற தொகுதி யிலுள்ள கவிதைகளில் காணப்பெறுபவை.

அன்னமூட்டிய தெய்வ மணிக்கை, அரும்பும், வேர்வை— இவை இரண்டும் 'பல்வகைப் பாடல்கள்' என்ற பகுதிகளில் திகழ்பவை.

தழல் வீரம், பொங்கி வரும் பெரு நிலவு போன்ற ஒளி முகம், புன்னகையின் புது நிலவு, துங்கமணி மின்போன்ற வடிவம், தெய்வக் கனல், வாழ்க்கைப் பாலை, வாள் விழி, குளிர்புனற்சுனை, வானகத் தமுதம், சிவக்களி, கலைவிளக்கு, மலை விளக்கு,— இவை 'தனிப் பாடல்கள்' என்ற பகுதியில் கண்டவை.

அன்பெனும் பெருவெள்ளம், கயல்விழிச் சிறுமான், பேரருட் சுடர்வாள், பேடிக் கல்வி, மடமைக் கல்வி, மானிடப் பூச்சிகள்,

வாழ்க்கையோர் கனவு, பாகார்ந்த தேமொழியாள், செந்தீ பாங்கிடு மோர் விழியுடையாள், பாகான தமிழ், தேனான உயிர், தேனனைய பராசக்தி, ஞானகங்கை, மான்மானும் விழியுடையாள், குவலயத் தின் விழி, ஞானத்தோணி—இவை சுயசரிதை என்ற பகுதியில் திகழ்பவை.

ஆமெனும் பொருளனைத்தாய் (பிரும்மம்), போதமெனும் நாசியினாள், சீரியல் மதிமுகத்தார், கண்ணைப் பறிக்கும் அழகுடை யார், வெள்ளத்தைப் புல்லொன் றெதிர்க்குமோ, சீதக் குவளை விழியினான், கஞ்சமலரிற் கடவுள் வியப்ப, மதுரமொழியில் குசலங் லங்கள் பேசி, மகன் புலைமையும் தந்தையின் புலைமைகளும் யாரிடம் அவிழ்க்கின்றார், குன்றினிலே ஏற்றிவைத்த விளக்கைப் போல, திருவுளத்தின் ஆக்கினை, சேலைப்போல் விழியாள், மின் வட்டின் வயிரக் கால்கள், எள்ளும் விழற்கிடமின்றி, மதியினும் விதி பெரிது, அம்பினொத்த விழியாள், ஈயத்தைப் பொன்னென்று காட்டுவார், புள்ளிச் சிறுமான் புலியைப் போய்ப் பாய்வதுபோல், பேய் கண்ட பிள்ளையென, ஆடிவிலைப்பட்ட தாதி, நெட்டைமரங் களென நின்று புலம்பினார், மின்செய் கதிர்விழி, பேயரசு செய்தால் பிணந்தின்னும் சாத்திரங்கள், அம்புபட்ட மான்போல், வம்பு மலர்க் கூந்தல், சினமான தீ அறிவைப் புகைத்தலாலே,— இவை பாஞ்சாலி சபதத்தில் காணப்பெறுபவை.

பொன்னவிர்மேனி, தீபத்திலே விழும் பூச்சிகள்போல, பொன் னிறப் பெண்கள், சிங்காரப்பாட்டு, முல்லை மென்கை மாதர், வெறும் வாய் மெல்லும் கிழவி, மூடர்தம் பொய்மைக் கூடை, விண்ணையளக்கும் அறிவு, பிள்ளைக் கனியமுது, பேசும் பொற் சித்திரம், ஆடி வருந்தேன், முல்லைச் சிரிப்பு, தூண்டிற் புழு, கூண்டுக் கிளி, திக்குத் தெரியாத காடு, மொந்தைப் பழைய கள், சுட்டும் விழிச்சுடர், நட்ட நடுநிசி, வான வளையம், வல்லிஇடை, ஆசைமது, முல்லைநிகர் புன்னகை, ஒன்பது வாயில்குடில்—இவை ‘கண்ணன் பாட்டில்’ காணப்படும் படிமங்கள்.

கன்னல் சுவை, வானத்து மோகினியாள், இன்னிசைத் தீம் பாடல், மோகனப் பாட்டு, கலகலவெனும் ஓசை, உள்ளமாம் வீணை, மைக்குயிலி, நெருப்புச் சுவைக்குரல், ஆசை ததும்புதல், நெரித்து விட்டார் கேள்விகளை, மண்டு துயர், வீரத் திருவால், சல்லித்துளிப் பறவை, நிலையறியாப் பொய்ம்மை, இழிந்த புலைப் பாட்டு, முந்தும் அழகு, பிச்சைச் சிறுக்கி, நீரோடும் மேனி, நெருப்போடும் கண், மூண்டு வரும் இன்பவெறி, நறுங்கள்ளிதழ்,— இவை ‘குயில் பாட்டில்’ வருபவை.

கவிதையநுபவம் : நம் உடல் தூண்டல் துலங்கல் (Stimulus-Response) என்னும் உளவியல் தத்துவப்படி இயங்குகின்றது. உள்ளமும் அதற்கேற்பத் துலங்குகின்றது. வெளியுலகிலிருந்து தூண்டல்கள் புலன்களைத் தாக்கும்போது (Sensory level) அவற்றிற்கேற்பப் புலன்கள் துலங்குகின்றன. அதாவது, அப்புலன்கள் அத்தூண்டல்களால் கிளர்ச்சிஅடைகின்றன. அதனால்ஏற்படும் உணர்ச்சியைமனம்அநுபவிக்கின்றது. இந்த உணர்ச்சிப்பெருக்கில்உண்டாகும் இன்பமே— முருகுணர்ச்சியே— சுவையாகும். எடுத்துக் காட்டாக மணப் பொருள்கள் தரும் மணத்தை நாற்றப் புல நரம்புகள் வாங்கி மூளைக்கு அனுப்புகின்றன. மனம் அப்பொருள்கள் தரும் மணத்தை அநுபவிக்கின்றது. (எ-டு) ஒருஊதுவத்தியின்மணம். இப்படியேபிறபுலன் களின்மூலம் பெறும் தூண்டல்களால் மனம் அந்தந்தப் பொருள்கள் தரும் சுவைகளைப் பெற்று அவற்றில் ஈடுபடுகின்றது. இவ்வாறு வெளியுலகத் தூண்டல்களால் அடிக்கடி மனம் பெறும் அநுபவம் பெரு மூளையில் பதிவாகி விடுகின்றது. உலகை இன்பமயமாகக் கண்டு, உள்ளத்தில் பூரிப்பு அடைபவர்கள் கவிஞர்கள். அதற்கு உள்ளத்தில் கனிவு வேண்டும்.

இவ்வாறு பெரு மூளையில் பதிவாகி இருக்கும் அநுபவம் கவிதைகளைப் படிக்கும்போது நினைவாற்றலின் காரணமாகத் தூண்டல்களாக (Ideational level) மாறுகின்றன. அவை மூளையிலுள்ள பூத்தண்டு (Thalamus), மேற்பூத்தண்டு (Hypo-thalamus) என்னும் பகுதிகளின் மூலமாகப் புலன்களை அடையும்போது மூளையில் அற்புதமாக அமைந்திருக்கும் நரம்பு அமைப்புகளைத் தூண்ட, அந்நரம்புகளின் இயக்கத்தால் மாங் காய்ச் சுரப்பிகள் (Adrenal glands) போன்ற நாளமில்லாச் சுரப்பிகளில் (Ductless glands) சாறுகளை ஊறச் செய்து குருதியோட்டத்தை மிகுவிக்கின்றது. உடலும் கிளர்ச்சி அடைகின்றது. அப்போது கவிதைகளில் வரும் உருக்காட்சிகளைப் (படிமங் களைப்) புலன்கள் மீண்டும் மனத்தில் தோன்றச் செய்கின்றன. மனம் அக்காட்சிகளை அநுபவித்து மகிழ்கின்றது. இத்தகைய முருகுணர்ச்சியைத் தம் முருகியல் நோக்கால் தம்முடைய கவிதைகளில் ஏற்றி வைக்கின்றனர் கவிஞர்கள். உலக இயல்பிற்குப் படம் ருக்கும் அவர்களுடைய கவிதைகளை நாம் பயிலுங்கால் அதே நோக்கை நாம் பயிற்சியால் ஓரளவு பெற்றுவிடுகின்றோம். கவிஞர்கள் உலகப் பொருள்களை அநுபவித்த உணர்ச்சி சுவை வடிவமாக அவர் தம் கவிதைகளில் தேக்கி வைக்கப்பெற்றுள்ளது. அக்கவிதைகளைத் நாம் பயிலுங்கால் அவற்றிலுள்ள சுவைகளை நம் மனம் அநுபவித்து மகிழ்கின்றது. பாரதியாரின் பாடல்களைப் பயின்று அநுபவிப்ப

வர்கள் அவருடைய முருகியல் நோக்கை மானசீகமாகக் கண்டு மகிழ லாம். நம்மிடம் அந்நோக்கு எழுவதையும் உணர்ந்து மகிழலாம். பாடல்களும் 'மம்மர் அறுக்கும் மருந்தாக' நமக்குக் களிப் பூட்டு வதையும் உணரலாம்.

பின்னிணைப்பு - 1

பயன்பட்ட நூல்கள்

(அ) தமிழ் நூல்கள்

1. சுப்பிரமணிய பாரதியார்: **பாரதியார் கவிதைகள்** (எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை, 6, பிலிப்ஸ் தெரு, சென்னை - 600 001) (1962)

2. சுப்பிரமணிய பாரதியார்: **பாரதியார் கவிதைகள்** (வானவில் பிரசுரம், 16, இரண்டாவது குறுக்குத் தெரு; மேற்கு சி.ஐ.டி. நகர், சென்னை - 600 086) (1980)

3. சுப்பிரமணிய பாரதியார்: **கட்டுரைகள்** (வானதி பதிப்பகம், தினதயாளு தெரு, தி.நகர், சென்னை - 600 017) (1981)

4. சுப்பு ரெட்டியார், ந: **காலமும் கவிஞர்களும்** (எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை, 6, பிலிப்ஸ் தெரு, சென்னை - 600 001) (1958)

5. சுப்பு ரெட்டியார், ந: **கவிதையனுபவம்** (சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், பிரகாசம் சாலை, சென்னை - 600 001) (1961)

6. சுப்பு ரெட்டியார், ந: **பரணிப் பொழிவுகள்** (திருவேங்கடவன் பல்கலைக் கழகம், திருப்பதி - 517 502) (1972)

7. சுப்பு ரெட்டியார், ந: **பாஞ்சாலி சபதம் - ஒரு நோக்கு** (சர்வோதய இலக்கியப் பண்ணை, 32/1, மேலவெளி வீதி, மதுரை - 625 001) (1982)

8. சுப்பு ரெட்டியார், ந: **கண்ணன் பாட்டுத் திறன்**, மேற்படி, மதுரை - 625 001 (1982)

9. சுப்பு ரெட்டியார், ந: **குயில் பாட்டு - ஒரு மதிப்பீடு** (பாரி நிலையம், பிரகாசம் சாலை, சென்னை - 600 001) (1982)

10. செட்டியார், வி. ஆர். எம்.: **இரவீந்திரநாத் தாகூரின் வாழ்க்கையும் கவிதையும்**

11. தண்டியார்: **தண்டியலங்காரம் - உரை** (சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், பிரகாசம் சாலை, சென்னை - 600 001)

12. *திருவள்ளுவர் :* **திருக்குறள் - பரிமேலழகர் உரை** *(கழக வெளியீடு)*

13. *தேசிகவிநாயகம் பிள்ளை, சி :* **மலரும் மாலையும்** *(புதுமைப் பதிப்பகம், காரைக்குடி - 623 001) (1944)*

14. *பாரதியார் பல்கலைக் கழகம் :* **பாரதியாரின் புலமை ஒளி** *(கட்டுரைத் தொகுப்பு), 15 கட்டுரைகள் (பதிவாளர், பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 041) (1982)*

15. *பாலா :* **புதுக்கவிதை - ஒரு புதுப்பார்வை** *- அகரம், சிவகங்கை - 623 560, ஜூன், 1981.*

16. *பெங்களூர் தமிழ்ச் சங்கம் :* **பாரதி மாண்பு** *(பெங்களூர் தமிழ்ச் சங்கம், 29/1, அண்ணாசாமி முதலியார் சாலை, பெங்களூர் - 560 042 (1982)*

17. *வாலி, கவிஞர் :* **பொய்க்கால் குதிரைகள்** *(வானதி பதிப்பகம், தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை - 600 017) (1982)*

(ஆ) ஆங்கில நூல்கள்

1. Burton, N : **The Criticism of Poetry** (Longmans & Greenns Company Lt., London)

2. Hudson, W. H. : **An Introduction to the Study of Literature** (George G. Harrap & Co., Ltd, London) (1946)

3. Mathew Arnold : **Essays in Criticism**

4. Meenakshisundaram, K : **A study of the Poetical works of Subramanya Bharathi** (Paari Nilayam, Prakasam Saalai, Madras - 600 001) (1965)

5. Richards, I. A. : **Principles of Literary Criticism**

பின்னிணைப்பு - 2

(எண், பக்க எண்)

பொருட்குறிப்பு அகராதி



First Paper: *என்ன ஆச்சரியம்?* **"Enna Aacharyam !" [1949]**

ஓர் அறிமுகம்

பேராசிரியர்

ந சுப்பு ரெட்டியார்



Books Published : **135 + 1**
Papers Published : **200** [Tamil 173 + English 27]
Endowments established: **10**
Endowment Lectures : **12**
Awards received: **8**
Prizes won : **14**
Titles conferred : **8**

Masterpieces:

1) Tamil Payitrum Murai [1957]
2) Religion & Philosophy of Naalayira Divyap-pirabhandham with special reference to Nammalwar [English][His PhD thesis] [1977]
3) Kalvi Ulaviyal Kotpaadukal [1989]
4) Vainava Selvam [1995]

Financial Aid for publishing the Books:

a) Tirumala Tirupathi Devasthanams - 21
b) Directorate of Tamil Development
Government of Tamil Nadu - 6

Research on Professor's Books

a) University of Madras - 1993 (leading to PhD)
b) Madurai Kamaraj University - 2017 (leading to PhD)



பேராசிரியரின் 135 நூல்களில், தெரிவு செய்யப்பெற்ற 100 நூல்கள் (முழுமையாக)
http://tinyurl.com/nsr100collections
எனும் இணையதளத்தில் உள்ளன. [freely downloadable]

India
Book of Records

CERTIFICATE

CENTENARY CELEBRATIONS OF PROF DR. N SUBBU REDDIAR

Prof Dr S Ramalingam (born on 13 Oct 1949) Organizing Secretary, Na Subbu Reddiar 100 Educational Trust, Chennai, Tamil Nadu, has conceived, designed and meticulously executed 108 Centenary Events throughout Tamil Nadu during the Centenary Year (2015-2016) of Prof. Dr. N Subbu Reddiar who served the cause of education for 65 years andwritten 135 books in various fields (100 books after retirement).

Biswaroop Roy Chowdhury
Chief Editor
India Book of Records

Date: March 19, 2018

India Book of Records is registered with the Government of India with RNI no. HARENG/2010/32259.
India Book of Records is affiliated to Asia Book of Records and follows Asian Protocol of Records (APRs) as per the consensus arrived at the meeting of the Chief Editors of National Record Books, Ho Chi Minh City, Vietnam.

ISBN: 978-81-938927-2-5

